# இமயம்





விருதுபெற்ற நாயகனை நெஞ்சாரப் பாராட்டி
விரியும்

## வாழ்த்து மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமயம்

விருதுபெற்ற நாயகனை போற்றியும் வாழ்த்தியும்

விரிந்து மணம் கமழும்

## வாழ்த்து மலர்

வெளியீடு:

மலர் வெளியீட்டுக்குழு,

விருது நாயகன் வாழ்த்து விழா அமைப்பு,

ஜெயந்தி நகர் கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நூலின் பெயர் :

  இமயம்

- மலர் ஆசிரியர்:

  நா.யோகேந்திரநாதன்

- வெளியீடு:

  மலர்க்குழு

  விருது நாயகன் வாழ்த்து விழா அமைப்பு

  ஜெயந்தி நகர், கிளிநொச்சி.

- அச்சுப்பதிப்பு:

  யாழ்ப்பாண அச்சகம், கல்வியங்காடு.

  தொ.பே.இலக்கம்: 021 221 4949

- தொடர்பு:

  தொலைபேசி இலக்கம் – 0717495118



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் விருது நாயகன்

## திரு.தி.இராசநாயகம்



யாழ் விருது



மனிதனது மதிக்க முடியாத உடமைகளில் மிகச் சிறந்தது அவனது வாழ்வாகும். அவன் ஒரு தடவை தான் வாழ முடியும். காலமெல்லாம் குறிக்கோள் இல்லாமல் பாழாக்கி விட்டேன் என்ற வருத்தம் வதைப்பதற்கு வாய்ப்பளிக்காத வகையில் அவன் சீராக வாழ வேண்டும். அற்பனாக வாழ்ந்து இழிவு தேடினேன் என்ற அவமானம் உள்ளத்தை எரிப்பதற்கு இடமில்லாத வகையில் அவன் நேராக வாழ வேண்டும்.

உலகத்தின் தலை சிறந்த இலட்சியத்திற்காக, மனித குலத்தின் விடுதலை என்ற பொன்னான மார்க்கத்திற்காக நான் வாழ்வு முழுவதையும் அர்ப்பணித்தேன் என்று இறக்கும் பொழுது கூறும் உரிமைபெறும் வகையில் அவன் வாழ வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயகன் பெற்ற விருதுகளில் ஒரு சில...














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவையில்...



## ஆன்மீகப் பயணத்தில்...



## அன்பின் அரவணைப்பில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நுழைவாயில்

முன்னாள் கிளிநொச்சி அரச அதிபரும், வடமாகாண முன்னாள் பிரதிப் பிரதம செயலாளருமாகிய அனைவரினதும் மதிப்புக்கும் அன்புக்கும் உரிய திரு.தி.இராசநாயகம் அவர்களின் ஆற்றல், ஆளுமை முற்று முழுதாக மக்களுக்கே அர்ப்பணமான உணர்வு, ஓய்வற்ற உழைப்பு, கடமையுணர்வு, ஏனையோரின் செயற்படும் ஆற்றலை இனங்கண்டு ஊக்குவித்து வழி நடத்தல் போன்ற பன்முகச் செயல் வீச்சை இந்த ஒரு மலர் மூலம் முழுமையாக முன் வைக்க முடியுமெனநினைப்பது மலையைப் பெயர்த்து மடியில் கட்டும் முயற்சி என்பதை நானறிவேன். எனினும் இப்படியான பணியில் முன்னிற்கக் கிடைத்த வாய்ப்பு கிடைத்தற்கரிய ஒரு வரப்பிரசாதம் என்றே நம்புகிறேன்.

அவர் திட்டமிடல் அதிகாரியாகக் கிளிநொச்சியில் வந்த நாள்கள் தொட்டு இன்று வரை அவருடன் அரச சேவை முதற்கொண்டு பொதுச்சேவை வரை பல்வேறு தளங்களில் அவருடன் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தையிட்டு இன்று மட்டுமல்ல என்றும் பெருமை கொள் வேன். எனக்கு அவர் கற்றுத்தந்ததும், அவர் பண ியாற்றும் முறைகளிலிருந்து நான் கற்றுக் கொண்டவையும் ஏராளம்.

அவரின் ஒப்பற்ற சேவைகளைப் பாராட்டி பற்பல விருதுகளும், பாராட்டுகளும் அவருக்குப் பல்வேறு தரப்பினராலும் வழங்கப்பட்டன. எல்லாவற்றுக்கும் உச்சமாக அவருக்கு "யாழ் விருது" வழங்கப்பட்டதன் மூலம் அவர் முழுத்தமிழ் மக்களாலும் போற்றப்படும் சிறப்பைப் பெறுகிறார்.

பெரியார்கள், உயர் அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், அவருடன் இணைந்து பணியாற்றியவர்கள், அவரின் வழிகாட்டலில் வளர்ந்தவர்கள், அவரின் ஆதரவில் வளர்ந்து வருபவர்கள் எனப்பலதரப்பினரதும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும், நன்றிகளையும் தொகுத்து ஏக மலராக இணைத்து இப்படைப்பு மூலம் வெளிப்படுத்த ஒரு வாய்ப்பு கிடைத்ததை ஒரு வரமாகவே கருதுகிறேன்.

**பொன்.நித்தியானந்தன்,**
**தலைவர்,**
**விருதுநாயகன் வாழ்த்து விழா அமைப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)
ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

021 222 2870

ஸ்தாபிதம் : 1966

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் – ஆசிச்செய்தி



அன்புள்ளவர்களுக்கு,

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத் தலைவர் திரு. இராசநாயகம் அவர்களைப் பாராட்டிக்கௌரவிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். அரச கடமையில் இருந்து ஓய்வு பெற்று சமூகப் பணியாக இல்லத்தைப் பொறுப் பெடுத்து ஏழைக் குழந்தைகளின் வாழ்விற்காகத் தன்னை அர்ப்பணம் செய்து பணியாற்றுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

இப்பணியைக் கௌரவித்து யாழ்ப்பாண மாநகரசபையின் உயர் விருதாகிய யாழ் விருது வழங்கப்பட்டமை எல்லோருக்கும் பெருமை தருவதாகும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளைப் பொறுப்பெடுத்து உடை, உணவு, கல்வி, ஒழுக்கம், பண்பாடு அனைத்தையும் வழங்கிவரும் மகாதேவாசுவாமிகள் சிறுவர் இல்லம் இன்று பொதுப்பொலிவு பெற்றிருப்பது சைவசமய தமிழ் மக்களுக்கு பெருமையை தருகின்றது. இதன் தலைவர் பொருளாளர், செயலாளர், உறுப்பினர்கள் அனைவரையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

திரு. திருமதி. இராசநாயகம் தம்பதிகள் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Bishop's House,
P.O. Box 2
Jaffna - Srilanka
Tel: 021-222 2161
Fax: 021-222 9953

# யாழ். ஆயரின் வாழ்த்துச் செய்தி

"உன்மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக"

லூக். 10:27



உள்ளத்தில் ஊற்றெடுத்த அன்பினால் உந்தப்பட்டு, தன் மக்கள் மீதும், மண் மீதும்கொண்ட பற்றினால் மக்கள் பணியில் தன்னை ஈடுபடுத்திய திரு.தி.இராசநாயகம் அவர்களின் பணியினைப் பாராட்டி, வாழ்த்துக் கூறு வதில் மகிழ்ச்சியடைகின்றேன். இவரது பலதரப்பட்ட சமூக நலப் பணிகளில் பயனடைந்தவர்கள் தம் நன்றி உணர்வை வெளிப்படுத்திப் பாராட்டி சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டு விழாக் குழுவினருக்கு நன்றியையும் கூறிக் கொள்கின்றேன்.

கிளிநொச்சி மண்ணின் மைந்தனான திரு.தி.இராசநாயகம் முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக, வடமாகாண சபையின் உள்ளூராட்சிப் பொது நிர்வாக அமைச்சின் முன்னாள் செயலாளராக, வட மாகாண சபையின் பொது நிர்வாக அமைச்சரின் பிரதிப் பிரதம செயலாள ராக, இம் மண்ணிற்கும், மக்களுக்கும் அளப்பரிய சேவை ஆற்றியமை அனைவரும் அறிந்ததே.

தன் பணிக்காலத்தில் குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் யாழ் பல்கலைக்கழகத்தின் விவசாய, பொறியியல் பீடம் அமைய ஆற்றிய பங்களிப்பு, 1990 களில் தன் மண்ணிலேயே தொழில் நுட்பக்கல்லூரி உதயமாக எடுத்த முயற்சி, பொருளாதார அபிவிருத்திட்டங்கள், மன்னார் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் உருவாக்கம், முதியோர் மற்றும் சிறுவர் இல்லங்களின் வளர்ச்சி போன்ற பல நற்பணிகளின் பலனை அடைந்து இவரால் இச்சமூகம் வளர்ச்சி கண்டிருக்கின்றது. இத்தகைய சமூகப் பணியாளர்கள் பாராட்டப்படும் வேளையில் இன்னும்பல சமூகப் பணியாளர்கள், பிற நல சேவை மனப்பான்மை கொண்டவர்கள் உருவாகவேண்டுமென ஆசித்து நிற்கின்றேன். மீண்டும் சமூக சேவையாளன் திரு.தி.இராசநாயகம் அவர்களை வாழ்த்தி இறை வழிநடத்துதல் என்றும் கூட இருக்க இறை ஆசீர் கூறி நிற்கின்றேன்.

***இங்ஙனம்***

***கிறீஸ்துவின் மரி அன்னையிலும் பக்தியுள்ள***

+ Gnanapragasam

***பேரருட் திரு கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்***

***யாழ். ஆயர்.***

Rt. Revd. Dr. Justin B Gnanapragasam
Bishop of Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திரபுரீஸ்வரம் பிரதம சிவாச்சாரியார்
# வீரசைவ சிவாச்சாரியார்
# சிவபூஜாதுரந்தர், சிவாச்சாரியார் திலகம்



## சிவஸ்ரீ சிவ லம்போதரக் குருக்கள்
## அவர்களின் ஆசியுரை

நெய்தல் நிலமாகிய பெருமைக்குரிய பூநகரி மண்ணின் குமாரசாமி திருநாவுக்கரசுவுக்கும் விசுவலிங்கம் பாக்கியம் என்பவருக்கும் தாம் செய்த புண்ணிய மேலீட்டால் பெறுதற்கரிய மானிடப் பேறு பெற்று இப் பூமியிலே பெருமை சேர்க்க இராசநாயகம் என்னும் மொட்டாக அவதரித்தார்.

இம்மொட்டு தாய் தந்தையால் செவ்வனே வழிநடத்தப்பட்டு வாசம் வீசும் நறுமலராக மலர்ந்து காயாகி, கனியாகி அனைவருக்கும் பயன்தரும் பெருமரமாகி மனிதன் தன் வாழ்நாளில் செய்யக் கூடிய புண்ணியங்களான கடவுளை வணங்குதல், உயிர்களுக்கு இரங்குதல், செய்நன்றி அறிதல், ஏழை, எளியவர்களுக்கு உதவுதல் போன்ற நற்கருமங்களை செவ்வனே செய்தது மட்டுமல்லாது

ஈழத்து ஈஸ்வரங்களுள் ஒன்றான உருத்திரபுர நாயகி உடனுறை உருத்திரபுரிகளார் ஆலயத்திற்கு தனிப்பட்ட முறையிலும் மகாதேவா சுவாமிகளின் சிறுவர் இல்லத் தலைவர் என்ற வகையிலும் புண்ணியங்களைச் செவ்வனே செய்த இவர் இன்று யாழ் விருது பெறுவது எம்மை மகிழ்வடையச் செய்கின்றது. இவரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன். அத்துடன் எனது நல்லாசிகளையும் வழங்குகின்றேன்.

"தென்னாடுடைய சிவனே போற்றி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Bradman Weerakoon

4/2, Prince Alfred Tower,

Alfred House Cradens,

Colombo - 03



**Congratulatory Message of**


**Bradman Weerakoon**

***Former secretary to the Prime Minister and Presently Senior adviser to the Prime Minister***

I am very pleased to convey my congratulations and good wishes to Mr.Rasanayagam, Former Government Agent of Kilinochchi District on the occasion of the publication of a book on his life and work by the Organizing Committee which has been set up to honour him.

Mr.Rasanayagam has seved the Govenment of Sri Lanka in various capacities such as being Secretary, Ministry of Public Administration and Local Government in Northern Province and Deputy Chief Secretary of Public Administration in the North. I knew him well as a former colleage when I was Secretary of the Prime Minister Ranil Wickremesinghe during the ceasefire period and Mr.Rasanayagam carried out his duties in an extremely difficult period. Thereafter I made his acquaintance when he was running the Ashram for children at Kilinochchi and providing a real service to orphaned displaced children.

I am very happy to wish Mr.Rasanayagam long life, good health and happiness in his future years, while thanking him once again for the many excellent services he has rendered to the people and the country.



**Bradman Weerakoon**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මනෝ ගනේසන්
ජාතික සහජීවනය,
සංවාද හා රාජ්‍ය භාෂා අමාත්‍ය

மனோ கணேசன்
தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல்
மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்

MANO GANESAN
Minister of National Co-existance,
Dialogue and Official Languages

මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date

# தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



ஈழத்திருநாட்டிலே கிளிநொச்சி மண்ணின் பெருமைக்குரிய மைந்தனாகத் திகழும் திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களின் சமூக நலப் பணிகளுக்கான அங்கீகாரமாக யாழ்.மாநகர சபையினால் வழங்கப்படுகின்ற உயரிய விருதான யாழ்.விருது தொடர்பான சேவை நலன் பாராட்டு விழா சிறப்பு மலரிற்கு வாழ்த்துச் செய்தியினை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பட்டப்படிப்பினை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்று, சிவில் நிருவாக சேவையில் இணைந்து பணியாற்றி வந்த காலப்பகுதியில் பல்வேறு உயரிய பதவிகளை வகித்து எமது மக்களின் துன்பங்களிலும், துயரங்களிலும் சளைக்காமல் நின்று சேவை ஆற்றிய பெருமை திரு.தி.இராச நாயகத்தைச் சாரும். அரச அதிபராக இருந்த காலப்பகுதியில் அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியது என்றால் மிகையாகாது. இவரது சமூகப்பணிகள், சமயப்பணிகள் என்பவற்றை வரையறை இல்லாது கூறிக்கொண்டே செல்லலாம். அவை மாவட்ட, மாகாண எல்லைகள் கடந்து தேசிய மட்டத்தில் என்னை வந்து சேர்ந்துள்ளன.

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும், தேசிய சகவாழ்வை முன்னெடுக்கும் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் துறை சார்ந்த அமைச்சரவை அமைச்சர் என்ற வகையிலும், "வாழும்போதே வாழ்த்துவோம்" என்ற வண்ணக் கருவின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ் விழா சிறப்பாக அமைந்திட வாழ்த்துகிறேன்.

நன்றி

மனோ கணேசன் பா.உ.
தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும்
அரசகரும மொழிகள் அமைச்சர்
#40, புத்கமுவ வீதி,
இராஜகிரிய.

மனோ கணேசன் பா.உ

***தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும்***
***அரச கரும மொழிகள் அமைச்சர்,***
***தலைவர் - தமிழ் முற்போக்குக் கூட்டணி.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியரசர் **க.வி.விக்னேஸ்வரன்**
முதலமைச்சர் - வட மாகாணம்

විනිසුරු **සී.වී. විග්නේශ්වරන්**
ප්‍රධාන අමාත්‍ය - උතුරු පළාත


# Justice C.V.Wigneswaran

**Chief Minister – Northern Province**

நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பு நிர்மாணம், சமூக சேவைகள், புனர்வாழ்வளித்தல், மகளிர் விவகாரம், தொழிற்றுறையும் தொழில்முனைவோர் மேம்பாடும், சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக அமைச்சர்
මුදල් හා ක්‍රමසම්පාදන, නීතිය හා සාමය, ඉඩම්, විදුලිබල, නිවාස හා ඉදිකිරීම්, සමාජ සේවා හා පුනරුත්ථාපන, කාන්තා කටයුතු, කර්මාන්ත හා ව්‍යවසාය ප්‍රවර්ධන, සංචාරක, පළාත් පාලන සහ පළාත් පරිපාලන, අමාත්‍යවරයා
Minister of Finance and Planning, Law and Order, Lands, Electricity, Housing and Construction, Social Service, Rehabilitation, Women's Affairs, Industries and Enterprise Promotion, Tourism, Local Government and Provincial Administration

எனது இல / මගේ අංකය / My No: NP/CM/media/24/05/2017

திகதி / දිනය / Date: 24.05.2017



## வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபரும், வடக்கு மாகாண உள்ளூராட்சி பொது நிர்வாக அமைச்சின் முன்னாள் செயலாளருமான திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களுக்கு யாழ் மாநகர சபையால் உயரிய யாழ் விருது வழங்கப்பட்டமையையிட்டு அவரது சேவையை பாராட்டி முன்னெடுக்கப்படும் விழாவையொட்டி வெளியிடப்படும் விசேட மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வு அடைகின்றேன்.

குடியேற்ற அதிகாரியாக தம்மை அரச சேவையில் இணைத்துக் கொண்ட திரு. இராசநாயகம் அவர்கள் தமது கடின உழைப்பினாலும் அயரா முயற்சியினாலும் படிப்படியாக வளர்ச்சியுற்று திட்டமிடல் பணிப்பாளராக, மேலதிக அரச அதிபராக, கிளிநொச்சி அரச அதிபராக பதவியுயர்வு பெற்றது மட்டுமன்றி அவரின் பிறந்த ஊரான பூநகரி மண்ணிற்கு பல சிறப்புக்களும் அங்கீகாரமும் கிடைப்பதற்கு அரும்பாடுபட்டவர். தாம் மட்டும் வளர்ச்சியடைந்தால் போதாது தமது இனம் அதாவது தமிழ் மக்கள் உயர்வடைய வேண்டும் என்ற உயரிய சிந்தனையை உடையவர். அவரின் முயற்சியினால் அல்லது ஊக்கப்படுத்தலினால் அவரின் வழிகாட்டலின் கீழ் உயர் நிலைகளுக்குச் சென்றவர்கள் பலர்.

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின்னரும் பொதுச் சேவைக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்ட திரு.இராஜநாயகம் அவர்கள் மகாதேவா ஆச்சிரமத்தை பொறுப்பேற்றதுடன் அங்குள்ள சிறார்களின் உயர்வுக்காக தொடர்ந்தும் பாடுபட்டுக் கொண்டிருப்பவர். இவரின் அளப்பரிய சேவைகள் இவ் உயரிய விருதின் மூலம் அவருக்கு ஒரு உயரிய கௌரவத்தை வழங்கும் இத்தருணத்தில் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

***நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்***
***முதலமைச்சர்,***
***வடமாகாணம்.***

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணசபை
யாழ்ப்பாணம்

A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம் / A9 පාර, කයිතඩි, යාපනය / A9 Road, Kaithadi, Jaffna
தொலைபேசி / දුරකථනය / Telephone: 021 221 7311, 021 221 7313
தொலைநகல் / ෆැක්ස් / Fax: 021 221 7227, 021 221 7310
மின்னஞ்சல் / විද්‍යුත් තැපෑල / email: cmofficenortherne@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ENFIELD NAGAPOOSHANI AMBAAL TEMPLE**
**என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்**
HINDU TAMIL CULTURAL ASSOCIATION (ENFIELD)
இந்து தமிழ் கலாச்சார சங்கம் (என்பீல்ட்)
61-65 Church Lane, Edmonton, London, N9 9PZ

Tel 020 8884 3333/4333 info@ambaal.org www.ambaal.org Charity No: 1143043

# வாழ்த்துரை

*"என்பீல்ட் நாகபூசணி அம்பாள் திருவருள் துணைநிற்க"*

யாழ்.மாநகர சபையின் அதிஉயர் விருதான "யாழ் விருது" எனும் கௌரவத்தைப் பெற்றுக் கொண்ட உயர் திரு இராசநாயகம் அவர்கட்கு நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

இலண்டன் மாநகரின் வடபால் அருள்பாலிக்கும் நாகபூஷணி அம்பாளின் திருவருளால் தாயக மக்களுக்கு உதவும் முகமாக இந்து தமிழ் கலாசார சங்கம் "தாயின் நிழல்" திட்டத்தின் ஊடாகப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், பெற்றோரை இழந்து வாழும் குழந்தைகளுக்கும் அதரவளிக்க முன்வந்த போது எமக்குத் துணை நின்றவர்களுள் முதன்மையாளர் திரு. இராசநாயகம் அவர்கள்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவ ஆச்சிரமத்தைப் பொறுப்பெடுத்து ஆதரவற்ற குழந்தைகளை அரவணைத்துக் காக்கும் தந்தையாக நிற்பவர். அத்தோடு இலண்டனில் வாழும் என்பீல்ட் நாகபூஷணி அம்பாளின் அடியார்கள் தங்களின் குழந்தைகளின் பிறந்தநாள், திருமண நாள், மற்றும் தாய் தந்தையரின் சிரார்த்த தினம் என்பவற்றில் உணவளிக்க முன்வந்து நமது ஆலயம் ஊடாக அவ்வவ் தினங்களிலேயே அவற்றை வழங்கி, அவற்றிற்கான புகைப் படங்களையும், பற்றுச் சீட்டுக்களையும் உடனுக்குடன் அனுப்புகிறார்கள்.

திரு இராசநாயகம் அவர்களின் ஆளுமை திறனின் ஒன்றாக மகாதேவ ஆசிரமங்களின் உள்ள குழந்தைகள் தம்மைத் தாமே வளர்த்துக் கொள்ளும் வகையில் மகாதேவ ஆசிரமத்திற்குள்ளேயே உணவிற்குத் தேவையான தானியங்களைப் பயிரிடுதல், வாழைமரம் மற்றும் பசுவளர்ப்பு என்பனவற்றை ஏற்படுத்தியவர்.

அரவணிந்த நாயகி என்பீல்ட் நாகபூஷணி அம்பாளின் திருவருளால் திரு.இராசநாயகம் அவர்களின் பணி மென்மேலும் தொடரவும், நீடூழி வாழவும் வாழ்த்துகின்றோம்.

***தெய்வீகத்திருப்பணியில்***
***இந்து தமிழ் கலாசார சங்கம் (என்பீல்ட்)***

***என்பீல்ட் நாகபூஷணி அம்பாள் ஆலயம்,***
***சிவாச்சாரியார்கள்,***
***அடியார்கள்.***

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த. குருகுலராசா
ත.ගුරුකුලරාජා
T.Gurukularajah

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர், வடக்கு மாகாணம்.

අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා, සහ යෞවන කටයුතු අමාත්‍ය, උතුරු පළාත

MINISTER OF EDUCATION, CULTURAL AFFAIRS, SPORTS & YOUTH AFFAIRS, NORTHERN PROVINCE.

எனது இல. / මගේ අංකය / My No.

திகதி / දිනය / Date



# வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபரும், வடக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி பொது நிர்வாக அமைச்சின் முன்னாள் செயலாளரும், வடக்கு மாகாண சபையின் பொது நிர்வாக அமைச்சின் பிரதிப் பிரதம செயலாளரு மான உயர் திரு.திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களுக்கு யாழ்ப்பாண மாநகர சபையின் உயரிய யாழ் விருது வழங்கப்பட்டமையினையிட்டும், அவரது சேவையைப் பாராட்டியும் எடுக்கப்படும் விழாவினில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

திரு.திருமதி குமாரசாமி திருநாவுக்கரசு தம்பதியினருக்கு மைந்தனாகப் பிறந்த இவர் வாழ்வின் உயர்ச்சிக்கான அத்திவாரமாக ஆரம்பக் கல்விதனை பூநகரி அத்தாய் சிறி முத்துக்குமாரசுவாமி பாடசாலை, பூநகரி மகா வித்தியாலயத்திலும், உயர்தரக் கல்விதனை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் நிறைவாகப் பெற்று பேராதனைப் பல்கலைக்குத் தெரிவானார். இவர் கல்வி பயின்ற கால கட்டங்களில் கற்றல் செயற்பாடுகளுடன் மாத்திரம் நின்றுவிடாது பல்வேறுபட்ட இணைபாட விதான செயற்பாடுகளிலும் பங்கு பற்றி பல வெற்றிகளையும் பெற்றவர்.

எமது மக்கள் துன்ப துயரங்களையும் அவலங்களையும் எதிர்கொண்ட மிக நெருக்கடியான வேளைகளில் மக்களுக்கு சிறப்பான பணியாற்றிய ஒருவர், ஒரே நேரத்தில் பல அரச பதவிகளை வகித்த அவர் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு தன் சேவையை வழங்கி மக்கள் மத்தியில் நீங்கா இடம்பிடித்தார். மூன்று அரச அதிபர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட நெருக்கடி மிகுந்த வேளையிலும் தன் உயிரைச் துச்சமென மதித்து தனது சொந்த மாவட்ட மக்களுக்காகச் சேவை புரிந்தார். கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக இருந்த காலகட்டத்தில் கிளிநொச்சி நகரத் திட்டத்தினை அறிமுகப்படுத்தி அறிவியல் நகரில் புதிதாகப் பாதைகள் அமைத்து அங்கு சகல உயர் கல்வி நிலையங்களையும் நகர்த்த முயற்சி எடுத்த பெருமைக்குரியவர்.

கிளிநொச்சி மண்ணில் தொழில்நுட்பக் கல்லூரி, அழகியல் கலாமன்றம் கிளிநொச்சியின் பொருளாதார அபிவிருத்தி, பாரம்பரிய மருத்துவத் துறைக்கான ஆதரவு, இளைஞர் குடியேற்றத் திட்டங்கள், முட்கொம்பன் இளைஞர் விவசாயத்திட்டம், விவசாய மற்றும் கைத்தொழில் திட்டங்கள் போன்றவற்றினாலும், கூட்டுறவுத்துறையினூடாக சமூகப்பணி, சமூக நிறுவனங்களினூடாக சமூகப் பணி மற்றும் சமயப்பணி போன்றவற்றினாலும் இவர் சமூகத்திற்கு ஆற்றிய சேவை சொல்லில் அடங்காது. இவை மட்டுமன்றி யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற சிறார்களைப் பராமரிப்பதற்காக மகாதேவா ஆச்சிரம முதல்வர் தவத்திரு கணேசானந்த மகாதேவா சுவாமிகளுடன் இணைந்து இவ் இல்லத்தினைத் தோற்றுவித்தவர். இவ் இல்லம் நூற்றுக்கணக்கான ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரித்து கல்வி வழங்கும் பெரிய நிறுவனமாக உயர்ந்து நிற்கின்றது. எனவே, இவரது சேவைகள் தொடரவும், இன்னும் பல விருதுகளைப் பெற்று சிறப்புற வாழவும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

த.குருகுலராசா,
அமைச்சர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

# மாண்புறும் மைந்தன் இராசநாயகத்திற்கு வாழ்த்துக்கள்



கிளிநொச்சி மண்ணின் மாண்புறும் மனிதர் திரு.இராசநாயத்திற்கு என் இதயம் நிறைந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அவரை நீண்டகாலமாக அறிவேன். அவர் வாழும் பொழுதே வாழ்த்துவதற்கு விழாக்குழுவினர் எடுத்த தீர்மானமும், நடவடிக்கையும் பாராட்டுக்குரியதாகும்.

திரு.இராசநாயகம் அவர்கள் 1961 களில் பூநகர் மகா வித்தியாலயத்திலும், பின் யாழ்.இந்துக் கல்லூரியிலும் கல்வி பெற்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றார். தன் உயர்கல்வியை, முதுமானிப்பட்டத்தை லண்டனில் பெற்றிருந்தார். 1968 களில் இலங்கை அரசு சேவையில் இணைந்து பல துறைகளில் ஆற்றல் அனுபவத்துடன் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வந்தார். அவர் பணிக்காலத்தில் அரசியலாளரின் , அரசியல்வாதிகளின் பழிவாங்கலுக்கும் உள்ளானார். அப்போது அவ்வாறான சந்தர்ப்பங்களில் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அவர்களே பாராளுமன்றத்தில் அவருக்காக வாதாடியிருக்கிறார்.

இலங்கையில் தமிழினப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுக்காக அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற போர்க்காலங்களில் மக்கள் சிக்குண்டு பாதிப்புற்றனர்.

அந்நாளில் 1997 இல் அரச திட்டமிடல் துறையிலிருந்து கடமையாற்றியவர் கிளிநொச்சியின் அதிபராகப் பொறுப்பேற்றார். இக்காலங்களில் அரச உயர் பதவியில் இருந்தவர்கள் அச்சுறுத்தலுக்கும், உயிர்பலிகளுக்கும் ஆளாகியிருந்த காலம் அக்காலத்தில் அவர் தான் கிளிநொச்சியில் கடமைபுரிய விரும்புவதாக என்னிடம் தன் எண்ணத்தை வெளியிட்டார். அப்பொழுது பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் கூறி அரச அதிபராக கிளிநொச்சியில் கடமை புரிய வைத்திருந்ததில் எனக்கும் தொடர்பிருந்தமையை மகிழ்ச்சியுடன் நினைவு கூருகின்றேன். 2011 இல் அரசுத் துறையிலிருந்து ஓய்வு பெற்று பொதுத்தொண்டில் ஈடுபட்டார்.

குறிப்பாக கிளிநொச்சி மகாதேவா சிறுவர் இல்லத்தினை பொறுப்பேற்று நடாத்தி வந்தார். போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து, பள்ளிக்கூடங்களில் படிக்க வைத்து நல் ஆரோக்கியமாகவும், தன் நம்பிக்கையுடனும் அப்பிள்ளைகளை மனித சமுதாயத்தில் உயர வைத்தார். அப் பணியை அர்ப்பணிப்புடன் தொடர்ந்து வருகின்றார்.

அவர் தொண்டும், அர்ப்பணமும், ஆளுமையும் தொட்ட துறைகளிலெல்லாம் வெற்றி பெறும் வகையில் மிளிர்கின்றன.அத்துடன் சமயப் பணிகளிலும், சமூகப் பணிகளிலும் முன்னின்று உழைத்து வருகிறார்.

அத்தகைய பெருந்தகைக்கு விழாவெடுத்து மாண்புற வைப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். அவர் பெருமையும், மாண்பும், சான்றாண்மையும் மேலும் வாழ்வும் வளமும் பெற வேண்டுமென வாழ்த்தி நிற்கின்றேன்.

மாவை. சேர்.சேனாதிராசா,பா.உ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், மா.ச.உ**
වෛද්‍ය.ප.සත්‍යලිංගම්, ප.ස.ම
Dr.P.Sathiyalingam, M.P.C

**சுகாதார, சுதேச மருத்துவ மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சர், வடக்கு மாகாணம்**
සෞඛ්‍ය, දේශීය වෛද්‍ය, සහ පරිවාස හා ළමාරක්ෂක සේවා අමාත්‍යවරයා, උතුරු පළාත
**MINISTER FOR HEALTH, INDIGENOUS MEDICINE AND PROBATION & CHILDCARE SERVICES, NORTHERN PROVINCE**



# வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மண்ணின் பெருமைக்குரிய மைந்தனும் முன்னாள் கிளிநொச்சி அரச அதிபரும் வடமாகாண பொதுநிர்வாக அமைச்சின் ஓய்வு நிலை பிரதிப்பிரதம செயலாளரும், பிரபல சமூக சேவையாளருமான உயர் திரு.தி.இராசநாயகம் அவர்களின் பன்முகப்பட்ட அர்ப்பணிப்பான சேவைக் காக யாழ்.மாநகர சபையின் உயரிய யாழ்விருது வழங்கப்பட்டமையை யொட்டி அவரைப் பாராட்டும் முகமாக விழாக் குழுவினரால் வெளியிடப்பட இருக்கும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

விழாநாயகன் திரு.இராசநாயகம் அவர்களை நான் மிக நீண்ட கால மாக அறிவேன். அரச சேவையில் அவர் பல உயர் பதவிகளை அலங்கரித்து பிரதிப் பிரதம செயலாளராகவும் மேலதிக அரச அதிபராகவும் இரண்டு முறை கிளிநொச்சி அரச அதிபராகவும் கடமையாற்றி நாட்டின் பல பகுதிகளிலும் தனது அர்ப்பணிப்பான சேவை மூலம் மக்கள் மனதில் இடம் பிடித்த ஓர் நேர்மையான அதிகாரி என்பதை நாடறியும்.

போர்க்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து வன்னி பெருநிலப்பரப்பில் தங்கியிருந்த பல்லாயிரம் மக்களின் பசிபோக்க தனது உயிரைத்துச்சமாக மதித்து இராணுவ கெடுபிடிகளுக்கு மத்தியில் வவுனியா வந்து உணவு, மருந்துப் பொருட்களை கிளிநொச்சிக்கு அனுப்புவதற்கு அரும்பாடுபட்டார்.

02.05.1946 இல் பூநகரியில் பாரம்பரிய சித்த மருத்துவ குடும்பத்தில் பிறந்து அதே ஊரில் படித்து மேற்படிப்பை பிரபல யாழ் இந்துக் கல்லூரியிலே மேற்கொண்டு, பேராதனை பல்கலைக் கழகத்தில் பட்டதாரியாகிய இவர் கற்கும் காலத்திலேயே விளையாட்டுத்துறையிலும் பேச்சுப் போட்டிகளிலும் பங்கேற்றதுடன் மாணவ மன்றங்களில் முக்கிய பதவிகளையும் வகித்தவராவார்.

அத்துடன் மகாதேவா சைவ சிறார் இல்லத்தினை உயர் நிலைக்கு கொண்டுவர அரும்பாடு பட்டவருமாவர். கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களிலும் வடமாகாண ஆளுநரின் பிராந்திய ஆணையாளராகவும் கடமையாற்றி தனது சேவையை மக்களுக்காக அர்ப்பணித்தவராவார். கிளிநொச்சியில் தொழில்நுட்பக் கல்லூரியும் யாழ் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடமும் உருவாக அடித்தளமிட்ட பெருமை இவரையே சாரும்.

தனது ஓய்வு காலத்தை நோய்நொடியின்றி சந்தோசமாகக் கழிக்க இறைவனை வேண்டி இச் சந்தர்ப்பத்திற்காக நன்றி கூறுகின்றேன்.

வாழ்க பல்லாண்டு...

**Dr. *பத்மநாதன் சத்தியலிங்கம் (மா.ச.உ)***
***அமைச்சர், சுகாதார, சுதேச வைத்திய மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைகள் அமைச்சு, வடக்கு மாகாணம்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎ : 021 3207584, 021 2280024
Fax : 021 2221595, 021 2280024
Mobile : 077 6913244
✉ : shritharanmp@gmail.com
Web : www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka
☎ : 021 3207584, 021 2280024
Fax : 021 2221595, 021 2280024
Mobile : 077 6913244
✉ : shritharanmp@gmail.com
Web : www.shritharan.com

# இராசநாயகம் இம்மண்ணின் இராசகோபுரம்



இன்றைய உலகில் விருதுகள் பெறவேண்டும் என்பதற்காக உழைப்பவர்கள் பலர். விருகளால் பெருமை பெற்றவர்கள் பலர் விருதுகளைத் தேடி ஆலாய்ப் பறப்பவர்கள் பலர். இவர்களுக்கு அப்பா எமது பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய கிளிநொச்சி மாவட்டத்தமிழின் முதல் மனிதனாகிய மாண்பமை இராசநாயகம் அவர்களால் விருது பெருமை பெற்றது என்பதுதான் உண்மை. பதவிகள், விருதுகளால் நாம் பெருமை அடைவதில்லை. அப்படி நினைப்பது மகாதவறு. பதவிகளை, விருதுகளை நாம் பெருமைப்படுத்த வேண்டும் அதுதான் யதார்த்தம். யதார்த்தத்தை யாப்பாகி வாழ்ந்த உள்ளத்தனைய உயர்வினால் யாழ் விருதுக்கு அணி சேர்த்த மண்ணின் மைந்தனை மனங்கொண்டு வாழ்த்துகின்றேன்.

தன் சொந்தநலனுக்கு அப்பால் தன் மண்ணையும் மக்களையும் நேசிக்கும் ஒருவன் வாழும் சமூகம் அவன் மூலம் உச்சபலன்களைப் பெறுகிறது. அவ்வகையில் திரு.இராசநாயகம் அவர்களின் ஒப்பற்ற சேவையில் எமது மக்களின் மேம்பாட்டில் கணிசமான பங்களிப்பை வழங்கியது என்பதனை எவராலும் மறுத்துவிடமுடியாது. சாதாரண அரச பணியாளர்களாளக அரச சேவையில் இணைந்து கொண்டு அரச சேவையை ஆரம்பித்த அவர் தனது ஆற்றலாலும் திறமையாலும் திட்டமிடல் பணிப்பாளர், அரச அதிபர், வடமாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் என பல அதிகாரப் பதவிகளை வகித்து வந்த போதும் தன்னலமற்ற சேவை மனப்பான்மையாலும் மக்களின் நலன்களை முன்வைத்து செயற்பட்டமையாலும் அவர் தனக்கென ஓர் தனித்துவத்தை நிலைநிறுத்தினார். அவர் கிளிநொச்சி அரச அதிபராகப் பதவி வகித்த போது அவரை எவரும் எந்நேரமும் சந்திக்க முடியும் என்ற நிலமை ஏற்படுத்தப்பட்டிருந்தமையால் மக்களையும் மக்களின் பிரச்சினைகளையும் தெளிவாக அறிந்து அவரால் பணியாற்ற முடிந்தது.

அரச சேவையின் மூலம் உச்ச சாதனைகளை நிகழ்திய அவர் அதற்கு அப்பாலும் ஆதரவற்ற சிறுவர் சிறுமியர், முதியவர் இல்லங்களைப் பொறுப்பேற்று நிர்வகித்தல் போர் காரணமாக பாதிப்படைந்த கோவில்களை புனரமைத்தல் எமது பாரம்பரியப் பெருமைகளை அடையாளப்படுத்தல் தொல்பொருட்களை இனம் கண்டு வெளிக் கொண்டுவருதல் போன்ற பொதுச்சேவைகளிலும் தீவிரமாக செயற்பட்டுவருகின்றார். அவரால் தற்போது பொறுப்பேற்று நடாத்தப்படும் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் மூலவேராக விளங்கிய குருகுலத்தில் நான் பலன் பெற்றவன் என்பதனைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

யாழ்பாணத்திற்கு குடிநீர் வழங்கல் என்ற பெயரில் இரணைமடுக்குளத்தால் பயன்பெறும் கிளிநொச்சி விவசாயத்தை அழிக்க சில தரப்பினர் முயன்றவேளையில் அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அவர் முன்நின்று செயற்பட்டார். வெற்றியும் பெற்றார். அதை கிளிநொச்சி மக்கள் என்றும் நன்றியுடன் நினைவு கூருவர்.

மக்கள் சேவைக்கே தன்னை அர்ப்பணித்த மாண்பமை இராசநாயகம் அவர்கள் நீடூழி வாழவும் அவர் தம் தன்னார்வப் பணிகள் நீட்சியுறவும் வல்ல இறைவன் துணைநாடி வாழ்த்துகின்றேன்.

"வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு"

சி.சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,
இல : 882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் **திருமதி. சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா** அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



மண்ணின் மைந்தனாக கிளிநொச்சி மாவட்டத்தில் தடம்பதித்த உயர் திரு தி.இராசநாயகம் அவர்தம் அழியாச் சுவடுகளைத்தாங்கி நிற்கும் இவ் சிறப்பு மலருக்கு அவருடனான அனுபவப் பகிர்வை இம்மலர் ஊடாக உங்களுடன் கலப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அரச நிர்வாகத்தில் பல்வேறு பதவிகள் ஊடே தன் செயலற்றலாலே பதவி உயர்வைப் பெற்று இலங்கைத்திட்டமிடல் சேவையில் உள்ள ஒருவர் அரசாங்க அதிபராக கோல் ஒய்ச்சி எம் திட்டமிடல் சேவை அதிகாரிகளுக்குப் பெருமை சேர்த்துள்ளார் என உரக்கக் கூறுவேன்.

அவர் ஒவ்வொரு அரச அதிகாரி நடிபாகங்களிலும் மக்கள் நலன் சார்ந்து கிராமிய பொருளாதார அபிவிருத்தியில் குறிப்பாக பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் வலுவானதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான அபிவிருத்தி வேலைகளை கனகச்சிதமாக நிறைவேற்றியுள்ளார். பல்லின சமூகம் சார்ந்த பூநகரியில் எவ் சமூக அமைப்பம் முகம்சுழிக்காது அவரது சேவைகளை நன்றெனவேயென தலைமேல் சுமந்து தடம் பதித்துள்ளார்கள்.

ஒப்பீட்டு ரீதியாக கிளிநொச்சி மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்ட பூநகரி பிரதேசத்தை முன்னோக்கிய பிரதேசமாக்கப் பாடுபட்டவர்களில் அவர் தலையானவர்.

அவர் அரச அதிபராகப் பொறுப்பெடுத்த பின் மாவட்ட அபிவிருத்திக்காக எல்லாத்திணைக்களத் தலைவர்களையம் இணைத்து அரச இயந்திரத்தை நகர்த்தி மக்களுக்காக பணி செய்ததை இவ்விடத்தில் பதிவு செய்கின்றேன். மேலும் வடமாகாண ரீதியாகவும் வடமாகாண சபையில் துறை சார்ந்த செயலாளராகவும் பிரதி பிரதம செயலாளராகவும் இருந்து மீளக் குடியமர்வில் அர்ப்பணிப்புடனும் செயலாற்றியவர் நிதிப்பிரமாணங்கள் தாபன விதிக்கோவைகளுக்கு அப்பால் கடந்து தற்துணிவுடன் செயலாற்றிய அதிகாரிகளில் அவர் விரல்விட்டு எண்ணக்கூடியவர். தமிழ் மக்கள் தன் சார்ந்த இனம் என்ற நேசக்கரத்துடன் மீளக்குடியமர்வின் போது அவர் பம்பரம்போல் சுழன்றாடியதை நான் நேரில் கண்டேன். அவ்வாறான அர்ப்பணிப்புள்ள சேவையாளர்களின் விடா முயற்சியே முள்ளிவாய்க்கால் சாம்பல் மேட்டில் இருந்து துளிர்ந்து வளர்கிறோம்.

கிரோசிமா மற்றும் நாகசாகியில் அணுக்குண்டு வெடித்த பின்னர் ஜப்பான் எப்படி துவண்டு போகவில்லையோ அவ்வாறே இவர் போன்ற உதாரண புருஷர்களால் தமிழினம் மீண்டெழுந்து கொண்டு இருக்கின்றது. கோர யுத்தத்தின் எச்சத்தில் தவியாய்த் தவித்த சின்னஞ்சிறுசுகளை ஒன்று திரட்டி மகாதேவா ஆச்சிரமத்தில் அவர்களைச் சிறப்பாகப் பராமரிப்பதுடன் அவ் ஆச்சிரமத்துக்கு நிலைத்து நிற்கக்கூடிய வருமான வழிகளையும் வெகு கச்சிதமாகத் தேடிக் கொடுத்ததை நான் பாராட்டுவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

முறையான திட்டமிடல் நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை, மீளாய்வு செய்தல் என்ற முகாமை எண்ணக் கருத்திற்கிடமில்லை. அவ்வாறான ஒரு உதாரண புருஷர் நலமுடன் எல்லா வளங்களும் பெற்ற வாழ வாழ்த்துகின்றேன்.

***மக்கள் சேவையில் உள்ள***
***திருமதி. சாந்தி சிறிஸ்காந்தராசா,***
***பாராளுமன்ற உறுப்பினர்,***
***வன்னிமாவட்டம்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Congratulatory Message of Mr.Chandrasena Maliyadde

***Former Secretary to the of Plan Implement and***
***Director General Secretariat of Reconciliation***



I am really pleased that a graeat son of the Kilinochchi soils is being honoured. This is a due recognition of a true service of a rare person in fact Rasa is so different from many of us. He is one of the most quiet persons I ever met. He shouts withhis work but not with words. When someone meet Rasa he or she will think that Rasa is a insensitive person. But he is sensitive to all the concerns and issues. He is not only concerned but addressing them. Rasa served as the Government Agent during a very difficult times our history and in a very difficult place. Kilinochchi is not only Rasa's place of birth but also the den of LTTE. He managed to work with virtually two governments but without comprising, It is strange that Rasa was able to continue whith his meritorious service in a place where LTTE was in full force. He won the hearts of people, officers. politicians alike.

It is time that Sri Lanka needs many such dedicated, loyal service oriented officers in the public service such as Rasa.

I wish happiness, peace and prosperity for Rasa for many years to come

C. Maliyadde.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ශ්‍රී ලංකා ගාන්ධි සේවා සංගමය

அகில இலங்கை காந்தி சேவா சங்கம்

ALL - CEYLON GANDHI SEVA SANGAM

*(Regd No: S.159 of 25.08.1965)*

Your Ref No: ..........................

My Ref No: ............................

Gandhi Nilayam,
D8,Uruthirapuram,Kilinochchi,
Sri Lanka.

*President:*
Mr.N.Sivakaran
T.P: 0773145678

*Vice - Presidents:*
Prof.S.Mohanadas
Prof.N.Shanmugalingan

*General Secretary:*
Mr.M.Shanthan Sathiakeerthy
T.P: 0776624377

*Joint Secretaries:*
Mr.M.Suganthan
Mr.S.Nirosan

*Treasurer:*
Mr.M.Leelavinothan
T.P:0773163212

*Committee Members:*
Mr.S.K.Thambipillai
Mrs.S.Thambipillai
Mr.A.Vadivelu
Mr.K.Karthikesu
Mrs.S.Selvarani
Mr.S.Subramaniyam
Mr.S.Kanthavel
Mr.K.Selvakumaran
Mr.K.Sripathi
Mr.N.Kirushnapillai
Miss.K.Piramatheeswary
Mr.N. Ganeshamoorthy
Dr.K.T.Ganeshalingam
Mrs. A. Naguleshwary
Mr.S.Jeyaganesan
Mr.S.Thiruchsenthooran
Mrs.K.Ratneswary
Mr.R.Sri Apoorbakrishnan

*Children Home (Gandhi Nilayam)*
Mr.A.Vadivelu (President)
Mr.K.Karthikesu (Vice - President)
Mrs. S.Selvarani (Secretary)
Mr.S.Subramaniyam (Asst Secretary)
Mr.M. Leelavinothan (Treasurer)

Date:..........................


## காந்தீயப்பற்றாளர் உயர் திரு.தி.இராசநாயகம் அவர்கள்



தனது இளமைக்காலத்தில் ஏற்பட்ட காந்திய சர்வோதய ஈடுபாட்டின் காரணமாக சர்வோதய வேலைத் திட்டங்களில் பங்கேற்றவர் என்ற பெருமைக்குரியவர் உயர் திரு.திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள். சிறந்த சமூக சேவகரான அவரின் சமய சமூகப் பணிகளைக் கௌரவித்து யாழ்.மாநகர சபை சைவ சமய விவகாரக்குழு யாழ் விருது வழங்கிக் கௌரவித்தமை பொருத்தமான தொன்றாகும். தனது வாலிபப் பருவத்தில் சர்வோதயம் அமைப்புடன் இணைந்து பல்வேறு சிரமதானப் பணிகளிலும் சமூக அபிவிருத்தி வேலைத் திட்டங்களிலும் அவர் பங்கு பற்றியிருக்கிறார். அக்கால கட்டத்தில் நிகழ்ந்த காந்தீய எழுச்சி சிந்தனை யில் தன்னையும் இணைத்துக் கொண்ட ஒருவராக அவர் விளங்கி இருக்கிறார். இவ்வாறு வளர்ந்து வந்த காந்திய - சர்வோதயத் தொடர்பு அவரை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைமைப் பதவியை அலங்கரிப்பதற்குக் காரணமாக இருந்துள்ளது என்றால் அது மிகையல்ல.

1949 ஆம் ஆண்டு முதல் சமூக முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வந்த அகில இலங்கை காந்தி சேவா சங்கம் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக சில ஆண்டுகாலம் இயங்காதிருந்தது. இந்த நிலையில் 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட சமாதான ஒப்பந்தத்தைத்தொடர்ந்து நாட்டில் ஓரளவு அமைதி திரும்பியது. இச் சூழலில் சங்கம் 2004 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கந்தர் மடத்திலுள்ள வேதாந்த மடத்தில் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினரும் சரஸ்வதி - பிருந்தாவனம் அறக்கட்டளையின் நிறுவுனரும் மூத்த காந்தீயவாதியுமான சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களின் அயராத முயற்சியால் மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டது. சங்கத்தின் மூத்த உறுப்பினர்களை ஒருங்கிணைப்பதற்கு புதிய அங்கத்தவர்களை இணைப்பதற்கும் ஓய்வு நிலை அதிபர் மூத்தறிஞர் ஆ.சபாரத்தினம் அவர்கள் பெரும் பங்காற்றினார். புனரமைப்புக் கூட்டத்தைத் தொடர்ந்து வந்த நிர்வாக சபைகளில் சோ.க.தம்பிப்பிள்ளை, ஆ.வடிவேலு ஆகியோர் தலைவர்களாகப் பதவி வகித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவராக விளங்கிய சி.க.வேலாயுதப்பிள்ளை அவர்கள் 1956 ஆம் ஆண்டு கிளிநொச்சி உருத்திரபுரம் 8 ஆம் வாய்க்காலில் நிறுவிய கிளிநொச்சி சிறுவர் இல்லமும் பயிற்சி நிலையமும் (காந்தீயம்) யுத்தகாலத்தில் சங்கத்தின் பரிபாலனத்தின் கீழ் இயங்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. யுத்தம் காரணமாக நிலையம் பெருஞ்சேதமடைந்திருந்தது. இந்த நெருக்கடிய காலகட்டத்தில், மூத்த தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களுடன் நீண்ட காலமாக இருந்த தொடர்பினால் தி.இராசநாயகம் அவர்கள் 2008 காலப்பகுதியில் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்துடன் அங்கத்தவராக இணைந்து செயற்படும் நிலை உருவானது. இதனால் 2010 இல் காந்தி நிலையத்தை மீட்பதற்கு இராசநாயகம் ஐயா பெரிதும் உதவினார். பின்பு அந்த நிலையத்தின் தலைவராகவும் இருந்து ஏழைச் சிறார்களுக்கு உணவு, உடை, கல்வி கொடுத்து வாழ்வளித்ததுடன் திரு.சி.க.வேலாயுதபிள்ளை அவர்கள் விட்டுச்சென்ற பணியை எமது சங்கம் தொடரவும் வழி அமைத்துக் கொடுத்தார். 25.06.2011 இல் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட அவர் தனது சுகவீனம் காரணமாக 01.12.2015 ஆந்திகதி இராஜினாமாச் செய்யும் வரை தலைவராக விளங்கினார். அவரின் தலைமையின் கீழ் ஒரு வருடகாலம் பொதுச் செயலாளராகப் பதவி வகிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. சங்கம் ஒழுங்கு செய்யும் நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன் இளைஞர்களாகிய எம்மை ஊக்கப்படுத்தியும் வந்தார்.

பல்வேறு அரச உயர்பதவிகளை வகித்ததோடு மட்டுமல்லாமல் சமூகத்திற்குத் தொண்டாற்று வதனை தனது வாழ்வின் உயரிய குறிக்கோளாகக் கொணடு செயற்பட்டுவரும் இராசநாயகம் ஐயா அவர்கள் பல்வேறு சமூகமட்ட அமைப்புக்களின் பொறுப்புகளை ஏற்றுச் செயற்பட்டு வருவதோடு கிளிநொச்சி மாவட்டத்தின் மைந்தனாக கலங்கரை விளக்காக உயர்ந்து நிற்கின்றார்.

மகாதேவ ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லம் என்ற பெரும் நிறுவனத்தின் தலைவராக விளங்கும் இராசநாயகம் அவர்களின் காந்தீயப் பணிக்காகவும் காந்தீயப்பற்றுக்காகவும் அகில இலங்கை காந்தீய சேவாசங்கம் என்றும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளது.

வாழ்க காந்தீயம்! வளர்க சர்வோதயம்!!

***காந்தீயப் பணியில், எம்.ஹரந்தன் சத்திய கீர்த்தி,***
***கௌரவப் பொதுச் செயலாளர்,***
***அகில இலங்கை காந்தி சேவா சங்கம்,***
***ஆசிரியர் காந்தீயம்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் ஒன்றியம்)

# ALL CEYLON HINDU CONGRESS

(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)


| | | |
|---|---|---|
| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
| **President:** | **Hony. General Secretary:** | **Hony. Treasurer:** |
| கந்தையா நீலகண்டன் | வே. கந்தசாமி | அ. கயிலாசபிள்ளை |
| *Kandiah Neelakandan* | *V. Kandasamy* | *A.Kailasapillai* |
| *Phone: 2580807 (Res)* | *Phone: 2586620 (Res)* | *Phone: 2575566 (Res)* |
| *2371100 (Off) - Fax : 2371111* | *Mobile: 071-5349150* | *Fax: 2575472* |
| *neela@mnlaw.lk* | *vkandasami@gmail.com* | *hariomak@gmail.com* |


## வாழ்த்துச் செய்தி



அன்பர் திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களுக்கு யாழ் மாநகர சபையின் உயரிய "யாழ் விருது" வழங்கப்பட்டமையிட்டு நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

வேதனைகளாலும் சோதனைகளாலும் வாடிய எமது மக்களுக்கு அபயகரம் நீட்டி அவர் செய்த பணிகள் பல.

அரச சேவையில் இருந்தபோதும் இளைப்பாறிய பின்பும் அவர் தன் உடன் பிறப்புக்களின் நலன்கருதி, பல தொண்டுகளை ஆற்றிவருகிறார்.

பூநகரியில் பிறந்து தன் பிறந்த மண்வாசனையை மறவாத யாழ் இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த மாணவராக பல்கலைக்கழகம் சென்று பட்டதாரியாகி அரச சிவில் நிர்வாகியாகப் பதவி பெற்று மக்கள் சேவையே மகேசுவரன் சேவையென இறையருளுடனும் இறைபக்தியுடனும் அன்பர் இராச நாயகம் செய்த அளப்பரிய பணிகளை நாங்கள் என்றும் மெச்சுகின்றோம்.

அறிவாலும் பட்டப்படிப்பாலும் பதவிகளாலும் உயர்ந்த திரு. இராசநாயகம் என்றும் நிதானமாக மக்களுடன் அவர்களில் ஒருவராக வாழ்ந்தவர். அவரின் எளிமையான போக்கும் மண்ணின் மைந்தனான வாழ்வும் அவரை என்றும் மக்களின் உள்ளங்களில் உயர்த்தி வைத்தன என்றால் மிகையாகாது.

இன்னும் பல்லாண்டு வாழ்ந்து இப்பெருமகன் தன் பணிகளைத் தொடர எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

***இறை பணியில்***

***கந்தையா நீலகண்டன்***

***தலைவர்***

***அகில இலங்கை இந்து மாமன்றம்***

VAZTHU Message Rasanayagam.doc/HINDU


தலைமையகம்: இல.91/5, சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 02, இலங்கை.
Head Office: No 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha, Colombo – 02, Sri Lanka.
தொ.பேசி/Phone : 2434990 www.hinducongress.lk தொலைநகல்/Fax : 2344720
hinducongress@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Arobanam Children Fund

29 Helmsdale Road, London SW16 5UT, UK
Tel No: 44 (0) 208 764 4948
Registered Charity No. 1082803
www.arobanam.com


**Dear Friends,** 15th May 2017



It is with great pleasure, I write a few words about my longstanding association with Mr.Thirinavukarasu Rasanayagam.

Our Organisation was founded to help a children home named Arobanam Boys Home under Fr.James Pathinathan back in 1997. I was introduced to Mr. Rasa nayagam by a mutual friend when he was the government agent of Kilinochchi. I was on a personal visit to sri Lanka when I witnessed first and the hardship our people were going through, especially the parentless children. Following this visit we decided to expand our service to children in Kilinochchi by supporting Mahadeva Ashram, a children's homes in its infancy.

Arobanam worked closely with Mr. Rasanayagam to improve facilities and built a study hall with the help of Sri Kanagadurkai Amman Temple in London for the children. A few years later we built another facility with funding support from the Kingston Institute of Tamil culture here in the UK. Mr.Rasanayagam has continued to work tire dlessly for the children's future in our troubled land. Without his dedication and hard work, I am sure that Mahadeva Ashram would not have developed the level of what it is today.

Over the years I have been able to appreciate how difficult his work must be as a Government Agent for Kilinochchi. It takes a special person with courage and exceptional diplomatic skills to hold such a position during such a time of unrest. Even with this he always greeted every on with a big smile, not only his friends but also his adversaries. I am sure there are other colleagues who know him better that can provide a fullest account of his time with the government service of Sri Lanka.

In all my meetings with him I have seen total dedication to improve the lives of the children who have lost both parents in many cases and were lost without guidance. Mr.Rasanayagam has provided that vital role. Mahadeva Suvamigal Chiruvar Illam as it is known today is the leading institution in Kilinochchi serving needy children. On behalf of Arobanam's committee members I wish every success of the celebratory event which is richly deserved.

***V.Ramakrishnan,***
***Chairman ACF - UK.***

**Patron: Fr. James Pathinathan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ශ්‍රී ලංකා සබරගමුව විශ්වවිද්‍යාලය
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
SABARAGAMUWA UNIVERSITY OF SRI LANKA
තැ.පෙ.අංක -02, බෙලිහුල්ඔය, ශ්‍රී ලංකාව. දුරකථනය : 045-2280017 ෆැක්ස් : 045- 2280012
P.O.Box - 02, Belihuloya, Sri Lanka. Tel : 045 2280017/ Fax : 045 2280012

Professor DR. Kanagasabapathy Nageswaran, J.P
Department of Languages

பேராசிரியர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், ஜே.பி
மொழித்துறை
☎ 0714453466



நிலவளமும், நீர் வளமும், பயிர் வளமும், மண் வளமும், கல்வி கலை கலாசார வளமும் பயிலும் மண் கிளிநொச்சி. தொல்சீர் பாரம்பரியங்கள் அழிந்த நிலையிலே பொருளாதார வதிவிடமும் இழந்த நிலையிலே உயிர்களது அகால மரணங்கள் நிகழ்ந்த பூமியிலே இன்று கோலோச்சி மூச்சுவிடும் நிலையில் தலை நிமிர்ந்து வளர்ந்து வரும் ஒரு இல்லமே மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம். சிவ புண்ணியச் செல்வர்களால் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டுவரும் ஒரு இல்லமே இது. இதன் தூண்கள் தாங்கி நிற்கும் நிலைகள் பலராவர். பெரும் மதிப்பும் கௌரவமும் கொண்ட இன்றைய தலைவர் பெற்ற அரச கௌரவம் என்பது அவரது தன்னலமற்ற சேவைக்கு கிடைத்த அங்கீகாரம்: தலைசிறந்த நிர்வாகத்திற்குக் கிடைத்த பெருமதிப்பு. "அன்பர்... பணி சொல்ல எனை ஆளாக்கி விட்டு விட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும் பரபரமே" என்பது தாயுமானவரின் வாக்கு. உயிர்ப் பாதுகாப்பும், பயிர்ப்பாதுகாப்பும் கலை, கல்வி, பண்பாடு, கலாசாரம், சமயம், ஒழுக்கம் என்பவற்றின் பேணுகையும் பாதுகாப்பும் அன்பு, அரவணைப்பு, கண்டிப்பு, ஊக்குவிப்பு, வாழ்வு என்பனவும் நிகழும் இடம் கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் சிறவர் இல்லம். இவை அனைத்தும் சீராக நடை பெற வேண்டும் என்றால் நீண்ட கால குறுங்காலத் திட்டங்களும் கனவான்கள், புரவலர்கள், மனித நேய நெருக்கங்கள், அதிகாரிகள், அமைப்புக்களின் ஒத்துழைப்பைப் பேணும் இராஜதந்திரம் அத்தியாவசியமாகும். இதற்கெல்லாம் உதவுவது இடம், பொருள், ஏவல் என்பன. அதன் அருமை பெருமைகளையுணர்ந்து ஆளுமையுடன் செயற்படும் உத்தம புருஷர் தலைவர் திரு.தி.இராச நாயகம் அவர்கள் கிளிநொச்சியில் தமிழர், தமிழர் சமயமாகிய சைவம் வாழும் மண்ணிலே காலூன்றி நின்று செய்த செய்கின்ற செய்யும் பணிகள் காலத்தால் அழியாதவை. புகழைப் பணம் கொடுத்து வாங்க முடியாது.

"செயலின் தூய்மையே புகழின் வெற்றி"

*பேராசிரியர் டாக்டர். கனகசபாபதி நாகேஸ்வரன்,*
*தமிழ்ப்பேராசிரியர் மொழிகள் துறை,*
*சப்பிரகமுவ பல்கலைக்கழகம்,*
*பெலிகுல்லோயா.*

**பட்டங்களும் கௌரவ விருதுகளும்**

1. பி.ஏ. (சிறப்பு)
2. எம்.ஏ
3. கலாநிதி
4. அருள்மொழிச்செல்வர்
5. வாகீச கலாநிதி
6. செஞ்சொல்வாணர்
7. செஞ்சொல்வாரிதி
8. செம்மொழிப் புலமையாளர்
9. மணிமொழிவாரி
10. அருட்கலைமாமணி
11. சித்தாந்த பண்டிதர்
12. நவரஸகலைஞானி
13. மகாவித்துவான்
14. முத்தமிழ் வித்தகர்
15. வாக்கின் மன்னர்
16. செந்தமிழ் யாமன்னர்
17. தமிழ் முகில்
18. செந்தமிழ்ச் செம்மல்
19. உரைத்தமிழ் ஒளி
20. கலாபூசணம்
21. அகில இலங்கை சமாதான நீதிபதி
22. தமிழ் மலைச் சிகரம்
23. இளந்தென்றல்
24. நற்றமிழ்வேந்தன்
25. பாவலன்
26. செந்தமிழ் வள்ளல்
27. நாவலன்
28. வித்தகன்
29. சிந்தனைச் சிற்பி
30. செம்மொழி வாரிதி
31. தண்டமிழ் விறலோன்
32. பண்ணிசைச் செல்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை
Sri Durgadevi Devasthanam
Tellippalai, Sri Lanka.
E.Mail:- Thurkaiammantemple@gmail.com
Face Book:- tellidurga@gmail.com
T.P No : 021 - 3213151
திகதி: 04-04-2017
Fax:- 021 2241909
தலைவர்:
செஞ்சொற் செல்வர்
கலாநிதி ஆறு திருமுருகன்
Dr.ARUTHIRUMURUGAN
E.Mail:- Aruthirumurugan@gmail.com Hot Line:- 0776258511

# செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு•திருமுருகன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச்செய்தி



"சான்றோர் என்கை ஈன்றோட்கு அழகு"

சான்றோராக விளங்குபவர்கள். வறியவரை நேசிப்பர் என்பதே உண்மை. ஸ்ரீமான் திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களின் உத்தம சேவையைக் கௌர வித்து எடுக்கும் விழாக் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தம் அடைகிறேன். காலமறிந்து சேவை செய்தவர் ஆதரவற்ற பிள்ளைகளுக்கு அபயம் கொடுத்தவர். இன்னல்கள் சூழ்ந்த காலத்தில் எமது சமயத்தின் பெயரால் சமூகத்துக்கு அரிய பணியாற்றியவர். உயர் பதவிகள் வகித்த போதும் மணப்பற்றுடன் தன் கடன் பணி செய்தவர். அவரது ஜீவ சேவையைப் பாராட்டி எடுக்கும் விழாப்பொலிவுற எனது இதய பூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகின்றேன்.

ஆறு. திருமுருகன்
கலாநிதி.ஆறு.திருமுருகன்
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்
දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
Govt.Agent / District Secretary

தொலைபேசி / දුරකථන / Telephone: 021 - 228 3965

தொலைநகல் / ෆැක්ස් / Fax: 021 228 3966

மின்னஞ்சல் / විද්‍යුත් තැපෑල / E-mail: gakili@sltnet.lk

பொதுத்தொலைபேசி / පොදු දුරකථන / General Telephone: 021 - 228 3945

மேலதிக மாவட்டச் செயலாளர் / අතිරේක දිස්ත්‍රික් ලේකම් / Addl.District Secretary: 021 - 228 5456

மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය,කිලිනොච්චි.
District Secretariat, Kilinochchi

எனது இல / මගේ අංකය / My No: KN/GA/GM/16
உமது இல / ඔබේ අංකය / Your No:
திகதி / දිනය / Date: 2017.05.16

---

# பன்முக ஆளுமையுடைய நல்ல மனிதன்

கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபராகவும், வடக்கு மாகாணசபையின் உள்ளூராட்சி பொதுநிர்வாக அமைச்சின் செயலாளராகவும், பிரதி பிரதமசெயலாளர் பொதுநிர்வாகம் ஆகிய பல்வேறு பணிநிலைகளை அலங்கரித்து ஓய்வுபெற்றுள்ள திரு.திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களது சமூக சமய நிர்வாகப் பணிகளைப் பாராட்டி அவர் வாழும் காலத்திலேயே அவருக்கு மலர் வெளியீடு செய்யும் நற்பணியை நான் உளமாரப் பாராட்டுகின்றேன்.

பூநகரி 4 ஆம் கட்டைப் பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இம்மாவட்டத்தில் முதல் தர மனிதனாகத் தன்னை மாற்றிக்கொண்டு பல்வேறு நிர்வாக சமய சமூகப் பணிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டுவருவது பாராட்டுக்குரியது. நிர்வாக நிலையில் மிகவும் நெருக்கடி மிகுந்த உள்நாட்டு போர்ச் சூழலில், இம்மாவட்டத்தில் தனது அரச அதிபர் பணியில் திறம்படச் செயற்பட்டு நல்ல நிர்வாகி என்ற பெயரைத் தனதாக்கியுள்ளார்.

சமயப் பணியில் உருத்திரபுரீச்சரத்தினது பெருமையை இம்மாவட்டம் முழுமைக்குரியதாக மாற்றியதுடன் சமூக நிலையில் தனது சேவைக் காலத்திலேயே மகாதேவா சைவச் சிறுவர் இல்லத்தினைப் புதுமுறிப்புப் பகுதியில் ஆரம்பித்து நெருக்கடியான காலத்தில் தாய் தந்தையரை இழந்த பிள்ளைகளைப் பராமரித்து வந்ததுடன், இன்று ஓய்வின் பின் அந்த இல்லத்தை 380 பிள்ளைகளுக்கு மேல் தங்கிப் படிக்கும் ஒரு சிறப்பான சிறுவர் இல்லமாக நடாத்தி வருவது அவரது சமூகப் பணியின் சிறப்பான அடையாளமாகும்.

எனவே, இவரது ஓய்வுக்காலம் மேலும் சிறப்புற மனமார வாழ்த்தி அவரது பணிகளைப் பாராட்டி வெளியிடும் இம்மலருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதுடன் இதற்கெனப்பாடுபட்ட அனைவருக்கும் எனது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*சுந்தரம் அருமைநாயகம்*
*அரசாங்க அதிபர், மாவட்டச் செயலாளர்,*
*கிளிநொச்சி மாவட்டம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone: 021-222 2235

දුරකථනය සාමාන්‍ය / பொது தொலைபேசி / General Telephone: 021-222 2233, 021-222 2234

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය / எனது எண் / My No.: GA/JF/VN/03

ඔබේ අංකය / உமது எண் / Your No.:

දිනය / திகதி / Date: 17-04-2017

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மண்ணின் மைந்தன் உயர் திரு தி.இராசநாயகம் அவர்களின் பணியினை விதந்து யாழ் விருது வழங்கி சிறப்பித்தமையினை முன்னிட்டு வெளியீடு செய்யப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

திரு.தி.இராசநாயகம் அவர்கள் பூநகரியில் சித்தமருத்துவத்தில் புகழ்பூத்த தவசித்தம்பி பரம்பரையைச் சேர்ந்த குமாரசாமி திருநாவுக்கரசு அவர்களுக்கும் விசுவலிங்கம் பாக்கியம் என்பவருக்கும் மைந்தனாக 1946 இல் பிறந்து, ஆரம்பக் கல்வியினை பூநகரியிலும், உயர் கல்வியினை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாகவும், 1968 இல் சிவில் நிர்வாகத்தில் காலடி எடுத்து 2011 வரை பெரும் பணியாற்றியவர். கணக்காய்வாளராக, திட்டமிடல் அதிகாரியாக, இந்து கலாசார உதவிப் பணிப்பாளராக, அரசாங்க அதிபராக, உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக, பொது நிர்வாக அமைச்சின் பிரதிப் பிரதம செயலாளராக, ஆளுநரின் ஆணையாளராக பல்வேறு உயர் பதவிகளில் மக்கள் சேவையே மகேசன் சேவை என உழைத்தவர்.

மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, நிவாரண சேவைகள், அகதிகள் விடயத்தில் முன்னுரிமை யுடன் தன்னாலான பணிகளைத் திறம்படச் செயற்படுத்தி பெருமை சேர்த்த அதேவேளை, அறிவியல் நகரின் தோற்றத்திற்கும், கிளிநொச்சி நகரத் திட்டமிடலிற்கும், கிளிநொச்சி விவசாயபீடம், பொறியியல் பீடங்களை அமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையும் மதிப்பிட முடியாது. கிளிநொச்சி மண்ணில் தொழிலநுட்பக் கல்லூரி, பொருளாதார அபிவிருத்தி, பாரம்பரிய மருத்துவத் துறைக்கான ஆதரவு, பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எழுச்சிக்கு வித்திட்டமை மற்றும் பல கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கும், இவரது சமயப் பணியினால் அறநெறிப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கும், மகாதேவ அச்சிரமத்திற்கான பணிகளையும் திருக்கேதீஸ்வரத் திருப்பணியிலும் முன்னின்று உழைத்து வருபவர்.

இவரது விருதுகள் கம்பன் கழக ஆளுமை மிக்க சமூகத்தொண்டுக்கான கௌரவ விருது, யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் மகத்தான சேவையாளருக்கான விருது, கரைச்சி பிரதேச செயலக "கரை எழில்" விருது எனச் சிறந்த விருதுகளை தனதாக்கிய பெருமைக்கு உரியவர் இவர். யாழ் விருதும் பெற்றுச் சிறந்திருக்கும் இவ்வேளை வெளியீடு செய்யும் சிறப்பு மலர் மலர்ந்து நறுமணம் பரப்ப என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

*நா. வேதநாயகன்,*
*அரசாங்க அதிபர்,*
*யாழ் மாவட்டம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைவளர, தொழில் மேவிட நிலைபெறுமின்!
நில்மின்!! நிமிர்மின்!!! தமிழால்.

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம்
Kilinochchi District Thamil Sangam

கனகபுரம் வீதி,
கிளிநொச்சி.

தொ.பே.இல - 021 2060107, 077 6017086, 077 4701820

Kanagapuram Road,
Kilinochchi.

காப்பாளர் - Patrons

திரு.தி.இராசநாயகம்
மேனாள் அரச அதிபர்,
கிளிநொச்சி.
தலைவர், மகா தேவா சைவச்சிறுவர் இல்லம்

Mr.T.Rasanayagam
Former Government Agent,
Kilinochchi

திரு.க.முருகவேல்
வலயக்கல்விப் பணிப்பாளர்
கிளிநொச்சி.

Mr.K.Murukavel
Zonal Director of Education
Kilinochchi.

வாழ்நாள் பெருந்தலைவர்
திரு.வே.இறைபிள்ளை
தமிழ்க்காவலர்
கனகபுரம், கிளிநொச்சி

*Senior Life President*
Mr.V.Eraipillai
Former Administrative Officer
Kachcheri, Kilinochchi
Kanagapuram, Kilinochchi

தலைவர்
திரு.நா.சோதிநாதன்
மேனாள் கல்லூரி முதல்வர்
கனகபுரம், கிளிநொச்சி.

*President*
Mr.N. Sothinathan
Former Principal of College
Kanagapuram, Kilinochchi.

துணைத்தலைவர்
திருமதி.செ.கருணாதேவி
ஓய்வுநிலை நிர்வாக அலுவலர்
கச்சேரி, கிளிநொச்சி.

Vice President
Mrs.S. Karunathevi
Former Administrative Officer
Kachchari Kilinochchi.

செயலாளர்
திரு.செ.சிவகுருநாதன்
மேனாள் வேளாண்மைப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம் வீதி, (A9 வீதி)
பரந்தன்.

Secretary
Mr.S. Sivakurunathan
Former Director of Agriculture
Kandy Road, Paranthan

பொருளாளர்
திருமதி.கி.தர்மிலா
நிதி உதவியாளர்
கிளி/தொழில் நுட்பகல்வி நிறுவனம்
கிளிநொச்சி.

*Treasurer*
Mrs. K.Tharmila
Finance Assistant
Ki/Technical College
Kilinochchi

துணைச் செயலர்
திருமதி.ச.மணிமேகலை
உள்ளூராட்சி அலுவலர்
உள்ளூராட்சித் திணைக்களம்
கிளிநொச்சி.

*Vice Secretary*
Mrs.S. Manimekalai
Local Govt. Officer
Department Local Govt.
Kilinochchi.

# பாராட்டும் வாழ்த்தும்

சமயம், சமூகம் மருத்துவம் அறப்பணிகள் ஆகியவற்றில் தம்மை முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்கரிய பணிகளை தனிஉறு விருப் போடும் நனிமிகு வேட்கையோடும் செறிவார்ந்த வினை ஈடுபாட்டோடும் ஆற்றி வருபவர்களில் ஒருவரை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்து நல்லைக் குமரன் வெளியீட்டு விழா யாழ் விருதினை வழங்கி நன்மதிப்பளித்து வரும் யாழப்பாணம் மாநகர அவை சைவசமய விவகார குழுவினரைப் பாராட்டுவதிலும் வாழ்த்துவதிலும் கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கம் பெரும் மகிழ்வடைகின்றது.

அந்த வகையில் இந்த ஆண்டு சைவசமயம் சமூகம் அறப் பணிகளில் மட்டுமல்லாமல் தான் நிர்வகிக்கும் நிறுவனங்களில் தமிழ் நெறியில் புதுமனை, பணிமனை மண்டபங்களின் திறப்பு விழாக்களை யும், சைவசமய சிறுவர் இல்லத்தின் பிள்ளைகளின் பிறந்த நாள் நிகழ்வுகளையும் மங்கைப்பருவ நன்னீராட்டு நிகழ்வுகளையும் தமிழ் நெறியில் நடாத்தி வரும் தமிழ்ச்சங்கத்தின் காப்பாளர் மாண்பமை தி.இராசநாயகம் அவர்களுக்கு யாழ்விருதினை வழங்கி நன்மதிப்பு அளித்தமைக்காக தமிழ்ச் சங்கத்தின் சார்பில் மாநகர அவை சைவசமய உபகாரக் குழுவினரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மேலும் தமிழ்ச்சங்கத்தைப் பொறுத்த மட்டில் திரு.தி.இராசநாயகம் அவர்கள் கினிநொச்சி மாவட்ட ஆட்சியாளராகப் பதவி வகித்த காலத்தில் செயலகத்தில் பேணப்பட்ட கோப்புக்கள், பதிவேடுகள், ஆவணங்கள் உட்பட எல்லா நிலைகளிலும் தூயதமிழைப் பயன்படுத்த ஆக்கமும் ஊக்கமும் வழங்கியவர். அத்துடன் தமிழ்ச் சங்கத்தால் மேற்கொள்ளப படும் தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்கும் நூல்கள் வெளியிடுவதற்கும் நிதி அளித்து உதவியவர். இவரின் மக்கள் தொண்டைப்பாராட்டி தமிழ்ச் சங்கம் "மக்கள் மாமணி" என்ற விருதை 2005 ஆம் ஆண்டு வழங்கி நன்மதிப்பு அளித்ததையும் ஈண்டு குறிப்பிடுவதில் பெருமையடைகின்றது. சுருக்கமாகக் கூறின்

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃது இலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவன் வாக்குக்கு ஏற்ப எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அத்துறையில் தனி முத்திரை பதித்து புகழ் பெற்றவர் என்பதைக் குறிப்பிடுவதில் சங்கம் மகிழ்வடைகின்றது. மேலும் அவரது பணிகள் மேன்மை பெறவேண்டுமென்றும் நீடூழி காலம் வாழவேண்டுமென்றும் தமிழ்த் தாயின் பெயரால் வாழ்த்துகின்றோம்.

நன்றி.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்றும் சங்கே முழங்கு - பாரதிதாசன்"

இங்ஙனம் - தமிழ்ப் பணியில்
நா.சோதிநாதன் - தலைவர் வே.இறைபிள்ளை - பெருந்தலைவர்
செ.சிவகுருநாதன் - பொதுச் செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கன்*

*முன்னாள் துணைவேந்தர்*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

*2017.06.19*

# முன்னாள் துணைவேந்தரின் வாழ்த்து

திருவாளர் தி.இராசநாயகம் அவர்களின் பவளவிழாவைக் கொண்டாடும் இவ்வேளை, அர்த்தமும் அழகும் நிறைந்தது.

“மக்கள் சேவையே மகேசன் சேவை” என்போம். இன்று கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம பிள்ளைகளின் கூஷதாயுமாய் தந்தையுமாய்; அவராற்றும் பணிகள் காலத்தினால் அமைந்தவை ஞாலத்தில் மாணப்பெரியன.

எடுத்த காரியம் யாவிலும அயராத அர்ப்பணிப்பு, அரசபணியை சமூகப்பணியாக்கிய பேராற்றலும் பெருமனமும் - எல்லோர்க்கும் வாய்ப்பதில்லை.

அவருடனான என் உறவும் ஊடாட்டமும், பெறுமதியானவை. என் துணைவேந்தர் காலத்து அறிவியல் நகரில் எங்கள் விவசாய, பொறியியல் பீடங்களை அமைக்கும் எமது முன்னோடிச் செயற்பாடுகளின் உயிர் விசையாகவும் உறுதுணையாகவும் அவராற்றிய பணிகள் என்றும் மறக்க முடியாதன. இந்நாளில் எங்கள் கலைப்பீட அவையின் உறுப்பினராக அவரின் அறிவும் அனுபவமும் விரிந்து பயன்தருவன.

நலமான வாழ்வில் நவமான அவர்பணிகள் தொடர்ந்திடவும் இனிதான குடும்ப சமூக வாழ்வில் நல்லன எல்லாம் அவர் வசமாகவும் எல்லையில்லா என் அன்பு வாழ்த்துக்கள்.

*பேராசிரியர்,*

*கலாநிதி நா.சண்முகலிங்கன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்

# வாழ்த்துச் செய்தி




கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபரும், வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி பொது நிர்வாக அமைச்சின் முன்னாள் செயலாளரும் பொது நிருவாக அமைச்சின் பிரதிப் பிரதம செயலாளருமான திரு.தி. இராசநாயகம் அவர்களுக்கு யாழ்ப்பாண மாநகர சபை அவர் தகைமைகளைப் பாராட்டி யாழ் விருதினை வழங்கியது. யாழ்ப்பாண மாநகர சபையின் உயரிய விருதினைப் பெற்ற திரு.தி.இராசநாயகம் அவர்களைப் பாராட்டி கிளிநொச்சி மக்கள் விழா எடுப்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். அவ்விழாவினை நினைவுகூரும் வண்ணம் ஒரு சிறப்பு மலரினை வெளியிடவுள்ளனர். அவ்விழா சிறப்புறவும் மலர் நன்கு அமையவும் எங்கள் வாழ்த்துகளைத் தெரிவிக்கிறோம்.

திரு.தி.இராசநாயகத்துடன் நாம் பல ஆண்டுகளாகத் தொடர்புற்றுள்ளோம். அவருடைய மனித நேயப் பண்பினை அறியாதவர் யாருமிலர். மக்களுக்கான தொண்டுப் பணிகளைச் செய்வதிலே மகிழ்வும் நலமும் அடைபவர் அவர். அவருடைய பயனுள்ள செயற்பாடுகளையும் தன்னலமற்ற அரச பணிகளையும் தொண்டுப் பணிகளையும் நன்கு நோக்கி யாழ்ப்பாண மாநகர சபை மிகப் பொருத்தமான முறையிலே யாழ் விருதினை வழங்கி அவருக்கு உயர் சிறப்பினை வழங்கியுள்ளது. மாநகர சபையின் இப்பொருத்தமான செயலை நாம் எல்லோரும் பாராட்டவேண்டும்.

திரு. இராசநாயகத்தின் மகளை நாம் கனடாவில் கண்டோம். தந்தையாரைத் தங்களுடன் வந்து இருக்கும்படி பல தடவை கேட்டும் அவர் வரவில்லை என்று கூறினார். காரணம் அவர் அண்மைக் காலமாக நடத்தி வரும் மகாதேவ ஆச்சிரம சிறுவர் இல்லமேயாகும். தாய் தந்தையரில்லாத குழந்தைகளுக்கு உதவும் கரமாகத் தான் இருக்க வேண்டிய தேவையினை அவர் தங்களுக்கு கூறி வருகிறார் என்று அந்த மகள் கூறியதை நாம் நன்கு விளங்கிக் கொண்டோம். ஏனெனில் நாங்களும் சில ஆண்டுகள் அவ்வாறான உதவும் கரங்களாக இருந்தோம். அதனால் அவருடைய மனநிலையை நன்கு உணரக்கூடியதாயுள்ளது.

பிறர்நலம் பேணும் ஒரு பெரு மகனுக்கு விருது வழங்கிய மாநகர சபையை வாழ்த்துகிறோம். அவ்விருது பெற்ற அப்பெருமகனை வாழ்த்துகிறோம். அவருக்குச் சிறப்புச் செய்ய விழா எடுப்பவர் களை வாழ்த்துகிறோம். திரு.தி.இராசநாயகம் நலத்துடனும் பலத்துடனும் வாழ இறையருளை வேண்டி இந்த வாழ்த்துச் செய்தியை நிறைவுசெய்கிறோம்.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்,**
**தகைசார் வாழ்நாட் பேராசிரியர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**
**பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்,**
**முன்னாள் ஆய்வுப் பேராசிரியர்,**
**கக்சுயின் பல்கலைக் கழகம், ஜப்பான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சாந்தி*
*கனகபுரம்,*
*கிளிநொச்சி.*
*07.04.2017*

கிளிநொச்சி மண்ணின் மாண்புமிகு குடிமகன், பூநகரியின் பிதாமகன், சமய, சமூகப் பணிகளின் முதல்வன், பெரும் மதிப்புக்குரிய திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களுக்கு, யாழ்ப்பாண மாநகரசபை, உயரிய யாழ் விருது வழங்கியதைப் பாராட்டியதையொட்டிய பிரதேச மக்களால் நடாத்தப்படும் விழா மலருக்கு வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

உயர் திரு.இராசநாயகம் ஐயாவை, ஐம்பது ஆண்டுகள் வரை எனக்குத் தெரியும். சிறு வயது முதல் கல்வியில், பாடசாலைகளில், பள்ளிகளில், பல்கலைக்கழகத்தில் சிறந்த மாணவனாகத் திகழ்ந்து, பூநகரியிலும் "இத்தகையதொரு மாணவனா?" என்று ஆசிரியர்கள், பேராசிரியர்களுக்கு வியப்பூட்டி, பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை சிறப்புடன் நிறைவு செய்து, பெற்ற கல்வியின் பேறாக அரச உயர் பதவிகளைப் பெற்று, கல்வி கற்ற காலத்திலும், பணிபுரிந்த வேளையிலும், எதிர்பாராத போராட்டங்களைச் சந்தித்த போதும், மக்கள் நலனே மகேஸ்வரன் தொண்டென, காலமெல்லாம் புகட்டி, இன்று, பணி ஓய்வு பெற்ற பின்பு மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தை நிறுவி, போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர் நலன் கருதி, அளப்பரிய பணிகள் பல மேற்கொள்ளும் உயர் திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் ஐயா அவர்களை நீண்ட பல காலம் உடல் உள நலத்துடன் வாழ்ந்து, பணிகள் பல செய்ய உருத்திரபுரீஸ்வரரை வேண்டி, வணங்கி வழிபட்டு வாழ்த்துகிறேன்.

"விண்ணில் நல்லகதிக்கு யாதும் ஓர் குறைவிலை
மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்"

*நா.சோதிநாதன்,*
*முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர்,*
*பூநகரி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Mahadeva Ashrama
## Chiruvar Illam

No. 58, Woodlee St. Dandenong, VIC 3175, Australia

This Ashramam is registered under the
Department of Social Services,
Sri Lanka.
( Reg. No.: NEP/PCC/CH/P32)

Mahadeva Ashrama Chiruvar Illam
Certificate of incorporation, Australia
Reg No : A0050521.W
ABN No.: 73131426648

## கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தின்
## அவுஸ்திரேலிய கிளைத் தலைவர் திரு பரா. நவநீதராசா அவர்களின் வாழ்த்து!



*பரா.நவநீதராசா.*
*அவுஸ்திரேலியா*

மண்ணும் கடலும் அள்ளித்தந்த வளங்களை அனுபவித்து வந்த எமது மக்களின் இயற்கையோடு இணைந்த வாழ்வு பேரலைகளாய் சுழன்று வந்த சுனாமியால் சூறையாடப்பட்டது. வானாலும், தரையாலும், கடலாலும் வெடித்து வந்த ஆக்கிரமிப்புப் போரால் மேலும் உருக் குலைந்தது. எங்கும் உயிர்ப்பலிகள், உடல் ஊனங்கள், சொத்திழப்புக்கள், இடப்பெயர்வுகள் சொல்லொணாதவாறு அவலங்கள் சூழ்ந்தன. அந்த அனர்த்தங்கள் மக்களுக்கு வறுமையையும், துயரத்தையும் மட்டுமல்ல ஆதரவற்ற சிறுவர், சிறுமியர்களையும், எதிர்காலம் சூனியமாகி இருளுக்குள் தள்ளப்பட்ட எச்சங்களாக விட்டுச் சென்றுள்ளன.

அத்தகைய ஆதரவற்ற சிறுவர் சிறுமியர்களுக்கு அடைக்கலம் கொடுத்து வாழ்வில் நம்பிக்கையூட்டும் ஆலயமாக நிமிர்ந்து நிற்கின்றது மகாதேவா சுவாமிகள் ஆச்சிரமச் சிறுவர் இல்லம்.

அப்படிப்பட்ட அரும்பெரும் சேவை செய்யும் இல்லத்தின் அவுஸ்திரேலியக் கிளையை பொறுப்பேற்று நடத்துபவன் என்ற வகையில் ஆச்சிரமத்தின் செயர்பாடுகள் பற்றி என்னால் பெருமையடையாமல் இருக்க முடியாது. அந்த மேன்மையை எனக்கு வழங்கியவர் எனது அன்பு நண்பனும், மகாதேவா சுவாமிகள் ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தின் தலைமை நிர்வாகியுமாகிய திரு.தி.இராசநாயகம் அவர்களே!

எனக்கும் இராசாநாயகம் அவர்களுக்குமான உறவு நாற்பத்தைந்து வருடங்கள் நீட்சி கொண்டது. அது ஆரம்பமானதும் தொடர்வதும் மக்கள் சேவையினால்தான் என்பதில் நன் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

முன்னாள் தபால்த்தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் அவர்கள் கிளிநொச்சியை மையமாக வைத்துத் தனது அரசியற் செயற்பாடுகளை மேற்கொண்ட போது, தபால் அதிபர்கள், எழுது வினைஞர்கள், ஆசிரியர்கள், தொழில்நுட்ப வியலாளர்கள் எனப் பல்லாயிரம் இளைஞர்களுக்கு அரச தொழில் வாய்ப்புக்களை வழங்கினார்.

**Our Bank Details**

**AUSTRALIA**
MAHADEVA ASHRAMA CHIRUVAR ILLAM
HINDU ORPHANS CHILDREN INC.
WESTPAC BANK DANDENONG BRANCH
**A/c No.: 033046234874**

**SRI LANKA**
MAHADEVA ASHRAMA CHIRUVAR ILLAM
BANK OF CEYLON, KILINOCHCHI BRANCH,
SRI LANKA
**A/c No.: 9991351**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமின்றி அவரது காலத்தில் அபிவிருத்திப் பணிகள், போக்குவரத்து வசதிகள், விவசாய உற்பத்திக்கான ஆதரவுகள் என்பவற்றால், பின்தங்கிய பிரதேசமாக இருந்த கிளிநொச்சி மாவட்டம்

ஒரு பொற்காலத்திற்குள் புகுந்து கொண்டது. விவசாயிகள் கல்வீடு கட்டுவதும், வாகனங்கள் வாங்குவதும் அந்நாட்களில் ஆரம்பமான புதிய மாற்றங்கள். அன்றைய நிலையில் அமைச்சர் குமார சூரியர் அவர்கள் மூலமாக அபிவிருத்திகளையும் வேலை வாய்ப்புக்களையும் மக்களுக்கு கிடைக்கச் செய்வதில் இரவு பகல் பாராமல் உழைத்தோம்.

அந்த நாட்களில் பூநகரிப் பிரதேசத்தை முன்னேற்றுவதில் இராசநாயகம் அவர்களின் அர்ப்பணிப்பு பெருமைக்குரியது. அங்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட அரச பணியார்களை உருவாக்குவ திலும், பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதிலும் அவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

அவர் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக இருந்த போது, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்பது வெறுமனே பொருட்களை வாங்கி விற்கும் ஒரு வர்த்தக நிறுவனம் என்பதற்கு அப்பால் தொழில் மையங்களை அமைத்தல், போக்குவரத்து, விவசாயப் பண்ணைகளை உருவாக்குதல், மீன் பிடித்தொழிலை மேன்படுத்துதல் எனப்பல்வேறு துறைகளில் பல பரிமாணங்க ளைக் கொண்ட அமைப்பாக சங்கத்தினை வளர்த்தெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரச அதிகாரியாகவும் பொது நிறுவனங்களின் தலைவராகவும் ஒரே நேரத்தில் ஓய்வின்றியும் அர்ப்பண உணர்வுடனும் அவர் ஆற்றிய சேவைகள் மனித குலத்திற்கே முன்னுதாரணமானவை யாக எண்ணிப் பெருமைப்படத்தக்கன.

இப்படியான, பொதுநலநோக்கும், விடாமுயற்சியும் கொண்ட ஒரு நண்பனுடன் இணைந்து பணியாற்ற கடந்த காலங்களிலும் தற்போதும் கிடைத்த வாய்ப்புக்கள் என்னளவில் பெருமைக்கு உரியவை என்றே நான் கருதுகின்றேன்.

தொடர்ந்தும் மகாதேவா சுவாமிகள் ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தின் பணிகளிலும், ஏனைய பொதுநலத் துறைகளிலும் எங்களின் இணைந்த பணி தொடரும் என்பதை இங்கு நான் உறுதி செய்ய விரும்புகின்றேன்.

காலம் முழுவதும் மக்களுக்குச் சேவை செய்யும் உணர்வையே தனது வாழ்வாகக் கொண்டு செயற்படும் நண்பன் திரு.தி.இராசநாயகம் அவர்களுக்கு "யாழ் விருது" வழங்கப்பட்டமை மிகவும் பெருத்தமானதே என்பதை எல்லோரையும் போலவே நானும், அவுஸ்திரேலியா வாழ் தமிழ் மக்களும் பாராட்டி மகிழ்கின்றோம். தன்னலமற்ற அவரது பணிக்காக இன்னும் பல புகழாரங்கள் அவரை அலங்கரிக்க வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. திருநாவுக்கரசு இராசநாயகம்

**ஓய்வுநிலை கிளிநொச்சி அரசாங்க அதிபரும்**
**மாவட்டச் செயலாளரும் பிரதிப்பிரதம செயலாளரும்**
**[வடக்கு மாகாண சபை]**

## வாழ்க்கைப் பின்னணியும்

**பன்முகப்பட்ட சமய, சமூக சேவைகளும், பணிகளும்.**




- *கல்விப்பணி*
- *அபிவிருத்திப்பணி*
- *அரசசேவை*
- *கலைப்பணி*
- *சமூகப்பணி*
- *ஆன்மீகப்பணி*

*"என் கடன் பணி செய்து கிடப்பதே"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு திருநாவுக்கரசு இராசநாயகம்
## அவர்கள்
## ஓய்வுநிலை கிளிநொச்சி அரசாங்க அதிபர் மாவட்டச் செயலாளரும் பிரதிப்பிரதம செயலாளரும் – வடக்கு மாகாண சபை வாழ்க்கைப் பின்னணியும் பன்முகப்பட்ட சமய, சமூக சேவைகளும், பணிகளும்

இவர் பூநகரியில் பாரம்பரிய சித்த மருத்துவத்தில் புகழ் பூத்து விளங்கிய தவசித்தம்பி வினாசித்தம்பி பெத்தார் குமாரசுவாமி பரம்பரையைச் சேர்ந்த குமாரசாமி திருநாவுக்கரசுவுக்கும் விசுவலிங்கம் பாக்கியம் என்பவருக்கும் மண்ணின் மைந்தனாக 02.05.1946 பூநகரியில் அரும்பு விட்டார்.

## ஆரம்பக்கல்வி

*வாழ்க்கையின் உயர்ச்சிக்கான அத்திவாரம்*

ஆரம்பக் கல்வியை பூநகரி அத்தாய் சிறி முத்துக்குமாரசுவாமி பாடசாலையிலும் பின்னர் பூநகரி மகா வித்தியாலத்தில் சேர்ந்து க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி கற்று 1961 இல் தேர்வுக்கு தோற்றி திறமைச் சித்திகள் பெற்றார். கல்வியுடன் மட்டும் நில்லாது பூநகரி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் போது பல விளையாட்டுப் போட்டிகளிலும் விவாத மேடைகளிலும் பேச்சுப் போட்டிகளிலும் விவேகானந்த சபையின் சமயப் போட்டிகளிலும் பங்கு கொண்டு தன் ஆளுமைகளை அரங்கேற்றிப் பல பரிசில்களைப் பெற்றார்.

## உயர்தரக் கல்வி



க.பொ.த. உயர்தர கல்வி பெறுவதற்காக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 1962 ஆம் ஆண்டு சேர்ந்து கல்வி கற்று 1964 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர கலைப்பிரிவில் தேர்வுக்கு தோற்றி சித்தியடைந்து பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவானார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருந்து அவ்வருடம் தெரிவு செய்யப் பட்ட ஒரேயொரு கலைப்பிரிவு மாணவனாகத் திகழ்ந்த வகையில் இவர் இக்கல்லூரியின் பெருமைமிகு மாணவனாக போற்றப்பட்டார்.

இவர் யாழ் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் போது அங்கு கற்பித்த ஆசிரியராகவும் புகழ் பெற்ற நாடக இயக்குநராகவும் இருந்த "தேவன் யாழ்ப்பாணம்" என பெயர் பெற்ற புகழ்மிகு நாடக இயக்குநர் திரு இ. மகாதேவா அவர்கள் நெறியாள்கையில் இரு நாடகங்களில் முக்கிய பாத்திர மேற்று நடித்து பெருமை சேர்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் யாழ் இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றம், அரசியல் மாணவர் மன்றம், விடுதி மாணவர் மன்றம் ஆகியவற்றில் முக்கிய பதவி வகித்து திறம்பட இயங்க இவர் முக்கிய பங்களித்தார்.

இவரது உயர்தரக் கல்விக் காலத்தில் எவரும் வரலாற்றுக் கல்வியை விரும்பாத நிலையில் ஐரோப்பிய வரலாறு, இலங்கை வரலாறு ஆகியவற்றை க.பொ.த உயர்தர வகுப்புக்குரிய பாடமாக எடுத்த பெருமைக்குரியவரும் இவரே. ஐரோப்பிய வரலாற்றுக்கு வகுப்பில் இரு மாணவரே இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்திய, ஐரோப்பிய வரலாற்றை பல்கலைக்கழகம் வரை கற்றார்.

இந்துக் கல்லூரியில் பல கலை இலக்கிய விவாத மேடைகளில் பங்கு பற்றி பல வெற்றிகளும் பெற்று பிரகாசித்து சிறந்த மாணவனாக விளங்கிய இவர். பல்கலைக்கழகம் செல்ல 7 மாதங்கள் இருந்தமையால் அக்காலத்தில் கிளிநொச்சி விவசாயப்பாடசாலையில் சேர்ந்து விவசாயக் கல்வி பயின்று விவசாயத்தில் தேர்ச்சியுற்ற மாணவனானார்.

## பல்கலைக்கழகக் கல்வி

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் போது பல்கலைக்கழக மாணவர் மன்றத் தின் செயற்குழு உறுப்பினராகவும் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் செயற் குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படச் செயற்பட்டார்.

இக்காலத்தில் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட முருகன் கோவிலுக்கு மாணவர் மன்றத்தினூடாகப் பல சிரமதானப் பணிகளை ஆற்றி உந்துதலாக இருந்தார். பேராதனைப் பல்கலைக்கழக வாழ்விலும் மெச்சுதற்குரிய மாணவனாகத் திகழ்ந்து போற்றப்பட்ட திரு.தி.இராச நாயகம் 1968 இல் பட்டதாரியாகி வெளிவந்தார்.

## சிவில் நிருவாக சேவைப்பணிகள்

1968 ஆம் ஆண்டிலே சிவில் நிருவாகத்தில் காலடி பதித்தார். அன்று தொடக்கம் 2011 வரை சிவில் நிருவாகத் துறையில் காலடிபதித்து அவர் ஆற்றி வந்த பணி பெருமைமிக்கது. அவரது சேவையால் மக்கள் பெரும் பயனடைந்துள்ளதுடன் அவர் அலங்கரித்த பதவிகளும் பெருமை பெற்றன. எமது மக்கள் துன்ப துயரங்களையும் அவலங்களையும் எதிர்கொண்ட மிக மிக நெருக்கடி மிகுந்த ஒரு காலகட்டத்தில் வன்னிப்பெருநிலப்பரப்பில் முக்கியமான மாவட்ட சிவில் நிருவாகப் பொறுப்பை துணிச்சலுடன் ஏற்று அயராது பாடுபட்டு அவர் ஆற்றிய விஞ்சிய சேவை இன்னும் வெகுவாகப் புகழ்ந்து மதிக்கப்படுகின்றது. இது தொடர்பிலான மெச்சுரை இணைப்பு 1 அவரது சிவில் நிருவாகக் காலம்

| | |
|---|---|
| 01.12.1968 | ஆண்டு கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தில் கணக்காய்வாளராக சேர்ந்து அரச பணியை ஆரம்பித்தார். |
| 01.07.1972 இல் | அபிவிருத்தி உதவியாளராக திட்டமிடல் அமைச்சில் சேர்ந்தார். |
| 02.03.1981 இல் | திட்டமிடல் அதிகாரியாக பதவி உயர்வு பெற்று மன்னார் மாவட்ட செயலகத்தில் பதவியேற்று பணி புணிந்தார். |
| 01.01.1985 இல் | உதவித்திட்டமிடல் பணிப்பாளராக பதவியேற்றார். |
| 01.04.1987 - 30.04.1992 | மன்னாரில் இந்து கலாசார மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் உதவிப்பணிப்பாளராக கடமையாற்றினார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிராந்திய அபிவிருத்தி அமைச்சினூடான பணிகள்



இக்காலத்தில் பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் ஊடாக பால் சேகரிக்கும் நிலையம், பனைக் கைத் தொழில் நிலையம் என்பன இவர் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டன. தெங்கு பனம் பொருள் உற்பத்திச் சங்கங்கள் யாழ் மாவட்டத்தில் 1970 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட போதும் மன்னாரில் இது 1985 வரை ஆரம்பிக்கப்படாததால் பனைத்தொழிலாளர்கள் கடுமை யாகச் சுரண்டப்பட்டார்கள். இச் சுரண்டலை நீக்க பலத்த உயிராபத்தின் மத்தியிலும் தெங்கு பனம் பொருள் உற் பத்தி விற்பனைக்கூட்டுறவுச் சங்கங்களை மன்னார், நானாட்டான் உட்பட அனைத்துப் பிரதேசங்களிலும் தாபித்து தவறணை முதலாளிகளினது சுரண்ட லிருந்து பனைத்தொழில் வல்லுனர்களைக் காப்பாற்றி மக்கள் மனதில் தடம் பதித்தார்.

மேலும் இதனை அமுலாக்க பலத்த தடை., இடை யூறு முதலாளிகள் பனை மரங்களைக் கள் சீவச் சங்கத்துக்கு கொடுக்க மறுத்து சங்கத்தினை இயக்க முடியாது செய்ய முயன்ற வேளையில், புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான பனந்தோப்பி னைப் பெற்று தொழிலாளர்களுக்கு வழங்கி முதலாளிகளினது அடக்கு முறைகளை முறியடித்து பனைத்தொழிலாளர் வாழ்வில் ஒளியூட்டினார். தற்போது மன்னார் மாவட்ட தெங்கு பனம் பொருள் சங்கங்கள் சிறப்பாக இயங்க வழி வகுத்தார். மன்னார் பனை அபிவிருத்திச் சபையூடாக பனம் பொருள் உற்பத்திகளைச் சந்தைப்படுத்த உதவினார். பல பயிற்சி நிலையங்களை யும் ஏற்படுத்திய துடன் மன்னார் பாற்கூட்டுறவுச் சங்கத்தினை நிறுவி பாற்பண்ணை உற்பத்தியாளர் வாழ்வு வளம் பெற உழைத்ததுடன் பால் விற்பனை நிலையங்கள் மற்றும் முருங்கன் பால் சேகரிக்கும் நிலையத் தினையும் ஸ்தாபிக்க முன்னின்று உழைத்தார்.

## ஒரே நேரத்தில் பல அரச பதவிகள் வகித்தமை

அந்த வகையில் 02.05.1992 இல் பிரதித்திட்டமிடல் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்று மன்னார் மாவட்டத்தில் கடமையாற்றியபின் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 1992 ஆம் ஆண்டு வந்து 1992 லிருந்து 1996 ஆம் ஆண்டு வரை பிரதித்திட்டமிடல் பணிப்பாளராகவும் புனர்வாழ்வு அமைச்சின் திட்டப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

ஒரு பதவியில் தனது சேவையை முடிக்கும் பல அரச உத்தியோகத்தர்கள் மத்தியில் பல அரச பதவிகள் வகித்து நாட்டு மக்கள் மத்தியில் உத்தமபுருசராகத் திகழ்ந்த வகையில் இவரது பன்முகப்பட்ட பணி நாவார போற்றப்படத்தக்கதொன்றாகும்.

இப்பணிகளுக்கு மேலதிகமாக நெருக்கடியான அக்காலத்தில் நிருவாக சேவை அதிகாரிகள் அரசாங்க அதிபராக, மேலதிக அரசாங்க அதிபராக இம் மாவட்டத்தில் சேவை செய்ய மறுத்த நிலையில் இலங்கைத் திட்டமிடல் சேவையைச் சேர்ந்த திரு.தி.இராசநாயகம் மேலதிக அரச அதிபராக 1996 இலும் அரசஅதிபராக 1997 இலும் நியமிக்கப்பட்டார். திட்டமிடல் சேவையைச் சேர்ந்த அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட ஒரே ஒர் அதிகாரியாக திரு.தி.இராசநாயகம் விளங்குகின்றார்.

அக்காலத்தில் 3 அரசாங்க அதிபர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட நெருக்கடி மிகுந்த வேளையிலும் உயிரைச் துச்சமென மதித்து தனது சொந்த மாவட்ட மக்களுக்கு சேவை செய்வதற்காக பொறுப்பை ஏற்று பலரும் போற்றத்தக்க வகையில் பணியாற்றினார். அரசினால் இவர் கிளிநொச்சி மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபராக 1996 வைகாசி மாதத்தில் நியமிக்கப்பட்டார். அவர் பின்பு 1997 ஆம் ஆண்டு கிளிநொச்சி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டு 1999 வரை கடமையாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக் காலத்தில் தவறான தகவல் அடிப்படையில் இவர் கொழும்புக்கு இடமாற்றப்பட்டார். 1999 ஆவணியில் திட்டமிடல் அமைச்சின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு கடமையாற்றிபின்பு 20.08.2002 இல் மீண்டும் கிளிநொச்சி அரசாங்க அதிபராக மீண்டும் அரசினால் நியமிக்கப்பட்டு கடமையாற்றி வந்தார்.

## இலங்கை நிருவாக சேவைக்குரிய உயர் பதவியான அரசாங்க அதிபர் பதவியில் அமர்த்தப்பட்ட இலங்கைத் திட்டமிடல் சேவையாளன்



இலங்கையில் நிருவாக சேவைக்குரிய பதவியாகக் குறிப்பிடப்படும் உயர் பதவியான அரசாங்க பதவிக்கு நியமிக்கப்பட்ட இலங்கை திட்டமிடல் சேவையின் அதிகாரியாக விளங்குகிறார். இதனால் இலங்கை திட்டமிடல் சேவைக்கு பெருமை சேர்த்தார்.

அரச அதிகாரியாக கடமையாற்றிய வேளையில் பல பதவிகளை வகித்துள்ளார். மன்னாரில் கடமையாற்றிய போதும் உலக வங்கியின் புனர்வாழ்வுத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளராகவும் கடமையாற்றியதுடன் பிராந்திய அபிவிருத்தி அமைச்சிலும் இந்து கலாசார அமைச்சிலும் உதவிப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

கிளிநொச்சியில் கடமையாற்றிய போது புனர்வாழ்வு திட்டப் பணிப்பாளராகவும் மேலதிக அரசாங்க அதிபராகவும் கடமையாற்றினார்

அரசாங்க அதிபராக இருந்த இவருக்கு 1999 ஆவணியில் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டு திட்டமிடல் அமைச்சில் பிராந்திய அபிவிருத்திப் பிரிவில் ஒன்றிணைக்கப்பட்ட திட்டத்தின் (IRDP) தேசியப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு சிறப்பான பணியை 22.08.2002 வரை மேற்கொண்டார். இவரது சேவையை மதித்து தவறை உணர்ந்து அரசு இவரை மீண்டும் கிளிநொச்சி அரச அதிபராக 23.08.2002 நியமித்து 30.04.2007 வரை செவ்வனே கடமையாற்றினார்.

## மாகாண சபையில் கடமை

அரச அதிபராக கடமையாற்றிய பின்பு 27.11.2007 இல் இருந்து 31.12.2007 வரை வடக்கு மாகாண சபையின் பொது நிருவாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார் 01.08.2008 லிருந்து 31.10.2009 வரை தனியாகப் பிரிக்கப்பட்ட மாகாண உள்ளூராட்சி கூட்டுறவு கைத்தொழில், சிறுவர் பராமரிப்புச் சேவைகள் சமூக சேவை புனர்வாழ்வு அமைச்சின் முதலாவது செயலாளராக நியமிக்கப்பட்டு எம்மண்ணிற்கே பெருமை சேர்த்தார்.



01.11.2009 லிருந்து 31.12.2011 வரை பொது நிருவாக அமைச்சின் பிரதிப்பிரதம செயலாளராகவும் ஆளுனரின் கிளிநொச்சி, முல்லைத்தீவு யாழ்ப்பாண மாவட்டங்களின் ஆணையாளராகவும் கடமையாற்றினார். இக்காலத்தில் மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டது. பேருந்துகளில் மக்கள் கொண்டுவந்து இறக்கிவிடப்பட்ட போது மக்களுக்கு எதுவித அடிப்படை வசதிகளும் இருக்கவில்லை. அப்போதைய பிரதம செயலாளர் திரு.சி.இரங்கராசா அவர்களுடன் இணைந்து மீள்குடியமர்ந்த மக்களுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதில் அர்ப்பணிப்புடன் உழைத்தார். அப்போது போக்குவரத்து வசதிகள் இருக்கவில்லை. மக்கள் அவலப்பட்ட நிலையில் கைவிடப்பட்ட ஒரு லட்சம் பைசிக்கிள்களை முள்ளிவாய்க்காலில் இருந்து எடுத்து வந்து கூட்டுறவுச் சங்கம் மூலம் திருத்தியும் மக்களுக்கு அளித்தார். பைசிக்கிள் திருத்துனர், தேநீர்க் கடைக்காரர்களுக்கு திரு.இரங்கராசாவின தும் ஆளுன ரதும் உதவியுடன் நிதி வழங்கி அவற்றை இயங்கச் செய்தார். அத்துடன் கோவில் மண்டபங்களைத் திருத்தி வீடில்லாத மக்கள் தங்க ஏற்பாடு செய்தார். இடம்பெயர்ந்த மக்களது வீட்டுத் தோட்டத்துக்கு உதவினார். இதன்பொருட்டு மல்லாவி, வெள்ளாங்குளம், முழங்காவிலில் ஒரு மாதம் தங்கியிருந்து மருத்துவர்களான திரு.கார்த்திகேயன், திரு.திலீபன் மற்றும் உதவி அரச அதிபர் திரு.சி.சத்தியசீலன் ஆகியோரின் துணையுடன் மீள் குடியேறிய மக்கள் அடிப்படை வசதிகள் பெற்று வாழ ஏற்பாடு செய்ததுடன் மாகாண சபையின் 8 பேருந்துகள் மூலம் அரச ஊழியர்கள் பின்தங்கிய பிரதேசத்துக்கு வந்து போக பேருந்து அதிகாலை 4:00 மணியிலிருந்து ஏற்பாடு செய்தார். இராணுவ நெருக்கடியால் அரச சாரதிகள் எவரும் சேவையாற்ற முன்வராத நிலையில் கூட்டுறவுச் சங்கம் மூலம் சாரதிகளைப் பெற்று சேவைகளைத் திறம்பட நடத்தினார்.

## அரச அதிபராக இருந்தபோதான சாதனையும் அவர் தம் விசேட பணிகளும்

### உணவுத் தொடரணி வண்டிகள்

இவர் மேலதிக அரச அதிபராக இருந்த காலத்தில் உணவு வண்டிகள் 1996 மே மாதத்தில் இருந்து ஆவணி வரை மூன்று மாதங்கள் வவுனியாவிலிருந்து வரவில்லை. உணவு வண்டிகளைக் கொண்டு சென்று உணவு கொண்டு வர எந்த தொடரணி அரச உத்தியோகத்தர்களும் மரண பயத்தினால் முன் வரவில்லை. அந்த நேரத்தில் அரச அதிபரும் வவுனியாவில் நின்று கொண்டு வர மறுத்தார். மேலதிக அரச அதிபராக இருந்த திரு.தி.இராசநாயகம் அவர்கள் 25 லொறிகளை கிளிநொச்சியிலிருந்து கொண்டு ஓமந்தை ஊடாக வவுனியா சென்று உணவுப் பொருட்களைக் கொண்டுவர தன்னந் தனியாக முயற்சித்தபோது ஒரு லொறியில் பற்றி வைக்கப்பட்டு தொடரணியை நிறுத்த முயற்சித்த போதும் துணிந்து வாதாடி ஒரு லொறியை விடுத்து ஏனைய 24 லொறிகளுடன் விடியற்காலை கச்சேரியை வந்தடைந்த சம்பவம் தற்போதும் மக்களால் நினைவு கூரப்படுகின்றது. தன்னலத்திற்காக பொது நலத்திற்கு முனைந்து வராதவர்கள் மத்தியில் தன்னுயிரே மன்னுயிராக எண்ணி இத்தகு சேவையை மேற்கொண்டமை மகத்தானபேறாக போற்றத்தகுந்ததாகும். வந்தாரை வரவேற்கும் பண்பாடாம் வன்னிமாநகரத்தின் கொள்கையதனை திறம்படச் செய்த வகையிலும் இவரது பணி மேலோங்குகின்றது.



### 5 லட்சம் மக்களை வரவேற்று உபசரித்து மீள்குடியேற்றியமை

அதேநேரத்தில் சத்ஜய இராணுவ நடவடிக்கையின் போது 5 லட்சம் மக்கள் யாழிலிருந்து கிளிநொச்சி ஊடாகவே வந்தனர். கிளாலிக்கு அனைவரும் வந்தபோது அரச அதிபராக இருந்தவர் வவுனியாவிற்கு சென்று வரமறுத்து நின்ற நிலையில் தன்னந்தனியாக இவர் செயல்பட்டு 20 பேக்கரிகள் 200 ற்கு மேற்பட்ட சமையலாளர்களைக் கொண்டு சமைத்த உணவு வழங்கும் நிலையங்களை ஏற்பாடு செய்து இரவு பகலாகச் செயல்பட்டு 5 லட்சம் மக்களுக்கு உணவு நீர்வழங்கி அவர்களை ஆற்றி, உரிய இடங்கட்கு அனுப்பிய செயல்பாடு மக்களால் இன்றும் மறக்க முடியாதது. நெருக்கடி மிகுந்த ஒரு காலகட்டத்தில் இவர் செயற்பட்டவிதம், துணிச்சலான நடவடிக்கைகள் இன்றும் பாராட்டப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவரது புனர்வாழ்வு நிவாரண சேவையை அமெரிக்க அகதிகள் பேரவை பாராட்டியமை

அரச அதிபராக இருந்த காலத்தில் இவர் புரிந்த பணி மதிக்கப்படுகின்றது. 1997 ஆம் ஆண்டு அமெரிக்க அகதிகள் பேரவை பிரதிநிதிகள் இப்பகுதியின் நிவாரணம் புனர்வாழ்வு பற்றி ஆய்வு செய்வதற்காக கிளிநொச்சிக்கு வந்தனர். இவர்கள் தடை முகாம் பரிசீலனையால் வரத்தாமதமாகியதுடன் அவர்கள் வந்த வாகனமும் பழுதுபட்டு இரவு 1:00 மணிக்குத் தான் கிளிநொச்சிக்கு வந்தனர். தங்குவதற்கு அவர்கள் ஏற்பாடு செய்த விடுதி தெரியாது அவர் வேலை செய்த கிளிநொச்சி கச்சேரியில் பெற்றோமாக்ஸ் எரிந்த படியால் அது தான் விடுதி என வந்தனர். வந்தவர்கள் பிரமித்து விட்டனர். ஓர் அரச அலுவலகம் இரவு 1:00 மணிக்கு மேலும் வேலை செய்ததை தாங்கள் எங்குமே காணவில்லை எனப் பாராட்டினர். இவர்கட்கு தங்குமிட வசதி, உணவு என்பன அவரால் ஏற்பாடு செய்யப்பட்டு அவர்கள் இரு நாட்கள் தங்கி சகல இடங்களையும் பார்வை யிட்டு தங்களது நிறுவனத்திற்கு அறிக்கை அனுப்பும் போது இவரது நிவாரண புனர்வாழ்வு சேவையானது அரிசி, பருப்பு, சீனி மட்டும் வழங்குவதோடு நின்று விடாது பாதிக்கப்பட்ட குழந்தை களைப் பாதுகாக்க மகாதேவா ஆச்சிரமச் சைவச் சிறுவர் இல்லம், பாதிக்கப்பட்ட முதியோரைக்காக்க யோகர்சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம், மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு தர வெற்றிமனை, கண்காது கேளாதவர்களைப் பராமரிக்க இனிய வாழ்வு இல்லம், மாற்று வலுவுள்ளோரைப் பாதுகாத்துப் பணிபுரிய கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம், பாதிக்கப்பட்டு பட்டினியை எதிர்நோக்கிய மாணவர்களுக்கு பசி தீர்க்க பாடசாலை தோறும் இலைக்கஞ்சித்திட்டம், வறியோர் வாழ உணவுக்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வலுவூட்டியமை இவர்களால் பாராட்டப்பட்டது. தனியாக உணவு விநியோகத்துடன் நிற்காது இடப்பெயர்வால் நலிவுற்ற எல்லாத் தொகுதியினருக்கும் திட்டம் தீட்டி நிவாரணம் பெற ஏற்பாடு செய்தமை உலகத்திலே மாதிரியாகப் பயன்படுத்தக் கூடியது என விதந்துரைத்தனர். இவர்களது அறிக்கையை இவரது திடீர் இடமாற்றத்தின் போது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரால் எடுத்தாளப்பட்டு இப்படியான திறமையான அதிகாரியை ஏன் இடமாற்றுகின்றீர்கள் என்று கேள்வி எழுப்பினார். இது பாராளுமன்ற கன்சாட்டில் 06.09.2007 திகதி வந்துள்ளது. அவர்களது அறிக்கையும் உள்ளது.

மேலும் இது மட்டுமன்றி இவரால் ஆரம்பிக்கப்பட்ட இலைக்கஞ்சி மாதிரியே உலக உணவுத் திட்டம் (WFP) பாடசாலைகட்கு உணவு வழங்கும் திட்டத்தை அமுலாக்க உதவியது.

இது தொடர்பில் இவரது சேவை உலக உணவுத்திட்ட உயர் அதிகாரியாலும் கியூடெக் வன்னியாலும் பாராட்டப்பட்டது.

## அறிவியல் நகரத் தோற்றமும் கிளிநொச்சி நகரத்திட்டமிடலும்




மேலும் கிளி அரச அதிபராக இருந்த காலத்தில் கிளிநொச்சி நகரத்திட்டத்தினை அறிமுகப்படுத்தி அறிவியல் நகரில் சுனாமித் திட்டத்தின் கீழ் வந்த நிதியில் புதிதாக பாதைகள் அமைத்து திறந்து அங்கு சகல உயர்கல்வி நிலையங்களை நகர்த்த முயற்சி எடுத்த பெருமைக்கு ரியவர். அதுமட்டுமன்றி கிளிநொச்சி நகர் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க கொக்காவிலில் இருந்து கனகபுரம் வரை மாற்றுப் போக்குவரத்துப் பாதை திறந்து புகையிரதப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையும் அமைக்க நில ஏற்பாட்டினைச் செய்து கிருஷ்ணபுரம் வரை அகலமாக்கப்பட்டது. இப்பாதை பூநகரி A36 இல் உருத்திரபுரம் ஊடாக இணைக்கப் பிரேரித்ததுடன் பரந்தன் சந்தியிலிருந்து பூங்காவனச் சந்தி, கோவிந்தன் கடைச் சந்தியூடாக இரணைமடு வீதி வந்து A9 இல் ஏறும் மாற்றுப் பாதையும் பிரேரித்தவர். வருங்காலத்தில் இவரது பிரேரிப்பு அமுலாக்கப்படல் வேண்டும். கனகபுரம் வீதியை அகலமாக்கிய போது பலர் எதிர்த்தனர். இப்போது இந்த இடம் பெரு நகராக வளர்ச்சி பெற்றுள்ளதுடன் காணிகளது பெறுமதியும் அதிகரித்துள்ளது.

அதேபோல சாலை வீதியை அகலமாக்கி அங்கு சந்தைகளையும் கடைகளையும் நகர்த்தினார். இன்று இந்த இடம் பிரபலமாவதற்கு இவரே அடித்தளமிட்டார்.

## கிளிநொச்சியில் யாழ் பல்கலைக்கழக விவசாயபீடம், பொறியியல்பீடம் அமைக்க பங்களிப்பு.



அறிவியல் நகரில் விவசாய பீடம் அமைக்க 400 ஏக்கர் காணியை பாரிய முயற்சியின் பின்னால் ஒதுக்கி இன்று யாழ் பல்கலைக் கழகத்தின் விவசாயபீடம், பொறியியல்பீடம் அமைய அடித்தளமிட்டவர். தமிழ் பல்கலைக் கழக காணி 168 ஏக்கரையும் யாழ் பல்கலைக் கழகத்திற்கு கொடுக்க மாகாணசபையின் ஊடாக முன் நடவடிக்கைகள் எடுத்தவர். மாகாண சபைக்கு பாரமெடுக்க அமைச்சரவைத் தீர்மானம் எடுக்காவிட்டால் இது வேறு நிறுவனங்களிடமே போய்ச் சேர்ந்திருக்கும். இந்த வகையில் இவரது இச் சேவையானது பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் மறக்க முடியாதொன்றாக வேரூன்றியுள்ளது.

பேராசிரியர் துரைராஜா ஐயா காலத்திலிருந்து கிளிநொச்சியில் பொறியியல் பீடம் அமைக்க பாடுபட்டவர். இன்றும் உடனடியாக பொறியியல் பீடம் அமைக்க காணி கட்டடங்கள் இன்றி தத்தளித்த வேளையில் தான் தலைமை தாங்கும் மகாதேவா ஆச்சிரமச் சைவச் சிறுவர் இல்லத்தின் புது முறிப்பில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்தில் 11 கட்டடத்தினை 11000 சதுர அடிக்கு மேல் வழங்க முன் வந்து எமது வன்னி மண்ணில் பொறியியல் பீடம் அமைக்கும் திட்டத்திற்கு பேராதரவு வழங்கினார்.

## தொழில்நுட்பக்கல்லூரி அமைய எடுத்த முயற்சி



கிளிநொச்சி மண்ணிலேயே 1990 ஆம் ஆண்டுகளில் எந்தவிதமான தொழில்நுட்பக் கல்லூரியும் இருக்கவில்லை. பாடசாலைவிட்ட மாணவர்கள், இடை விலகல் மாணவர்கள் தொழிற் கல்வி கற்க வகை செய்யும் வகையிலும் நெருக்கடி நிலையிலும் கிளிநொச்சி தொழில்நுட்பக்கல்லூரி நிறுவனத்தினை நிறுவி அதனூடாக 2000 ற்கு மேற்பட்ட மாணவர்களை கல்வி கற்க வழி செய்தது டன் (NCE) ஆங்கில வகுப்பை ஆரம்பித்து 400 க்கு மேற்பட்ட மாணவர்களை கல்வி கற்பிக்க வைத்தார். இதன் காரணமாக பலர் அரச சார்பற்ற நிறுவனங்களில் வேலை செய்யவும் ஆங்கில ஆசிரியராகவும் கல்வி கற்பிக்கவும் முடிந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகியல் கலாமன்றத்தினைத் தோற்றுவித்தமையும் வளர்த்தமையும்



மேலும் கிளிநொச்சியில் அரச அதிபராக இருந்தபோது ஆர்வமுள்ள பல இளைஞர்களை ஊக்குவித்து அழகியல் கலா மன்றத்தினை கிளிநொச்சியில் ஆரம்பித்து பல கலைப் பயிற்சிகளை வழங்க நிதியுதவி அளித்ததுடன் தமிழ் இன்னியத்தினை அழகியல் கலா மன்றத்தின் மூலம் அறிமுகப்படுத்தி நிதியேற்பாடு செய்து அமுலாக்கினார். நெருக்கடி நிலையிலும் கூட கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு இன்னியப் பயிற்சிக்கு எமது மாவட்ட மக்களை அனுப்பி பயிற்சி அளித்து மட்டக்களப்புக்கு அடுத்தாக கிளிநொச்சியில் இன்னியம் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த வகையில் இவரது கலை, கலாசாரத் துறைக்கான பணிகளும் மெச்சத் தகுந்ததொன்றதாகும். பூநகரி மகேஸ்வரி வித்தியாலயத்திலும் அழகியல் கலாமன்றம் அமைக்க கட்டடங்களை அமைத்த போதும் போர்ச் சூழலால் அது இயங்க முடியாது போயிற்று.

## கிளிநொச்சியின் பொருளாதார அபிவிருத்தி



கிளிநொச்சியின் அபிவிருத்தி கருதி பல திட்டங்களை வகுத்துச் செயற்பட்டவர். இவர் காலத்தில் கல்மடுக்குளம் உயர்த்தப்பட்டது. புதுமுறிப்புக்குளம் உயர்த்தப்பட்டதுடன் முட்கொம்பனூடாக அரசபுரம் - மன்னார் வீதி புதிதாகத் திறக்கப்பட்டு மன்னார் வீதியுடன் இணைக்கப்பட்டது. அதேபோல நல்லூர் - முக்கொம்பன் வீதி புதிதாக திறக்கப்பட்டதுடன் இவ்வீதி ஸ்கந்தபுரத்துடன் இணைக்கப்பட்டு இன்று யாழில் இருந்து கூட ஸ்கந்தபுரத்திற்கும் அக்கராயானுக்கும் பேரூந்து பயணிக்கும் சேவையாக வளர்ந்துள்ளது. அதேபோல வட்டக்கச்சி ஊடாக தருமபுரம் கிழக்கு வீதி தனியாரிடம் காணி பெற்று இணைக்கப்பட்டது. அத்துடன் ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் புனரமைக்கப்பட்டு இயங்கச் செய்தார். நெருக்கடியான காலத்தில் இது மேட்டுப்பயிர்ச் செய்கைக்கு பெரிதும் உதவியது. அத்துடன் பூநகரி-வலைப்பாடு வீதி திருத்தப்பட்டு பேருந்துச் சேவை ஆரம்பிக்க உதவியதுடன் பூநகரி- கௌதாரிமுனை வீதி திருத்த அரும்பாடுபட்டு முடித்து சிற்றூர்திச் சேவையும் ஆரம்பிக்கப்பட்டது.

## பாரம்பரிய மருத்துவத் துறைக்கான ஆதரவு

பாரம்பரிய மருத்துவத்துறையில் ஆர்வமுள்ள இவர் தூர நோக்குடன் கல்மடு நகரில் 100 ஏக்கரில் மூலிகைத்தோட்டம் அமைக்கப்பட்டு யாழ் பல்கலைக்கழக சித்த வைத்திய பீடத்தின் ஆதரவுடன் சிறப்புற இயக்கினார். இன்று மீளமைக்கப்பட்டு பல கட்டடங்கள் கட்டப்பட்டு செயல்பட நடவடிக்கை எடுக்கப்படுவது பாராட்டத்தக்கது. அத்துடன் பல்லவராயன்கட்டு திருவையாறிலும் மூலிகைத்தோட்டம் அமைக்க ஏற்பாடு செய்ததுடன் மூலிகை விற்பனை நிலையத்தினை வட்டக்கச்சியில் திறந்து ஊக்கப்படுத்தினார். மூலிகைத் தோட்டக் கூட்டுறவுச் சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட மலேரியா தடுப்புப்பாணி யுத்தகாலத்தில் பிரபலமானது. பல்வேறுபட்ட உயர் பதவிகளை வெவ்வேறு காலங்களில் வகித்தபோதும், பாரம்பரிய மருத்துவமான சித்த மருத்துவத் துறைப்பணியும் மகத்தான ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞர் குடியேற்றத் திட்டங்களுக்கான தோற்றமும் கிராமங்களது தோற்றமும் வளர்ச்சியும்



இவர் பூநகரிக்கு 1972 இல் அபிவிருத்தி உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டதும் பல விவசாயத் திட்டங்களை முழங்காவில் பூநகரிப் பகுதியில் அறிமுகப்படுத்தி அமுலாக்கி னார். முழங்காவில் குழாய்க்கிணற்றுத் திட்டம் மூலம் 25 யுவதிகளும் 75 இளைஞர் களும் குடியேற்றப்பட்டனர். 1972 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முழங்காவிலில் திரு செல்லையாப்பிள்ளை என்பவரது சிறிய தேநீர்க் கடையும் திரு.தருமலிங்கம் என்பவ ரது கல்லுடைக்கும் சிறிய கல்குவாறியுமே இருந்தன. வேறு சன நடமாட்டமே இங்கு இருக்கவில்லை.

இங்கு முதல் முதல் குழாய்கிணற்றுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தி அதனால் யாழ்ப்பாணத் தில் இருந்து பிரதேச செயலர் பிரிவு தோறும் 10 பேர் வீதம் தெரிவு செய்து 130 இளைஞர்கள் குடியேற்றப்பட்டனர். இன்று முழங்காவில் பகுதி 15000 க்கு மேற்பட்ட மக்கள் வாழும் பகுதியாக மாற இவரது 100 இளைஞர் யுவதிகள் குடியேற்றம் முன்மாதிரியாவும் அடிப்படையாகவும் அமைந்ததுடன் பாரிய இடப்பெயர்வின் போது 15000 க்கு மேற்பட்ட குடும்பங்கள் தற்காலிகமாக புகலிடம் பெற முடிந்ததுடன் இக்கிராமம் பிரபலமானது. இது இன்றும் நினைவு கூரப்படுகின்றது.

## முட்கொம்பன் இளைஞர் விவசாயத்திட்டமும் புதிய கிராமத்தின் தோற்றமும்

இதேபோல பூநகரி நல்லூர் இளைஞர்கள் நல்லூரில் நன்னீர் இன்மையால் தங்களது விவசாயத்தினை மேற் கொள்ள முடியாது குடிநீருக்கே அல்லல்பட்டனர். இதனை நீக்கும் வகையில் இவரால் முட்கொம்பன் இளைஞர் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு 75 இளைஞர்கள் இங்கு குடியேற்றப்பட்டு $1\frac{1}{2}$ ஏக்கர் வீதம் காணி வழங்கப்பட்டது. இதன் காரணமாக இத்திட்டம் மிளகாய்ச் செய்கைக்கு மிகப் பேர்போனதாக மாறியதுடன் இன்று 60 க்கு மேற்பட்ட குடும்பங்கள் தங்களது வாழ்விடமாகக் கொண்டு வாழ முடிந்துள்ளதுடன் பாடசாலைகள், பொது நிறுவனங்கள் கொண்ட கிராமமாக வளர்ச்சியடைந்துள்ளதுடன் நல்லூர், ஆலங்கேணி மற்றும் இடம்பெயர்ந்த மக்களுக்கு நன்னீர் பெற வாய்ப்பான திட்டமாக மாறியது.

## விவசாயத்திட்டங்களும் கைத்தொழில் திட்டங்களும்



அதேபோல பல்லவராயன் கட்டு இளைஞர் திட்டம், தல்லாவில் இளைஞர்திட்டம் உட்பட புதிய திட்டங்களை அமுலாக்கியதுடன் பனங்கட்டித் தொழிற்சாலை, தெளி கருவி வாடகை நிலையம் என்பன அக்காலத்தில் பிரபலமானவை. மக்களுடைய வாழ்வாதாரத்தினை சிறிய முதலீடுகளுடன் பாரிய வருமானம் பெற வழிகாட்டினார். இது தொடர்பில் அவர் களது மேலதிகாரிகளான திரு K.C.லோகேஸ்வரன் முன் னாள் அரச அதிபர் பின்னாள் தபால் அமைச்சின் செயலாளர் திரு.க.சண்முகலிங்கம் (பிரதிச்செயலாளர் திறைசேரி) ஆகியோர் பாராட்டி சான்றிதழ் பத்திரம் வழங்கியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதுமாணிப்பட்டப்படிப்பு

அரசினது புலமைப்பரிசில் பெற்று பல நாடுகளுக்கு மேற்படிப்புக்காகச் சென்றுள்ளார். பிரித்தானியாவிலுள்ள மஞ்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் புலமைப்பரிசில் பெற்றுச் சென்று முதமாணிப்பட்டப் படிப்பினை மேற்கொண்டு முதுமாணிப்பட்டம் பெற்றுள்ளதுடன் யப்பான், ஜேர்மனி, சிங்கப்பூர், நெதர்லாந்து போன்ற நாடுகளுக்கு புலமைப்பரிசில் பெற்றுச்சென்று பல ஆய்வுகளைச் செய்துள்ளார். முதுமாணிப் பட்டத்துக்காக இலங்கையின் கூட்டுறவு வரலாற்றினை ஆய்வு செய்து "இலங்கை கூட்டுறவு வரலாற்றின் கடந்த கால அனுபவங்களும் எதிர்கால போக்கும்" என்ற தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்து பலரதும் பாராட்டைப் பெற்றுள்ளார். கூட்டுறவுச் சஞ்சிகைகளில் இவரது ஆய்வின் சில பகுதிகள் பிரசுரமாகியுள்ளது.

## வடக்கு மாகாண சபையால் பாராட்டும் செயற்பாடுகள்

வடக்கு மாகாணசபையின் பொது நிருவாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக 2007 இல் பதவியேற்ற போது 4600 க்கு மேற்பட்ட ஊழியர்களது ஒய்வூதியம் நட்டஈடு உட்பட வழங்கப்பட வேண்டிய நன்மைகள் வழங்கப்படாது நிலுவையாக இருந்தது. இதனால் ஊழியர் பாதிக்கப்பட்டிருந் தனர். இது தொடர்பில் துரிதநடவடிக்கை எடுத்து சகல கோவைகளும் சீர்செய்யப்பட்டு சகலருக்கும் ஓய்வூதியம் நட்டஈடு பெற்றுக்கொடுக்கப்பட்டது. இதனை அன்றைய வடக்கு மாகாண பதில் ஆளுனர் பாராட்டிக் கடிதம் வழங்கினார்.

மேலும் வடக்கு மாகாண சபையின் அலுவலர்கள் அலுவலக நிமித்தம் கொழும்புக்குச் சென்றால் இங்கு தங்குவது என்பது பாரிய பிரச்சினை. நடுநிசியில் சென்று உறவினர்களிடம் போக முடியாது. இதனைப் போக்க ஆரம்பத்தில் வாடகை வீடு பெறப்பட்டது. இது போதிய வசதியுடன் இல்லை. பெருமளவு அலுவலர்கள் தங்க முடியாத அவல நிலை வாகனங்கள் தரிக்க முடியாத துயர நிலை. இதனைப் போக்கும் வகையில் இவர் ஆளுனரது செயலாளர் திரு.சி.இரங்கராசா அவர்களது உதவியுடன் 40 பேர்ச் கொண்ட விசாலமான காணியை இருமாடிக் கட்டடங்களுடன் வடக்கு மாகாண சபைக்குச் சொந்தமாக இரத்மலானை இந்துக் கல்லூரிக்கு முன் வாங்கி திருத்தி இன்று வட மாகாண சபை அலுவலர் மட்டுமன்றி வடமாகாண சபையின் அனைத்து ஊழியர்களும் தங்கித் தங்களது அலுவலக வேலைகளை எந்தவித இடருமின்றி முடித்து நிம்மதியாகத் திரும்ப வழி சமைத் துள்ளார். இந்த திட்டம் சகல அரச ஊழியர்களாலும் இன்றும் நினைவு கூர்ந்து பாராட்டப்படுகின்றது.

பல நூற்றுக்கணக்கான சிற்றூழியர்கள் பல ஆண்டு காலமாக நிரந்தரமாக்கப்படாது வாழ்வு கேள்விக் குறியான போது இவர் தலையிட்டு தீர்மானமெடுத்து அவர்களை நிரந்தரமாக்கினார். முதல் முதலாக 400 ற்கு மேற்பட்ட பட்டதாரிகளை மாகாணசபைக்குத் தெரிவு செய்து நிரந்தர பதவி கொடுத்து இணைத்தார். பட்டதாரிகள் நியமனம் மத்திய அரசுக்குரியதாக இருந்த போதும் மத்திய அரசுக்கு விளக்கி ஒப்புதல் பெற்று மாகாண சபையே தெரிவு செய்து இணைக்க உதவினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவரது சமூகப்பணி

### அ. கூட்டுறவுத் துறையினூடான சமூகப்பணி

#### 01. பூநகரி. ப.நோ.கூ.சங்கத்தின் எழுச்சிக்கு வித்திட்டமை



இவர் தனது அரச சேவைக் காலத்தில் பல பொதுப்பணி நிறுவனங்களைத் தோற்றுவித்தும் பல சமூக நிறுவனங்களில் தலைமைப் பதவியேற்றும் சமூகத்துக்கு பங்களித்துள்ளார். 1971 ஆம் ஆண்டு பூநகரி ப.நோ.கூ சங்கத்தினது தலைமைப் பதவியை பொறுப்பேற்று 19 ஆண்டு காலம் அச் சங்கத்தினை வழி நடத்தியுள்ளார். 19 பணியாளர்களுடனும் 13 கிளை நிலையங்களுடனும் ஒரு பழைய உழவு இயந்திரத்துடனும் மாதாந்த வியாபாரம் 75000 ரூபாவாவும் 19000 ரூபா நட்டத்திலும் பொறுப் பேற்ற இவர் 19 ஆண்டுகளில் 37 கிளை நிலையங்களுடனும் 13 வாகனங்கள் மற்றும் 25 கோடி சொத்துக்கள் சேர்த்து மாதாந்த வியாபாரம் 6.5 மில்லியனுக்கு மேலாகப் பெருக்கி 121 ஊழியர்களு டனுடனான சங்கமாக வளர்த்து பூநகரி மக்களது வாழ்வில் கூட்டுறவுச் சங்கம் பெருமையுடைய சங்கமாகத் திகழ வைத்தார்.

இவரது தலைமையில் அபிவிருத்தி பணிகளில் பூநகரி ப .நோ. கூ சங்கம் முன்னோடியாகத் திகழ்ந்து பல போட்டிகளில் சங்கம் முதல்தர பரிசும் பெற்றுள்ளது. கூட்டுறவு மகளிர்குழு அமைத்து அவர்களூடாக அம்பாள் கற்பூரம் உட்பட 16 கைத்தொழில் திட்டங்கள் கைக்குத்தரிசி சந்தைப்படுத்தல் திட்டம் கூட அமுலாக்கப்பட்டு இளைஞர் யுவதிகள் பலரும் பயன் அடைந்தனர். பூநகரி பல்லவன் மொட்டக் கறுப்பன் அரிசி என பூநகரி மொட்டக்கறுப்பன் அரிசியை நவீன முறையில் பொதி செய்து 1971 இலேயே காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கும் ஊழியர்களுக்கும் மாதம் 20000 கிலோவுக்கு மேல் வழங்கி முன்மாதிரியான கூட்டுறவுச் சங்கமாகத் திகழச்செய்தார். இது தொடர்பில் கூட்டுறவு ஆணையாளர்கள் இருவர் வழங்கிய சான்றிதழ் 7,8 என இணைக்கப்பட்டுள்ளது.

#### 02. மன்னார் மாவட்ட பனம்பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களது தோற்றத்திற்கு நெருக்கடியில் உதவியமை

மன்னார் மாவட்டத்தில் கடமையாற்றும் போது 2000 க்கு மேற்பட்ட பனைத்தொழில் வல்லுனர்கள் தவறணை முதலாளிகளது கோரப்பிடிக்குள் அகப்பட்டு உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்காத நிலை இருந்தது. யாழில் 1970 களில் தவறணை முறை நீக்கப்பட்ட போதும் மன்னாரில் 1985 வரை கூட்டுறவுத் தவறணை முறையை ஆரம்பிக்க முதலாளிகள் விடவே இல்லை. இதனைப் போராடிப் பெற்றார். கூட்டுறவு கள் விற்பனை ஆரம்பித்ததும் சகல முதலாளிகளும் கள் சீவ பனைமரக் காணிகளைச் சங்கத்துக்கு வழங்குவதனை நிறுத்தினர். சங்கத்தின் உறுப்பினர் தங்களது தொழிலைச் செய்ய முடியாது தவித்தனர்.

இவர் புகையிரத்திணைக்களத்துடன் பேசி, ஆயிரக் கணக்கான புகையிரதத்திணைக்கள பனைகளைப் பெற்று உறுப்பினர்களுக்கு வழங்கி சங்கத்தினை தொய்யவிடாது நெருக்கடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியிலும் சிறப்பாக நடத்தினார். தற்போது நவீன வசதிகளுடன் இச் சங்கங்கள் இயங்கி வருகின்றது. தவறணை முறையை நீக்கி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்து தொழில் செய்பவர்களே முகாமைத்துவம் செய்யும் நிலையை உருவாக்கி வைத்து அவர்கள் பொருளாதார வாழ்வில் ஒளியேற்றினார்.

## 03. மன்னார் பாற்பண்ணை உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் எழுச்சிக்கு உதவியமை.

மன்னாரில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தினை அமைத்து இக்கூட்டுறவுச் சங்கத்திற்கு 13 வருடங்கள் தலைமை தாங்கி 8000 லீற்றருக்கு மேல் குளிர்சாதன வசதி கொண்ட பால் சேகரிக்கும் நிலையத்தை உலகவங்கியின் உதவியுடன் முருங்கனில் அமைத்ததுடன் 8 வாகனங்கள் UNHCR இடமிருந்து பெற்று பால் சேகரிப்பிற்காக 18 நிலையங்களை அமைத்து பால் சேகரிக்கும் வலைப்பின்னலை கிராமத்துக்கு விரிவுபடுத்தி உள்ளக விற்பனை நிலையங்களும் அமைக்கப்பட்டு உள்ளூர் நுகர்வு அதிகரிக்கப்பட்டு. சிறப்பாக இயங்கியது. மன்னார் நகர பால் சேகரிக்கும் மற்றும் விற்பனை நிலையமும் பிரபலமானது.

யுத்தத்தினால் அனைத்தும் செயலிழந்த போதிலும் மீண்டும் இவரால் மீளப்புனரமைக்கப்பட்டு அமுலாக்கப்பட்டது. இவரது இச்செயற்பாடு மன்னார் மாவட்ட விவசாயக் குழுவினால் பாராட்டப்பட்டதுடன் அரச அதிபர் செந்தில்நாதன் அவர்களாலும் பராட்டப்பட்டது. 4 வருடங்களுக்கு மேல் கட்டையில் ஏற்றப்பட்ட லொறியை ரூபா 6000 செலவுடன் மீண்டும் இயங்கச்செய்து பாற் கூட்டுறவுச் சங்கத்தின் சொத்தாக மாற்றிப் பயன்படுத்தியது பாராட்டப்பட்டது.

## 04. பூநகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையை ஏற்றமை

இவர் தனியார் தவறணை முடிவுற்று கூட்டுறவுத் தவறணை முறை ஆரம்பிக்கப்பட்டபோது பூநகரி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தலைமை தாங்க எவருமே முன்வர வில்லை. இச் சமூகத்துடன் வேலை செய்வது பிரச்சினை எனப் பலரும் ஒதுங்கிய போது இவர் பூநகரி பனை தென்னை வளக்கூட்டுறவுச் சங்கத்திற்கு தலைமை ஏற்று அச்சமூகத்தினை அடிமை விலங்கிலிருந்து விடுதலை பெற உதவியதுடன் அவர்களுடன் உறவாடி பிரச்சினைகளைத் தீர்த்து சிறந்த சேவையை அர்ப்பணிப்போடு புரிந்தார். பூநகரியில் பனங்கட்டித் தொழிற்சாலை, இயற்கை மூலிகை விற்பனை, சித்த வைத்திய நிலையம் அனைத்தும் பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடாத்த வழிவகுத்தார்.

## 05. பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கான ஆதரவு

பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திற்கு தலைமைதாங்கி கடற்றொழிலாளர் சமூகத்தினை முதலாளிகளது பிடியிலிருந்து விடுவிக்கப்பாடுபட்டார். புதிய கடற்றொழிலாளர் கிளைச் சங்கங்களை உருவாக்கி கூட்டுறவுக்குள் கடற்றொழிலாளர்கள் அனைவரையும் கொண்டு வந்ததுடன் பூநகரியில் 80 வீதத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்களை கடற்றொழிலாளர் காப்புறுதித் திட்டத்துக்குள் இணைத்தார். மேலும் வட மாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைமைப் பதவியேற்று அங்கு கடற்றொழிலாளர்கள் சுரண்டலை நீக்க உதவினார்.

சுனாமியின்போது பெருமளவு நட்டஈட்டினை இக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உறுப்பினர் களுக்கும் பெற்றுக்கொடுத்ததுடன் பேப்பாரப்பிட்டி, கௌதாரிமுனை, நாச்சிக்குடா, கண்ணகிநகர், செட்டியார்தரை வெளி ஆகிய கடற்றொழிலாளர் கிராமங்கட்கு தெருக்களை பாரிய நிதிச்செலவில் திருத்தியும் புதுக்கியும் மக்கள் துணையுடன் சுனாமித் திட்டத்தின் கீழ் அமைத்தார். அறிவியல் நகர் வீதிகள் கூட சுனாமி நிதிகொண்டு அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்றொழிலாளர்கட்கு சுனாமித்திட்டத்தின் கீழ் கல்லாறில் புதிய கிராமத்தினை உருவாக்கிய துடன் தட்டுவன் கொட்டியில் தண்ணீரின்றியும் உரிய அடிப்படை வசதியின்றியும் அல்லல்பட்ட கடற்றொழிலாளர்களை சுனாமித்திட்டத்தின் கீழ் கண்ணகிநகரில் குடியேற்றி அவர்கட்கு 10 லட்சத்துக்கு மேற் பெறுமதியான தனித்தனி வீடுகள் 200 க்கு மேல் அமைக்க வழி ஏற்படுத்திக் கொடுத்ததுடன் பூநகரி செட்டியார் தரைவெளியில் புதிய சுனாமிக் குடியேற்றத்தினை ஏற்படுத்தி பலரை அங்கு குடியேற்றி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களையும் நிறுவி சகலருக்கும் கடற்றொழில் செய்ய உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தமையை இன்றும் கடற்றொழிலாளர்கள் போற்றுகின் றார்கள். இவரது சுனாமித்திட்டச் செயற்பாடுகளும் முன்னெடுப்புக்களும் பாராட்டப்பட்டு சந்திரிக்கா பண்டாரநாயக்கா அவர்களாலும் செயலாளர் பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சினாலும் சனாதிபதி செயலணிக்குழுவாலும் மெச்சுரைகள் வழங்கப்பட்டன.

## *06. வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினை எழுச்சி பெறச் செய்தமை*

அதற்கு மேலாக 1975 களில் வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் தலைமை பொறுப்பை ஏற்று கடற்றொழிலாளர் உற்பத்தியான சங்கு, கடலட்டை ஆகியவற்றின் ஏற்றுமதி நன்மைகளை கடற்றொழிலாளர் குடும்பத்துக்கே போகச்செய்ய பல துணிச்சலான நடவடிக்கையை எடுத்தார்.

இவர் தலைமையேற்றபோது கடற்றொழில் சமாசத்தின் ஊழியர்கள் எவரும் கடற்றொழிலாளர் குடுப்பங்களிலிருந்து நியமிக்கப்படவில்லை. மேல்தட்டு வர்க்க ஊழியர்களே இருந்தனர். இந்த நிலைமையை மாற்றி உடனடியாகவே பலரை கடற்றொழிலாளர் குடும்பங்களிலிருந்து தெரிவு செய்து பணிக்கமர்த்தினார்.

கடலட்டை சங்கு ஏற்றுமதியினால் வரும் வெளிநாட்டு செலாவணியிலிருந்து (CRA) கடற்றொழில் கூட்டுறவுச் சமாசம் தமக்குத் தேவையான பொருட்களை மலிவாக இறக்குமதி செய்ய வசதியளிக்கப்பட்ட போதும் இந்த வசதி கடற்றொழிலாளர்கட்கு வழங்கப்படாது புடவை நெசவாளர்க ளுக்கு புடவைச் சாயம் இறக்குமதி செய்யவே பயன்படுத்தப்பட்டது. அத்துடன் வேறு கடற்றொழிலில் சம்பந்தமில்லாதவர்கள் லாபமடையப் பயன்படுத்தப்பட்டது. உடனடியாக இவற்றை நிறுத்திய இவர் குங்குலியம் உட்பட கடற்றொழிலாளர்கட்குத் தேவையானவற்றை இறக்குமதி செய்யவே அதனைப் பயன்படுத்தி கடற்றொழிலாளர்கட்கு நன்மையை பெற்றுக்கொடுத்தார்.

இன்னுமொரு பாரிய சுரண்டல் இருந்தது. அட்டையின் குறைந்த நீளம், குறைந்த தரம் என்பவற்றுக்கமையவே விலையைத் தொழிலாளர்கட்கு வழங்கிச் சுரண்டப்பட்டது. முதலாளிகளும் சமாசமும் கூட மொத்தமாகச் சகலதையும் நீளம் தரமின்றி வாங்கி தரம் குறைந்த அட்டையின் நீளத்திற் கேற்பவே விலை கொடுத்தனர். இது தொழிலாளர்கட்கு புரியாததால் கடலட்டைகளது நீள அகலத்துடன் பிரசுரம் அடித்து ஆயிரக்கணக்காக விநியோகித்து கலந்துரையாடல்கள் வைத்து தெளிவுபடுத்தி உரிய விலையை கடற்றொழிலாளர்கள் பெற வழிவகுத்தமை பெரிதும் பாராட்டப்பட்டது.

மேலும் ஒரு சுரண்டல் இருந்தது. சிங்கப்பூரிலிருந்து கேள்விக்கு தரத்தின் அடிப்படையில் விலை வரும்போது இதனைக் கணக்குப் பார்க்கும் வேலையைச் சமாசம் செய்வதில்லை. தொழிலாளர்கட்கு கொடுப்பதானால் அவர்கள் பெருமளவு தரகுப்பணம் பெற்றே கேள்விக் கட்டளையைத் திறப்பார்கள். இது உடனடியாக நிறுத்தி சமாசம் எந்தவித கட்டணமும் இன்றி தொழிலாளர்கட்குச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்து அமுலாக்கினார்.

கடற்றொழிலாளர்கட்கு கடற்கலங்கள் வாங்கவும் அந்நியச் செலாவணி பயன்படுத்தப்பட ஏற்பாடு செய்யப்பட்டது. இதனால் வடக்குமாகாணக் கடற்றொழிலாளர்கள் பெரிதும் நன்மை அடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07. கிளிநொச்சி கடற்றொழில் திணைக்களம் சமாசத்திற்கான தோற்றத்திற்கான பங்களிப்பு

அதேநேரத்தில் கிளிநொச்சி கடற்றொழில் திணைக்களம் பூநகரியில் ஒதுக்குப்புறத்திலிருந்தது. அங்கு கிளை நிறுவனத்தினை அமைக்க ஏற்பாடு செய்து கிளிநொச்சி 155 ஆம் கட்டையில் திணைக்களத்திற்கு காணி வழங்கி மாவட்ட மத்திக்கு இதனைக் கொண்டு வரத்திட்டமிட்டார். அது இப்போது அமுலாக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் பூநகரி கடற்தொழிலாளர் சங்கத்தின் சமாசத்தினையும், கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தையும் தாபித்து சுனாமியின் போது பல வாகனங்களைப் பெற்று கொடுத்ததுடன் நன்னீர் மீன்பிடியையும் ஊக்குவித்தார். குறிப்பாக இரணைமடு, அக்கராயன், வன்னேரிக்குளம் பகுதிகளில் நன்னீர் மீன் பிடிச்சங்கங்களை நிறுவினார். நன்னீர் மீன்பிடியாளர்கள் தங்களது மீன்களை விற்க முடியாது தடை ஏனையவர்களால் ஏற்படுத்தப்பட்டு இருந்தது. இதனை உடைத்தெறிந்து பிரதேச சபையின் விசேட ஆணையாளர் திரு பொன் நித்தியானந்தன் உதவியுடன் கிளிநொச்சி சந்தையில் நன்னீர் மீன்களைச் சந்தைப்படுத்த இடமளிக்கப்பட்டது. நன்னீர் மீன்பிடியாளர்களுக்கு பாரிய உதவியாக இவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களது உதவி பெற்றுக் கொடுக்கப்பட்டதை கடற்றொழில் சங்கங்கள் இன்றும் நன்றியுடன் பாராட்டுகின்றது. அத்துடன் பெருமளவு மீன்குஞ்சுகள் நெருக்கடி காலத்திலும் தம்புள்ளையிலிருந்து கொண்டுவந்து குளங்களில் விடப்பட்டு மக்களது போசாக்குச் சத்து அதிகரிக்க வழி சமைத்தார்.

# சமூக நிறுவனங்களூடான சமூகப்பணி

## 01. பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகத்தினைத் தோற்றுவித்தமை.

நெருக்கடியான நிலையில் மக்களது உடனடி நிவாரணம் புனர்வாழ்வுக்காக பூநகரி மக்களின் நலன் கருதி 1988 ஆம் ஆண்டில் பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தினை நிறுவி 13 ஆண்டுகள் தலைமை தாங்கி வெளிநாட்டு உதவிகள் பெற்று பூநகரி மக்களுக்கு உதவினார். இவரது செயற்பாட்டுக்கு சர்வதேச ஒக்ஸ்பாம் நிறுவனம் பெரிதும் உதவியது. நெருக்கடியின்போது பூநகரி மக்களுக்கு உணவு வண்டிகள் வருவது தடைப் பட்டது. இவர் ஒக்ஸ்பாம் (OXFAM) மூலம் பல உணவு வண்டிகளை பூநகரிக்கு அனுப்பி வைத்தார். ஒரு தொடரணி வண்டி வரும்போது செல்தாக்குதலுக்குட்பட்டு தொடரணி உத்தியோகத்தர் படுகாயமடைந்தபோதும் உணவு வண்டிகள் தொடர்ச்சியாகக் கொண்டுவர ஏற்பாடு செய்து பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகம் மூலம் மக்களைக் காப்பாற்றினார்.

பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகத்திற்கு தலைமை தாங்கிய இவர் பல குடிநீர்க் கிணறுகள் தற்காலிக வீடுகள் எனப் பல வாழ்வாதாரத்திட்டங்களையும் அறிமுகப்படுத்தினார். இக் கழகத்தின் குடிநீர்விநியோகச் சேவை, புனர்வாழ்வு நிவாரணச்சேவை பூநகரி மக்களால் பெரிதும் போற்றிப் பாராட்டப் பெற்றன. பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம் என்ற அரச சார்பற்ற நிறுவனத்தினை தோற்றுவித்து அதன்மூலம் மக்களுக்கு பன்முகப் பணியாற்றும் பெரிய நிறுவனமாக பல வெளிநாட்டு நிறுவனங்களது உதவி பெற்று வளர்ச்சியடைச் செய்தார்.

## 02. மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தினூடான சமூகப் பணி

இந்த இல்லத்தினை யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற சிறார்களைப் பராமரிப்பதற்காக மகாதேவா ஆச்சிரம முதல்வர் தவத்திரு கணேசானந்த மகாதேவா சுவாமிகளுடன் இணைந்து நெருக்கடியான காலத்தில் தோற்றுவித்தார். 6 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த இல்லம் இன்று 426 க்கு மேற்பட்ட ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரித்துக் கல்வி வழங்கும் பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனமாக உயர்ந்து நிற்கிறது. இங்கு இணைக்கப்பட்ட குழந்தைகளது கல்வியை மேம்படுத்த 29 ஆசிரியர்களை நியமித்து இழந்த கல்வியை மீளப்பெற நடவடிக்கை எடுத்து வருவது பலராலும் பாராட்டப்பட்டுள்ளதுடன், பரதநாட்டியம், சங்கீதம், கிராமியக் கலைகள், அனைத்தும் பயிற்றுவிக்கப் பட்டு இக்குழந்தைகள் முன்னிலையில் திகழ்கிறார்கள். இக் குழந்தைகளது காத்தவராயன் சிந்து நடைக்கூத்து 19 தடவைகள் பல கோயில்கள் உட்பட பல இடங்களில் மேடையேறிப் பாராட்டைப் பெற்றுள்ளது. கராத்தே கலை பயிற்றுவிக்கப்பட்டு பெண் குழந்தைகள் உட்படப் பலர் பங்கு பற்றி மாவட்ட, மாகாண மட்டத்தில் பல பதக்கங்களைப் பெற்றுள்ளனர். இந்த ஆண்டு மாகாணக் கராத்தே போட்டியில் பங்கு பற்றி எமது குழந்தைகள் 60 பதக்கங்கள் பெற்று பாராட்டைப் பெற்றுள்ளனர்.

இந்த இல்லக் காணிகளை பலத்த முயற்சியின் பின் இராணுவத்தினரிடமிருந்து மீளப் பெற்று 63 மில்லியனுக்கு மேல் செலவு செய்து திருத்தி குழந்தைகள் சிறந்த முறையில் வாழ உதவினார். இவ்வளவு பெருந்தொகை நிதியை பெற்று இல்லத்திலிருந்து இதனைத் திருத்த இவரைத் தவிர எவராலுமே முடியாது எனப் பலர் புகழ்ந்துள்ளனர்.

எவரிலும் தங்கியிராது தூர நோக்குடன் எதிர்காலத்து இல்லத்தின் பேண்தகு நிலையை உறுதிப்படுத்தும் வகையில் கொடைவள்ளல்கள் அன்பர்களிடம் பல வயல் தென்னந்தோட்ட நிலங்களை அன்பளிப்பாகப் பெற்றும் விலைக்கு வாங்கியும் அபிவிருத்தி செய்து நிரந்தர வருவாயை பெறும் வழியை ஏற்படுத்தியுள்ளார்.

இந்த வகையில் பூநகரி தியாகத்தில் 198 ஏக்கருக்கு மேல் அன்பளித்த திரு க.பரமலிங்கம் அவர்களது காணியைத் திருத்தி நெல் பயிரிட ஏற்பாடு செய்ததுடன் கிராஞ்சியிலும், புதுமுறிப்பிலும் தென்னை பயிரிட நடவடிக்கை எடுத்தார். இதன் மூலம் இல்லத்தின் தேங்காய், அரிசியில் இன்று தன்னிறைவு காணும் நிலை ஏற்பட்டுள்ளது.

எதிர் காலத்தில் இவரால் பெறப்பட்ட 250 க்கு மேற்பட்ட ஏக்கர் கொண்ட தென்னந் தோட்டங்களும், 250 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்களும் இந்த இல்லத்தின் வளர்ச்சிக்கும் நின்று நிலைத்து சமூக, சமயப் பணியாற்றவும் அடித்தளமாக இருக்கும். வருங்காலத்தில் இல்லம் செழித்தோங்க இவை உறுதுணையாய் அமையும்.

இந்த இல்லத்திலிருந்து கல்வி கற்றவர்களில் ஏற்கனவே பொறியியலாளர் மற்றும் பட்டதாரி களாகி வெளிநாட்டில் இருக்கிறார்கள். மேலும் பல விஞ்ஞான, பொறியியல், கணக்கியல் பட்டதாரிகள் உருவாக இவரால் ஆழமான அடித்தளமிடப்பட்டுள்ளதை பலரும் வியந்து பாராட்டுகின்றனர்.

## 03. யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம் ஊடான சமூகப்பணி



இவர் அரச அதிபராக இருந்த காலத்தில் முதியோர்கள் பட்ட அவலத் தினைக் கண்ணுற்று இவர்களுக் கான இல்லம் அமைக்கப் பலரிடமும் கோரிக்கைகள் விட்டார். எனினும் 1996 ஆம் ஆண்டு ஏற்பட்ட யாழ் இடப் பெயர்வு இத்தேவையை இட்டு பாரிய அழுத்தம் சமூகம் மீது ஏற்படுத்தியது. யாழ் இடப்பெயர்வின் போது கிளிநொச் சிக்கு வந்த வங்கியின் உயர் அதிகாரி யாகவுமிருந்து ஓய்வு பெற்றவர் ஒருவர் ஆதரிக்க எவருமின்றி தெருவிலே இறக்க நேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல முதியவர்கள் தெருவே சீவியமாக இருந்த காட்சியால் உடனடியாக பல வளங்களையும் திரட்டி யோகர்சுவாமி திருவடி நிலைய நிர்வாகிகளுக்கு கொடுத்து வன்னேரிக்குளத்தில் 165 ற்கு மேற்பட்ட முதியோரைப் பராமரிக்க உதவியமை பெருமதிப்புடன் நினைவு கூரப்படுகின்றது. இதற்கான பாரிய கட்டடங்களை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனம் மூலம் நிதி பெற்று முதியோர் வசதியாக வாழ வழிசமைத்தார்.

இடப்பெயர்வின்போது சகலரையும் பத்திரமாக வவுனியா நகர்த்தியதுடன் மீண்டும் இந்த இல்லத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று இராணுவத்திடமிருந்து இந்த இல்லத்தின் காணிகளை அண்மையில் பாரமேற்று அதனை இயக்க கட்டடங்களைத் திருத்த நடவடிக்கை எடுத்து தற்போது முதியோர் இல்லம் இயங்கத் தொடங்கியுள்ளது. இந்தச் செயற்பாடு பாரிய வரவேற்பைப் பெற்றுள்ளது.

யோகர்சுவாமி திருவடி நிலைய கோவிலைத் திருத்தி தற்போது பூசைகள் இடம்பெற வழி வகுத்துள்ளார். எமது மண்ணின் உயர்வுக்காக ஆன்மீக ரீதியில் பாடுபட்ட யோகர் சுவாமிகள் நினைவு கூரப்படுகின்றமை பாராட்டுக்குரியது. அதேவேளை A9 வீதியிலுள்ள யோகர்சுவாமி திருவடி நிலைய தியான மண்டபக் காணியை இராணுவத்திடமிருந்து மீளப்பெற்றுக்கொள்ள துணிந்து நடவடிக்கை எடுத்து வருவதும் போற்றப்படுகிறது.

## *04. இனிய வாழ்வு இல்லத்தின் தோற்றமும் வளர்ச்சியும்*

செவிப்புலனற்ற விழிப்புலனற்ற குழந்தைகளைப் பராமரிக்க எதுவித ஏற்பாடும் இவர் அரச அதிபராக கிளிநொச்சிக்கு வந்தபோது இருக்கவில்லை. இதனை அமைக்க பலரைத் தூண்டியும் சாத்தியமாகவில்லை. அப்போது இருந்த அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று வட்டக்கச்சியில் அமைக்க முயன்றது. இம் மாவட்டத்திலே 10 க்கு மேற்பட்ட இல்லங்கள் இருப்பதால் இதனை முல்லைத்தீவுக்கு நகர்த்தி அம்மக்களும் அதில் பங்கேற்க ஆவன செய்யுமாறு கோரினார். அவர்கள் தங்களுக்கு வளம் இல்லை என்று கூறித் தட்டிக்கழிக்க பார்த்த போது வள்ளிபுனத்தில் இவ் இல்லத்தினை அமைக்க உரிய கொட்டில்கள் மூன்று அமைக்கவும் அரச உதவியதுடன் 6 மாதங்களுக்குரிய பராமரிப்புச் செலவையும் இவர் வழங்கியுதவி ஆரம்பிக்க ஏற்பாடு செய்ததுடன் மனிதநேயம் மூலம் பராமரிப்பு உதவி உட்பட கட்புல சாதனங்களைப் பெற்றுக் கொடுத்து இன்று விழிப்புலனற்ற குழந்தைகள் 10 பேருக்கு மேல் பல்கலைக்கழகம் சென்று கல்வி கற்கக்கூடிய வாய்ப்பினைப் பெற்றுக்கொடுத்த நிலை நன்றியுடன் நினைவு கூரப்படுகின்றது. யுத்தத்தின் பின்னும் இதனை ஆரம்பிக்க மனிதநேயம் மூலம் உதவினார்.

## *05. வெற்றிமனையின் உதயமும் முன்னேற்றமும்*

மனநலம் பாதிக்கப்பட்டவர்களை பராமரிக்க யுத்த காலத்தில் எதுவித நிறுவனமும் இல்லாத நிலை இருந்தது. ஸ்கந்தபுரத்தில் இருந்தபோது மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவர் ஒவ்வொரு நாளும் காவோலைகளை இழுத்தபடி காலை இவர் இருந்த விடுதி வழியாகப் போவது இவரை வாட்டியது. இதனை நண்பர்கள் உறவினர்களிடமும் மருத்துவ உத்தியோகத்தர்களிடமும் எடுத்துக்கூறி ஸ்கந்த புரத்தில் திரு கொத்தலாவலையுட்பட்ட பல தென்பகுதிக் கொடை வள்ளல்களிடம் உதவி பெற்றும் அரச உதவியுடனும் "வெற்றிமனை" என்ற பெயரில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்காக இந்த இல்லத்தினை ஆரம்பித்து நல்லமுறையில் பொதுமக்கள் உதவியுடன் நடாத்தி மனநலம் பாதிக்கப்பட்ட பலரைப் பராமரித்து குடும்பத்துடன் இணைத்து வாழ்வளிக்க வழிசமைத்தார். பிற்காலத்தில் இந்த நிலையம் கைமாறிப்போனாலும் மனநலம் பாதிக்கப்பட்டவர்க்கான காப்பகம் ஆரம்பிக்கப்பட உந்து சக்தியாக இருந்தமை பாராட்டப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவரது சமயப்பணி

## 01. அறநெறிப்பாடசாலை அபிவிருத்திக்கு உத்வேகம் அளித்தல்

கிளிநொச்சி மாவட்டத்தில் இவர் அரசாங்க அதிபராக வந்தபோது 3 அறநெறிப் பாடசாலைகளே இருந்தன. 55 க்கு மேற்பட்ட அறநெறிப்பாடசாலை அமைக்க கோவில்களை ஊக்குவித்ததுடன் இந்து மாமன்றம் இந்து கலாசார அமைச்சுடன் இணைந்து பல பயிற்சி நெறிகளை ஆரம்பித்ததுடன் பாடப் புத்தகத்தகங்களையும் பெற்று ஊக்கமூட்டியுள்ளார்.

தான் தலைமை தாங்கும் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் உருத்திரபுரிசுவரர் ஆலயம் மூலம் அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பித்து நடாத்துவதுடன் ஏனைய அறநெறிப் பாடசாலைகளை யும் ஊக்குவிக்கும் செயல்பாடும் அவர்களுக்கு பயிற்சியளித்தல், தலயாத்திரைக்கு அழைத்துச் செல்லல் ஆகிய செயற்பாடுகள் உயர்வாக மதிக்கப்படுவதுடன் போற்றப்படுகின்றன.

## 02. உருத்திரபுரீசுவரர் ஆலயத்தின் குடமுழுக்கு



இலங்கையில் வரலாற்றுப் பெருமை கொண்ட ஆலயங்களில் ஒன்றான உருத்திரபுரீசுவரர் சிவாலயமும் நாற் சதுர வடிவுடைய ஆவுடையார் கொண்ட பழைய லிங்க வடிவில் உருத்திரபுரீசுவரர் ஓர் ஓலைக் கொட்டிலில் அருளாட்சி செய்து வந்தார். இவரது முயற்சியால் நெருக்கடியான காலத்திலும் பொது மக்கள் உதவியுடன் 26 லட்சம் ரூபா செலவில் கோவில் அமைத்து குடமுழுக்கு 1988 இல் செய்யப்பட்டது. இதே போல பூநகரி பொன்னாவெளி அண்ணாமலை சிவாலயம் பாரம்பரிய வரலாறு கொண்ட ஈழவூரில் அமைந்துள்ளது. அங்கு குடியிருந்த நூற்றுக்கணக்கான மக்கள் வெளியேறி சிவாலயம் அழியும் நிலையிலிருந்ததுடன் பூசைகள் 20 ஆண்டுகளாக நடைபெறாதிருந்தது. இதனைப் பொதுமக்கள் உதவியுடன் புனரமைக்க நடவடிக்கை எடுத்து பூசைகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டதுடன் திருப்பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் சோழர் காலத்து அழிந்துபோயுள்ள வரலாற்றுப் பெருமை மிக்க மண்ணித்தலை சிவாலயத்திற்கு அருகில் புதிதாகக்கோவில் கட்ட மக்கள் துணையுடன் ஏற்பாடுகள் செய்துள்ளார். அழிந்து போயுள்ள சிவவழிபாடு கிளிநொச்சியில் மீள எழுச்சி பெற பலரது துணையுடன் செயற்பாடுகள் இவரால் முடுக்கி விடப்பட்டுள்ளது. இவற்றுக்கு பாரிய நிதி தேவைப்படும் நிலை அவருக்கு மனதை உருக்கியது தற்போது நிதி பலராலும் வழங்கப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. மகாதேவா ஆச்சிரமத்துக்கான பங்களிப்பு



மகாதேவா ஆச்சிரம பிரதம சுவாமிகள் கணேசானந்த மகாதேவா சுவாமிகளுடன் இணைந்து பல சமயப் பணிகளைக் கிளிநொச்சியில் முன்னெடுத்ததுடன் யுத்தத்தினால் அழிவுற்ற நிலையிலிருந்த ஆச்சிரமத்தினை நிதி பெற்று நல்லமுறையில் திருத்தி உதவியதுடன் ஆச்சிரமச் சுவாமிகளுக்கு ஓட்டோ வாகன வசதி செய்து சமயப் பணியை விரிவுபடுத்த உதவியதனால் இப் பகுதியில் மகாதேவா ஆச்சிரமத்தால் நல்ல பணிகளைத் தொடர்ந்தும் செய்ய முடிந்துள்ளது.

## 04. மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் புதுமுறிப்பு சிவாலயத்தின் வளர்ச்சி

மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தின் குழந்தைகளது வழிபாட்டிற்காக கட்டப்பட்ட சிவன் கோவிலை அப்பகுதி மக்களுக்கு கையளித்து பொதுமக்கள் மயப்படுத்தி சகல ஊர் மக்களது வழிபாட்டிற்கும் திறந்து விட்டார். அதுமட்டுமன்றி இல்லத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் இருந்த கோவிலை பொதுமக்களதும் வழிபடுவோரதும் சொத்தாக்கி சிறப்புறத் திருப்பணி செய்யப்பட்டு பூசைகள் நடைபெறுகிறது. ஊர்மக்களால் இச்செயற்பாடு வியந்து போற்றப்படுகின்றது.

குருகுல வளாகத்தில் இருந்த சர்வசக்தி அம்மன் ஆலயம் அழிவுற்ற நிலையில் இருந்தது. அம்மன் சிலையை முள்ளிவாய்க்காலில் இருந்து எடுத்து வந்து மகாதேவா ஆச்சிரமத்தில் பாதுகாப்பிற்கு வைத்த போது அதனை நிர்வாகம் திரும்பத்தர மறுத்த நிலையில் புதிய சிலையை வார்த்து பல லட்சம் செலவு செய்து குடமுழுக்குச் செய்து நித்திய பூசை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 05. சமய நிறுவனங்களில் பங்கேற்றுப் பணியாற்றி பதவி வகித்தல்

கடந்த 20 ஆண்டுகட்கு மேலாக திருக்கேதீஸ்வரம் திருப்பணிச் சபையின் நிருவாகத்தின் உபதலைவரில் ஒருவராகவும் சமூக சேவைக்குழுவின் உறுப்பினராகவும் பங்காற்றி பல சேவைகட்கு உறுதுணையாக இருந்தார்.

உருத்திரபுரீசுவரர் ஆலய அறங்காவல் சபைத் தலைவராகக் கடமையாற்றி இக் கோவிலுக்கு 130 ஏக்கருக்கு மேல் காணிகளைப் பெற்றுக் கொடுத்ததுடன் பல அபிவிருத்தி வேலைகளைச் செய்தமை.

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் நிர்வாகக் குழுவிலிருந்து செயலாற்றுவதுடன் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பிரதிநிதியாகச் செயல்படுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர் பெற்ற விருதுகள்

இவரது மகத்தான நிருவாக மற்றும் பொதுப்பணிகளைப் பாராட்டி அகில இலங்கை கம்பன் கழகத்தினால் ஆளுமை மிக்க சமூகத்தொண்டுக்கான கௌரவ விருது வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டார்.


யாழ்ப்பாணக் கல்லூரியிப் பழைய மாணவர் சங்கத்தினால் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று சமூகத்திற்கு சமூக சமய கலை இலக்கியப் பணியிலும், சிவில் சேவையிலும் உயரிய தொண்டாற்றிய தற்காக இவருக்கு 2008 ஆம் வருடம் மார்ச் மாதம் 30 ஆம் திகதி மகத்தான சேவையாளருக்கான விருது வழங்கப்பட்டது.

கரைச்சி பிரதேச செயலக கலை பண்பாட்டுப் பேரவையால் கிளிநொச்சி மாவட்டத்தில் சமய சமூக மற்றும் பொதுப்பணியைப் பாராட்டி "கரை எழில்" விருது 2012 ஐப்பசியில் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது யாழ் விருது யாழ் மாநகர சபையால் வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நவாலி கேமலதா நிறுவனம் சமூகச்சுடர் என்னும் விருது வழங்கி மதிப்பளித்துள்ளதுடன் லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட சர்வதேச இந்து மன்றம் இவரது மகத்தான சமய ஆன்மீக சமூக சேவையினை மதிக்கும் வகையில் விருது வழங்கிப் பாராட்டியுள்ளது.

இவ்வாறாக மானிடம் போற்றும் மாபெரும் பணிகளை நிர்க்கதியாக்கப்பட்ட எம் மக்களுக்கு செய்த நினைவழியாப் பெருமனிதன். இவரது பெருமை என்றும் அழியாப்புகழ் பெற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை.

***






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைந்து பணி கொண்டோரும்
இணைந்து பணி செய்தோரும்
பணிந்து பணி கற்றோரும்
உவந்து பலன் பெற்றோரும்
கசிந்து மனம் களித்தோரும்
நினைந்திருப்பார் தினந்தோறும்



ஆழத்தடம் பதித்த
நீளப் பயணத்தின்

# அனுபவப் பகிர்வுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தை ஒழுங்குபடுத்தும் தலைமைத்துவம்

***தி.சி.இரங்கராசா***
***முன்னைனாள் பிரதம செயலாளர், ஆளுனர் செயலாளர்,***
***மற்றும் ஆலோசகர், வடக்கு கிழக்கு மாகாணம்,***
***வடக்கு மாகாணம்.***

1981 ஆம் ஆண்டு அவர் மன்னார் உதவித்திட்டமிடல் பணிப்பாளராக கடைமையேற்க கச்சேரிக்கு அறிக்கை செய்ய வந்தபோது அவரை வரவேற்று திட்டமிடற் பணிமனையில் சக உத்தியோகத்தராக சேர்ந்து கொண்டோம். அன்றிலிருந்து இன்றுவரை அவரது சமூகப் பணிகளின் வளர்ச்சியை மட்டுமன்றி அவரின் ஆழுமை வளர்ச்சியையும் சாட்சியாக நின்று கண்டவன் என்ற வகையில் அவருக்கு சேவை நலன் பாராட்டு ஒன்று நிகழவில்லையே என்ற ஆதங்கத்தில் இருந்த போது இவ் விழா பற்றி அறிந்ததும் மிகவும் மகிழ்சியுற்றேன்.



இளைஞனாக இருக்கும் போது அவருக்கு கிடைத்த அடிமட்ட அரசியல் சமூக செயற்பாடு அனுபவங்கள் சாதரண மக்களின் பிரச்சினைகளைப் பற்றியும் உள்ளூர் மற்றும் பிராந்திய அபிவிருத்தி பிரச்சினைகளைப் பற்றியும், உள்ளூர் மற்றும் பிராந்திய அபிவிருத்தி பிரச்சினைகள் பற்றியும் வளமான புரிந்துணர்வையும் பார்வையையும் வழங்கியிருந்தன. அத்துடன் நோக்க தொன்றின் பொருட்டு சமூகமொன்றை ஒருங்கு திரட்டும் தலைமைத்துவ ஆற்றலையும் கொடுத்தி ருந்தன. இவை அவர் மேற்கொண்ட சகல பணிகளுக்கும் பேருதவியாக இருந்தது. கூட்டுறவுத் துறை யிலும் சரி, பால் உற்பத்தியிலும் சரி, இடம் பெயர்ந்த மக்களக்கான நலன்புரிச் சேவை வசதிகளை வழங்கவதிலும் சரி, அவர்களை மீளக்குடியமத்துவது, வாழ்வாதார முயற்சிகள் ஒழுங்கு செய்வது சிவில் நிர்வாகத்தை மீள நிறுவுவது போன்ற சகல பணிகளும் திறம்படச் செய்ய அத்திவாரமாக அமைந்தன.

திரு.இராசநாயகம் அவர்கள் துணிவுள்ள சிறந்த அமுலாக்கம் ஆற்றல் கொண்டவராகவும் இன்று வரை செயற்படுவது அவருக்கு இறைவனால் வழங்கப்பட்ட கொடையாகும். கருத்தியல் ரீதியாக இந்த விடயம் இன்னமாதிரியான பெறுபேற்றைத் தரவேண்டும் அதற்குரியமுறையில் இந்த செயல்திட்டத்தை அல்லது நடைமுறையை அமுல் நடாத்துதல் வேண்டும் என்று கூறினால் அந்த மாதிரி அதனைக் குறிப்பிட்ட கால அட்டவணைக்குள் அதனை அமுலாக்கி முடிப்பார். இடைநேர் விளைவான பிரச்சினைகள், தேவைகள் ஏதும் எற்படின் தற்துணிவுடன் தீர்மானங்கள் எடுத்து நிறைவேற்றி முடிப்பார். குறிப்பாக அபிவிருத்தித் திட்டங்களை செய்யும் போது எப்போதும் மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட கால நன்மை தூர நோக்கு என்பவற்றுடன் செயற்படுவார். அவர் ஒரு கருமத்தை முன்னெடுத்தால் பின்வாங்கமாட்டார். தொடர்ந்து ஒவ்வொரு சிக்கல்களையும் பல்வேறு மட்டங்களுக்கு எடுத்துச் சென்று இறுதித் தேர்வு வரை பின்தொடர்ந்து நிறைவேற்றிவைப்பார். நேரடியாகக் களத்தில் இறங்கி வேலை செய்வது அவரது வெற்றிகளின் மற்றுமொரு இரகசியமாகும்.

ஒரு கட்டத்திலிருந்து அவரது ஆளுமையினை அபிவிருத்தி ஆன்மீகத்தோடு கலந்து செல்ல தொடங்கியமையை அவதானிக்கும் போது மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். உருத்திரபுரம் சிவன் கோவிலில் உள்ள சிவலிங்கத்தின் ஆவுடையார் சதுர வடிவானதாகும். அதற்கான காரணத்தைக் கூறி அதனை ஏன் பாதுகாக்க வேண்டும் என்பதற்காதன காரணத்தையும் தெளிவாகக் கொண்டிருந்தார். யுத்தம் முந்த பின்னர் மக்களை அழிந்து போயிருந்த அவரது ஊர்களிலே கொண்டு போய் விட்டார்கள். ஊர் எல்லாம் பாழ்பட்டுபோய் பீடைபிடித்த மாதிரி இருந்தது. மக்கள் எல்லாம் திகைப் பூண்டில் மிதித்தவர்கள் போல மனம் இறுகிப்போய் இருந்தார்கள். எங்களுக்கு மக்களின் மனதை அடுத்த கட்டத்திற்கு தயாரிப்பது என்ற பிரச்சினை தோன்றியது. அவர்கள் முற்றாக நம்பிக்கையிழந்திருந்தார்கள். அவர்கள் வாழ்க்கையில் பிடிப்பை உருவாக்க வேண்டும். அவர்களது மனங்களில் வாழ்க்கையில் நம்பிக்கையை உருவாக்குவதாயின் உடனடியாக அவர்களது நம்பிக்கைக்கிடமான கோவில்கள் தேவாலயங்கள் எல்லாம் திறக்கப்பட்டு மணியோசை எல்லா இடங்களிலும் கேட்க வைக்கப்படல் வேண்டும். அது மக்களின் மனோநிலையை மாற்றி வாழ்கையில் பிடிப்பை உண்டாக்கும் என்று தீர்மானித்தோம். அதன்படி திருக்கேதீஸ்வர ஆலயத்திலிருந்து சிறுசிறு கோவில்கள் தேவாலயங்கள் ஆகியவற்றிற்கு இயலுமானவரை ஒவ்வொரு மணியும் ஒவ்வொரு விளக்கும் கொடுத்து துப்பாக்கிச் சத்தம் கேட்ட இடமெல்லாம் மணிச் சத்தம் கேட்க வேண்டும் என்ற இயக்கத்தை ஆரம்பித்தோம். அவ்வாறு விநியோகம் செய்த போது பாழடைந்திருந்த ஒவ்வோரிடத்திலும் மணி கட்டி அடித்த போது அதனது முதலோசையை கேட்க அனைவரும் மெய் சிலிர்த்து கண்ணீர் விட்டார்கள். புத்தெழுச்சி பெற்றார்கள், நம்பிக்கை பெற்றார்கள் இன்று எம்மைச் சுற்றி எல்லா இடங்களிலும் ஓரளவிற்கு அதீதமான ஆர்ப்பாட்டத்தோடு இடம் பெறுகின்ற கோபுர நிர்மாணிப்பு பணிகளைக் கண்டிப்பவர்கள் இத்தகைய வரலாற்றையும் அறிந்திருத்தல் நல்லது.

மீள்குடியேற்றம் நடைபெற்றது மக்களை கொண்டுபோய் விட்டார்கள், அதுவும் படையினருக்கு மத்தியில் அரசாங்க கிராமநிலை உத்தியோகத்தர், ஆசிரியர்கள் போன்றவர்களுக்கு தங்க இடமில்லை. தண்ணீர் இல்லை பல இடங்களில் ஆசிரியர்கள் கூட இராணுவத்தினர் பாவிக்கும் மலசலகூடங்களுக்கே செல்ல வேண்டியிருந்தது எல்லா இடங்களிலும் மக்கள் தங்குவதற்கு பயப்பட்டார்கள். விட்டுவிட்டு ஓடினார்கள். பிள்ளைகளை பாதுகாப்பான இடங்களுக்கு கூட்டிக் கொண்டு போய்விட்டார்கள். வேறு வழியில்லை திரு.தி.இராசநாயகம் அவர்களே பராமரிக்கப்பட வேண்டிய ஒரு இருதய நோயாளி மக்களுக்கும் உத்தியோகத்தர்களக்கும் பாதுகாப்பு உணர்வை உருவாக்க வேண்டுமென்பதற்க்காக தற்காலிகக் கொட்டில்களிலும் தீவிர நோயையும் பொருட்படுத்தாது மக்களோடேயே தங்கினார் முழுங்காவில் தெருவோரத்தில் அங்கு உற்பத்தி செய்யப்பட்ட வெண்டிக்காயும் கீரையும் விற்கப்பட்டது. கிளிநொச்சியிலும் தெருவிலே மரக்கறிகள் விற்பனைக்கு வந்துவிட்டன. ஒருமாதத்தில் கோழிமுட்டை வந்துவிடும். இன்று பேரூந்து நான்கு மணி வரைக்கும் நின்று உத்தியோகத்தர்களை யாழ்ப்பாணம் திருப்பிக்கொண்டு வந்ததோடு இராணுவுத்தின் உதவியோடு பத்தாயிரம் சைக்கிள்களைக் கொண்டு வந்துவிட்டோம். இது போன்ற பல்வேறு விடயங்கள் சீரழிவுகள், குற்றங்கள், குறைபாடுகள் வசதிகள் என்பன கண்காணிக்கப்பட வேண்டியிருந்தன. இவற்றின் பொருட்டும் பல முறைமைகளும் அதிகாரிகளும் செயற்பட்டார்கள் ஆனால் திரு.தி.இராசநாயகம் அவர்கள் தனது ஆத்மாவை ஈடுபடுத்தி அர்ப்பணிப்புடன் பணிபுரிந்தார்.

அவர்களின் நலனின் பொருட்டு இராணுவத்தினருடன் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாதிட்டு பல இடங்களையம் கட்டடங்களையும் விடுவித்தார். பாதிக்கப்பட் குழந்தைகள் எதிர்காலத்தின் பொருட்டு இராணுவம் நீதிமன்றம் பொலிசு ஆளுனர் மற்றும் ஏனைய அதிகார மையங்களுக்கு தொடர்ந்து சென்று வாதாடி வசதிகளைப் பெற்றுக் கொடுத்தார்.

ஒரு மாபெரும் சமூக சேவையாளன் ஒருவரின் நலன் பாராட்டு நிகழ்வில் பங்குகொள்வதையிட்டு நான் மிகவும் பெருமையடைகிறேன். அவர் நீடூழி வாழ்க அவருக்க உறுதுணையாக பின் புலத்தில் நின்ற அவரது மனை வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதாரண புருஷர் நாயகம்

# உயர்திரு இராசநாயகம்

*பொ. வாகீசன்*
*ஆணையாளர்*
*யாழ். மாநகரசபை*
*யாழ்ப்பாணம்*

பூநகரி தந்தபுனிதன் உயர் திரு. தி.இராசநாயகம் அவர்கள் தன்னலம் கருதாத சேவையாளர்களாக வாழும் உதாரண புருஷர்களுள் ஒருவர். அவரைப் பற்றி நான் முன்னரேயே அறிந்திருந்தாலும் அவர் பழகுவதற்கு இனியவர் என்ற விடயம் வடக்கு மாகாண சபையின் மாகாணப் பொது நிர்வாக அமைச்சின் செயலாளராகவும், பின்னர் பிரதிப் பிரதம செயலாளராக நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருந்தபோது அவரது சிரேஷ்டத்துவத்தின் கீழ் உதவிச் செயலாளராகப் பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்தபோதே அறிந்துகொண்டேன். பொதுச்சேவையில் இரு ஒழுங்குவிதிப் புத்தகங்கள் பிரதானமானவை. அவையாவன தாபன விதிக்கோவையும் (AR) நிதிப்பிரமாணங்களுமே (FR) ஆகும். இராசநாயகம் ஐயா அவ்வப்போது சொல்லுவார் "தம்பி இங்கே AR, FR க்கு மேலே TR (தி.இராசநாயகம்) தான்" என்று. அதில் நான் புரிந்துகொண்டது அவரது உதவி புரியும் மனப்பாங்கினையே. ஒழுங்கு விதிகளால் விழுங்கப்படு முன்னர் வரிகளை உரித்துப் பார்த்து எழுந்து நிற்க வைப்பவர் இராசநாயகம் ஐயா, இப்படி உதவுவது சரிதானா என்பது தொடர்பில் தெளிந்த தீர்மானத்தை அவர் அவ்வப்போது எடுப்பது கண்டு மலைத்திருக்கிறேன். உள்ளூர மகிழ்ந்திருக்கிறேன். அவர்தன் பொதுச் சேவையை ஓர் கணக்காய்வாளராகவே ஆரம்பித்திருந்தார். எனவேதான் AR, FR மற்றும் TR ஆகியவற்றிடையே முக்கோணத்தொடர்பை அவர் நிறுவியிருந்தார்.

2016 இல் யாழ்ப்பாணம் மாநகரசபையின் சமயவிவகாரக் குழுவால் யாழ் விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டு கௌரவ முதலமைச்சர் கையால் அவ்விருதை வழங்கும்நிகழ்விற்குத் தலைமை தாங்கும் பெரும்பேற்றை நல்லைக்குமரன் எனக்களித்திருந்தான். இந்நிகழ்விற்கு வருகை தந்திருந்த கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமசிறார்களையும் பார்த்தேன். என்ன ஒரு பூரிப்பிலிருந்தார்கள். தங்கள் ஐயாவிற்கு விருது கிடைக்கிறதாம் என்ற பூரிப்பு அது. அந்தப் பூரிப்பில் இறைவனை இங்கிருந்தால் தான் காணலாம் என இங்கிலாந்து போகாதவர் ஐயா அவர்கள். அந்த ஆச்சிரமத்தைத் தன்னிறைவு கொண்ட ஒரு நிறுவனமாக மாற்றுவதற்கு அவர் மேற்கொண்ட எத்தனங்கள் குறித்து யாரேனுமொருவர் நிச்சயம் எழுதுவார் என நினைக்கின்றேன்.

நான் உதவிச் செயலாளராக இருந்தபோது கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் பதில் செயலாளராகவும் பணியாற்றியிருந்தேன். அப்போது கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் கூட்டுறவுத் துறைக்கு சரியான வியாக்கியானங்களைத் தான் எப்படி வழங்கியிருந்தார் என்று கூறுவார். அதனைக் கேட்க விருப்பமாக இருக்கும். அவ்வளவிற்கு ஒரு கூட்டுறவுப் போராளியாக அவர் செயற்பட்டிருந்தார்.

இராசநாயகம் ஐயா தொடர்பில் இன்னுமொன்றைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். அதுதான் பலநோக்கு சிந்தனையாற்றல் (Multiple Thinking Ability) ஐயாவிடம் அது நிறையவே இருந்தது. இருக்கிறது. அவ்வாற்றலால் குறுகிய காலத்தில் பயன் பெற்றோர் அதிகம். அதனை அவர் வெற்றிகரமாகச் செய்ய முடிந்தமை எவ்வாறு என்பது ஒரு தலைமைத்துவம் (Ledership) என்பதன் கீழ் வரவல்ல ஆராய்ச்சித் தலைப்பு.

இந்த சகலகலா வல்லவன் உயர் திரு.தி.இராசநாயகம் அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் பலபேருக்கு உதவ இறைவனை வேண்டி நிறைவு செய்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவப் பகிர்வும் வாழ்த்துக்களும்



**UNIVERSITY OF JAFFNA**
Faculty of Engineering
**Head-Civil Engineering**
**Dr. (Eng.) S.S.Sivakumar** *PhD, MSc.(WRD), BSc.(Eng)*
*C.Eng, MIE(SL), FIE(SL), BMI&PSI, LMSLAAS, LMIWRS, LMICOLD*
**Senior Lecturer, Engineering Faculty**

இராசநாயகம் ஐயா அவர்கள் தனது நிர்வாகப் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களின் தேவைப்பாடுகளையும் அங்கு வசிக்கின்ற மக்களின் இயல்பு வாழ்க்கையையும் நன்கு கற்றறிந்த அனுபவசாலியாகவும் எதிர்கால திட்டங்களை ஒரு தூரநோக்கோடு அணுகுகின்ற ஆற்றலும் ஒருங்கே கொண்ட ஒரு சிறந்த அதிகாரியாக திகழ்ந்த ஒருவராவார்.

2002 ஆம் ஆண்டு நான் "Water resource and Agriculture development Strategy for North East" எனும் நூலினை தயாரித்துக்கொண்டிருந்தவேளை கிளிநொச்சி மாவட்ட நிலவரம் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு அப்போது கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த காலப்பகுதியில் அவரை அணுகியிருந்தேன். அந்த நூலினை சிறப்புற தயாரிப்பதற்கு அவரிடம் இருந்து பெற்ற தகவல்கள் இன்றியமையாததாக இருந்ததோடு 2003 இலும் "Water utility and management policy for effective sharing of Natural water resource in the costal dry Zone of Sri Lanka" என்ற கட்டுரையினை தயாரிப்பதற்கும் அவரிடம் இருந்து அவசியமான பல தகவல்களை பெறக்கூடியதாக இருந்தது. அந்த வகையில் தனது ஆளுகைக்குட்பட்ட பிரதேச வாழ் மக்கள் மீதும் வளங்கள் மீதும் கொண்ட பற்றுறுதியையும் அனுபவ ரீதியாக கற்றறிந்து தனக்கே உரித்தான பாணியில் சிறப்புற கடமையாற்றிய ஒரு சிறந்த அரச அதிபராக தென்பட்டார்.

தனது நிர்வாகத்திறன் ஆளுமைத் திறன் என்பவற்றுக்கு அப்பால் தனது பிரதேசத்தில் ஆதரவற்ற நலிவுற்ற பிள்ளைகள் இருக்கக் கூடாது என்ற சிந்தனை மனதில் உதித்து மகாதேவா ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லம் ஒன்றினை ஆரம்பித்து இன்று வரை நடத்தி வருகின்ற ஒரு பெருமைக்குரியவராவார். அந்த வகையில் அங்குள்ள பிள்ளைகளின் எதிர்கால நலனில் கொண்டிருந்த அக்கறையினையும் என்னால் புரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. மீள் குடியேற்றத்தின் பின்னர் நான் வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் திட்டப் பணிப்பாளராக இருந்த வேளை அவர் வடக்கு மாகாண பொது நிர்வாக செயலக பிரதிப் பிரதம செயலாளராகவும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிராந்திய ஆணையாளராகவும் இருந்தார். அப்போது சிறுவர் இல்லம் தொடர்பாக அவரால் முன்வைக்கப்பட்டிருந்த முன்மொழிவுகளும் அவற்றை நியாயப்படுத் திய விதங்களும் அவற்றை நிறைவேற்றுவதற்காக அயராது முயற்சித்தமையும் எம்மால் மாற்றுக் கருத்துக்கு இடமின்றி பல திட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டிய கடப்பாட்டுக்கு உள்ளானேன். அந்த வகையில் அவருடைய சிறுவர் இல்ல செயற்பாடு தொடர்பாக எனது சிபார்சினை ஏற்று அவுஸ்திரேலியா தமிழ் பொறியியலாளர் அறக்கட்டளை அமைப்பும் இல்லத்திற்காக உதவ முன் வந்தமை குறிப்படத்தக்கது. உள்நாட்டு மற்றும் புலம்பெயர் உறவுகள் உட்பட பல்வேறு தரப்பினரும் அவரால் முன்வைக்கப்பட்ட திட்டங்களை மாற்றுக்கருத்துக்கு இடமின்றி பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு உதவ முன்வந்தமை இன்று வரை அந்த சிறுவர் இல்லம் எந்தக் குறைபாடுகளும் இன்றி சிறப்புற இயங்குவது சான்றாக உள்ளது. இது அவருடைய அர்ப்பணிப்பான சேவைக்கும் மனித நேய சிந்தனைக்கும் கிடைத்த வெற்றிகளாகவே கருதமுடியும்.

கடந்த 2013 காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் கிளிநொச்சி வளாக கட்டட நிர்மாணப்பணிகள் நிறைவுபெறாது இருந்த சந்தர்ப்பத்தில் பொறியியல் பீட கற்கை நெறிகளை கிளிநொச்சியில் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொண்ட போது நான் அதன் இணைப்பாளராகவும் பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளராகவும் இருந்தேன். அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை அணுகி ஆலோசனை கேட்டபோது தனது நிர்வாக, சிறுவர் இல்ல கடமைகளுக்கு அப்பால் பல்கலைக்கழகம் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற அவாவினால் பல்கலைக்கழக ஆய்வுகூட செயற்பாடுகள் மற்றும் விடுதி வசதிகளுக்காக சிறுவர் இல்லத்தின் ஒருபகுதியை ஒதுக்கித்தர முன்வந்தமை எமக்கு பெரும் ஆறுதலாக இருந்தது என்பதனை மறக்க முடியாது. தொடர்ந்தும் பொறியியல் பீடம் கிளிநொச்சியில் தோற்றம்பெற அவரது உதவிகளும் ஆலோசனைகளும் இன்றியமையாதவையாக இருந்தன.

அவரது அர்ப்பணிப்பான சேவைக்கும் கடின உழைப்புக்கும் முன்னால் அனைவரும் ஒருங்கிணைந்து கைகோர்த்து நின்றனர்: நிற்கின்றார்கள் என்பதனை அவரது வாழ்ந்த வாழுகின்ற வாழ்க்கை என்றும் பறைசாற்றி நிற்கும் வேளையில் அவரை மனதார பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

# கிளிநொச்சியில் பல்கலைக்கழகம்

*பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்.*
*சிரேஷ்ட பேராசிரியர்,*
*உயிரிரசாயனத்துறை, மருத்துவபீடம்,*
*யாழ் பல்கலைக்கழகம்.*

மதிப்பிற்குரிய திரு.திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களின் பல்வகையான சேவைகளைப் பாராட்டி எடுக்கப்படும் இவ்விழாவிற்கு எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதனையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். வடமாகாண சபையின் பொது நிருவாக அமைச்சின் செயலாளராகவும் வடமாகாண சபையின் பொது நிருவாக அமைச்சின் பிரதிப் பிரதம செயலாளராகவும் விளங்கிய இவர் கிளிநொச்சி மாவட்டத்தின் மேலதிக அரச அதிபராகவும் கடமையாற்றியவர். இவரது சேவைக் காலத்தில் கிளிநொச்சி நகரம் மிகவும் சிறப்பாக திட்டமிடப்பட்டு இன்றும் வடமாகாணத்தில் ஒரு சிறந்த திட்டமிடப்பட்ட நகரமாக கிளிநொச்சி காணப்படுகின்றது.

இவைதவிர இவரது சமய, சமூகப் பணிகள் எழுத்தில் கூறமுடியாதவை. அவரது கருணை உள்ளத்திற்கும் திட்டமிட்டு செயற்படும் செயற்திறனுக்கும் இன்று சிறந்த முறையில் இயக்கி மகாதேவ ஆச்சிரமம் ஓர் எடுத்துக்காட்டாகும். பல வெளிநாட்டவர்களுடன் தொடர்பு கொண்டு மகாதேவ ஆச்சிரமத்தினை மேம்படுத்தி பல இளம் சிறார்களின் வாழ்கையை வளம்படுத்த உதவுகின்றார். உடைந்து நலிவடைந்த நிலையில் இருந்த மகாதேவ ஆச்சிரமம் இன்று பலராலும் பாராட்டத்தக்க வகையில் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருவது திரு.தி.இராசநாயகம் அவர்களின் பெருமையையும் அயரா உழைப்பையும் எடுத்துக் காட்டுகின்றது.

அவரது சமூகப்பற்றுக்கு ஒரு சிறந்த உதாரணமாக் குறிப்பிட்டு கூறவேண்டிய இன்னுமொரு விடயமானது, 2012 ஆம் ஆண்டு யாழ்பல்கலைக் கழகத்திற்கான பொறியியல் பீடம் அமைப்பதற்கென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் உயர்கல்வி அமைச்சும் வேண்டுதலை மேற கொண்ட வேளை கிளிநொச்சயில் தான் இப்பீடம் அமைய வேண்டும் என பல்கலைக் கழகத்தினர் விரும்பிய போது தனது ஆச்சிரமப் பிள்ளைகளுக்கென அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியில் ஒரு சில பகுதிகளை எமக்கு விட்டுத்தருவதாகவும் எமக்கு வேண்டிய முறையில் விரும்பியவாறு அப்பகுதியினைத்திருத்தி அமைக்கப்பட முடியும் எனவும், ஆச்சிரம நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு எமக்கு உதவ முன்வந்தார். அவருடைய இந்த நடவடிக்கையானது அவர் கிளிநொச்சி மீதும் சமூகத்தின் மீதும் கொண்ட அக்கறையை எடுத்துக் காட்டுகிறது.

இத்தகைய தனக்கென வாழா பிறர்க்கென வாழும் பெருந்தகை நீண்ட காலம் நோய் நொடியற்று தமது சேவையை தொடர இறை அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடி காலத்திலும் நிலைத்தோங்கிய சேவைகள்

*சி.திருவாகரன்*
*செயலாளர்,*
*சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடமாகாணம்.*

திரு.திருநாவுக்கரசு இராசநாயகம் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமையாற்றிய காலப் பகுதியில் அயல் மாவட்டத்தின் மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிபாளராகவும் பின்னர் அரச அதிபராகவும் திரு.இராசநாயகம் அவர்களை நான் அறிவேன்.

அந்தக் காலப் பகுதியில் நிலவிய நிர்வாகச் சூழலுக்கு இயைவாக தனது நிர்வாகத்தை திறம்பட நடாத்தி சென்றவர் திரு.இராசநாயகம் அவர்கள். துருவங்களுக்கிடையில் சமநிலை பேணுதல் சவாலாக விளங்கிய போதும் அவர் அதனை சாமர்த்தியமாக மேற்கொண்டமை அவதானிக்க முடிந்தது. தம்பிமார் இருந்து தலைவர்கள் வரை அனைவரையும் அணைத்தும் செயற்பட்டு மக்கள் பணியாற்றியமை இடர்கால மிகுந்த அக்காலப் பகுதியில் அவரது பிரதேசத்திற்கு மாவட்டத்திற்கும் இதமளிப்பதாக இருந்தது.

பின்னர் மாகாண நிர்வாகத்திலும் புயலெனப் புகுந்த திரு.இராசநாயகம் அவர்கள் தனது பிரசன்னம் என்றும் நினைவில் வைத்திருக்கும்படி பல நடவடிக்கைகளை செய்து முடித்திருந்தார்.

ஆளுநர் மற்றும் அதிகாரிகளுடன் இணங்கிச் செயற்பட்டதன் மூலம் அவரால் நிறைய விடயங்களை நிறைவேற்ற முடிந்தது. தனது வயதுக்கு மீறிய வேகம் அவரது சிறப்பியல்பானது. அரச சேவையில் இருந்து இளைப்பாறிய பின்பும் மக்கள் சேவையைக் கைவிடாதவராக அவர் ஆற்றி வரும் சேவை புண்பட்ட எமது பூமிக்கு அருமருந்தாகும் அற்புதம் தொடர்கிறது.

அவரது பணிமேலும் சிறப்படைந்து சைவத்துக்கும் தமிழிற்கும் எமது தமிழ் மண்ணிற்கும் வளமான எதிர்காலத்தை தரவேண்டும் என வாழ்த்தி நிற்கிறேன்.

# மானிடம் போற்றும் மா பணிகள்

*திருமதி. சுஜீவா சிவதாஸ்,*
*உதவிச் செயலர்,*
*சுகாதார அமைச்சு.*

கிளிநொச்சி மண்ணின் பெருமைக்குரிய மைந்தன் உயர்திரு தி.இராசநாயகம் அவர்களின் சமூக நலப் பணிகளை விதந்துரை செய்யும் வகையிலும் யாழ் விருது வழங்கி மதிப்பளித்தமையிட்டு சாதனை நாயகனை இவரை நானும் பாராட்டி வாழ்துவதில் மிக்க மகிழ்சியடைகின்றேன்.

தனது கம்பீரத் தோற்றத்தாலும், தனித்துவமான பேச்சினாலும் தான் நினைப்பதை முடிப்பதற்கு தன்னாளான முழு முயற்சியையும் எடுப்பவராக தான் செய்யும் கடமையில் மிகுந்த பற்றுறுதியாள னாகவும் காணப்பட்டார்.

வரோதய நகரில் உள்ள நடராஜர் கோயிலில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறும் பூஜையில் இவரைக் காணலாம். சக்தியை விட சிவத்தையே நம்பும் மனிதராகக் காணப்பட்ட இவர் பூநகரி மண்ணின் மைந்தன் என்ற செல்லப் பெயர் கொண்டு அழைக்கக் கூடிய பற்றாளனாகவும் திகழ்ந்தார். ஒரே நேரத்தில் பல பணிகள் ஆற்றி, மக்கள் மத்தியில் உத்தம புருசராக திகழ்ந்த இவரது பன்முகப்பட்ட பணி போற்றத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக மானிடம் போற்றும் மாபணிகளை நிர்கதியாக்கப்பட்ட எம் மக்களுக்கு செய்த நினைவழியாய் பெருமனிதனை நானும் வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்.

# மக்கள் சேவையின் உத்தமன்

*வ. சுதாகரன்,*
*கணக்காளர்,*
*கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்,*
*வட மாகாணம்.*



அப்போது எனக்கு வயது 15, ஓலைக்குடிசையில் கிளிநொச்சி மாவட்ட காரியாலயம் பரபரப்பாக மக்கள் பணியாற்றிக் கொண்டிருந்த அன்றைய நாளில் ஒரு நாள் எனது தாயாரின் கோரிக்கை கடிதத்துடன் அக்கொட்டிலுக் குள் நுழைந்தேன். எனது தந்தையார் கூறியது போன்று ஒரு கம்பீரமான மக்கள் சேவகன் அங்கு வீற்றிருந்தார். அவரிடம் எனது கோரிக்கை கடிதத்தை நீட்டினேன் அடுத்த பத்து நிமிடத்தில் அதற்கான பதிலுடன் சந்தோசமாக வீடு திரும்பினேன். அந்த உதவிக்கரம் நீட்டிய மக்கள் சேவகன் மண்ணின் மைந்தன் வேறுயாருமல்ல. பெருமதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய திரு.தி.இராசநாயகம் ஐயா அவர்கள் தான். சிறுவயதில் என்னை கவர்ந்த அந்த பொதுப் பணியாளனை அவ்வப்போது நான் எண்ணிப்பாத்ததுண்டு.

2008 ஆம் ஆண்டு இலங்கை கணக்காளர் சேவையில் சித்தியடைந்து வடமாகாணத்திற்கு இணைக்கப்பட்டேன். எனது பயிற்சி நிறைவு பெற்று வடமாகாண உள்ளூராட்சி அமைச்சிற்கு கணக்காளராக பணிக்கப்பட்டேன். அங்கு சென்று எனது நியமன கடிதத்தை நீட்டினேன். வேறு யாருமல்ல அங்கே செயலாளராக அதே கம்பீரத்துடன் சற்று வயது முதிந்தவராக வீற்றிருந்தார். என்னை அறிமுகம் செய்து கொண்டேன். மக்கள் பணியே முதன்மையானது என்ற தொனியில் பேசத்தொடங்கினார். சாராம்சம் வேறு ஒன்றுமல்ல, FR, AR என்பதற்கும் அப்பால் மனித நேயமும் மக்கள் பணியுமே முதன்மையானது என்றார். TR தான் முதன்மையானது என்பதை புரிந்து கொண்டு இணைந்து கடமையாற்றினேன். அடுத்த 3 மாத காலத்தில் சுகயீனம் காரணமாக விடுமுறையில் நின்ற போது என்னை பதில் செயலாளராக கடமையாற்றும்படி பணித்தார். ஐயா தன்னோடு கடமையாற்றுபவர்கள் மீது எந்தளவுக்கு நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதற்கு இதற்கு மேல் ஏதும் சொல்வதற்கு இல்லை.

அவரோடு பணியாற்ற கிடைத்த அந்த நாட்கள் உண்மையில் ஒரு உன்னதமான மக்கள் பணிக்குரிய காலமே என்றும் என் நினைவிலிருந்து அகலாத நினைவுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபத்தைந்து வருட அனுபவங்களின் பகிர்வு


***கந்தசாமி முருகவேல்,***
***ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளர்,***
***கிளிநொச்சி.***




1996 ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் இருந்து மக்கள் ஆயிரம் ஆயிரமாக இடம்பெயர்ந்து எமது மாவட்டத்திற்கு வந்தனர். அத்தனை மக்களுக்கும் தங்க இடம்கொடுத்து உணவளித்து இன் முகத்துடன் அவர்களை இம் மாவட்டம் வரவேற்றது. அந்த நேரத்தில் அரசாங்க அதிபராக கடமை புரிந்த ஐயாவின் அர்ப்பணிப்பான சேவையையும் கடின உழைப்பை யும் நாம் நேரில் கண்டோம். நானும் இடம் பெயர்ந்து வந்த உறவுகளும் தேவை நிமித்தம் ஐயா அவர்களிடம் அலுவலகத்திற்கு சென்றோம். அவரு டன் கலந்துரையாடிக் கொண்டிருக்கும் போது குண்டு போடப்பட்ட நிலையி லும் ஐயாவும் நாங்களும் பழைய கச்சேரியிலுள்ள பதுங்கு குழியினுள் ஒன்றாக இருந்ததை மறக்க முடியவில்லை.

புதுக்காடு அழகாபுரி என்ற இடத்தில் புதிதாக பாடசாலையை ஆரம்பிப்பதற்காக ஐயா வருகை தந்திருந்தார். நாமும் சென்றிருந்தோம். அரசாங்க அதிபரின் வாகனத்தை கூட 4,5 பேர் தள்ளித்தான் இயக்க முடியும். அவ்வாறான் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் உயிரைத் துச்சமாக மதித்து அவர் பணிகளைச் செய்ததை நாம் இன்றும் மறக்கவில்லை.

எமது மாவட்டத்தில் கல்விகற்று பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் அங்கு கற்கும்போது அங்கு பொருளாதார நெருக்கடிகளை அந்தக்காலத்தில் எதிர்நோக்கினார்கள். ஐயா அவர்கள் கல்வி நிதியத்தை ஆரம்பித்து அவ்வாறான மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதியை வழங்க மூலகார ணமாக அமைந்தார். இவ் உதவியைப் பெற்ற மாணவர்கள் பலர் இன்று எமது மாவட்டத்தில் கல்வி அதிகாரிகளாக அதிபர்களாக ஆசிரியர்களாக வைத்தியர்களாக, பொறியியலாளர்களாகக் கடமை புரிவதைக் காணக்கூடியதாக உள்ளது.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் முன்பாக உள்ள காணியில் அழகியல் கலாமன்றத்தை நிறுவி பல மாணவச் செல்வங்களின் அழகியற்கல்வி செயற்பாடுகளுக்கு ஐயா பெரிதும் உதவினார். இம்மாவட்டத்தில் தமிழ் இன்னியத்தை உருவாக்கி பாராளுமன்றம் வரை எமது இன்னியக் குழு சென்று தமது திறமைகளை உலகிற்கு வெளிக்காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

மிவும் இளவயதிலே ஐயா அவர்கள் சிவில் நிர்வாகத்துறையில் காலடிபதித்து இம்மாவட்டத்தின் முதற்பிரஜையாக வளர்ந்தார்.

சிறுவர் இல்லக் குழந்தைகளின் அன்பு பாசம், இறைபக்தி என்பன காரணமாக ஐயா அவர்கள் பல தடவைகள் உயிர் ஆபத்தில் இருந்து இறைவனால் மீட்கப்பட்டார்.

ஐயா அவர்கள் நீண்டகாலம் உடல் உள ஆரோக்கியத்துடனும் மகிழ்வுடனும் சிறுவர் இல்லக் குழந்தைகளுடன் வாழ எல்லாம் வல்ல இறவன் அருள் பாலிக்க வேண்டுமென இறைவனை வேண்டி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வின் பின்னும் தொடரும் பணி



*இ பத்மநாதன்,*
*முன்னாள் பிரதம கணக்காளர்,*
*மாவட்டச் செயலகம்- கிளிநொச்சி.*

விருது நாயகனுடன் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இணைந்து பணியாற்றிய காலங்கள் பெருமையும் பேருவகையும் கொள்ள வைக்கிறது.

தன் அறிவுத்திறனாலும் ஆளுமைத்திறனாலும் பல பதவிகளில் அணி சேர்ந்தவர், நேர்மையானவர், எளிமையானவர், துணிச்சல் மிக்கவர், இன்சொல்லர். தான் பெற்ற அதிகாரம் அனைத்தையும் மக்கள் நலனிற்காகப் பயன்படுத்தியவர். இடர் மிகுந்த காலங்களில் இரவு பகல் பாராது தன்னலங்கருதாது அவர் மக்களுக்கு ஆற்றிய பணிகள் வார்த்தைகளில் அடங்காது. எப்போதும் மக்களின் ஏற்றமிகு வாழ்விற்காய் மாண்புறு எண்ணங் களை சிந்தையில் நிறைத்து செயற்படுத்திய செயல்வீரர் மக்கள் பணிகளில் எதிர்கொள்ளும் இடையூறுகளை தனி மனிதனாய் தன் உயிரைத் துச்சமென மதித்து தகர்த்தெறிந்த வெற்றியாளன். இவர் அரச அலுவர்களிற்கான உதாரண புருஷராக மிளிர்பவர்.

அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற போதும் தன்கடன் மக்கள் பணிசெய்வதே என்ற உயரிய உன்னத சிந்தனையுடன் இன்றும் ஏழைச் சிறார்களிற்காய் மகாதேவா ஆச்சிரமத்தை நடாத்துவ துடன் நலிவுற்ற மக்களின் நல்வாழ்விற்கான பணியிலும் இறைபணியிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வாழும் பெருந்தகையாளன். அன்னார் நோய் நொடியின்றி நீடுழி வாழ்ந்து மக்கள் துயர் துடைத்திட எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

# செயற்திறன் மிக்க நிர்வாகி



*திருமதி நளாயினி இன்பராஜ்,*
*செயலாளர்,*
*கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,*
*வடமாகாணம்.*

நான் இலங்கை நிர்வாக சேவையில் காலடி எடுத்து வைத்த போது எனது முதலாவது மேலதிகாரி திரு.இராசநாயகம் ஐயா அவர்களாவர். அவரின் கீழ் பணியாற்றிய காலத்தை வாழ்வில் மறக்க முடியாத ஒன்றாகவே நான் கருதுகிறேன். ஒரு தலைமைத் துவத்திலே என்னென்ன குணவியல் புகள் இருக்க வேண்டுமோ அவை அனைத்தையும் அவரிடத்தில் நான் கற்றுக் கொண்டேன்.

இதற்கும் அப்பால், ஐயாவின் சேவையை அநாதைக் குழந்தைகள் முதல் கைவிடப்பட்ட முதியவர் வரை காண்கிறேன். ஆதரிப்பாரற்ற குழந்தைகளின் வாழ்வில் ஒளியூட்டி நின்றமை யினையும் விசேட தேவையுடையோர்க்கு சிறப்பான சேவை பல செய்துள்ளமையினையும் மற்றும் முதுமை சுமையாகாது மூத்தவருக்கு நல் இல்லம் அமைந்துள்ளமையினையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஐயா நீண்ட காலம் தேக ஆரோக்கியத்தோடு வாழவும் அவர் தம் பணிகள் தொடரவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்புடன் செயற்படும் வழிகாட்டி

*ஜே. எஸ் அருள்ராஜ்.*
*பிரதேச செயலாளர்,*
*பட்டணமும் சூழலும்,*
*திருகோணமலை.*



உயர்திரு திரு.இராசநாயகம் அவர்களின் சமூகநலப் பணிகளைப் பாராட்டி வெளியிடப்படும் சிறப்பு மலரிற்கு அவரின் வழி காட்டலில் பணியாற்றியவர் என்ற வகையில் எனது எண்ணப் பதிவுகள் சிலவற்றை தர விரும்புகிறேன்.

அவருடன் பணியாற்ற பல்வேறு சந்தர்ப்பங்கள் கிடைத்திருந்தாலும் அவர் மாகாண உள்ளுராட்சி கூட்டுறவு கைத்தொழில் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் மற்றும் சமூக சேவை அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய போது நான் சமூகசேவைகள் திணைக்கள பணிப்பாள ராக அவருடன் நேரடியாக பணியாற்ற சந்தர்பம் கிடைத்தது. அவரது சேவை அனுபவ காலத்தை விட குறைந்த வயதிலிருந்து எனக்கு, அவர் ஒரு வழிகாட்டியாகவே திகழ்ந்தார். தனது அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து அவற்றினூடாக நாம் செயற்பட்ட வேண்டிய விதங்களை கற்பித்தார்.

2009 காலத்தில் இடம் பெற்ற மாபெரும் மக்கள் இடம்பெயர்வின் போது அவரின் துணிச்சலான தேவைக்கேற்ற சந்தர்பத்திற்கேற்ற உடனடி முடிவெடுக்கும் திறன் எமக்கெல்லாம் எமது செயற்பாடுகளை எவ்வித தடங்கலுமின்றி முன்னெடுக்க உதவியது. அவரின் துணிச்சலான செயற்பாடுகள் எம்மையும் அச்சமின்றி செயற்பட வழிகாட்டின. செயற்பாடுகளில் எமக்கு பிரச்சினை ஏற்படும் போதெல்லாம் எம் முன்னால் அவற்றை எதிர்கொண்டு எமக்கு உரமூட்டிய விதம் மறக்க முடியாதது. உண்மையில் மக்கள் நோக்கில் முடிவெடுக்கும் அவரை போன்ற உயர் அதிகாரி எமக்கு இல்லாதிருந்திருந்தால் அக்காலப் பகுதியில் மக்களின் பல்வேறு தேவைகளை எம்மால் நிறைவேற்ற முடியாமல் போயிருக்கும்.

பொது மக்களின் நன்மை கருதி அவசிய அவசர தேவைகளில் நன் நோக்குடன் செயற்படும் போது அலுவலக நடைமுறைகளைப் பின்பற்றாமை தொடர்பாக ஏற்படக்கூடிய பின்விளைவுகளை எதிர்கொண்டு எமது நியாயமான காரணங்களினூடாக சகலரையும் ஏற்க வைக்க முடியும் என்பதனை செயற்பாடு ரீதியில் எம் மனதில் பதிய வைத்தவர்.அலுவலக நடைமுறைகளைக் காரணம் காட்டி தேவையான விடயங்களை பிற்போட்டும் நிறவேற்றாமலும் இருப்போர் மத்தியில் செயற்பட வேண்டியவற்றை அந்தந்த வேளையில் நிறைவேற்றி முடிக்கும் செயல் வீரராக அவர் திகழ்தார்.

அவர் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் நாட்டுப் பிரச்சினைகளால் இடம் பெயர்ந்து வந்த பல அரச உத்தியோகத்தர்கள் தமது தொழிலை இழந்துவிடாமல் இருக்க விவேக மான துணிச்சலான பல செயற்பாடுகள் மேற்கொண்டு அவர்களின் தொழில்களைப் பாதுகாத்தார். இவ்விடயத்தை அவர்கள் இன்றுவரை நினைவுகூறுகின்றனர்.

அரச பணிகளிலிருந்து ஓய்வுபெற்றாலும் அவரது உயிர்புடனான சமூகநலப் பணிகள் தொடர இறைவனைப் பிராத்திகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகம் சார்ந்த பொதுநலச் செயற்பாட்டாளர்

*கோ.நாகேஸ்வரன்,*
*பிரதேச செயலர்,*
*பிரதேச செயலகம்,*
*கரைச்சி,*



ஒரு சமூகத்தின் செழுமைக்கும் சிறப்பான இயங்கியலுக்கும் சமூக சேவையாளர்களின் பங்களிப்பும் முக்கியமாகின்றது. இன்றைய நவநாகரீக உலகம் தன்னலத்தில் மட்டுமே அதிக அக்கறை கொண்டு இயங்குகிறது. இதனால்தான் இன்று பல பிரச்சினைகளையும் பல பிறழ்வுகளையும் ஒவ்வொரு சமூகமும் கண்டுகொள்கிறது. சமூகம் சார்ந்த பொதுப் புத்தியில் இயங்குபவர் களது எண்ணிக்கையின் வீழ்ச்சியே சமூகச் சீரழிவுக்கு காரணமாக அமைகின்றது எனலாம்.

சமூகம் சார்ந்த பொதுநலச் செயற்பாடுகளை முன்னெடுக்க வருபவர்களது வருகை குறைவாக உள்ள இந்தச் சூழலில், ஏற்கனவே சமூகச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருபவர்களை உயர்வு படுத்தி அவர்களது கரங்களை வலுப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இத்தகைய சமூகம் சார் செயற்பாட்டாளர்களை கௌரவப்படுத்தி அவர்களுக்குரிய அங்கீகாரத்தினை வழங்கும் போதுதான் இன்னும் இன்னும் புதிய புதிய சமூகச் செயற்பாட்டாளர்களின் வரவு அதிகரிக்கும். அதே வேளை ஏற்கனவே இயங்கிக் கொண்டிருப்பவர்கள் இன்னும் கூடுதலாக தமது பங்களிப்பினைச் செய்வார்கள்.

இத்தகைய உயரிய சமூகச் செயற்பாட்டாளர்களில் ஒருவராக விளங்குபவர்தான் கிளிநொச்சி மண் பெற்றெடுத்த உயர்.திரு.தி.இராசநாயகம் அவர்கள். கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக இருந்து ஓய்வு பெற்ற பின்னர் தனது சமூகச் செயற்பாட்டினை முழுநேரமாக ஆற்றி வருகின்றார். அவர் பதவியில் இருக்கும் காலத்தில் இருந்தே சமூகச் செயற்பாடுகளில் முன்னின்று உழைத்ததை நான் நேரில் கண்டிருக்கின்றேன்.

யாழ்ப்பாணம் இடம்பெயர்ந்து கிளிநொச்சிக்கு வந்தவேளை யாழ்ப்பாணத்தில் இருந்து இங்கு வந்த மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பெரிதும் உறுதுணையாக இருந்திருக்கிறார். இங்கு வந்த கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குவதற்கு இடம் ஒதுக்கி அவைகள் இயங்கி மக்களுக்கு சேவை கள் ஆற்றுவதற்கு பல உதவிகள் செய்திருக்கின்றார். அத்தகைய இடர்கால உன்னத சேவையினை கௌரவிக்கும் முகமாகவும்தான் யாழ்ப்பாண மாநகரசபை அவருக்கு "யாழ் விருது" வழங்கி கௌரவித்திருக்கின்றது.

அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் தற்துணிவோடு பல பணிகளைச் செய்தது மட்டு மல்லாது பணியில் இருந்து ஓய்வு பெற்றபின்னர் முழுநேர சமூகப் பணியாளனாக செயற்பட்டு வருவது அவரது உன்னத பண்பினை எடுத்துக்காட்டுகின்றது. தற்போதும் இயலாத நிலையிலும் தனது பல்வேறுபட்ட சமூக சேவைகளை ஆற்றிவருகின்றார். மகாதேவா சிறுவர் இல்லம், வன்னேரிக் குளம் முதியோர் இல்லம், உருத்திரபுரம் சிவன் கோவில், உருத்திரபுரம் காந்தி இல்லம், யோகர் சுவாமிகள் திருவடி நிலையம் என அவருடைய பணிகள் விரிவடைந்து செல்கின்றது.

அவரது இத்தகைய உயர்ந்த பணியினை கௌரவிக்கும் முகமாக அவரது மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன். கடவுள் அருளால் நீண்டகாலம் நோய் நொடி இன்றி இன்னும் மகத்தான பணிகளை இந்த சமூகத்துக்கு வழங்க வேண்டும். வாழ்க சமூகப்பணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு சேவையாற்றிய மகத்துவம்

***திருமதி. ப. ஜெயராணி,***
***பிரதேச செயலாளர்,***
***பச்சிளைப்பள்ளி.***



நான் கடைமைக்காக என்னை இணைத்துக் கொண்ட அந்த நாட்களில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக அலங்கரித்து கொண்டிருந்ததோடு அல்லாமல் நல்ல வழிகாட்டியாக விளங்கியதோடு சிறந்த தலைமைத்துவப் பண்புகளோடு அரச சேவையிலும் மகத்தான சேவைகளை மக்களுக்கு வழுங்கலாம் என்பதற்கு முன்னுதாரணமாக திகழ்ந்துள்ளார்.

தலைவன் என்பவன் பின்பற்றுபவர்களைத் தன்னகத்தேகொண்டு விளங்கவேண்டும் எனக் கூறப்படுகின்றது. அந்த வகையில் இவரை நான் மட்டுமல்லாது இவரின் கீழ் பணியாற்றிய அனைத்து அலுவர்களும் இன்று வரை மறக்காமலும் இவரைப் பின்பற்றி பொது மக்களுக்கு வினைத்திறன் மிக்க சேவையினை அர்ப்பணிப்போடு வழங்குவதனூடாக திருப்தியுறுவதையும் நான் இப்பொழுதும் காணக்கூடியதாக உள்ளது. சிறந்த தலைவனுக்குரிய அனைத்துப் பண்புகளையும் தன்னகத்தே கொண்டு தலைமைத்துவத்திற்கு இலக்கணமானவர் திரு.தி.இராசநாயகம் என்றால் அது மிகையாகாது.

சொல்லொணாத் துயர்களை அனுபவித்து வந்த மக்களுக்கு இவர் ஆற்றிய பணிகள் சொல்லில் அடங்காதவை. இந்த காலம் போல் அந்த நாட்களில் கைபேசியும் இல்லை. கணனியும் இல்லை. எந்தவொரு சேவையினை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் மக்கள் நேரத்தினை செலவழித்து தமது அன்றாடப் பணிகளை விடுத்தே அலுவலகங்களுக்கு வருகை தருதல் வேண்டும். அவ்வாறாக வருகை தரும் பொழுது அவர்கள் வந்த விடயம் நிறைவுறாதுவிடின் அவர்கள் எவவாறு வேதனையடைவர் என்பதனை உணர்ந்து திரு.தி.இராசநாயகம் அவர்கள் மக்கள் தமது சேவை நிறைவுறக் கூடிய வகையில் தமது நிர்வாகத்தினை திறம்பட ஆற்றி அரச சேவைக்கு பெருமை சேர்த்தவர். இதனால் அவருடன் பணியாற்றிய அலுவர்கள் கூட பல அசௌகரியங்களுக்கு உட்பட்ட சம்பவங்களுக்கு இவரது ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்துள்ளது.

அத்தோடு அந்தக் காலத்தில் தொடரணி மூலமே மக்களுக்கு உணவு கிடைக்கப்பெற்றன. இந்தக்கடைமையில் எதுவித இடையூறும் ஏற்படா வண்ணம் அலுவர்களை நெறிப்படுத்தி ஒழுங்கமைப்புக்களை மேற்கொண்ட பெருமையும் இவரையே சாரும். இது மட்டுமல்லாது திணைக்களங்களுக்கு கிடைக்கப்பெறும் நிதி ஒதுக்கீடுகளை மேலும் மேலும் மக்களுக்காக அரசிடம் கேட்டுவாங்கி வரும் தனித்திறமை இவருக்கே உரியது.

மக்களுக்கான சேவைகளை அவர்களது காலடிக்குக் கொண்டு செல்லும் நடமாடும் சேவைகளை ஆரமபித்து வைத்த நடமாடும் சேவையின் ஆரம்பகர்த்தாவும் இவரே ஆவார். சுனாமி ஏற்பட்ட வேளையிலும் அவரது பணி சொல்லில் மாளாது எங்கெல்லம் உதவிபெற முடியுமோ அங்கெல்லாம் மக்களுக்காக உதவிகேட்டு உதவுவதற்கு என்று இவருக்கு தனியாக மனம் இருந்தது எனலாம்.

அலுவலகங்களில் எதுவித வசதிகளுமற்ற நிலையில் மக்களுக்கு நிறைவான சேவையை வழங்குதல் என்பது இலகுவான காரியம் அல்ல. அந்த நாள்களில் மாவட்ட செயலகத்தில் உள்ள கிளைகளில் புனர் வாழ்வுக் கிளைக்கு ஒரு தனிச்சிறப்பு இருந்தது என்றால் அது மறுப்பதற்கு இல்லை ஏனென்றால் நிவாரண விநியோகம் எரிபொருள் விநியோகம், நட்ட ஈட்டுக்கொடுப்பனவுகள், கடும் பாதிப்புற்றோர் நிவாரணம், புனரமைப்பு வேலைகள் என்று நேரடியாக மக்களோடு தொடர்புபட்ட அநேக கடமைகள் இக்கிளைக்குரியதாகும். இவரது இக்காலத்தில் இங்கு நான் திட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றியிருந்தேன். எனது முதல் நியமனம் இவ்வாறான கடின உழைப்புக்கும் அர்ப்பணிப்பான சேவைக்கும் பெயர் பெற்று விளங்கிய திருவாளர் அவர்களிடம் ஆரம்பித்ததை என்னால் இன்று வரை மறக்கமுடியாததொன்றாகும். ஏனென்றால் அன்று அவ்வளவு வேலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளுக்களுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கப் பழகியதாலோ என்னவோ இன்றும் எமக்கு இவ்வாறான சந்தர்ப்பங்களில் கைகொடுப்பதாக உள்ளது என்பதனை இந்த நேரத்தில் சொல்லித் தான் ஆகவேண்டும்.

மக்களுக்கான பிறப்பு, இறப்பு விவாகப் பத்திரங்கள் அந்தக் காலங்களில் ஒவ்வொரு பிரதியும் ஒவ்வொன்றாக எழுதிக் கையெழுத்துப் பிரதியாகவே வழங்கப்பட்டு வந்தன. இவை ஆளணிப் பற்றாக் குறை காரணமாக மாவட்டப் பதிவகங்களில் அதிகமாகத் தேங்கிக் கிடந்தன. இவற்றினைத் தனியே மாவட்டப் பதிவாளர் கிளை அலுவலர்களாலேயே செய்து முடிக்க முடியாத நிழலையும் காணப்பட்டது. அவ்வேளையில் முழுமாவட்டச் செயலக அலுவலர்களையும் குழுவாக ஈடுபடுத்தியதன் மூலம் அவ்வளவு தேக்க நிலையிலிருந்த விண்ணப்பத்திற்குரிய ஆவணங்களை வழங்குவதற்கு வழிவகுத்து சாதனை புரிந்தமை இன்றும் பசுமையாய் என் மனக் கண்ணில் நிழலாடுகின்றது.

இவர் சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டு செய்தவர்களின் வரிசையில் இடம்பெற வேண்டிய வராகின்றார். கலைகள் கலாசாரங்களைப் பேணுதல், மொழியினை வளர்த்தல் ஆகியவற்றிலும் இவரது பணிகள் இன்றியமையாதவை. எமது பச்சிளைப்பள்ளி பிரதேச செயலக 2015 ஆம் ஆண்டுக் குரிய பிரதேச கலாசார விழாவிற்கு பிரதம விருந்தினராக இவரை அழைத்து கௌரவப்படுத்தியமை யையிட்டு நான் நிறைவுறுகின்றேன்.

மக்கள் மக்கள் என்று மக்களுக்கு மட்டும்தான் இவர் சேவையாற்றினார் எனில் தமக்கு கீழ் பணிபுரியும் அலுவலர்களையும் இவர் விட்டு வைக்கவில்லை. அதாவது அலுவலர்களுக்கு அவ்வப் போது தன்னால் முடிந்த உதவிகளையும் பதவி உயர்வுகளையும் நிரந்தர நியமனங்களையும் ஏற்படுத்தி வந்தமையும் இத்தருணம் நான் நினைவுபடுத்தியே ஆகவேண்டும்.

# மக்கள் சேவைக்கு மகுடம் சூட்டியவர்

*செல்வராஜா ரமேஷ்,*
M.A (Econ) Hons, M.A(Dev) Hons,
*உள்ளூராட்சி உதவியாளர்,*
*வலிகாமம் மேற்கு பிரதேச சபை.*



சேவை செய்ய வேண்டும் என்ற உயர்தர சிந்தனை - நேரிய உள்ளம் அனைவரையும் அன்புடன் வரவேற்கும் பெரியார் என்றால் அது எங்கள் பேரன்புக்குரிய திருநாவுக்கரசு இராசநாயகம் தான்.

வடக்கு மாகாணத்தில் மாகாண பொது நிர்வாக செயலகத்தின் ஊடாக வருடாந்தம் 400 கும் மேற்பட்ட கடிதத் தொடர்பாடல்களை உரிய முறையில் மேற்கொண்டு அரசாங்க சேவையில் மிகப் பெரிய சாதனைகளை மேற் கொண்டதற்காக வட மாகாணத்தின் முன்னாள் ஆளுனர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அவர்க ளால் மெய்ச்சுரை வழங்கி பாராட்டிய நிகழ்வு வடக்கில் நிகழ்ந்தது என்றால் திரு.இராசநாயகம் அவர்களுக்கே ஆகும்.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் 1996 காலப் பகுதியில் நிலவிய நெருக்கடியான சூழலில் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரிகள் அரச அதிபராக கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் பணியாற்ற முன்வராத கால கட்டத்தில் திட்டமிடல் சேவையை சேர்ந்த (SLPS-1) திரு.தி.இராசநாயகம் முழுமனதோடு அப்பதவியைப் பொறுப்பேற்று துன்ப - துயரங்களின் மத்தியில் மேற்படி சேவையை எவ்வித களங்கமில்லாது நேர் சிந்தனையுடன் அப்பணியை நிறைவு செய்தார்.

எம்.எஸ்சி பட்டத்தை (M.Sc) பெற்ற திரு.தி.இராசநாயகம் அரச சேவையுடன் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தை போக்கவில்லை. பல சமூகமட்ட நிறுவனங்களின் தலைவராக நிறைவேற்றுப் பணிப்பாள ராகவும் இருந்து சேவை செய்த பெரு உள்ளமாக எலலோராலும் இனம்காணப்பட்டார்.

இதனை விட 1996 இல் திரு.தி.இராசநாயகம் மேலதிக அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் மூன்று மாதங்கள் உணவு லொறிகள் வவுனியாவில் இரந்து வரவில்லை.

அக்காலப்பகுதியில் மக்களுக்கு கொண்டுவர வேண்டிய 25 லொறிகளை வவுனியாவில் இருந்து கிளிநொச்சி படைத்தரப்பு ஊடாக மக்களுக்கு உணவழித்து பட்டினியில் இருந்து காத்த மகா வீரனாக அப்போதைய மக்களால் விமர்சிக்கப்பட்டார்.

இதனை விட இன்றைய கிளிநொச்சி அறிவியல் நகரம் அன்றைய காலத்தில் அரசாங்க அதிபராக இருந்த இராசநாயகம் அவர்களாலேயே நகரத்திட்டமிடலின் கீழ் நகரமயமாக்கம் செய்ததுடன் இன்றைய உயர் கல்வி நிறுவனங்கள் பல்கலைக்கழகங்கள் வளர்ச்சி - அபிவிருத்திக்கு முத்திரை பதித்துள்ளன என்றால் அது திரு.தி.இராசநாயகம் அவர்களையே சேரும்.

எனவே அவரது சேவை தொடர்ந்திடவும் - நோய்வாய்பட்டுள்ள நிலையிலும் மக்களையும் சிறார்களையும் ஏழைகளையும் கைவிடப்பட்டவர்களையும் நினைத்து அவர்களக்காக என்னென்ன உதவிகளை நான் வாழும் காலப்பகுதியில் செய்திடலாம் என்ற நினைக்கின்ற மகானை நாம் வாழ்திடுவோம். வணாங்கிடுவோம்.

# தான் பயணித்த தளங்களினூடாக சமூகத்தை நேசித்த சேவையாளன்

*எந்திரி.ந.சுதாகரன்,*
*பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்,*
*கிளிநொச்சி பிராந்தியம்.*



காலத்தின் தேவையறிந்து காத்திரமான பணியாற்றிய சமூகப் பற்றாளனுக்கு எடுக்கப்படும் விழாவிற்கும் அவ்விழாவில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு கிடைத்த வாய்ப்பினை பெரும் பாக்கியமாககருதி மகிழ்கிறேன் விழா சிறப்புற மனதார வாழ்தி வணங்குகின்றேன்.

அரச சமூக மற்றும் சமயப் பணிகளை அர்பணிப்போடு ஆற்றி மக்கள் மனங்களில் நிலைத்தி ருக்கும் உயர்திரு.தி.இராசநாயகம் ஐயா அவர்களுக்கு யாழ்ப்பாண மாநகர சபின் உயரிய விரு தான "யாழ் விருது" வழங்கப்பட்டமை அறிந்து மகிழ்ச்சி அடந்தவர்களில் நானும் ஒருவன் ஏனெனில் பொருத்தமானவர்களுக்கு உரிய காலப்பகுதியில் உரிய கௌரவம் வழங்கப்பட வேண்டும் என்பதும் அவ்வாறன கௌரவங்கள் வளர்ந்து வரும் தலைமுறைக்கு முன்மாதிரியான வழிகாட்டியாக அமையும் என்பதிலும் அசையாத நம்பிக்கை எனக்கு உண்டு. அந்த வகையில் ஐயா அவர்களுக்கு வழங்கப்படும் யாழ் விருதின் மூலம் யாழ்ப்பாண மாநகர சபையும் யாழ் விருதும் பெருமை கொள்ளும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

கிளிநொச்சிப் பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பதவியை நான் 2007 ஆண்டின் இறுதிப் பகுதியில் ஏற்றுக்கொண்டதில் இருந்து ஐயா அவர்களுடனான உறவின் அவரின் சேவைச் செயற்பாடுகளுடனான எனது பயணமும் ஆரம்பிக்க தொடங்கியது. அவரது எண்ணத்தில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையும், செயலில் இருந்த மக்கள் நலன்நோக்கிய சிந்தனைப் போக்கும் அவரோடான உறவுப் பிணைப்பின் மூலம் அருகிலிருந்து அறியக்கூடியதாய் இருந்தது. அந்த பலம் தான் அவரால் முன்னெடுக்கப்படும் காரியங்கள் அனைத்தையும் வெற்றிகொள்ள வைக்கிறது என்பதனையும் என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

அரச சேவையில் ஐயா அவர்கள் வகித்த பதவிகளும் அதனூடாக அவர் தன் மக்களுக்கு ஆற்றிய பணிகளும் சொல்லில் அடங்காதவை. மத்திய மற்றும் மாகாண அரசுகளின் உயர் பதவிகளில் இருந்த போதெல்லாம் எளிமையும் அன்பும் மிக்கவராக சாதாரண மக்களது நிலைக்கு தன்னை மாற்றி அவர்களது பிரச்சினைகளை தன்னுடைய பிரச்சினை போல அணுகி தீர்வு பெற்றுக் கொடுக்கும் அவரது திறன் என்பது நல்ல அரச அதிகாரிக்கான முன்மாதிரி என்பதனை மக்கள் நன்கறிவர். அவர் அரசபணியில் இருந்த சமகாலத்தில் சக அரச பணியாளனாக நான் இருந்தமையை எண்ணி இன்றும் பெருமை கொள்கிறேன்.

ஐயா அவர்கள் அரசசேவையோடு மட்டும் தன்னை வரையுறுத்துக் கொள்ளாது, சமூகத்தின் தேவையறிந்து தன்னாலான சேவைகளை சமூக மற்றும் ஆன்மீகத் துறைகளினூடாக வழங்கிய துடன் எம்மை போன்றவர்களை அப்பணி நோக்கி அழைத்துச் சென்று அதன் மேலான ஈர்ப்பினையும் ஈடுபாட்டினை ஏற்படுத்தி எமது முயற்சிகள் எல்லாவற்றுக்கும் கரம்கொடுத்து தூக்கி நிறுத்துப வராக இன்றுவரை இருந்து வருவதை பெருமையாகவும் பலமாகவும் கருதுகின்றேன்.

மகாதேவா ஆச்சிரமத்திற்கு சொந்தமான எமது ஆளுகைக்குட்பட்ட இரணைமடுக் குளத்தின் கீழான கமம் மற்றும் குடமுறுட்டி குளத்தின் கீழ் நீர்பாசனம் வழங்க உத்தேசிக்கப்பட்ட "தியாகம்" கமங்களது விரிவாக்கங்கள் தொடர்பாக திணைக்கள ரீதியாக எம்மோடு தொடர்பு கொள்ளும் போதெல்லாம் எமது மாகாணம் எமது மாவட்டம் எமது மக்கள் என்ற உயரிய எண்ணத்தினை இச் சந்தர்ப்பத்தில் எண்ணிப்பார்க்கின்றேன்.

அறத்தின்பால் சிந்தித்து அதன் வழி தானும் பயணித்து மற்றவர்களையும் பயணிக்க வைக்கும் உயர்ந்த சேவையாளனுக்கு உன்னதமான விருது கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு அவரது பணி அகிலமெல்லாம் சிறக்க எல்லாம் வல்ல இறையருள் இன்று போல் என்றும் கைகூட வேண்டும் என்று பிராத்திக்கிறேன். ஐயாவை வாழ்த்துவதற்கு என் வயதும் தகுதியும் போதுமோ என்று ஐயத்தினால் வணங்கி மகிழ்வதோடு இம்மலரில் என்னுடைய வாழ்த்துப் பதிவு இடம்பெறுவதற்கு வாய்ப்பளித்த விழாக் குழுவிகருக்கு மீண்டும் எனது நன்றிகளை உரித்தாக்கி நிறைவு செய்கின்றேன்.

# கர்மவீரன் உயர் திரு.இராசநாயகம்

***இ. சிவசுப்பரமணியன்,***
***ஓய்வுநிலை கட்டிடத்திணைக்கள நிறைவேற்று பொறியியலாளர்,***
***கிளிநொச்சி.***

யுத்த மேகங்கள் சூழ்ந்த வேளையிலும் தன் உயிரைத் துச்சமென மதித்து மக்களுக்கு ஆற்றிய சேவை மக்கள் மனங்களில் இவனுக்கென ஒரு தனியிடத்தை கொடுத்தது எனலாம். மக்கள் நெஞ்சங்களில் வஞ்சமாக குடிபுகுந்த ஒரு சேவையாளனாக இவரைக் காண முடியும். அல்லலுற்ற மக்களுக்கு ஆபத்தாந்தவராக விளங்கிய இவர் 5 லட்சம் மக்கள் குடியேற அடிப்படை வசதிகளைப் பெற்று வாழ வழிகாட்டியவர். இவரது தனித்துவமும் மொழிப்புலமையுமே பல்லாயிரம் மக்கள் வீட்டுத் திட்டங்களைப் பெற காரணமாயிற்று எனலாம்.

வன்னி மண்ணை வளம் கொளிக்கும் ஓர் புண்ணிய பூமியாக்கிய பெருமை இவருக்குரியதே கல்வி கலாச்சாரம் பண்பாடு சமூகம் சமயம் கலை பொருளாதாரம் எனப் பல்துறைகளிலும் வன்னி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் பெருவளர்ச்சி கண்டிட வித்திட்டவர் அவரேதான். தன்னலமற்ற சேவை நோக்கம் இறையருள் அரசியற்புலம் இவரை உயர் நிலைக்க இட்டுச் சென்றது.

கூட்டுறவே நாட்டுறவு என்பதை உணர்ந்த இவர் பல்வேறு கூட்டுறவு சங்கங்கள் எழுச்சி பெற தோன்றாத் துணையாக விளங்கினார் வன்னிப் பிரதேசமெங்கும் அபிவிருத்தி கண்டிட தன் அர்ப்பணிப்பான சேவையை வழங்கிய ஓர் உன்னத சேவையாளனுக்கு அகவை எண்பது என்பது உடலுக்கே அன்றி சேவைக்கல்ல. அவர் சேவையால் இளைஞனே. இதற்கு சிகரம் வைத்தாற் போல் இன்று வரை மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லப் பணியை நோக்க முடிகிறது. இன்று ஆதரவற்ற சிறார்களுக்கு ஒரு தந்தையாக இருந்து அறிவுக்கண்ணை திறக்கும் பணியை இன்று வரை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சிந்தனை சொல் செயல் மூன்றினாலும் அப்பழுக்கற்ற ஒரு கர்ம வீரன் பணி தொடரவும் நீண்ட ஆயுள் ஆரோக்கியம் கிட்டவும் எல்லாம் வல்ல இறையாசி வேண்டி வாழ்துகிறேன். வாழ்க வளமுடன்.

## நான் கண்ட அரச அதிபர்களில்

*சு. நவகுமார்,*
*நிர்வாக உத்தியோகத்தர்,*
*மாவட்ட செயலகம்,*
*கிளிநொச்சி.*

1990 களில் இருந்து மாவட்டச் செயலகத்தில் நான் கடமையாற்றிய போது மதிப்புக்குரிய திரு.இராசநாயகம் ஐயா அவர்களுடன் கடமையாற்றிய அனுபவம் வேறானதொன்றாகும்.

தன்னலம் கருதாது மாவட்ட நலன் கருதி இவர் மாவட்டத்திற்கு ஆற்றிய பங்கு அளவிட முடியாது. இம் மாவட்ட மக்களிற்கான வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதில் எடுத்த முயற்சி சொல்ல முடியாதது. சுனாமியின் போது இம்மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களிற்கு பெற்றுக் கொடுத்த உதவிகள் கணக்கிட முடியாதது. அலுவலகத் தேவைக்கான வாகனங்கள், மாவட்ட தேவைகளிற் கான நிதி ஒதுக்கீடுகள் என்பவற்றைப் பெற்றுக் கொடுத்தமை எண்ணிப்பார்க்க முடியாதவை. இவரது காலத்தில் நடைபெற்ற இடம்பெயர் சேவைகள் மறக்க முடியாதவை. இவரது இவற்றையெல் லாம்விட இவருடன் கடமையாற்றிய அனுபவங்கள் எங்களை இன்னும் மக்களிற்கான சேவையாற்றுவதில் முதன்மைப்படுத்தி நிற்கின்றன.

இவரும் இவரது குடும்பத்தாரும் நல்வாழ்வு பெற இறைவனை வேண்டுகின்றேன்.

## மண்ணின் பெருமைக்குரிய மைந்தன்

*கா. உதயராஜா,*
*பிரதேச செயலாளர், வவுனியா.*

கிளிநொச்சி மண்ணின் பெருமைக்குரிய மைந்தன் உயர்.திரு.தி.இராசநாயகம் அவர்களின் சமூக நலப் பணிகளை விதந்துரை செய்யும் வகையிலும் யாழ் விருது வழங்கி மதிப்பளித்தமையிட்டு சாதனை நாயகனை நானும் பாராட்டி வாழ்துவதில் மிக்க மகிழ்சியடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கம்பீரத் தோற்றத்தாலும், தனித்துவமான பேச்சினாலும் தான் நினைப்பதை முடிப்பதற்கு தன்னாலான முழு முயற்சியையும் எடுப்பவராக தான் செய்யும் கடமையில் மிகுந்த பற்றுறுதியாளனாகவும் காணப்பட்டார்.

வரோதய நகரில் உள்ள நடராஜர் கோயிலில் ஒவ்வொரு வெள்ளிக்கிளமையும் நடைபெறும் பூஜையில் இவரைக் காணலாம். சக்தியை விட சிவத்தையே நம்பும் மனிதராகக் காணப்பட்ட இவர் பூநகரி மண்ணின் மைந்தன் என்ற செல்லப் பெயர் கொண்டு அழைக்கக் கூடிய பற்றாளனாகவும் திகழ்ந்தார்.

ஒரே நேரத்தில் பல பணிகள் ஆற்றி மக்கள் மத்தியில் உத்தம புருசராக திகழ்ந்த இவரது பன்முகப்பட்ட பணி போற்றத்தக்கதாகும். இவ்வாறாக மானிடம் போற்றும் மாபணிகளை நிர்கதியாக்கப்பட்ட எம் மக்களுக்கு செய்த நினைவழியாய் பெருமனிதனை நானும் வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்.

# இடரின் போதும் இடம்பெயர்ந்தோரை ஆதரித்து விருந்தோம்பும் பண்பு

**Mr.K.Pakeerathan,**
**Managing Directer,**
**K.P.K Building Constructions Works,**
**Kilinochchi.**



கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபரும் ஓய்வுநிலை வடக்கு மாகாண சபையின் பொது நிர்வாக செயலகத்தின் பிரதிப் பிரதம செயலாளரும் மகாதேவா சைவச் சிறுவர் இல்லத்தின் தலைவருமான உயர். திரு. இராசநாயகம் ஐயா அவர்கள் யாழ் மாநகர சபையின் உயரிய விருதான "யாழ் விருது" பெற்றமைக்கு இடம் பெறுகின்ற கௌரவிப்பில் வாழ்த்தி செய்தி வழங்குவதில் பெருமை கொள்கிறேன்.

முகவரி தெரியா கிளிநொச்சி மாவட்டத்தை பலருக்கும் தெரிய வைத்தவர்களுள் இராசநாயகம் ஐயா அவர்களும் குறிப்பிடத்தக்க ஒருவர். இவரை 1996 ஆம் ஆண்டிலிருந்து நான் அறிவேன். 1996 ஆம் ஆண்டு சத்ஜெய இராணுவ நடவடிக்கையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தை ஸ்கந்தபுரத்திற்கு இடமாற்றியபோது, மாவட்ட வைத்திய அதிகாரி Dr.R.விக்கினேஸ்வரன் அவர்களுடன் நான் இணைந்து உதவியாளராகப் பணியாற்றிய காலத்தில் இந்த நல்ல மனிதனை முதன்முதலாகச் சந்தித்தேன். அப்போது இவரிடம் உள்ள நல்லபண்புகளும் ஆளுமைகளும் மற்றவர்களால் பாராட்டுப் பெற்றன.

சத்ஜெய இராணுவ நடவடிக்கையினால் யாழிலிருந்து கிளிநொச்சி ஊடாக இடம் பெயர்ந்து வந்த 5 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களை வந்தாரை வரவேற்கும் வன்னி மாநகரத்தின் மைந்தனாக சமைத்த உணவு வழங்கி அவர்களை உரிய இடத்திற்கு அனுப்பிய செயற்பாடு மக்களால் இன்றும் நினைவு கூரப்படுவதுண்டு. அக்காலத்தில் என்னையும் இம் மாவட்டத்திலுள்ளவர்களையும் அவரவர் துறைகளில் வளர்வதற்கு பெரிதும் உதவினார். பின் மீண்டும் 2002 ஆம் ஆண்டு நாம் கிளிநொச்சி வந்து மீள்குடியேறினோம். அக்காலத்தில் மக்களையும் திணைக்களங்களையும் இடம் மாற்றுகின்ற பணியில் தானே முன்னின்று செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகர்கள் மீண்டும் தம்மை வளர்த்துக்கொள்ள சந்தர்பங்களை ஏற்படுத்திக்கொடுத்தார். 2003 ஆம் ஆண்டு ஜனவரி 13 ஆம் திகதி கட்டட நிர்மாணத்துறையில் இந்த மாவட்டத்திலுள்ள சிலரை இனம் கண்டு அவர்களை "ICTAD" அமைப்பில் பதிவுசெய்து அரச அங்கீகாரம் பெற்ற கட்டட நிர்மாணதாரர்களாக்கி எம்மை முன்னேற்றுவதற்கான பல்வேறுபட்ட பணிகளை மேற் கொண்டார் என்பது எம் மனங்களில் என்றும் நன்றியுடன் நினைவில் கொள்கிறோம்.

அக்காலத்தில் எமது வேலைத்தளங்களை வாரா வாராம் பார்வையிட்டு பல ஆலோசனை களையும் வழங்கி பலருக்கும் வேலைவாய்பை வழங்கக்கூடிய நிறுவனமாக எமது நிறுவனம் வளர்வதற்கு கட்டடத்துறையில் முன்நிற்பதற்கும் ஒருபெரும் தூணாக ஐயா இருக்கின்றார் என்பதை பெருமையுடன் ஏற்றுக்கொள்கிறேன்.

கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றில் உயர்.திரு. இராசநாயகம் ஐயா அவர்கள் என்றும் மறக்க முடியாத நினைவில் கொள்ள வேண்டிய ஒரு நாமம். துவண்டு கிடந்த மக்களையும் சமூகத்திலுள்ள ஒவ்வொருவரையும் உற்சாகமூட்டி "நீயும்எழுந்துநில்" என்று வழிகாட்டிய பெருந்தகை ஐயா அவர்கள்.

ஐயா அவர்களின் சமூக நலப்பணிகளுக்கு கௌரவம் வழங்கும் வகையில் உயரிய விருதான "யாழ் விருது" கிடைக்கப் பெற்றமைக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு தொடர்ந்தும் சமூகப் பணியாற்ற வேண்டும் என இறைவனைப் பிராத்தித்து தங்கள் புனிதமான பணிகளுக்க தலை வணங்கி நிற்கிறேன்.

# பட்டினிச்சாவுக்கு எதிரான போராட்டம்

*க.நாகராசா,*
*இல. 02, கிருஷ்ணபுரம்,*
*கிளிநொச்சி.*

அன்று எமது இராசநாயகம் ஐயா அவர்கள் எமது மாவட்டத்தின் திட்டமிடல் பகுதி அதிகாரியாக இருந்து பொன்னம்பலம் ஐயாவுடன் தோழோடு தோள் கொடுத்து செயல்பட்டு இம்மண்ணின் பட்டினி சாவை எதிர்கொள்ள ஆரம்பித்த நேரம் திரு.பொன்னமபலம் ஐயாவின் பின் இம் மண்ணின் மைந்தனை திரு.இராசநாயகம் ஐயா அரச அதிபர் பொறப்பை ஏற்றார் அன்று.

## *சேவைகள் செயற்பாட்டின் சுருக்கம்*

களமும் கதையும் ஐயா கதிரையில் இருந்து திட்டங்களை வகுத்தாலும் களத்தில் நிற்பவர்க ளுடன் இறங்கித் தான் அரச அதிபர் என்ற பதவிப் பெருமை இன்றி களத்தில் கடமையாற்றுபவர்க ளுடன் தோழோடு தோழ் நின்று செயல்பட்டு வெற்றிகண்ட ஓர் பெருந்தகை.

கதிரையும் களமும் ஒன்று சேர்ந்தால் தான் திட்டமிட்டதை செயற்படுத்த முடியுமென்பதை செயலில் காட்டிய செயல்வீரன்.

அன்று எங்கள் விவசாயத் தேவைக்கு பாவிக்கும் யூரியா முற்றாகத் தடைசெய்யப்பட்ட காலம். அதற்குப்பதிலாக அமோனியம் போராடிப் பெற்ற காலம் அப்போராட்டதிற்கு தானே தளபதியாக நின்று இரு அரசுகளுக்கும் தகுந்த பதில் சொல்லி களத்தில் நின்று போராடி வெற்றி கொண்டு இம் மண்ணின் மக்களின் பட்டினிச் சாவை போக்கிய செயல்வீரன்தான்.

எமது நம்பிக்கை விருட்ஷமான திரு.இராசநாயகம் அவர்களிடம் எனது மனக்கிடங்கின் துன்பத்தைக் கொட்டித்தீர்த்தேன். அப்பெருந்தகை இருட்டில் இருந்த எனக்கு ஓர் ஒளியை காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி செய்ய முன்வந்தார். இப்படி சொன்னார், "மிஸ்ரர் நாகராசா படிப்பித்து டொக்டர் ஆக்க முடியாது உலகத்தில் றஸ்ஸியாவில் மட்டும் தான் குறைந்த காசில் படித்து டொக்டர் ஆகலாம் பணத்தை ஒழுங்கு செய்யும் சட்டப்படி செய்வதை நான் செய்து தருகிறேன்".

குப்பையில் போகஇருந்த முத்தை கொலு ஏற்றி வைத்த பெருமை இப்பெருந்தகையையே சேரும். மறக்குமா மனம் என் மகனுக்கு மட்டுமல்ல அவரால் பயன்பெற்ற பெற்றுக் கொண்டிருக்கின்ற பெறப்போகும் மக்களுக்கு சேவையாற்றிய பெருந்தகையை நினைவுகூற சந்தர்ப்பம் தந்தமைக்கு எனது மனமாரந்த நன்றி.

# யாழ் விருது பெற்ற சமூக மாமணி திரு திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள்.

*அபிராமி கயிலாசப்பிள்ளை,*
*தலைவர்,*
*மனிதநேய நம்பிக்கை நிதியம்,*
*கொழும்பு.*



கிளிநொச்சி மாவட்டத்திற்கும் எமக்கும் இடையிலான உறவு மகா தேவா ஆச்சிரமம், யோகர்சுவாமிகள் திருவடிநிலயம் என்பவற்றின் ஊடாக அமைந்திருந்தது. அக்காலகட்டத்தில் கிளிநொச்சி அரச அதிபராக இருந்த திரு.தி.இராசநாயகம் அவர்கள் இந் நிறுவனங்களுடனான தொடர்புகளை ஏற்படுத்தியதுடன் மாவட்டத்தின் பல்வேறு தேவைகளையும் யுத்த பாதிப்புக்களின் அவலங்களையும் எமக்கு எடுத்துரைத்தார். அன்றைய காலகட்டத்தில் போரின் இடப்பெயர்வால் கைவிடப்பட்ட முதியவர்களையும் அநாதரவான சிறுவர்களையும் பராமரிக்க வேண்டிய தேவைகளை எடுத்துரைத்தார்.

போர்ச்சூழலில் வன்னி மாவட்டத்தில் அளப்பரிய சேவையாற்றிய யோகர்சுவாமிகள் திருவடி நிலய தலைவர். பதில் சுகாதார வைத்திய அதிகாரி திரு.மு.கந்தசாமி ஐயா மற்றும் செயலாளர் டாக்டர். ச.முருகானந்தன் ஆகியோருடன் இணைந்து யோகர்சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தினையும் பிரதேச சபை ஆணையாளராக திரு.பொன் நித்தியானந்தன் மற்றும் சமூக ஆர்வலர்களுடன் இணைந்து மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தினை நிறுவி அளப்பெரிய சேவை புரிந்த பெருந்தகையாவார்.

இவரது கோரிக்கையை அடுத்து முன்னை நாள் திரு.வி.கைலாசபிள்ளை அவர்கள் இருந்த காலகட்டத்தில் இந்துமாமன்றம் ஆரம்பிக்கப்பட்ட உதவிகள் பலவற்றையும் இவ் இல்லங்களுக்கு வழங்கியது பின்னர் இவ் இல்லங்களின் அவசியம் பற்றியும் அளப்பெரிய சேவை பற்றியும் உணர்ந்து திரு.கைலாசபிள்ளை அவர்கள் மனிதநேய நம்பிக்கை நிதியத்தின் ஊடாக இல்லங்களின் நிர்வாகச் செலவுகளை பொறுப்பேற்று இல்லங்களில் தங்கியிருந்த பாதிக்கப்பட்ட முதியவர்கள் மற்றும் சிறுவர்களுக்கும் மறு வாழ்வளித்தார். திரு.தி.இராசநாயகம் அவர்களின் கோரிக்கையினால் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அமைந்திருந்த இவ் இரு இல்லங்களுக்கும் பல உதவிகளைப் பெற்றக் கொடுக்க எம்மால் முடிந்தது.

கிளிநொச்சி மாவட்ட மக்களை பொறுத்தவரை விரைவில் யாரும் அணுக்கக் கூடிய மாவட்ட செயலாளராக இருந்து மக்கள் மனம் கவர்ந்தவராகப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலில் எவரும் இப் பொறுப்பு வாய்ந்த பதவியை ஏற்று நடத்த முன்வராத காலகட்டத்தில் அனைவரையும் அரவணைத்து மாவட்டத்தில் தேவைகளை நிறைவேற்றிய மண்ணின் மைந்தனாகிய திரு.தி.இராசநாயகம் அவர்களுக்கு யாழ் விருது கிடைத்தது என்பது எனது மன மகிழ்வான அபிப்பிராயம். திரு.தி இராசநாயகம் அவர்களை வாழ்துவதுடன் மேலும் அவர் தன் பணிகளைத் தொடர எல்லாம் வல்ல திருக்கேதீஸ்வரத்தானைப் பிரார்த்திக்கிறேன்.

# இரும்பு மனிதரின் இளகிய உள்ளம்



*கி. விக்னராஜா,*
*அதிபர்,*
*கிளி/ இந்துக் கல்லூரி,*
D-7, *உருத்திரபுரம், கிளிநொச்சி,*

பூநகரி மண் பெற்ற பெரும்பேறு திரு.தி.இராசநாயகம் ஐயா அவர்களின் யாழ் விருதிற்கான பாராட்டு மலரில் அவர் பற்றிய பதிவு ஒன்றினை வழங்கக் கிடைத்தமையையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன்.

நீண்ட பெரும் தொடர் சேவையாளர் என்ற வகையில் திரு. இராசநாயகம் ஐயா பெருமைக்குரியவர். கிளிநொச்சி பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்டச் செயலர், மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் என்னும் பெரும் பணிகளுக்கு அப்பாலும் சமூக சேவையாளன் என்னும் பெரும் பணியினையும் ஏற்றுக்கொண்டுள்ளார். அவரது பணிக்காலமும் ஓய்வுக் காலமும் திறந்த புத்தகம் போன்றது.

கிளிநொச்சி மண்ணின் மறுமலர்ச்சிக்கு ஆணிவேராய் விளங்கியவர் என்றால் அது மிகையில்லை. எதிர்பார்க்க முடியாத சுனாமி வேளையின் போது, விசேட அனுமதி பெற்று வேலை வாய்ப்புக்கள், வீட்டுத்திட்டம், வீதி புனரமைப்பு என இம்மண்ணில் இவரது கால்தடம் படாத வேலைத் திட்டங்களே இல்லை எனலாம்.

நீண்ட காலமாக இவரை அறிந்தவன் என்ற வகையிலும் இன்றும் இந்துக் கல்லூரி அதிபராக இருந்து மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லப் பிள்ளைகளின் கல்விக்குப் பொறுப்புக் கூற வேண்டியவன் என்னும் வகையிலும் திரு. தி. இராசநாயகம் ஐயாவிடம் உள்ள நல்ல விடயங்களை பதிவு செய்ய வேண்டுமென விளைகின்றேன்.

அரசாங்க அதிபராக கடமையாற்றிய காலப் பகுதியில் கீழ்நிலை மக்கள் தொடர்பாக அதிக அக்கறை செலுத்தி வந்த இவர், என்ன நிகழ்வாயினும் எத்தகைய செயற்பாடு ஆயினும் உரிய இடத்திற்குச் சென்று தனது நேரடிக் கண்காணிப்பில் திட்டங்களை முன்னெடுத்த பெருமைக்குரியவர். எந்தச் சந்தர்ப்பத்திலும் தனது அரச உத்தியோகத்தையோ அல்லது பதவியையோ தக்க வைக்க வேண்டும் என்பதற்காக தனது பணிக்கும் கடமைக்கும் புறம்பாக நடந்தவரல்லர். யுத்த காலத்தின் போதும் அதற்குப் பின்னரும் கூட வலுப்பெற்றிருந்த அதிகாரங்களுக்காக அவர்களது மிரட்டல் மற்றும் தண்டனைகளுக்குப் பயந்து நீதியை விலை பேசாதவராயும் இனத் துரோகத்திற்கு துணை போகாதவராயும் விளங்கிய இரும்பு மனிதன் இவர் என்பதையிட்டு இன்றும் எனக்குள் ஆச்சரியப் பார்வையுண்டு.

அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்யாத இந்த இரும்பு மனிதரின் இளகிய உள்ளத்தினை இவரது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லப் பணிகளில் கண்டு வியந்திருக்கின்றேன். சிறுவர் இல்லமும் இந்துக் கல்லூரியும் ஒரு மனிதனின் இரு கண்கள் போன்று பிரிக்க முடியாதவை. எமது கல்லூரியின் கணிசமான மாணவர்கள் திரு.தி.இராசநாயகம் ஐயாவின் மேற்பார்வையின் கீழ் உள்ளவர்கள். சுத்தமும் இந்துப் பண்பாடும் ஆளுமையும் ஆற்றலும் மிக்க மாணவ சமுதாயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனங்களை வென்ற மகானாக இவர் திகழ்கின்றார். பாடசாலையின் எந்த நிகழ்வாயினும் எமது சுமைகளைத் தமது தோள்களில் சுமந்து பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் தந்து ஆலோசனைகளைக் கூறி நல்வழிப்படுத்துகின்ற எனது ஆசானாகவே இவரை மனங்கொள்கின்றேன்.

அன்று தொடக்கம் இன்று வரை இவரது பணியினையும் சேவையினையும் முன்மாதிரியாகக் கொண்டு என் பணியினையும் ஆற்றி வருகின்றேன். உறுதியும் உரமும் கொண்ட திரு. தி. இராச நாயகம் ஐயாவின் சேவையுணர்வு வார்த்தைகளுக்குள் அடக்கக் கூடியதல்ல. உடல் உள ஆரோக்கியம் பெற்று வாழ இறை ஆசி வேண்டி நிற்கின்றேன்.

# ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்பவர்

*கனகரத்தினம் கிருஷ்ணகுமார்,*
*வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்,*
*பூநகரி.*

ஏழைகளின் மீது கருணையும் அன்பும் கொண்ட இவர், மகாதேவா ஆச்சிரமத்தின் சைவச் சிறுவர் இல்லத்தின் இயக்குநராகவும், தலைவராகவும் கடமையில் இருக்கும் காலப்பகுதியில் நான் வேலை தேடி அவரிடம் சென்றபோது, நானும் அந்தப் பணியில் சேவைசெய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த வகையில் சிறுவர் இல்லத்தில் ஐயாவுடன் செர்ந்து வேலை செய்யும் காலத்தில் நான் நேரில் கண்டு அனுபவித்த அழியாத நினைவுகளையும் இந்தப் பிரதியில் பகிர்ந்து எழுத விளைகிறேன்.

அதுமட்டுமல்லாது அவருக்கு சிவன் கொடுத்த வரமோ எதுவோ தெரியாது அவர் ஒரே நேரத்தில் பலவிடயங்களை அவதானிக்கக் கூடிய சாதாரண மனிதர்களால் முடியாத ஆற்றல் படைத்த ஒருவர் ஆவார். நான் பல தடவைகள் உணவு உண்ணும் அறைக்கு செல்வது வழக்கம் அப்போது அவர் சமநேரத்தில் தொலைபேசியில் உரையாடுவார் வானொலியில் செய்தி கேட்பார். அதே வேளையில் பத்திரிகையும் வாசித்துக் கொண்டிப்பார்.

இப்படி அலுவலகத்திலும் ஒரே நேரத்தில் பல விடயங்களை அவதானித்து அதனை துல்லிய மாக புரிந்து கொள்ளும் திறன் படைத்த ஒருவரை நான் புத்தகத்தில் படிக்கும் போது இப்படியான வர்கள் இருக்கலாம் என கேள்விப்பட்டதுண்டு. ஆனால் இவரை நேரில் பார்த்த போது அனுபவத்தில் அறிந்து கொண்டேன்.

அவர் இல்லக் குழந்தைகளிகளின் நலனுக்காக நோயின்றி நீண்ட ஆயுளுடன் வாழ்வதற்காக மரக்கறி உணவுகளை இயற்கை பசளை பயன்படுத்தியே பயிர் கொடி வளர்த்து உணவிற்காக பயன்படுத்துவார் அதாவது அவை கூட்டெரு பயன்டுத்துதல் கிருமி நாசினிகள் பாவித்தல் அற்ற மரக்கறி வகைகள் என்பனவாகும். அத்தோடு இயற்கையாக கிடைக்கும் பொன்னாங்காணி, பசளி, மொசு மொசுக்கை, தூதுவளை, முசுட்டை, முருங்கக்கீரை, குறிஞ்சா, குருவித்தலைபாகல் போன்ற பாரம்பரிய இலைக்கறி வகைகளை உணவில் சேர்கும்படி அறிவுறுத்துவார். வழமையாக மதிய உணவில் ஊறுகாய் தயிர் போன்றன பிள்ளைகளுக்கு தாராளமாகவே இருக்கும். அத்தோடு பிள்ளைகளின் ஊட்டச் சத்துக்காக கறவைப்பசு வளர்ப்புத்திட்டம் என்ற ஒன்றை உண்டாக்கி அதன் மூலம் கிடைக்கின்ற தூய பசுப்பாலை பிள்ளைகளுக்கு வழங்கி அதில் இன்பம் காண்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லக் குழந்தைகளுக்கு பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா, தைப்பொங்கல், பட்டிப்பொங்கல் புத்தாண்டு விளையாட்டுக்கள் கல்விசார் சுற்றுலாக்கள் கோவில் திருவிழாக்கள் பொங்கல் நிகழ்வில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு விடயங்களை மேற்கொண்டு வருகிறார். அத்தோடு கல்வியோடு மட்டும் நின்றவிடாது "கராத்தே", யோகாசனம், பரத நாட்டியம், சங்கீதக்கலை, வாத்தியக்கலை போன்ற பல்வேறுபட்ட கலைகளில் பாண்டித்தியம் பெற்ற சிறந்த ஆசான்கள் மூலம் கற்பித்து வருகிறார். இந்தக் கலைகளின் போட்டிகளில் தேசிய ரீதியில் வெற்றி பெற்று தங்கப்பதக்கம் பெற்ற சிறுவர்களும் இல்லத்தில் இருக்கின்றனர். இவை அனைத்திற்கும் காரணகர்த்தாவாக திரு. இராசநாயகம் ஐயா இருக்கின்றார் என்றால் மிகையாகாது.

அவர் நீடூழி வாழ்ந்து, மேலும் பல பணிகளைப்புரிய இறைவனை வேண்டுகின்றோம்.

# மண்ணுக்கே பெருமை சேர்த்த செயல்வீரன்

*க. வைரமுத்து,*
*சமாதானநீதவான்*
*ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்*
*புளியம்பொக்கணை.*

எம் மண்ணிற்கும் பெருமை சேர்த்த செயல்வீரன் பெருமதிப்பிற்குரிய திரு.திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள் சைவப் பாரம்பரியத்தையும் இறைபக்தியும் கொண்ட திருநாவுக்கரசு தம்பதியினருக்கு 1946 ஆம் ஆண்டு வைகாசி மாதம் இரண்டாம் திகதி இம்மண்ணில் அவதரித்த பெருமதிப்பிற்குரிய இராசநாயகம் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை பூநகர் பிரதேச பாடசாலை ஒன்றில் கற்று பல்கலைக்கழகம் வரை படித்து பட்டதாரியானார்.

உண்மையில் அக்காலத்தில் இவர் ஆற்றிய பணி மகத்தானது. எழுத்துக்களாலோ அல்லது வார்தைகளாலோ எடுத்தியம்ப முடியாததொன்று. நான் சில சமயங்களில் உயிர் அச்சுறுத்தல் இரு பகுதியாலும் ஏற்படுமோ என்று அஞ்சியதுண்டு. தனது சாதுரியத்தால் இரு அரசாங்கங்களையும் திருப்திப்படுத்தி மக்களது துயரைப்போக்க செயற்பட்டமை பாராட்டாதிருக்க முடியாது.

இவ்வாறான ஒருவருக்கு "யாழ் விருது" வழங்கி கௌரவித்தமை எம் போன்ற பலருக்கு புளங்காகித்தை அளித்தது. கிளிநொச்சி உத்திரபுரிசுவரர் ஆலயம் இன்று பல பல கட்டடங்களுடன் பல ஏக்கர் வயல் நிலங்கள் சூழலாக அமைவதற்கும் இவரது தலைமைத்துவமும் செயற்பாடுமே காரணம் என இவ் ஆலயத்தின் 10 ஆண்டுக்கு மேலான செயலாளர் என்ற வகையில் வெளிப்படுத்துவதில் மன நிறைவடைகிறேன்.

அரச பணியை எவ்வாறு திறம்பட செயலாற்றினாரோ அவ்வாறே இவர் பொதுப் பணிகளிலும் முத்திரை பதித்துள்ளார். கூட்டுறவுத்துறையிலும் கல்வித்துறையிலும் இவர் ஆற்றிய பணிகள் அளப் பரியவை.

இன்று தாய் தந்தையை இழந்த வறுமைப்பட்ட சிறார்கள் 400 க்கு மேல் மூன்று இடங்களில் இல்லம் அமைத்து அவர்களுக்கு உணவு உடை மட்டுமல்ல சிறந்த கல்வியையும் ஊட்டி பல்கலைக் கழகம் வரை செல்ல வழி சமைத்த இப் பெருமகனிற்கு உயிரோடு இருக்கும் போது விழா எடுப்பது சாலப் பொருத்தமானதே. அந்த வகையில் விழாக் குழுவினருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழங்காவில் முன்னேற்றத்தில் நாயகனின் பங்கு

*M.நவரத்தினம்,*
*சமாதான நீதவான்,*
*முழங்காவில்.*



விவசாயக் கிராமகாகக் காணப்பட்ட முழங்காவில் பகுதி வளப்படுவது தொடர்பாக என்னுடன் உரையாடல்களை மேற் கொண்டதுடன் வளர்ச்சிக்கு பல ஆலோசனைகளையும் கூறி இருக்கிறார். 1979 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முழங்காவில் பூநகரி பல்வராயன் கட்டு கிராஞ்சி, வேரவில், பொன்னாவெளி போன்ற பகுதிகளில் ஒன்றரை ஏக்கர் காணிகளைப் பெற்றுக் கொடுத்து மக்கள் வாழ்வியலுக்கு உதவினார்.

இக் காலப்பகுதியில் மக்களது நீர்த்தேவையை நிவர்த்தி செய்ய ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் உதவியுடன் குழாய்க் கிணறுகளை பெற்றுத்தந்தார். குழாய்க்கிணறு அடித்துவிட்டு மறுநாள் ஐயாவுடன் நானும் எமது கிராமத்தவர்கள் சிலரும் இணைந்து குழாய்க்கிணற்றை பார்வையிட சென்ற போது அங்கே பாதணி நீரில் மிதந்த வண்ணம் இருந்தது. உடனே தானே தன்னுடைய கைகளால் அந்த பாதணியை எடுத்து வெளியே வீசினார். இந்த சம்பவமானது நான் ஐயாவை நினைக்கின்ற ஒவ்வொரு கணமும் என் கண்முன் நிழலாடுகின்றத. இவ்வாறு தன்னலம் கருதாது மக்கள் பணிளாளராக கடமையாற்றி 1990 களில் மன்னார் மாவட்டத்திற்கு திட்டப்பணிப்பாளராக நியமனம் பெற்று பணியாற்ற சென்றிருந்தார். அக்காலத்தில் பூநகரி ப.நோ.கூட்டுறவு சங்கத்தின் தவைராகவும் கடமையாற்றினார். இவர் கடமைக்கு சென்ற போது போக்குவரத்துக்கு மக்கள் பட்ட சிரமத்தை அவதானித்து மன்னார் - பூநகரி வரையான பகுதிக்கு போக்குவரத்து சேவைக்காக மினிபஸ் ஒன்றினை ஈடுபடுத்தி மக்களுடைய போக்குவரத்தினை இலகுபடுத்திக் கொடுத்தார்.

A 32 , 12 மைல் வீதியினையும் கிராஞ்சி வேரவிலுக்கான வீதியினை அமைப்பதற்கும் பெரிதும் உதவினார். அவரது பணி உயர புகழ் ஓங்க வாழ்த்துவதில் பேருவகையடைகிறோம்.

# முதன்மையான கூட்டுறவாளர் மேன்மை தங்கிய திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள்

*சி. புவனேஸ்வரன்,*
*முன்னாள் பொதுமுகாமையாளர்,*
*வட்டக்கச்சி ப. நோ. கூ. சங்கம்*



ஈழத் திருநாட்டில் மருதம், நெய்தல், முல்லை நிலப்பரப்புக்க ளைக் கொண்ட புகழ் பூத்த பூநகரி மண்ணில் பிறந்து கல்வி, சமய, கலாசார சீலராக உயர்ந்து இன்று தனது தன்னலமற்ற பொதுச் சேவைகளால் உயர்ந்து யாழ் மாநகர சபையின் உயரிய விருதான யாழ் விருது பெற்றமைக்காக அவரது சேவை நலன்களைப் பாராட்டு கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் வாழ்கின்ற 20 ஆம் 21 ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் நாமும் வாழ்கின்றோம். என்ற பேருவகையுடன் அவரின் தலை சிறந்த சேவைகளில் ஒன்றான "கூட்டுறவே நாட்டுயர்வு" என்ற தாரக மந்திரத்துக்கமைய, கூட்டுறவுக்கு அவர் முன்னோடியாக இருந்து செய்து வருகின்ற சேவைகளை வெளிப்படுத்துவதில் பெருமை அடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்து பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற பின்பு அவருக்குக் கிடைத்த முதல் அரச பணி அபிவிருத்தி உத்தியோகத்தர். அதன் பின்பு திட்டப்பணிப்பாளர், மேலதிக அரசாங்க அதிபர், அரசாங்க அதிபர் பணி. கிளிநொச்சி மாவட்டத்திலேயே 20 வருடங்களுக்கு மேலாக பணி செய்த பின் வட மாகாண அமைச்சில் செயலாளர் பணி அதன் பின் வட மாகாண அரசில் பொது நிருவாக அமைச்சில் பிரதிப் பிரதம செயலாளர் பணி. இவர் பணிநிலைக் காலத்திலும் ஓய்வு பெற்ற பின்பும் கூட்டுறவு இயக்கத்தை தளர்வின்றி வளர்ப்பதில் அதிக கரிசனை கொண்டுள்ளார்.

இவரது பொதுப் பணியில் முதன்மை பெற்ற பணி மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லப் பணி. தனது ஓய்வுக் காலத்தை முற்று முழுதாக இச் சிறார்களை நல்லவர்களாகவும் விற்பன்னர்களாகவும் ஆசார சீலர்களாகவும் எம் தேசத்தில் மிளிரச் செய்வதே ஐயாவின் பெருவிருப்பு. யுத்த அனர்த்தக் கொடுமைகளால் நிர்க்கதியான நல்ல உள்ளங்களை நன்னிலைப்படுத்தும் நற்சிந்தனை கொண்டவர். சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதிலும் மிகுந்த ஈடுபாடுடையவர். இவரது சமய வளர்ச்சிக்கு முன்னுதாரணம் உருத்திரபுரீசுவரர் ஆலயம்.

கூட்டுறவு இயக்கத்தின் மூலம், நலிவுற்ற ஒடுக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்கு நிவாரணம் தேடலாம் என்பது சர்வதேசம் அனுபவ ரீதியாகக் கண்ட உண்மை. இங்கிலாந்து தேசத்தில் கைத்தொழில் புரட்சியால் தொழிலாளர் பட்ட துன்ப துயரை உடைத்தெறிய புறப்பட்டு கூட்டுறவு இயக்கத்திற்கு வித்திட்டவர் றொபேட் ஓவன் என்ற பெரியார். அதனைத் தொடர்ந்து 1844 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் றொச்டேல் கிராமத்தில் கம்பனி நெசவாளர்கள் கூட்டுறவுக் கொள்கை வகுத்து செயற்பட்டனர். இன்று றொச்டேல் முன்னோடிகளின் கொள்கைக்கமைய சர்வதேசம் எங்கும் கூட்டுறவு வளர்ந்து மக்களதும் தேசங்களதும் பொருளாதாரம் வளர்ந்து விட்டது. இலங்கையிலும் 1911 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டம் கொண்டு வரப்பட்டு நுகர்ச்சிக் கடன், உற்பத்தி நடவடிக்கைகளை மேம்படுத்த கூட்டுறவு இயக்கம் உதவியது. கூட்டுறவு இயக்க பரிபாலிப்புக்குத் தனியான திணைக்கள மும் உள்ளது. கூட்டுறவுச் சரித்திரத்தை நன்கு கற்றுக்கொண்ட திரு. இராசநாயகம் ஐயா அவர்கள் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் பெரும் சாதனை படைத்துள்ளார்.

திரு. இராசநாயகம் ஐயா அவர்களது கூட்டுறவு வாழ்க்கை பூநகரி. ப. நோ. கூ. சங்கத்தில் ஆரம் பித்தது. அச் சங்கம் நுகர்ச்சி, உற்பத்தி, சந்தைப்படுத்தல், கைத்தொழில் முயற்சி, கடன் வழங்கும் வங்கிச்சேவை, கல்வி அபிவிருத்தி, போக்குவரத்துச்சேவை போன்ற பலவற்றை நடைமுறைப்படுத்தி மக்கள் பயனடைய வழிவகுத்தது. இடப்பெயர்வால் பாதிக்கப்பட்டாலும் மீண்டும் மீள்கட்டமைப்புப் பெற்று வளர்வதற்கு இவரின் ஆலோசனைகளும் திட்டங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் அடிக்கடி இடப்பெயர்வு, யுத்த அபாயம், மக்களுக்கு வாழ்வாதாரம் தேட முடியாத நிலை, உள்ளூர் இடப்பெயர்வு, சூரியகதிர் நடவடிக்கையால் வலிகாமம் பகுதி மக்களின் இடப்பெயர்வு காலங்களில் திரு.தி.இராசநாயகம் அவர்களின் பணி கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்ததாகவே இருந்தது. அரசின் இறுக்கமான பொருளாதாரத் தடை, உணவுப் பொருட்கள் மட்டுப்படுத்தப்பட்ட காலம், போக்குவரத்து தடைப்பட்ட காலம். இக்காலப் பகுதிகளில் இவர் திட்டப்பணிப்பாளர், மேலதிக அரச அதிபர், அரச அதிபராகக் கடமை பார்த்த காலம். இவர் காலத்தில் மக்கள் மாமணி பொன்னம்பலம் மற்றும் தில்லைநடராசா ஆகியோரும் பணிபார்த்த காலம். பிரதான திட்டமிடல் பணியில் இவ்விடம் கூட்டுறவுச் சங்கங்களில் விலைபோகாது தேங்கிக் கிடந்த நெல்லை அரிசியாக்கி உடன் நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்தார். நிவாரண வழங்கல் என்ற தோரணையில் தென்பகுதியிலிருந்து கிடைக்கவுள்ள அரிசியை நிறுத்தினார். மாவு, சீனி, பருப்பு, எரிபொருள் போன்றவற்றையும், வங்கி நடவடிக்கை திரவப் பணமின்றி தடைப்பட்டபோது திரவப்பணங்களை தானாகவே சென்று பெற்று வந்தார். மாவை கூடுதலாக வரவழைத்து கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் வெதுப்பக உற்பத்தியை அதிகரிக்க ஊக்குவித்தார். மக்களின் துயர் துடைக்க ஒரே வழி கூட்டுறவுச் சங்கங்கள் தான் என அடிக்கடி கூறும் இவர் வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்த சங்கங்களையும் இங்குள்ள சங்கங்களையும் ஒருங்கிணைத்து 1996 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ப. நோ. கூ. சங்கங்களின் ஒன்றியத்தை உருவாக்கி அதன் மூலமும் பொருட்களைத் தடையின்றி தருவித்தார்.

கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய அரிசிக்கான பணத்தை பாதுகாப்பு அமைச்சு கொடுப்பதற்கு பின்னடிப்பு செய்தது. தனது மாறுபடாத புள்ளி விபர அறிக்கைகளாலும் தனது இராச தந்திர சாணக்கியத்தால் கிடைக்க முடியாமல் போய்விடுமோ என்று இருந்த பணம் பெறப்பட்டது. இப் பணிகளை இரவு பகல் பாராது தனது உடல் நலன் பாதிப்படைந்தாலும் செய்து காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்து வருகின்ற கூட்டுறவு இயக்கம் புறச்சூழல்களால் செயலற்றிருக்கக் கூடாது என்ற தூர நோக்குச் சிந்தனையுடன், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆக்கபூர்வமானவற்றைச் செய்துள்ளார். இவர் கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச் சபையில் கூடிய காலம் தலைவராக இருந்து கூட்டுறவுக் கல்விப் பயிற்சிப் பாடசாலை, கூட்டுறவு சபைக்குச் சொந்தமாக 2004ம் ஆண்டு தனியான காணியில் கூட்டுறவு மண்டபம் ஆகியவற்றை அமைத்தார். அனர்த்தங்களின் பின்பும் கூட்டுறவு மண்டபம் புதுப்பொலிவுடன் தான் இருக்கின்றது. 1980ம் ஆண்டு காலப்பகுதியில் இவர் சிறிலங்கா தேசிய கூட்டுறவுச் சபையில் உப தலைவராக இருந்தபோது தான் வவுனியா மாவட்டத்தில் தனியான கூட்டுறவு மண்டபமும் கூட்டுறவுக் கல்லூரி மண்டபமும் நிர்மாணிக்கப்பட்டது.

கூட்டுறவுக் கல்வியுடன் தேசியக் கல்வி வளர்ச்சியிலும் அதிக கரிசனையுடன் செயற்பட்டவர்கள் அரச அதிபராக இருந்த மக்கள் மாமணி அமரர் பொன்னம்பலம் அவர்களும் அரச அதிபராக இருந்த திரு. தி. இராசநாயகம் ஐயா அவர்களும் எம் மாவட்டத்தில் பிறந்து இங்கு கல்வி கற்று பட்டம் பெற்று விற்பன்னர்களாக அவர்களது சேவை எமது மாவட்டத்திற்கு கிடைக்க வேண்டுமென்ற பெரு விருப்புடன் தான் மாவட்டக் கல்வி நிதியத்தை உருவாக்கி அம் மாணவர்கள் கல்வி பயில நிதியுதவியளித்தார்கள். அதன் மூலம் பெரும் பெறுபேறு கிடைத்தது. இந் நிதியத்துக்கு அப்போது கூட்டுறவுச் சங்கங்கள் தான் பெரு நிதியை வழங்கக் கூடிய நிலைக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பொருளாதார மேம்படுத்திய கூட்டுறவாளர் திரு. தி. இராசநாயகம் அவர்கள் தான்.

இவரது தூரநோக்கு, நற்சிந்தனை, விடா முயற்சி ஆகியவற்றின் பெறுபேறு தான் "மகாதேவா", தாம்போதி, புழுதி ஆறு நீர்த்தேக்கம், பாலன் குளம், கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு மண்டபம் ஆகியவற்றைக் கூறலாம்.

கூட்டுறவுக்கு ஒரு ஆசான், சமய வளர்ச்சிக்கு ஒரு சித்தர், தமிழ் வளர்ச்சிக்கு ஒரு பண்டிதர் நிலைத்து நின்று செயலாற்றி நற்சிந்தனைகளை உருவாக்கும் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் தந்தை.

திரு. தி. இராசநாயகம் ஐயா அவர்கள் நீடிய ஆயுள் பெற்று அவர் பணி தொடர்வதன் மூலம் எம் தேசம் வளம்பெறும்.

# தன்னிகரில்லா சேவையாளர்
# உயர்திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள்

*அ. ஞானசேகரம்,*
*தலைவர், வணிக மன்றம் - குமுழமுனை,*
*கரியாலை நாகபடுவான்,*
*தலைவர் - ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை.*

சமய, சமூக, மருத்துவ, ஆன்மீக அறப்பணிகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து இரவு பகல் பாராது சேவையாற்றிய மக்களின் தோழன் திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களுக்கு சேவை நலன் பாராட்டு செய்வதில் சிறியேன் ஆகிய நானும் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

வரலாற்று தொன்மை சான்று மிக்க பூநகரி மண்ணில் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை முத்துக் குமாரசுவாமி பாடசாலையிலும் பின்னர் க. பொ. த. சா/த வரை பூநகரி மகாவித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்து பேராதனைப் பல்கலைக் கழகம் சென்று 1968 இல் பட்டதாரியாகி வெளிவந்தார். அந்த நாள் முதல் சிவில் நிருவாகத்தில் கால் பதித்து 2011 வரை பெருமை மிக்க அரச பணிகளை ஆற்றி அரச சேவையின் ஊடாக தமது திறமைகளை மக்களுக்காக பற்பல சேவைகளை ஆற்றி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு மக்கள் சேவை நிறுவனங்களில் அயராது அதன் வளர்ச்சிக்காக உழைத்து வந்துள்ளார். குறிப்பாக பூநகரி ப. நோ. கூ. சங்கம் சாவகச்சேரியுடன் சேர்ந்து இருந்து பின்னர் பூநகரி ப. நோ. கூ. சங்கமாக பிரிக்கப்பட்ட போது ஒரு சிறிய முதலீட்டோடு அதன் தலைமைப் பொறுப்பை ஏற்ற ஐயா அவர்கள் மாவட்டத்திலே ஒரு முன்னுதாரண சங்கமாக வளர்தெடுத்தார்.

பூநகரி பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தையும் வளர்த்தெடுத்த ஆரம்ப கால பெருமை இவரையே சாரும். அத்தோடு மட்டுமல்லாமல் மன்னார் மாவட்டத்தில் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றிய போது அங்குள்ள மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்காக பனம் பொருள் உற்பத்தி விற்பனை நிலையம், பால் உற்பத்தி விற்பனை நிலையம், பாற் பண்ணை என்பவற்றையும் அதன் வளர்ச்சியில் பெரிதும் அயராது சேவையாற்றினார்.

இவற்றிற்கு மேலாக கிளிநொச்சி மாவட்டத்தில் கடற்றொழிலாளர் சங்கங்களையும் சமாசத்தையும் இயங்க வைத்து அதன் ஊடாக கடற்றொழிலாளர்களது வாழ்க்கைத் தரத்தினை மேலோங்கச் செய்தார். அத்தோடு மட்டுமல்லாது இக்கட்டான காலகட்டத்தில் எமது மாவட்டத்தில் அரச அதிபராகக் கடமையாற்றிய வேளைகளில் எல்லாம் குறிப்பாக ஸ்கந்தபுரம் பகுதியில் தற்காலிகமாக கிளிநொச்சி கச்சேரி இயங்கி வந்தது. அந்தக் காலப்பகுதியில் இரவு பகல் பாராது மக்களுக்காக லாம்பு கொழுத்தி வைத்துவிட்டு சேவையாற்றியதை நான் நேரில் கண்டேன். இப்படி பற்பல சேவைகளை அரிய நற்பணிகளை ஆற்றிய வேளையில்

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தையும் வன்னேரிக்குளம் யோகர்சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தையும் மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் பொறுப்பெடுத்தார். அந்த நாள் தொடக்கம் இன்று வரையும் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் தலைவராகவும் இல்லக் குழந்தைகளுக்கு தந்தையாகவும் இருந்து கல்வி, சுகாதாரம், கலாசாரம் என்பவற்றினை வளர்த்ததோடு மட்டுமல்லாது எதிர்காலத்தில் சொந்தக் காலில் சுயமாக இயங்கக் கூடிய வகையில் பொருளாதார வளமுள்ள இல்லமாக வழி நடத்தக் கூடிய வகையில் விவசாயத் துறையில் உற்பத்தி களை மேற்கொண்டதோடு எதிர்காலத்தில் இல்லத்தை ஒழுக்கத்துடனும் பொறுப்புணர்ச்சியுடனும் கொண்டு நடத்தக் கூடிய ஒரு சமூகத் தொண்டர்களையும் உருவாக்கி இருக்கின்றார்.

அத்தோடு இவரது சேவை நலன் பாராட்டு விழாவுக்கு ஒழுங்கமைப்பு விழாவுக்கு ஏற்பாடு செய்த ஏற்பாட்டாளர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது நற்பணி தொடர எல்லாம் வல்ல உருத்திரபுரிசுவரன் ஐயா அவர்களுக்கு நீண்ட ஆயுளையும் தேக சுகத்தையும் வழங்க வேண்டும் என்று பிரார்த்தித்து எனது மடலை நிறைவு செய்கின்றேன்.

# இணைந்து பணிசெய்த நினைவுகள்

*அ.பாலகுமார்,*
*பிரதம கணக்காளர்,*
*மாவட்ட செயலகம்,*
*வவுனியா.*



வந்தாரை வாழவைக்கும் வன்னி பெருநிலப்பரப்பில் வந்துதித்து பிறந்த மண்ணிற்கு பெருமை சேர்த்த விழா நாயகன் திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களின் சமூக நலப்பணிகளை கௌரவிக்கும் வகையில் யாழ்ப்பாண மாநகர சபையின் உயரிய "யாழ் விருது" வழங்கப்பட்டமையினையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அத்துடன் இராசநாயகம் ஐயா அவர்களுடன் பழகிய பணி புரிந்த காலங்களில் ஏற்பட்ட பசுமையான நினைவுகளை பகிர்ந்து கொள்வதில் பெருமிதம் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரியில் பாரம்பரியசித்த மருத்துவ பரம்பரையில் திருநாவுக்கரசு பாக்கியம் தம்பதிகளுக்கு 1946.05.02 அன்று மகனாக பிறந்தார். இவர் சிறுவயதிலேயே கற்றலோடு மட்டுமன்றி கலை, இலக்கியம், சமயம் மற்றும் சமூக குமுச் செயற்பாடுகளிலும் தன் தனித் தன்மை யான ஆற்றல்களை வெளிக்காட்டியதுடன் 1968 ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக் கழகத்தில் தனது பட்டப்படிப்பினை பூர்த்தி செய்தார். இதே காலப்பகுதியில் சிவில் நிர்வாகத்தில் இணைந்து அரச பணியுடன் சமூக பணிகளையும் இணைந்து செயற்பட்டதுடன் பல்வேறு பதவிகளை யும் பொறுப் பேற்றுத் தற்துணிவுடன் அயராது பாடுபட்டு அவர் ஆற்றிய சேவையினை எடுத்துரைப்பது என்பது மலையளவிருக்க கடுகளவு சொல்வதாகும்.

அந்த வகையில் 1992 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நான் கணக்காளராக கடமையாற்றிய போது இராசநாயகம் ஐயா அவர்கள் பிரதிதிட்டமிடல் பணிப்பாளராக பொறுப்பேற்று கடமை புரிந்தார். அதேநேரம் திட்டமிடல் பணிப்பாளராகவும், பின்னர் 1997 ஆம் ஆண்டு அரச அதிபராகவும் பொறுப்பேற்று ஒரே காலப் பகுதியில் பன்முகப்படுத்தப்பட்ட பதவிகளை பொறுப்பேற்று துணிச்சலுடன் சேவையாற்றி மக்களின் மனதில் நீங்காத இடம் பிடித்த ஒரு அரச அதிகாரியாகவும், சமூக சேவையாளனாகவும் திகழ்ந்தார். இக்காலப்பகுதியில் இவருடன் இணைந்து பல்வேறு பணிகளை மேற்கொண்டமையினால் மட்டுமன்றி நான் கிளிநொச்சியில் கடமையாற்றிய காலப் பகுதியில் எனது விடுதியின் அயலவர் என்பதாலும் இவரைப் பற்றிய சுவடுகளை இங்கு பதிவிடுகிறேன் .

1992 ஆம் காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக நிர்வாக அதிகாரிகள் சேவையாற்ற மறுத்த சூழ்நிலையில் அரச அதிபராக பொறுப்பேற்று தனது உயிரையும் துச்சமென நினைத்து பணியாற்றினார். சமூக பொருளாதார அபிவிருத்திக்காக பல்வேறு கொள்கை களை திட்டமிட்டு வகுத்து அதனை செயற்படுத்தியும் சிறந்த திட்டமிடலாளன் என்பதை நிரூபித்தார். இவர் தீர்மானங்கள் எடுப்பதிலும் அமுல்படுத்துவதிலும் ஏற்படும் சவால்கள், தடைகள் என்பவற்றை தகர்த்தெறிந்து மிகவும் அக்கறையுடன் செயற்படுவதில் இவருக்குநிகர் இவரே.

யுத்த காலப்பகுயில் கிளிநொச்சிக்கு உணவு தொடரணி வண்டிகளை கொண்டுவருவது என்பது மிகுந்த சிரமமாக இருந்த காலப்பகுதியில், அரச அதிகாரிகள் மரண பயத்தினால் தயங்கிய வேளையில் "தனி ஒருவனுக்கு உணவு இல்லையேல் ஜெகத்தினை எரித்திடு" என்ற பாரதியின் கூற்றிற்கினங்க தனியொருவனாக பல்வேறு தடைகளையும் தாண்டி தன் மக்களுக்காக உணவு தொடரணி வண்டிகளை கொண்டுவந்த பெருமை இவரையேசாரும். இந் நிகழ்வானது அரச அதிகாரிகள், மக்கள் மனங்களில் இன்றும் நீங்காத நினைவுகளாகும். அக்காலப்பகுதியல் யாழ்ப்பாணத்தில் இருந்து ஐந்து இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்து கிளிநொச்சிக்கு வருகைதந்த போது சற்றும் மனம் தளராமல் அவர்களுக்கு அத்தியாவசிய தேவைகளை திறம்பட ஏற்பாடு செய்து கொடுத்தார். இது இவரின் மண்ணின் பெருமையை எடுத்தியம்பியது.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற சிறார்களை பராமரிப்பதற்கு மகாதேவா ஆச்சிரமத்ததை ஆரம்பித்து இன்று பல நூற்றுக்கணக்கான ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி, கலை, விளையாட்டுக் கள் போன்றவற்றை பயிற்றுவிப்பதுடன் மட்டுமல்லாது, அவ் ஆச்சிரமத்தை தொடர்ந்து நடாத்திச் செல்லக் கூடிய வகையில் நிரந்தர வருமானத்தை பெறக்கூடிய நிலைக்கு ஆழமான அடித்தளமிட்டுள் ளதை யாவரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

கிளிநொச்சி மாவட்டம் சமூக பொருளாதார அபிவிருத்தியில் முன் மாதிரியாக திகழ வேண்டும் என்பதற்காகவும் அறிவியியல் நகர் தோற்றம், நகரமயமாக்கல் வலையமைப்பு, விவசாய, பொறியியல் பீடங்கள், தொழிநுட்பகல்லூரி என்பவற்றை அமைக்க அடித்தளம் இட்டபெருமை இவரை யேசாரும் இந்த நீண்ட கால அபிவிருத்தி நோக்கானது கல்விசார் சமூக விருத்திக்கு வித்திட்ட தென்பது மறுக்க முடியாத உண்மையாகும். அத்துடன் முடங்கிக்கிடந்த கூட்டுறவு துறையானது எழுச்சி பெற்றதும் உள்ளூர் வளங்களை வினைத்திறனாகவும் விளை திறனுடையதாய் கிராமிய, பிரதேச மாவட்ட அபிவிருத்திக்கு ஏற்புடைய வகையில் வழிநடத்தினார். இதனால் இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்பு கைத்தொழில் என்பன விருத்தியடைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பொது மக்களுக்காக அரச அதிகாரியாகவும் பொது மகனாகவும் பல்வேறு சேவைகளை முன் நின்று செய்ததுடன் அரச அலுவலர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவர் என்பதும் யாவரும் அறிந்ததே.

எனவே இராசநாயகம் ஐயா அவர்களின் சேவைக் காலத்தில் சிலகாலம் உடனிருந்து பணியாற்றியவன் என்ற வகையில் அக்காலம் என்றும் பசுமையானவை. அத்துடன் இவரது சேவை மென்மேலும் சிறப்புற்றுமக்கள் மனதில் நீங்காத இடம் பெற என் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமையடைகின்றேன்.

# கிளிநொச்சி, பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.சு.தர்மரத்தினம் அவர்களது நினைவில்

**சு.தர்மரத்தினம்,**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**பூநகரி,**
**அகில இலங்கை சமாதான நீதவானும்.**

மக்கள் சேவைத்திலகமாகத் திகழும் திருவாளர் திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள் கிளிநொச்சி, பூநகரி மண்ணிலே பிறந்து கிளிநொச்சி மாவட்டத்தின் அரசாங்க அதிபராகவும் வட மாகாண பிரதிப் பிரதம செயலாளராகவும் கடமைபுரிந்து எல்லோர் மனங்களிலும் ஆழ ஊடுருவி இடம்பிடித்த ஒரு அற்புத மனிதன் 2005 ஆம் ஆண்டு நான் கிளிநொச்சி வன்னேரிக் குளம் மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமை புரிந்தகாலத்தில் அந்தப் பாடசாலையின் பொன் விழா நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக இருந்து பிரதம விருந்தினராக் கலந்து கொண்டார். இவர் மக்களுடன் இலகுவாகப் பழகக்கூடிய உள்ளம் படைத்தவர். கிளிநொச்சி மண்ணில் பழங்குடியினர் அரச சேவையாளர்கள் அனைவரதும் செயற்பாட்டையும் நன்கறிந்து மிகத் துல்லியமாக பல தீர்மானங்களை எடுக்கக் கூடியவர். பின்னர் நான் கிளி/கோணாவில் மகா வித்தியாலயம், கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம் போன்றவற்றில் அதிபராகச் செயற்பட்டபோது பாடசாலை நிலவரங்கள் தொடர்பாகப் பேசுவார். யுத்தத்தின் பின்பு நான் கனகபுரம் மகாவித்தியால யத்திற்கு அதிபராக இருந்தபோது வடமாகாண பிரதிப் பிரதம செயலாளராக முன்னாள் ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியுடன் பாடசாலைக்கு வருகை தந்து பாடசாலையின் அபிவிருத்தி மீள்குடியேற்றம் தொடர்பாகப் பேசியிருக்கின்றார்.

பின்னர் நான் கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட பின்னர் அப்பகுதி பாடசாலை அதிபர்கள் மிகவும் கண்டிப்பானவர். தங்களுக்கு பெரும் வேலைச் சுமையாக இருப்பதாகவும் அவ்வாறு அதிபர் பெரு மக்கள் தன்னிடம் கூறியதாகவும் அவ்வாறான ஒருவரையே தான் தேடிக் கொண்டிருந்ததாகவும் பதில் கூறியதாக என்னிடம் கூறுவார். இவ்வாறு எனது பணி கடமையில் மிகுந்த விருப்புக் கொண்ட மனிதன்.

அத்துடன் 2011 ஆம் ஆண்டு கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு ஒரு அதிபரை நியமிக்க வேண்டியிருந்த போது அப்பாடசாலை அதிபர் பதவிக்கு நான் விண்ணப்பித்திருக்கவில்லை. பின்னர் என்னை அப்பாடசாலை அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க வைத்து அப் பாடசாலையின் செயற்பாடு களை நல்லமுறையில் முன்னெடுக்க விரும்பினார். அக்காலப் பகுதியில் பலரை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து சில அரசியல் அதிகார விசக்கிருமிகளால் வேறு ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். அப்போது நாங்கள் நல்லதை செய்ய எண்ணினோம் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இறைவன் கிருபை இல்லை என்று எண்ணிக் கவலைப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மண்ணின் ஒவ்வொரு அங்குலப் பகுதியைப் பற்றியும் நன்கறிந்த திருவாளர் இராசநாயகம் அவர்கள் வாழ்வின் இறுதிக் காலத்தில் சுமார் 450 அநாதரவான மாணவர்களின் பாதுகாவலனாகத் தன்னை மாற்றி இப்பிரதேசத்து வளங்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கு கல்வியையும் நல்வாழ்க்கையையும் ஒழுங்குபடுத்தும் ஒரு அற்புத பிறவியாக இருப்பது பாராட்டுதற்கு உரியது.

பூநகரிப் பிரதேசத்தில் பல்லவராயன்கட்டு என்னும் ஒரு தனிப் பிரதேச செயலாளர் பிரிவை ஆரம்பிப்பதற்கு எடுத்த முயற்சி வெற்றியின் விளிம்பில் மக்கள் தொகை போதாமையினால் தோல்வி கண்டது. எனினும் அவர்ஆற்றிய சேவைகளும் அவை பதித்த தடங்களும் என்றும் எவராலும் மறக்க முடியாதவை.

# பூநகரியின் பொற்கதவு அன்பர் இராசநாயகம்

**பொ.சிறிஸ்கந்தராசா,**
**குடும்பத்தினர்,**
**முன்னாள் யாழ் இந்து பிரதி அதிபரும்,**
**பிரதேச சபைத் தலைவரும் (பூநகரி),**
**சித்தன்குறிச்சி,**
**பூநகரி.**

பூநகரியின் தங்கக் கதவு என அன்பர் திரு.தி.இராசநாயகம் அவர்களை அவரது தந்தையார் மறைவின் போது குறிப்பிட்டு எழுதியிருந்தேன். தற்போது அவரது மதிப்பீட்டு வெளியீட்டின் போது பெருமையுடன் மீள வலியுறுத்தி எழுதுவது அவருக்குச் சிறப்பைத் தரும் என்பதில் ஐயம் இல்லை. அவர் எமது குடும்ப நண்பர் ஆவார். எனது மைத்துனர் தில்லையம்பலத்தின் விருப்புக்குரியவர் அவர்கள் எடுத்துரைக்க முடியாத ஐக்கியமானவர்கள்.

மன்னாரில் இருந்து அரச படைகள் ஏ - 32 வீதியூடாக படையெடுத்து சங்குப்பிட்டிவரை வந்து பரந்தன் வீதியூடாக முள்ளிவாய்க்கால் வரை சென்றபோது தமிழ் மொழி பேசி வாழ்ந்த மக்களின் வீடுகளை உடைத்தனர். வணங்கிய கோயில்களை இடித்தனர். அரச கட்டடங்கள் அனைத்தையும் அழித்தனர். பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் உயிரைக்குடித்துச் சென்றனர். அவற்றின் பிரதிப லிப்பு காணாமற்போனோர் உறவுகள் போராட்டம் 143 நாட்கள் ஆகின்றது: தொடர்கின்றது. நமது பாரம்பரியப் பிரதேசம் புதிய கல்மனைகளால் தீப்பெட்டி வீடுகளாக அழகு பெற்றாலும் உடைந்த நிலைமைகளிலும் உக்கிப்போன அரைப்பனை முக்கால் பங்கு தென்னை மரங்களும் சுவடுகளாக உள்ளன. பறை நாகப் பாம்புகளின் வாழ்விடங்கள்ாக இன்றும் உள்ளன. குறைந்தது 10 வருடங்க ளுக்கு ஓரிரு கிராமங்களைத் தவிர அனைத்துக் கிராமங்களும் மனித நடமாட்டம் அற்ற பகுதிகள் எருக்கலைக் காடுகளாக மிளிர்ந்தன. வன விலங்குகள் வாழ்விடமாக இருந்தன. இதனை எவரும் மறுக்க முடியாது

2009 க்குப் பின்பு தற்காலிக வீடுகளுடன் தவறாது மலசலகூடததில் மலம் கழிக்கும் பக்குவதற்திற்குள்ளாகினர். 19 கிராம சேவர்கள் பிரிவுகளிலும் மீள்குடியேற்றப்பட்டவர்களும் சில கிராமங்களில் வாழ்ந்தவர்களும் அன்பரைக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராகக் கண்ட போது பெருமை கொள்ள வைத்தவர். பல்வேறு அடிப்படைத் தேவைகளும் நிறைவேற்றப்பட வேண்டிய காலகட்டத்தில் அன்பரது அயாராது செய்த பணி கிளிநொச்சி மாவட்டத்திற்குக் கிடைத்த போது பூநகரிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்டவர்களுக்கு எள்ளளவும் குறைவின்றிக் கிடைக்கப் பெற்றன என்கின்ற போது பூநகரின் "பொற்கதவு" எனப் பூநகரி வாழ்மக்கள் எல்லோரும் புகழ்ந்துரைக்கும் மண்ணின் மைந்தன் அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரமைத்த "மகாதேவா ஆச்சிரமம்" வாழ்வின் வீழ்வில் நின்ற அநாதை இளசுகளை வாழவைக்க அமைத்த சமுத்திரத்தில் மிதந்த ஓர் மிதக்கும் மரக்குத்தியாகத் திகழ்ந்தது: இன்றும் திகழ்கிறது. இத்தனைக்கும் அவர் மின்கலம் உடலினுள் இணைக்கப்பட்டு இயங்குகின்ற ஒரு மனிதன் அவரின் பெறுமதி மிக்க செயற்பாடு முற்பிறப்பின் பயனும் நடமாட வைக்கிறது என 2016 ஆம் ஆண்டு மாதாந்த இல்லச் சிறார்களின் பிறந்த தின வைபவத்தில் சைவ சிந்தாந்தி என்ற வகையில் எடுத்துரைத்தேன்.

1970 களில் அவர் ஓர் நாஸ்திகர். பேராதனை பல்கலைக்கழகத்தில் ஊறிய இடதுசாரியாக மிளிர்ந்தவர். கொல்வின் என அழைக்கப்பட்டவர். வறுமையை மடமையைக் கண்டு துடிப்பவர். எழுச்சி உறுபவர். இன்று உருத்திரபுர ஈஸ்வரனின் முக்கண்களில் ஞானக்கண்ணில் பார்வைக் குட்டபட்டர். தெய்வமும் மனிதராகலாம் என்பவர்களது கோட்பாட்டிற்க்குக் காரணமாணவர்.

1971 களில் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபை அரச நியமனப் பதவி நிறைவேற்றப்பட்ட போது நியமனமாகி நேர்முகப் பரீட்சைகள் நடாத்தி பலருக்கு வேலை வாய்ப்புக் கொடுத்திருந்தேன். அப்பதவி நிறுத்தபட்ட போது தேர்தலில் போட்டியிடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போது அப்பதவிக்கு வரவிரும்பியவர்கள் தேர்தல் அன்று வாக்களிக்க சமூகமளிக்க மறுத்ததால் அவரை வீடு சென்று அழைத்து வந்து போட்டியிடவைத்து வெற்றி வாகை சூடினோம். நம்மவரி டையே கருத்துவேறுபாட்டை வளர்க்காது ஒரு தலைமையை ஏற்று வெற்றியையே குறிக்கோளாக வைத்து விட்டுக்கொடுப்புகளை செய்து தியாகப்பண்பை மேற்கொண்டேன். இன்று அதனை எழுதக் கூடிய திராணியுடையவனாக உள்ளேன். இன்னும் சொல்லப்போனால் தலைமைப் பதவி உமக்குத் தரலாம் எம்முடன் வா என அழைத்போது அதற்கு இசையாதவன். நல்ல தலைமை என்பதைவிட ஒரு தலைமைக் கட்டுக்கோப்பு அவசியம் இன்று வரை பின்பற்றி வருகின்றேன். இதனை நான் ஏன் இங்கு குறிப்பிடுகின்றேன் என்றால் நமது வடமாகாண சபையின் நாம் 43 வருடங்களுக்கு முன் செய்ததை செய்யத் தவறியுள்ளார்.

திரு.இராசநாயகம் அன்பர் காலம் படிப்படியாக வளர்ச்சி கண்ட காலம். எருது காளைகளுக்கு ஏர் பூட்டி வயல் உழுது நெல் அறுவடையே "வாழ்வு" என இருந்த சமூகத்தை அரச பதவிகளை அமரச் செய்து அவர்களின் வாரிசுகள் அரச உத்தியோகங்கள் மூலம் வருமானம் பெற அடித்தளம் வகுத்தவர்.

பொறுமை சிந்தித்துச் செயலாற்றல் சமூகத்தேவைப் பார்வை தகுதி மதிப்பீடு அன்பு நம்மவர் நம்மூர் என்ற இரத்த ஓட்டம் நிறைந்தவர். கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலகப் பிரிவு வாழ் மக்களது முன்னேற்றத்திற்கு மனிதர்களாக வாழ்வதற்கு உந்து சக்தியாக செயற்பட்டவர். பல்வேறு இடங்களில் கௌரவிக்கப்பட்டவர் என்றும் நினைவு கூரத்தக்கவர். அன்பரது பிள்ளைகள் வாரிசுகள் துணைவியர் மேலும் சிறப்புற வாழ்வது கண்டு அன்பர் நீடுழி வாழவேண்டும் என உருத்திரபுர ஈசனையும் ஈஸ்வரியையும் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் இல்லமே ஐயாவின் உயிர்மூச்சு

*ஈஸ்வரிநாதன் காண்டீபன், பொறியியல்மாணி*
*பிரதி முகாமையாளர், உற்பத்திக் கட்டுப்பாட்டுப் பிரிவு*
*எம்.ஏ.எஸ் இன்டிமேட்ஸ், விடியல் பிரிவு*
*கிளிநொச்சி.*

பிறர் பிள்ளை தலை தடவ தன் பிள்ளை தானே வளரும் என்பது முது மொழி. எத்தனையோ ஆதரவற்ற குழந்தைகளிற்கு ஐயாவாக இருப்பவர்தான் யாழ் மாநகரசபையால் யாழ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட முன்னாள் கிளிநொச்சி அரசாங்க அதிபர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத் தலைவர் திரு.தி.இராசநாயகம் அவர்கள். கொடிய வியாதிகள் பல அவரை உடல்ரீதியாக வாட்டுகின்ற போதும் உளரீதியாக மிகத் திடகாத்திரமாக சிறுவர் இல்லத்தை அவர் நடாத்திச் செல்லும் பாங்கு போற்றுதற்குரியதும் வணக்கத்திற்குரியதும் கூட. இவர் வெள்ளை வேட்டி வெள்ளை மேலாடையின் சொந்தக்காரன். எமது கலை கலாச்சார விழுமியங்கள் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவர். இப்பெருமகனாரின் பாராட்டு விழாவிற்காக வெளியிடப்பட இருக்கின்ற மலரிலே அவருடனான எனது பந்தத்தை பதிவிட கிடைத்ததை நான் செய்த பாக்கியமாகவே கருதுகின்றேன்.

MAS இன்டிமேட்ஸ்-விடியல் பிரிவு கிளிநொச்சி மண்ணில் உருவாகிய நாள் முதல் ஐயாவுடனான / இச்சிறுவர் இல்லத்துடனான தொடர்பு எனக்கு ஏற்பட்டது. அந்த வகையில் MAS குழும சொந்தக்காரர்களான மகேஷ், அஜே மற்றும் ஷெராட் அமலியன்களுக்கு நன்றிக்கடன் பட்டவன். அத்தோடு விடியல் நிறுவனத்தின் உருவாக்கத்திற்கு வித்திட்ட MAS இன்டிமேட்ஸ் நிறுவன முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளர் டயன் கோமஸ், முன்னாள் உற்பத்திபிரிவு இயக்குனர் நிபுன டயஸ், நிதி இயக்குனர் ருவான் கேரகல, விடியல் நிறுவன முன்னாள் பொது முகாமையாளர் ரவி விஜேநாதன், முன்னாள் கிளிநொச்சி அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் ஆகியோரும் நன்றியுடன் நினைவு கூறப்பட வேண்டியவர்கள். இவர்களின் அயராத உழைப்பின் பலனே விடியல் நிறுவனத்தின் உருவாக்கம். விடியலின் உருவாக்கமே எனக்கு வன்னி மண்ணை முத்தமிடவும் இச்சிறுவர் இல்லத்துடனான தொடர்பை பேணவும் வழி சமைத்தது. என்னை மஹாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு அறிமுகம் செய்து வைத்தவர் கரைச்சி பிரதேச செயலர் திரு.கோ.நாகேஸ்வரன் அவர்கள். கடந்த 5 வருடங்களுக்கு மேலாக ஐயாவுடனும் இச்சிறுவர் இல்லத்துடனும் நல்லுறவை பேணி வருபவன். இனிவரும் காலங்களிலும், நான் வன்னி மண்ணை விட்டு விலகிச் சென்றாலும் தொடர்ந்தும் இந்த உறவு நீடிக்கும்.

ஐயாவைப்பற்றிச் சொல்வதானால் அவரின் முழு மூச்சு இச்சிறுவர் இல்லமே. அதன் வளர்ச்சிக்காக அதற்கான தேவைகளை நிறைவு செய்வதற்கு எந்தளவிற்கு இறங்கி வேலை செய்ய வேண்டுமோ அந்தளவிற்கு இறங்கி வேலை செய்ய பின் நிற்காதவர். எளிமையான ஆனால் கண்டிப்பான நிர்வாகி. இவர் எத்தனையோ பெரிய பதவிகளை வகித்த போதும் சிறுவர் இல்ல செயற்பாடுகள் மற்றும் தேவைகள் என்று வருகின்றபோது ஒரு ஊழியனாகவே மாறிவிடுவார். இல்லச் சிறார்கள் இவர் மீது மிகுந்த அன்பும் நம்பிக்கையும் கொண்டவர்கள். அவருக்கு சுகயீனம் என்றால் தவித்து போய் விடுவார்கள். நான் வகுப்பிற்கு செல்லும்போது ஐயா வந்ததை, ஐயாவிற்கு சுகயீனம் என்பதை தான் முதலில் சொல்வார்கள். நான் ஆரம்ப காலங்களில் ஐயாவுடன் சிறுமிகள் தங்கியிருக்கும் இல்லத்திற்கு செல்லும்போது அவரின் மடியிலிருப்பதற்கு சிறார்கள் போட்டி போடுவதை காண முடியும். சாரங்கி என்ற சிறுமி ஐயாவை நோக்கி, "ஐயா நீங்கள் தான் எப்பவும் என் கண்ணுக்கு முன்னலே நிற்கிறீர்கள்" என்று சொன்னது இன்றும் என் மனக்கண் முன்னே. ஐயாவிற்கும் அவர்களின் எதிர்காலம் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதே சிந்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் கல்விக்கு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்கின்ற அதேவேளை அவர்களுக்கு அழகியற் கலைகள், விளையாட்டுக்கள் மற்றும் தற்காப்பு கலைகளையும் பயிற்று விப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். போர் சூழலில் பாதிப்பிற்குள்ளான பிள்ளைகளுக்கு விளையாட்டுக்கள் மற்றும் தற்காப்பு கலைகள் மிகுந்த மனத்தைரியத்தை வழங்கும் என்பதுடன் அவர்களின் மூளை செயற்பாடுகள் விருத்தியடையும் என்பதும் அவரின் அசைக்க முடியாத நம்பிக்கை. பிள்ளைகள் இப்படியான நிகழ்வுகளில் பங்குபற்றுவதனால் அவர்களின் கல்வி நடவடிக்கை பாதிப்படையும் என்கின்ற எனது சிந்தனைக்கு அவரின் மேற்கூறிய காரணங்கள் வாய்ப்பூட்டு.

என்னையும் ஐயா என்றே வரவேற்பார். ஆரம்ப காலங்களில் இது எனக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியது. ஒரு வயது முதிர்ந்தவர், அனுபவஸ்தர், பெரிய பதவி வகித்தவர் எங்கள் போன்றவர்களை ஐயா என்று அழைப்பது எப்படியான தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் என்பது நான் சொல்லி தெரிய வேண்டியதில்லை. என்னை வரும் விருந்தினர்களுக்கு என்ஜினீயர் காண்டீபன் என்றே அறிமுகம் செய்து வைப்பார். அந்த நேரங்களில் தான் எங்களுக்கும் நாங்கள் ஒரு என்ஜினீயர் என்பது ஞாபகத்திற்கு வரும். ஆரம்ப காலங்களில் "விடியல் காண்டீபன்" என்று செல்லமாக அழைத்தவர் காலப்போக்கில் "பார்ட்னர்" என்றும் அறிமுகம் செய்தார்.

ஐயா வன்னி மண்ணிற்கு குறிப்பாக கிளிநொச்சி மண்ணிற்கு செய்த சேவைகள் சொல்லி அடங்காதவை. அவர் இம்மண்ணின் மீதும் மக்கள் மீதும் அளற்ற அன்பு கொண்டவர். தான் வகித்த பதவி தனக்கிருந்த செல்வாக்கை பயன்படுத்தி தனக்கோ தன்னை சார்ந்தவர்களுக்கோ நன்மைகளை பெற்றுக் கொடுக்காமல் மக்களுக்காகவும் இச் சிறார்களுக்காகவும் அளப்பரிய சேவைகள் செய்த பெருமகனார். நானூறிற்கு மேற்பட்ட சிறுவர்களை கொண்ட சிறுவர் இல்லம் ஒன்றை நிர்வகிப்பதென்பது இலேசுப்பட்ட விடயமல்ல. இங்கே வேலை செய்யும் பணியாளர்களை சரியான முறையில் வேலைக்கமர்த்தி ஒப்பீட்டளவில் எந்த குறையும் இல்லாமல் இல்லத்தை வழி நடாத்தி செல்லும் பாங்கு போற்றுதற்குரியது. அவருக்கு உறுதுணையாக இருக்கும் நித்தியானந்தம் ஐயா, தர்மரத்தினம் ஐயா முகாமைத்துவ பணிப்பாளர் வேலாயுதம், கோபிதர்சன், சுபாஸ்கரன், கணேஷ்வரன். கல்விக்கு பொறுப்பாக இருக்கும் லிகிர்தா மற்றும் பணியாளர்களின் சேவையும் இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியதொன்றே.

ஐயா குறுகிய சிந்தையில் செயற்படாது நீண்ட நோக்கில் திட்டமிட்டு செயற்படுவதன் மூலம் சிறுவர் இல்லத்தை மற்றையவர்களிடம் கையேந்தி நிற்காது தன் சொந்தக் காலிலே நிற்கும்படி செய்வதற்கு அரும்பாடுபட்டு திட்டங்களை நிறைவேற்றி வருகின்றார். இல்ல வளவிற்குள் மாடு வளர்ப்பு, ஏக்கர் கணக்கில் தென்னந்தோட்டம், இயற்கை வாயு தயாரிப்பு, கஜு தோட்டம், நெல் வயல்கள் என ஏராளமான திட்டங்கள். இதில் வேலை செய்வதற்கு நம்பிக்கையுடன் கூடிய பணியாட்கள். ஒரு தீர்க்கதரிசனமுள்ள தலைவனிற்குரிய அனைத்து பண்புகளும் கொண்ட பெருந்தகை, சிறுவர்கள் மற்றும் ஆதரவற்றவர்களுக்கு இவர் அன்னை திரேஸா.

தலைவனை இழந்த தமிழினம் போலல்லாது, இந்த இல்லமும் இந்த இல்லத்தை நம்பி வாழும் சிறார்களின் எதிர்காலம் கருதியும் எல்லாம் வல்ல இறைவன் ஐயாவிற்கு நீண்ட ஆயுளை வழங்க வேண்டும் எனப் பிரார்த்திக்கொண்டு வாழ்த்த எனக்கு வயசில்லை ஆகவே வணங்கி விடை பெறுகின்றேன்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருத்தமான ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள யாழ் விருது

**Dr. ச. முருகானந்தன்.**

திட்டமிடுதல், செயற்றிறன், மனிதநேயம் அனைத்தும் ஒன்றே இணைந்த தி. இராசநாயகம் அவர்களுக்கு யாழ் விருது கிட்டியதையிட்டு பெரிதும் மகிழ்ந்தேன். பொருத்தமான ஒருவருக்கே இந்த விருது வழங்கியதன் மூலம் இவ் விருதும் சிறப்புப் பெறுகின்றது. ஒரே காலகட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் செயலாளராக ஐயாவும், மருத்துவராக நானும் பணியாற்றிய பசுமையான நினைவுகள் என் மனதில் இன்றும் அழியாது நிலைத்திருக்கின்றது. வளங்கள் சரியாகப் பயன்படுத்தப்படாமலும் புறக்கணிக்கப்பட்டிருந்த யாழ் மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த கிளிநொச்சி தனி மாவட்ட மாக்கப்பட்ட பின்னர் வளர்ச்சிப் பாதையில் புதுமெருகடைந்து வந்தது. இந்தக் காலகட்டத்தில் மாவட்ட அபிவிருத்திப் பணிகளைத் திட்டமிட வேண்டிய காலகட்டத்தில் திரு. தி. இராசநாயகம் ஐயா அவர்கள் இந்த மண்ணின் மைந்தனாக இருந்தமையால் அவரால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து பணியாற்ற முடிந்தது.

அவரது அபிவிருத்தித் திட்டங்களை முழுமையாகவும் சிறப்பாகவும் செயற்படுத்தப்படக் கூடிய வகையில் மாவட்டத்தின் அரசாங்க அதிபராக அவர் நியமிக்கப்பட்ட போது, இது மாவட்டத்திற்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. மாவட்டத்தின் மூலைமுடுக்குகளில் இருந்த ஒவ்வொரு குக்கிராமங்கள் பற்றியும் அறிந்திருந்த இவர் அவ்வவ் பகுதிகளுக்குப் பொருத்தமான அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து அவற்றை செயல்வடிவம் பெற வைத்தார். அவரது பார்வை கிளிநொச்சி நகரின் மேம்பாட்டுத் திட்டங்களுடன் நின்று விடாமல் பின் தங்கிய கிராமங்களிலும் தொலை தூர எல்லைப் பகுதிகளிலும் கூட செயல்வடிவானது. யாழ் மாவட்டத்துடன் ஒரு பகுதியாக இருந்தபோதும் கிளிநொச்சிப் பிரதேசம் வன்னி நிலப்பரப்புக்கே உரிய குணாம்சங்கள், வளங்கள், வனங்கள் என விரிந்திருந்ததுடன் பெரிய நிலப்பரப்பாக இருந்தமையினால் அதன் அபிவிருத்தியில் கவனம் செலுத்தும் முகமாகவே கிளிநொச்சி தனி மாவட்டமாக்கப்பட்டது.


பரந்த நிலவளமும் குளங்கள் நிறைந்த நீர் வளமும் விவசாயத்திற்கு மிகப் பொருத்தமான நிலப் பரப்பாக இனங்காணப்பட்டது. இதனாலேயே இங்கு வளம் குறைந்த பிரதேசங்களில் வாழ்ந்தவர் களும் இனக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட அகதிகளும் குடியேற்றப்பட்டார்கள். யாழ் மாவட்டத்துடன் ஒன்றாக இருந்தபோது கிளிநொச்சிப் பிரதேசத்தின் அபிவிருத்தியானது மந்த கதியிலேயே இடம் பெற்றது. அரச ஒதுக்கீட்டு நிதியிலிருந்து கிடைக்கும் அளவும் போதாமலிருந்தது. கிளிநொச்சி தனி மாவட்டமான பின்னர் தான் அதன் அபிவிருத்தி ஆர்முடுகலுடன் செயலூக்கம் பெற்றது. இந்தக் கால கட்டத்தில் இம் மாவட்டத்திற்கு கிடைத்த மாவட்ட செயலாளர் திரு.தி.இராசநாயகம் அவர்களின் செயற்றிறன் மிக்க அர்ப்பணிப்புடனான பணிகள் மாவட்டத்தை பல துறை களிலும் முன்னகர்த்தியது.

நீர் வளம், நில வளம், வனவளம் என்பவற்றை பயன்மிக்கதாக மக்களின் தொழிலையும் வாழ்வையும் வளம் மிக்கதாக ஏறு முகமாக்கியதில் திரு. தி. இராசநாயகம் அவர்களின் காலம் பொற் காலம் எனலாம். விவசாயத்தில் குறிப்பாக நெற்செய்கையில் மாவட்டத்தை மேம்பாடு அடைய வைத்து விவசாயப் பெருமக்களின் வாழ்வை ஒளியூட்டியதில் இவரின் பங்கு அபரிதமானது. விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பின்தங்கியிருந்த நிலையை மாற்றி முன்னேற்றம் காண வைத்ததில் ஓர் அரச அதிகாரி என்ற வகையில் அவர் பல முனைகளிலும் செயற்பட்டு அரச நிதியைப் பெற்றுக்கொண்டு பணிகளை விஸ்தரித்தார். மக்களை நேசித்த ஒருவராக இருந்தமையாலேயே தனது அரச பணியை மக்கள் சேவைக்கான அசுர பணியாக அல்லும் பகலும் ஓய்வின்றி உழைத்து இவரால் செயற்பட முடிந்தது. சம காலத்தில் ஒரு அரச ஊழியனாக இருந்தவன் என்ற வகையில் அவரது அரச பணிகளை மாத்திரமன்றி இதர மனித நேயப் பணிகளிலும் இராமாயணத்து அணில் போல என்னால் பங்காற்ற முடிந்தது என்பதை மன நிறைவுடன் கூறிக் கொள்கின்றேன்.


முப்பதாண்டு போர்க் காலத்தில் பிற்பாதிக்காலம் கிளிநொச்சி மாவட்டமே குருசேஷ்திரம் போல போர்க்களமாக இருந்தது. அதிலும் இறுதிப்போர் முழுக்க முழுக்க கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களையே மையப்படுத்தியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போரின் பின்...



# இல்லத்திலிருந்து எழும்

# குரல்கள்



புனரமைப்பின் பின்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடையூறுகளை முறியடித்த எழுச்சி பெற்ற மக்கள் பணி

**சி.துரைராஜா,**
**தலைவர். சின்னத்துரை சிறுவர் இல்லம்,**
**தம்பிராய், பூநகரி.**

திரு.திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களது சேவையை எமது கிளிநொச்சி மாவட்ட மக்கள் இன்றும் புகழ்ந்துரைப்பதனையும் போற்றுவதையும் நீங்கள் அனைவருமறிவீர்கள்.

இவர் பாரிய யுத்த நெருக்கடியான காலத்தில், பல குடியியல் நிர்வாக அதிகாரிகள் தாம் தப்பினால் பொதுமென மாவட்டத்தினை விட்டு ஓடிக்கொண்டிருந்த போது, லண்டனில் முதுநிலை விஞ்ஞானம் (MSc) பட்டக் கல்வியை முடித்தும் எமது மாவட்டத்தின் மக்களது துயர்துடைக்க நேராகவே மாவட்டத்தில் திட்டப்பணிப்பாளராகவும், திட்டமிடல் பணிப்பாளராகவும் முதலில் பணியேற்றார். இவருடன் 09 பேர் புலமைப்பரிசில் பெற்று லண்டன் சென்ற போதும் இவரும் இன்னொருவருமே நாடு திரும்பி எமது மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றினார். 1991 இல் இருந்து 2007 வரை மேலதிக அரச அதிபராக, அரச அதிபராகப் பொறுப்பேற்று திறம்படச் சேவையாற்றிய ஒருவர்.

ஒருமுறை 3 மாதங்களுக்கு மேல் தெற்கில் இருந்து உணவுப் பொருட்கள் வரவேயில்லை. மக்கள் பட்டினியை எதிர்நோக்கிய போது, துணிந்து பொது மக்களிடமிருந்த நெல்லைக் கடனாகப பெற்று மக்களுக்கு நெல்லை வழங்கி உயிர்வாழ உதவினார். 300 மில்லியனுக்கு மேல் கடனைப் பெற்று அரசிடம் இப்பணத்திற்குப் பதிலாக பொருளாகவே தொடரணி மூலம் உதவும் பொருட்களைக் கொண்டுவந்து ப.நோ.கூவிடம் கொடுத்து மக்களதும் இவர்களதும் கடனை அடைத்ததுடன் தொடர்ந்தும் உணவுப் பொருட்களை உறுதி செய்து, மக்கள் பட்டினி போக்கினர். இது மறக்க முடியாத உண்மை இக்காலத்தில் சங்கங்களால் இரண்டு, மூன்று பாரவூர்திகளை இந்தத் தொடரணிக் கூலியில் சொந்தமாக வாங்க உதவினார்.

13 ப.நோ.கூ சங்கங்களுக்கு மேல் யாழிலிருந்து இடம்பெயர்ந்த போது இவர்கள் அனைவருக்கும் கிளை அமைத்து தங்களது ஊழியர்களையும் இடம் பெயர்ந்த மக்களுக்கும் தொடரணியில் இடம் கொடுத்து கூட்டுறவுச் சட்டத்திற்கு மேலதிகமாக மனிதாபிமான அடிப்படையில் துணிந்து முடிவெடுத்து பொறுப்பெடுத்து சகல மக்களுக்கும் உணவு பெற தடையின்றி அரசிடம் வாதாடிப் பெற்றுக் கொடுத்தார்.

அதுமட்டுமல்ல 1996 இல் தொடரணியில் கொண்டுவரும் உணவுப் பொருட்களுக்கு பாதுகாப்பு வழங்குவதனை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பல்வேறு அழுத்தத்தால் நிறுத்தியது. இவர் அரசுடன் பேசி அரச அதிபர் உணவு வாகனத் தொடரணியை ஆரம்பித்து உணவை கச்சேரி தொடரணி உத்தியோகத்தர்கள் மூலம் கொண்டு வந்தார். இதனை வராமல் செய்ய பல நடவடிக்கைகள் அதிகார வர்க்கத்தால் செய்த போதும் இது தொடர்ந்தது.

1997 ஆம் ஆண்டு ஜூலையில் கொண்டு வரப்பட்ட உணவுத் தொடரணி நொச்சிமோட்டை காவலரணில் இடம்பெற்ற இருபக்கச் சண்டையில் பாதிக்கப்பட்டதுடன் தொடரணி உத்தியோகத்தர்கள் சிலர் காயமடைந்தும், பொதுமக்கள் சிலர் இறந்தனர். இதனால் கச்சேரித் தொடரணி உத்தியோகத்தர்கள் எவருமே இந்தத் தொடரணிச் சேவையில் ஈடுபட மறுத்தனர். இதனால் உணவுத் தட்டுப்பாடு மீண்டும் ஏற்பட்டது.

அப்போது வவுனியா பாரவூர்திச் சங்கமும் அழுத்தம் காரணமாக வாடகைக்குப் பாரவூர்தி தர மறுத்துவிட்டது. கிளிநொச்சி தனியாரும் மறுத்துவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் அத்தியாவசிய ஆணையாளர் நாயகத்திற்கும், வன்னிப் படைத் தளபதிக்கும் அறிவித்து தானே தொடரணியை கூட்டுறவுச் சங்க 25 பாரவூர்திகள் மூலம் கொண்டு வருவதாகவும் உணவுக் கட்டளை தருமாறு கோரிப்பெற்றார். 25 பாரவூர்திகள் 5 நாள் தடுத்து வைத்து நம்பிக்கையான திருத்துனரை அமர்த்தி உறுதிப்படுத்தி தன்னந்தனியாக 25 பாரவூர்திகளையும் ஓமந்தைக்கு வெள்ளைக் கொடியுடன் சென்று கடவையைத் திறக்கச்செய்து உணவுத் தொடரணியில் 25 பாரவூர்திகளுக்கும் உணவு ஏற்றியதும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் உறுதிப்பத்திரம் தரவில்லை. தாமதித்தனர்.

தொடரணியை நிறுத்த இவர்கள் ஏதாவது செய்வர் என உணர்ந்த இவர், அவர்களுக்குப் பின்னால் ஒரு மணிநேரம் திரிந்து பார்த்தபோது புலனாய்வாளர் ஒருவர் இறுதிப் பாரவூர்தியில் இரண்டு பற்றறிகளையும் தோட்டாவையும் போட்டதை அவர் கண்டுவிட்டார். உடனடியாக வன்னித் தளபதிக்கு இச்சம்பவத்தினை நேரடியாக இவர் தான் போட்டதாக எடுத்துக் கூறினார். அவர் உடன் நேரடியாகத் தொடரணிக்கு வந்து விசாரித்து நிலைமையைப் புரிந்து 24 பார ஊர்திகளையும் கொண்டு செல்வதற்கான அனுமதியை மாலை 6.00 மணிக்குத் தந்தார். தடுத்த வைத்த பார ஊர்த்திக்கு ஒருவரை நீதிமன்றத்தில் பாரப்படுத்தத் தருமாறு கேட்டனர். கரைச்சி ப.நோ.கூ.சங்க கொள்வனவு உத்தியோகத்தர் திரு.கந்தையா மட்டுமே சம்மதித்தார். அவரை அனுப்பிவிட்டு ஓமந்தைக்கு வந்து பரிசீலித்து வெளிக்கிட விடியப்புறம் 3 மணியாகிவிட்டது. பின்பு எம்மவர் தங்களது களஞ்சியத்தில் பறிக்குமாற வாதிட 2.00 மணிக்கு மேலிடத்தில் தொடர்புகொண்டு நீங்கள் எடுத்தால் இதுதான் கடைசி தொடரணியாகப் போகவும்மாட்டேன் எனக்கூறி தனக்கு இடமாற்றம் பெற்று வெளியேறும் அனுமதிச் சீட்டுத்தருமாறு கோரினார். ஊழியர் பிரச்சினையை அறிந்த திரு. தமிழேந்தி கச்சேரிக்கே பாரவூர்திகளை விடுவிக்குமாறு தடைசெய்யக்கூடாது என் கட்டளையிட கச்சேரிக் களஞ்சியத்தில் பறிக்கப்பட்டு அன்றே மக்களுக்கு வழங்க ப.நோ.கூ.சங்கத்திற்கு வழங்கி மக்களது உயிரைக் கார்த்தார். போராடி உயிரைத் துச்சமென மதித்து சேவையாற்றினார். அதற்கு மேலாக சுனாமியின் போது புல்டோசர், பக்கோ 40 சில் உழவியந்திரம், 20 சில் உழவியநதிரம் உட்பட பல வாகனங்களைத் துணிந்து அரசிடம் வாதாடிப் பெற்று கழிவுகளை அகற்றி தெருக்களைத் திருத்தினார். கடற்கரையோரங்களைத் திருத்தினார். இவர் நெருக்கடியான காலத்தில் துணிந்து பதவியேற்று மக்களுக்கு உதவியதுடன், சமய சமூகப் பணியாற்றியவர். சுனாமியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ பாரிய திட்டங்களை வகுத்து பெருமளவு நிதி பெற்று கல்லாறு வீதி அறிவியல் நகர் வீதி உட்பட உருவாக்கியவர். இப்படியாக இவர் எமது மக்களுக்கு ஆற்றிய சேவைகள் ஏராளம். அவை என்றும் அனைவராலும் நினைவு கூரப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுய ஆதாரத்தில் சிறுவர் இல்லம்

**செல்லையா செல்வரத்தினம்,**
**சிரேஸ்ர உபதலைவர்,**
**சிறுவர் பராமரிப்பு இல்லம்,**
**முறிப்பு ஜெயந்திநகர்.**

பல்வேறுபட்ட பொது அமைப்புக்களில் இருந்து கொண்டு சேவையாற்றி வரும் இவர் அண்ணளவாக 35 வருடங்களுக்கு முதல் 18 பிள்ளைகளை ஒன்று சேர்த்து சுவாமியின் மனப்பூர்வமான விருப்பத்துடன் சிறுவர் இல்லத்தை அமைத்தார். இதற்கென முறிப்பில் 25 ஏக்கர் காணி வழங்கப்பட்டது. சுவாமிஜி அவர்கள் இக்காட்டுக் காணியினை கூலியாட்களைக் கொண்டு துப்பரவு செய்து கொட்டகை அமைத்து மாணவர்கள் விடுதியும் அமைத்து சிறுவர்களை பராமரித்து வந்தனர். சிறுகத் தொடங்கிய இச்சிறுவர் இல்லம் இன்று 425 மாணவர்களுடன் மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. இப்பெருமைக்குரிய விடயம் இராசநாயகம் ஐயா மற்றும் சுவாமிஜி அவர்களின் முயற்சியின் விளைவேயாகும்.

இச் சிறுவர் இல்லத்தினை இன்றும் கண்ணும் கருத்துமாக கவனித்து வருகின்றனர். சிவகுரு யசோதரன் அவர்களால் இல்லத்திற்கென அன்பளிப்பாக வழங்கப்பட்ட 100 ஏக்கர் காணியில் தென்னம் பிள்ளைளை வைத்து பராமரித்து வருகிறார். இவரது இம் முயற்சியானது எதிர்காலத்தில் சிறவர் இல்லத்திற்கான வருமானத்தை பெற்றுத் தருகின்ற அரிய முயற்சியாகும்.

இதைவிட, சிறுவர் இல்லத்திற்காக வயல் காணிகளை வாங்கி அவற்றில் நெல் விதைத்து பிள்ளைகளின் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்ய வழிசெய்துள்ளார். மேலும் வாழை போன்ற பயன் தரும் பயிர்களை நாட்டி அதன் மூலம் வருமானத்தினை ஈட்டிக் கொள்ளல், கறவைப் பசுக் களை வாங்கி பாலினைப் பெற்றுக்கொள்ளல் போன்ற வருமானம் ஈட்டிக் கொள்ளகின்ற பல திட்டங் களை வகுத்து செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் சிறந்த செயல் வீரனாக விளங்குகிறார்.

தொடர்ந்தும் இவரது சேவை தொடரவும் சுகதேகியாக பல காலம் வாழவும் எல்லாம் வல்ல உருத்திரபுர சிவன் கருணைபெற வேண்டுமென பிராத்திக்கிறேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட செயல் வீரன்

"தன்னலமற்ற தரமான சேவையாளனை
நன்மைகள் பல நாடி வந்தடையும்"



**சு. தர்மரத்தினம்,**
**முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்,**
**கிளிநொச்சி.**

விவசாயக் கல்லூரி, ஆண் தாதியர் பயிற்சி, திட்டமிடல் சேவை, பொது நிருவாக சேவை அத்தோடு சமூகசேவை போன்றவற்றிலும் தடம் பதித்துள் ளார் திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள் இத்தனைக்கும் மகுடம் வைத்தாற் போல் மிக உன்னதமான யாழ் விருது வழங்கி கௌரவிக்கப்பட் டுள ளார்.

"அன்ன சத்திரம் ஆயிரம் நாட்டல்
ஆலயம் பதினாயிரம் ஆக்கல்
இன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்"

எனும் பாரதியார் கவிதைக்கிணங்க ஆதரவற்ற குழந்தைகள் 420 பேருக்கு நல்வழி காட்டி வருகின்றார்.

அவர் கடும் சுகயீனமுற்று யாழ் பொது வைத்தியசாலையில் படுக்கையில் இருந்த போது மிக மிக பெரிய வைத்தியர்களாலும் கைவிடப்பட்டிருந்த வேளை இக் குழந்தைகளின் பிரார்த்தனை காரணமாக மீண்டெழுந்து வந்தமை புதுமையன்றோ.

2010 ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் போது சில தகரங்களோடும் தரப்பாள்களுடனும் இங்கு வந்து இல்லத்தை ஆரம்பித்து பல சவால்களுக்கு முகங்கொடுத்து மனந்தளராது மேற் கொண்ட நடவடிக்கைகளால் இவ் இல்லம் இன்று பெருவிருட்சமாக வளர்ந்து பலருக்கு ஆறுதல் தருகின்றமை பெருமைக்குரியதே.

பல பெருமக்களின் உதவியோடு பற்பல வளங்களையும் பெருக்கிக் கொண்டமை அவரால் மட்டும் தான் முடியும்.

சுனாமி வந்தபோது உண்ணாமல் உறங்காமல் அவர் செயற்பட்டதால் கிளிநொச்சி மாவட்ட கரையோர மக்கள் பெரும் பலனடைந்தமை அந்த மக்களுக்குத் தெரியும்.

கரைச்சிப் பிரதேச சபைக்கு அக்காலப் பகுதியில் புனர்வாழ்வு அமைச்சால் வழங்கப்பட்ட வாகனமொன்றுக்குரிய ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள புனர்வாழ்வு அமைச்சுக்கு யான் சென்றிருந்த போது அவ் அமைச்சின் செயலாளர் கூறிய வார்த்தைகள் இன்றும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

"சுனாமி உங்களுடைய மாவட்டத்தைத் தான் முல்லைத்தீவிலும் பார்க்க அதிகமாகப் பாதித்திருக்கின்றது போல இருக்கின்றது. ஏனென்றால் உங்களுடைய அரச அதிபர் புனர்வாழ்வுக்குரிய அதிகமான வாகனங்களைக் கொண்டு போயிருக்கின்றார்" என்றார் இதிலிருந்து எங்கள் விழா நாயகன் எவ்வளவு கண்ணுங் கருத்துமாக இருந்திருக்கின்றார் என்பது புலனாகின்றது.

ஐயா என்று எங்கள் எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் இவர் இல்லத்தின் எதிர்கால நலனுக்காகப் பல செயற்றிட்டங்களைத் திட்டமிட்டு செயற்படுத்தி வருகின்றார் என்றால் மிகையாகாது.

ஐயாவைக் கண்டதும் இல்லக் குழந்தைகளின் முகம் அன்றலர்ந்த செந்தாமரையைப் போல மலர்ந்து நிற்கும். ஐயா அவர்கள் ஏழைகளில் சிரிப்பிலே கடவுளைக் காண்கின்றார் என்பதே உண்மை. ஐயா நீடுழி வாழ வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழை மாணவர்களின் பசி தீர்த்த சத்துணவுத்திட்டம்

*அ. கனகரத்தினம்,*
*முன்னாள் கிளி/ பாரதி வித்தியாலய அதிபரும்,*
*மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல,*
*உதவித் தலைவர்களில் ஒருவரும் சமாதான நீதவானும்.*



அரச தொழில் காலத்தில் எந்த நிர்வாகத்துடனும் இணைந்து கடமை புரியக் கூடியவர். குருகுலம் மங்கி பெயரிழந்து போனபோது அதற்கு தனி மனிதனாக உழைத்து மகாதேவாசுவாமிகள் சிறுவர் இல்லம் எனப் பெயர் சூட்டி வழிகாட்டும் தந்தை. இவர் வாழ்க பல்லாண்டு காலம் வாழ வேண் டும். உரிய பணியினை உயர்வுடன் ஆற்றும் ஒருவனுக்கு ஒப்படைக்கும் வரை நீண்ட ஆயுளைக் கொடுக்க வேண்டும் என இறைவனிடம் இறைஞ்சுகின்றேன்.

1996 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் ஏற்பட்ட இடப்பெயர்வினால் 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சி யில் தற்காலிகமாக வசித்து வந்த யாழ்ப்பாண மக்களும் சேர்ந்து இடம் பெயர்ந்து அக்கராயன், ஸ்கந்தபுரம், அம்பலப்பெருமாள், வன்னேரிக் குளம், ஆனைவிழுந்தான், ஜெயபுரம், கோட்டை கட்டிய குளம், முழங்காவில், மாங்குளம், மல்லாவி, பாண்டியன்குளம் ஆகிய இடங்களில் காட்டை வெட்டித் துப்புரவாக்கியும் உறவினர், நண்பர்கள் ஆகியோர் வீடுகளிலும் வாழ்ந்து வந்த காலம். மக்கள் மட்டுமல்ல பாடசாலைகளும் இடம்பெயர்ந்து அங்குள்ள பாடசாலைகளுடன் இணைந்தும் சில பாடசாலைகள் காட்டை வெட்டித் துப்புரவாக்கி தற்காலிகக் கொட்டில்களை அமைத்தும் பாடசாலை களை அமைத்து மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை நடத்தி வந்தார்கள்.

காட்டை வெட்டித் துப்புரவாக்கி தற்காலிகக் கொட்டில்களை அமைத்து பாடசாலை நடத்திய பாடசாலைகளில் கிளி/ பாரதி வித்தியாலமும் ஒன்று.

எவ்வளவு கஸ்டத்தின் மத்தியிலும் பாடசாலைச் செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெற்றமை மாணவர்கள் போதிய உணவு இல்லாதபடியாலும் போசாக்குள்ள உணவு சாப்பிடக்கூடிய வசதி இல்லாதபடியினால் படிக்கும் நேரங்களிலும் விளையாடும் நேரங்களிலும் சோர்ந்து விழுவதையும் நித்திரை செய்வதையும் கிளி/பாரதி வித்தியாலய அதிபராகிய நான் பலமுறை அவதானித்த படியால் அவற்றை கடிதம் மூலம் அப்போது கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களுக்கு 1997 ஆம் ஆண்டு ஆனி மாதம் 26 ஆம் திகதி மு.ப 10:00 மணியளவில் இலைக்கஞ்சி வழங்கும் திட்டம் பற்றி அனுப்பியிருந்தேன். அன்று மாலை 4:00 மணிக்கு முன் எனக்கு பதில் அனுப்பியிருந்தார். அக்கடிதத்தில் இரண்டு மூடை சீனியும் இரண்டு மூடை அரிசியும் அனுப்புவதாகவும் அந்த நேரத்தில் பாடசாலைக்கு அண்மையில் இயங்கி வந்த தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திடம் தேவையான உபகரணங்களை வாங்கும் படியும் மறுநாள் ஆனி மாதம் 27 ஆம் திகதியே இலைக்கஞ்சி சத்துணவுத் திட்டத்தை ஆரம்பிக்கும் படியும் இலைக் கஞ்சி காய்ச்சி கொடுப்பதற்குரிய தேவையான பொருட்களை 3 மாத காலத்திற்கு தான் தருவதாகவும் அதன் பின் நீங்களே அவற்றைப் பெற்று நடத்தும் படியும் மாலை 4:00 மணிக்கு முன் அனுப்பியிருந்தார்.

பாடசாலை ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் பெற்றோர்களினதும் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் உதவியுடனும் அரசாங்க அதிபராகிய திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களையும் கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக விளங்கிய திரு.க.வைரமுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களையும் அப்போது கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத் தலைவராக விளங்கிய திரு. சிறில் அவர்களையும் அழைத்து இலைக்கஞ்சித் திட்டத்தை ஆரம்பித்திருந்தேன்.

கிளி/பாரதி வித்தியாயலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இலைக்கஞ்சித் திட்டம் நல்ல முறையில் நடைபெற்றதையும் அதனால் மாணவர்கள் பாடங்களை நன்றாகப் படிப்பதையும் விளையாடுவதையும் பாடசாலைக்கு மாணவர்கள் ஒழுங்காக வருவதையும் அறிந்த அரசாங்க அதிபர் அவர்கள் மேலும் மூன்று பாடசாலைகளுக்கு இலைக்கஞ்சித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். சில மாதங்களின் பின்னர் மனிதநேய முன்னேற்ற அமைப்பு (கியூடெக்) கூட்டுறவுச் சங்க ஒன்றியமும் தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் சேர்ந்து கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் முழுவதற்கும் இலைக் கஞ்சித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். இதனால் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் பலன் பெற்றார்கள்.

இலைக்கஞ்சித் திட்டத்தை முன்னாள் அரசாங்க அதிபர் திரு.திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள் கிளி/பாரதி வித்தியாலய அதிபராக அக்காலத்தில் கடமையாற்றிய யானும் சேர்ந்து ஆரம்பித்து வைத்தபடியால் பல மாணவ மாணவிகள் பட்டதாரிகளாகவும் ஆசிரியர்களாகவும் எழுது வினைஞர்களாகவும் நாட்டுக்கு சேவை செய்யக் கூடிய சிறந்த மனித சமுதாயத்தை உருவாக்கக் கூடியதாக இருந்தது.

கிளிநொச்சி மனிதநேய முன்னேற்ற நிலையம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தி. இராசநாயகம், கிளி/பாரதி வித்தியாலய அதிபர் திரு. அ. கனகரத்தினம், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. அரியரத்தினம், திரு. பொன்.சபாபதி, கூட்டுறவுச் சங்க ஒன்றியத்தின் தலைவர் திரு. சொலமன் சிறில் அவர்களையும் அவர்களுடன் சேர்ந்து கடமையாற்றிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் சகல பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் எல்லோரையும் பாராட்டும் நோக்குடன் 2007 ஆம் ஆண்டு 10 ஆம் ஆண்டு நிறைவு விழாவை மிகவும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். அன்றைய நிகழ்வில் திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களையும் இலைக்கஞ்சித் திட்டத்திற்கு வித்திட்ட கிளி/ பாரதி வித்தியாலய முதல்வர் திரு. கனகரத்தினம் அவர்களையும் பாராட்டி வாழ்த்தினார்கள்.

அரசாங்க கட்டுப்பாட்டில் இல்லாமல் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கிளிநொச்சி மாவட்டத்தில் இப்படியான பாரிய அளவில் பாடசாலை மாணவ மாணவியர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருவதையிட்டு அரசாங்கம், அரசாங்க அதிபர் திரு. தி. இராசநாயகம் அவர்களை புகழ்ந்தும் பாராட்டியும் வந்தார்கள்.

1997 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலைக்கஞ்சித் திட்டம் பிற்காலத்தில் பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவுத் திட்டமாக மாறியது.

மனிதநேயம் கொண்ட, ஜீவகாருண்ணியம் மிக்க, கடும் உழைப்பாளியாகிய, ஏழைப் பிள்ளைகளின் இரட்சகராகிய திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் ஜெயந்திநகர் கிராமத்தில் இயங்கி வருகின்ற மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத் தலைவராக இருந்து 500 ற்கு மேற்பட்ட அநாதைச் சிறார்களை நல்ல முறையில் உணவு, உடை, கல்வி மற்றும் தேவையானவற்றையும் கொடுத்து நடத்தி வருகின்றார். ஐயாவின் சேவை தொடர்ந்தும் அநாதைச் சிறுவர்களுக்குக் கிடைக்க எல்லாம்வல்ல இறைவன் அவருக்கு நீடிய ஆயுளையும் நல்ல சுகத்தையும் கொடுக்க வேண்டுமென்று ஆண்டவனை வேண்டிக்கொள்கின்றேன்.

வளர்க அவர் புகழ்! வாழ்க அவர் நாமம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our God Father

**J. Kajeepan,**
**University of Sri Jeyawardanapura**



The children in the Mahadeva Swamikal Children home are blessed with our one and only Iya who has an integrated personality which reveals incredible wonderful character. We have him as our role model but we cannot reach his heights in all aspects.

There is no equality for him honest government service, social service and creating charitable organizations in time.

With regard to my own life I perceive that Nambiyandar Namby could not compile the hymns if not for Rajaa Raja Cholan.

In our current life we see parents backing for the victory of some successful personalities.

Likewise we are supported by our mighty Iya.

He is very much impressed in our tender hearts

He initiated the celebration of birthdays and puberty ceremony for our girls like in the society.

He has the talent to collect cent by cent from donors like honey bees.

I can tell you one unforgettable incident during my A/L studies

One day I was studying alone till midnight; I saw Iya standing by me and I was astonished. He brought some tea for me to chase sleepiness.

I can remember a lot of incident that have touched my heart in relation action to Iya's activities towards my studies.

In fact I can write till hours and hours about our dearest Iya who practically dedicated to the betterment of all the children of this home .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லச் சிறுவர்களின் தந்தை

செல்வி க.காவேரி,
இல்ல மாணவி.

*வாழ்விற்கும் எம் ஐயா
உம்மைப் பற்றி
எழுதும்போது மட்டுமே
எம் மனதில் புதிய பிறவி பிறக்கின்றது*

*கடலலையை எடுத்து வந்து கைகளுக்குள்ளே
அடக்க முடியாத ஒரு முயற்சி போலவே
இது எனக்குப் படுகின்றது
அஜந்தா ஓவியம் என்னை அசத்தவில்லை
இந்த இல்லத்தின் தந்தை தான் எமக்கு
பல கருத்துக்கள் கூறி
எம்மை தன் பிள்ளை போல்
எம்மை உயர்ச்சி அடைய வைத்தார்*

*எல்லோருக்கும் ஐயாவாக
இருக்கலாம் ஆனால்
இந்த இல்லச்சிறார்களுக்கு
தந்தையாக திகழ்கின்றார்*

*தன் உறவுகளை விட்டு
எம்முடன் சிரித்துப்பேசி
எம் மகிழ்ச்சிக்காக
இங்கு தினமும் வருகை தருவார்*

*சுகயீனம் வந்தல்கூட
தன் சுகயீனத்தைப் பாராது
எம்கல்வியைப் பற்றித்தான்
சிந்திப்பார்*

*சாஜகான் தனது
காதலிக்காக மட்டுமே
தாஜ்மகாலைக் கட்டினார்
அதைப்போல் எம் ஐயாவின்
அன்பை தாஜ்மகாலைவிட
உயரமாகக் கட்டுவோம்*

*வருடந்தோறும் விழாக்கள்
சிறப்பாக நடைபெற வேண்டுமானால்
எம் இல்லத் தந்தை இல்லாமல்
அவ் விழா சிறப்பாக நடைபெறாது*

*ஒரு நாள் சுகயீனம்
மாற்ற முடியாத சுகயீனமாக இருந்தபோது
இல்லக் குழந்தைகள் இறைவனிடம்
பிரார்த்திப்பார்கள்*

*எமக்கு துன்பங்கள் குறையும்
சிரிப்புக்கள் ஒலிக்கும்
எம் இலட்சியங்கள் ஜெயிக்கும்
ஐயாவின் கனவுகள் கலையாகும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவையின் மைந்தனாம் எம் அன்புத் தந்தை

**திலகேஸ்வரி,**
**இல்லமாணவி.**

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற திருநாவுக்கரசு நாயனாரின் வாக்கிற்கிணங்க தனது சேவைதனை செவ்வனே செய்து வருகின்றார் எம் அன்புத் தந்தை. அந்த வகையில் குழந்தைகளாகிய எங்களுடைய மனதில் என்றுமே வற்றாத நதியாய் ஊற்றெடுத்துக் கொண்டிருக்கும் அன்புத் தந்தை நீங்கள் தான் ஐயா. ஐயா உங்கள் சேவைதனை சொல்லால் இயம்பிட முடியாது.

யுத்தத்தின் பின் கேள்விக்குறியாக இருந்த எனது எதிர்காலத்தை சிறந்த முறையில் செப்பனிட்ட பெருமைக்குரியவர் நீங்கள்தான். அன்று நீங்கள் எனக்கான எதிர்காலத்தை செப்பனிட்டமையை எண்ணி இன்று நான் பெருமைப்படுகின்றேன். நான் பதினாறு வயதிலிருந்து தற்பொழுது இருபத்து நான்கு வயது வரை சமார் 8 வருட காலமாக தங்களின் அரவணைப்பில் இருப்பதையிட்டு உள மகிழ்கின்றேன். அதுமட்டுமன்றி அன்று நான் யாருமற்ற ஏதிலியாய் தடுமாறி நின்ற பொழுது உனக்கான எதிர்காலம் உண்டு என்று என்னை அணைத்து தோள் கொடுத்தது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம். இவ் இல்லத்தின் தந்தை நீங்கள் என்பதை எண்ணி அன்று நான் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். வறுமை, பாதுகாப்பு ஆகிய இரண்டும் என்னை வாட்டிய போது என்னை இவ் இல்லத்தில் கல்வியைத் தொடர வழிகாட்டினீர்கள் ஐயா. எந்தக் குழந்தையும் இந்த சிறுவர் இல்லத்திலிருந்து கல்வி கற்பது போல் சகல விதமான வசதிகளுடனும் தனது கல்வியை வேறு இடங்களில் தொடர முடியாது. ஏனெனில் வீட்டில் இருக்கும் குழந்தைகளில் சிலர் உண்ண உணவின்றி படுக்கப்பாயின்றி வீதிகளில் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். நான் வீட்டில் இருக்கும் போது குப்பி விளக்கில் தான் படித்தேன். இருந்தபோதும் இங்கு மின்சார விளக்குகள் மத்தியில் ஆளுக்கொரு கட்டிலுமாக எவ்வளவு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. நான் எனது வீட்டில் இருப்பதை விட இங்கு எல்லா வசதிகளுடனும் எல்லோருடைய அரவணைப்பிலும் மிக மிழ்ச்சியாக எனது எதிர் காலத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றேன். பெற்றோர்கள் இல்லாத எமக்குத் தாயாகவும் தந்தையாகவும் நீங்கள் இருந்து தங்களது பணிப்பின் கீழ் பணிபுரிபவர்கள் எங்களுக்கு சகோதரர்களாகவும் இருந்து எம்மை வழிநடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

எமக்கு வெறுமனே புத்தகக் கல்வியை மட்டும் புகட்டாது தனது குழந்தைகள் சகல துறைகளிலும் தமது திறமைகளை வெளிக்கொணர வேண்டும் என்பதற்காக கராத்தே, யூடோ, சங்கீதம், நடனம், நாடகம், தையல் போன்ற துறைகளில் எம்மை ஈடுபடச் செய்து தேசிய மட்டப் போட்டி வரை சென்று வென்று வந்திருக்கின்றோம். அது மட்டுமன்றி வீட்டில் உள்ள குழந்தைகள் தமது பிறந்த நாள், பூப்புனித நீராட்டு விழா போன்றவற்றைச் செய்கிறார்கள். அதேநேரம் தனது குழந்தைகள் அதை நினைத்து வருந்தக்கூடாது என்பதற்காக ஒவ்வொரு மாதமும் வரும் கடைசி ஞாயிற்றுக் கிழமை அன்று பிறந்தநாள் விழா நடைபெற்று வருகின்றது. இக் கொண்டாட்டமானது வெறுமனே கொண்டாட்டமாக அல்லாது குழந்தைகளிடத்தே இலைமறை காய் போல மறைந்திருக்கும் பல்வேறு பட்ட திறமைகளை வெளிக்கொணர இது பெரிதும் உதவுகின்றது. அது போன்றே பூப்புனித நீராட்டு விழாவும் கொண்டாடப்படுகின்றது.

வீட்டில் இருக்கும் குழந்தைகள் நோய் வாய்ப்பட்டால் அவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு எவ்வளவோ சிரமப்படுகின்றார்கள். ஆனால் எமக்கு வாகனம் ஒழுங்கு படுத்தப்பட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கின்றார்கள். நான் எனது உயர் கல்வியைத் தொடர்வதற்காக பலரிடமும் கையேந்தி என்னை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பெருமளவு தொகைப் பணத்தினைச் செலுத்தி கல்வியைத் தொடர வைத்தீர்கள் ஐயா. அதன் பயனாக நான் தற்பொழுது இரண்டாம் வருடம் படித்துக் கொண்டிருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நான் வீட்டில் இருந்தால் இந்தப் பெருமளவு பணத்தினைச் செலுத்தி படித்திருக்கமாட்டேன். எங்கள் ஐயா சிறுவர் இல்லத்தைப் பார்வையிட வருபவர்களிடம் எத்தனையோ முறை என் கண்முன்னே இந்தப் பிள்ளைக்கு உதவி செய்யுங்கள் என்ற கேட்டு இரந்து நின்றதை நான் என்றும் மறவேன். ஐயா தனது உடல் நலத்தையும் பாராது குழந்தைகள் மேல் கொண்ட அன்பினால் எவ்வளவு நோய்வாய்ப்பட்டிருந்தாலும் எங்களை வந்து பார்க்காமல் போகமாட்டார். வீட்டில் இருக்கும் குழந்தைகள் வருடப்பிறப்பு, தீபாவளி, தைப்பொங்கல் போன்ற பண்டிகைகளின்போது புத்தாடை அணிகின்றார்கள். அதேபோல் எங்களுக்கும் புதிய ஆடை வாங்கித் தந்து மகிழ்விப்பதில் வல்லவர். ஐயாவின் இந்தப் பேருதவியால் என்னைப்போன்று நானூறுக்கு மேற்பட்ட குழந்தைகள் இந்த இல்லத்தில் கல்வி கற்று வருகின்றார்கள்.

ஐயா நீங்கள் செய்த இந்தப் பேருதவியை யாம் என்றும் மறவோம். உங்கள் சேவையை சொல்லில் வடித்திட முடியாது. தாங்கள் மென்மேலும் சுக தேகியாக இருந்து நற்பணி புரிய வேண்டும் என்று இறைவனை வேண்டுவதோடு எப்பொழுதுமே எம் அருகில் இருந்து எம்மை ஆசீர்வதித்துக் கொண்டிருக்க வேண்டும் ஐயா.

# தாயான தலைமை

**தெ. திலீபன் (ஆசிரியர்),**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,**
**புதுமுறிப்பு.**

*வாழ்க்கை அழைக்கின்றது*
*போரின்ஒலிகள் ஓய்ந்தாலும்*
*காரிருளில் தமிழரின் வாழ்க்கைகள்*
*வடுக்கள் ரணங்கள் ஆயிரமாய்*
*படுகின்ற பாடுகளோ கழுமரமாய்*
*திக்கற்ற வாழ்க்கையில் திசை மாறிய*
*தீர்ப்புக்களாய் மழலைகளின் உதயங்கள்*
*அரவணைத்த அன்னையும் தந்தையும்*
*அழுதுபட்ட யாருமில அனாதைகளாய்*
*வீதியிலும் நீதியிலும் நிர்க்கதியாய்*
*வீணாக அலைக்கழித்த சோகங்கள்*
*மகாதேவா இல்லத்தில் ஒன்றியதால்*
*மாதாவின் அன்பினை நுகர்ந்தோமே*
*தாயகம் ஒருவரின் தலைமையால்*
*நாமினி தலைநிமிர்ந்து வாழ்வோமே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரியின் கர்ணன்

**ஜெ. பிரபுதேவா,**
**மகாதேவா ஆச்சிரமம் சிறுவர் இல்லம்.**

*கல்வியும் கவின்கலைகளும் உடல் உளப்போட்டிகளும்*
*கணினியும் தொழிற்பயிற்சிகளும் நல்லாக்க முயற்சிகளும்*
*பூரணமாய் தேர்ச்சியுற்று தங்கள் முன் சமர்ப்பிப்போம்*
*பூநகரின் கர்ணனே தலைவராய் நீர் எமக்கு*
*பல்லாண்டு காலம்வழிநடத்த பகவானை வேண்டுகின்றோம்*

*அண்ணல் காந்தியின் அகிம்சை வழியில்*
*அல்லல் உறும் மக்கள் தம் துயர்கள் களைந்த*
*அரச அதிபராய் கிளிநொச்சி நகரின்*
*அறங்காவல் வள்ளலே இராசநாயகம் ஐயாவே*

*ஆயன் மேய்க்கும்மந்தைக் கூட்டங்களாய்*
*ஆயிரம் ஆயிரம் தொண்டர்கள் பின்வர*
*ஆக்கங்கள் படைப்புக்கள் புத்தொளி வீச*
*ஆண்டுகள் தோறும் உட்(ன்) கட்டுமானம் சிறக்க*

*இல்லையென மறுப்பின்றி நிவாரணங்கள் புனர்வாழ்வு*
*இல்லங்கள் நிறுவி ஏழைகள் ஏதிலிகள் தம்*
*இவ்வுலகில் நல்வாழ்வு அமைத்த பெரியோனே*
*இளைப்பாறிய பின்பும்நும் பணிகள் தொடர்கின்றது*

*நன்றி!*

தங்களின் அரவணைப்பில் வளர்ந்த இல்லச் சிறுவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பால் அரவணைக்கும் ஒளிவிளக்கு

**இல்ல மாணவி கி.மஞ்சுளா,**
**க.பொ.த (உ/த) கலைப்பிரிவு (2018).**

என்றும் என் மனம் நிறைந்த அன்புத் தந்தையே உங்கள் சேவையை எண்ணி எழுத ஆரம்பிக்கின்றேன். சில விழுதுகளை யுத்தத்தின் பின் அநாதரவற்ற தாய், தந்தையை இழந்து யாருமற்ற நிலையில் எம்மை மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் அணைத்தெடுத்தது. ஆரம்பத் திலேயே எமக்குத் தேவையான பாதுகாப்பை முழுமையாக வழங்கினார்கள். எம் மாணவர்களின் மனங்களைப் புரிந்து கொள்ளும் அத்திவாரமாக எம் தந்தை உயர் திரு.தி.இராசநாயகம் ஐயா காணப்பட்டார்.

தாய், தந்தை இல்லாத பிள்ளைகளுக்கு தான் தாயாகவும் தந்தையாகவும் காணப்பட்டவர் தான் எம் ஐயா. இவ்வாறு தன் சுகபோகங்களை மறந்து தன்னைத் தியாகம் செய்யும் தியாகச் சுடர் எம் தந்தை எங்களை மறந்து புன்னகை சிந்தும்போது அதை தன் குழந்தையை இரசிப்பது உணர்வுடன் அதனை இரசித்து சிரிப்பார். இவ்வாறு எம்மைத் தன் கைக்குள் வைத்து பாதுகாத்து வளர்த்தெடுப் பவர். சில காலங்களில் அயலில் வசிக்கும் பிள்ளைகளை விட நாம் சந்தோசமாக இருக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு மாத இறுதியிலும் பிறந்த நாள் விழாவை மிக எளிமையுடன் கொண்டாடு வதற்கு வழி சமைத்தார். எல்லாவற்றிற்கும் மேலாக இவ் விழாக்களை எம் மனங்களிலே ஏற்பட்ட துன்ப வடுக்களை போக்குவதற்கும் அடித்தளமாகக் காணப்படுகின்றது.

ஒரு வீட்டில் ஒரு குழந்தையை வளர்ப்பதே மிகவும் கஷ்டமாக இருக்கும். ஆனால் நம் இல்லத்தில் நானூறுக்கும் மேற்பட்ட குழந்தைகளை சகல அடிப்படை வசதிகளையும் கொடுத்து பாதுகாத்து வருகின்றனர். எம் தந்தை என்றால் அது சொல்லில் அடங்காது மற்றும் பாதுகாப்புக்காக மட்டுமே இருந்த எம்மை பல்துறை சார்ந்த கலைகளிலும் பயன்பெற வழிவகுத்தார். மற்றும் "கல்வியில் மட்டும் முன்னேறினால் போதாது விளையாட்டும் இருக்க வேண்டும்" என்று எம் தந்தை அடிக்கடி கூறுவதுண்டு. நாம் கல்வியில் மேன்மை பெற வேண்டும் என்பதற்காகப் பல ஆசிரியர்களை வரவழைத்து எமக்கு கல்வியைப் புகட்டுகின்றார். இவ்வாறு எம் அன்புத் தெய்வத்தின் சேவையைக் கூறிக்கொண்டே போகலாம் என்பது குறிபபிடத்தக்கது. முக்கியமாக க.பொ.த சாதாரண தரத்தில் ஒரு தடவை தோல்வியடைந்தால் மனம் தளரவிடும் போது ;தோல்வி இல்லையென்றால் வாழ்க்கையில் வெற்றி இல்லை. நீங்கள் மீண்டும் கல்வி கற்று நல்ல பெறுபேறுகளைப் பெறலாம்"என்றெல்லாம் அறிவுரை சொல்லி எம் மனதைத் தேற்றும் ஒரு தெய்வம். எல்லாவற்றையும்விட எமக்கு ஏற்படும் சில பிரச்சினைகளை மிகவும் நிதானித்து சுமூகமாகத் தீர்த்து வைக்கும் சுபாவம் உடையவர். அது மட்டுமல்ல ஒவ்வொரு வீடுகளிலும் கூட இவ்வாறு விழா செய்வதில்லை. அதாவது பூப்புனித நீராட்டு விழா. இந்த விழா வீட்டில் கொண்டாடுவதை விட எந்தக் குறையும் இல்லாமல் தானே தந்தையாக நினறு அதனை மிகவும் துல்லியமான முறையில் குதூகலமாகச் செயற்படுத்துபவர். எமக்கும் பல வழிகளிலே வாழக் கற்றுத் தருபவர். வாழ்க்கையின் பாடமாக அமைவது அனுபவம் தான் என்பதை உணர்த்துவதற்காக ஒவ்வொரு விழாக்களிலும் ஒவ்வொரு பெரியவர்களை வரவழைத்து அவர்களது அனுபவமே எங்களது வாழ்க்கைக்குப் பாடமாக அமைய வழிகாட்டுவார்.

பல வெளி இடங்களிலே ஒருவேளை உணவுக்காக கஷ்டப்படுகின்றார்கள். ஆனால் எம் தந்தை எமக்கு ஒரு வேளை உணவைக்கூட விசேடமாகத் தான் வழங்குவிப்பார். அக்கறையும், அன்பும் பண்பும், பாசமும், பரிவும் அதிகமாக உடையவர். நாளை பெண் பிள்ளைகள் தலைநிமிர்ந்து நடக்க வேண்டும், யாரிடமும் அடிமைப்பட்டு முடங்கக்கூடாது என்பது மட்டுமல்ல, பெண் பிள்ளைக ளுக்கு வாழ்க்கையில் கல்விதான் முக்கியம் என்றும் சாதனைகள் பல புரிந்து தன் பிள்ளைகள் முன்னேற வேண்டும் என்பதற்காக கூறிய அறிவுரைகள் என்றும் எம் காதுகளில் நாதஸ்வரமாய் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. எம் தந்தைக்கு அவரது சேவை நலன் பாராட்டி விருதுகள் பல வழங்கியிருக்கிறார்கள். அந்தத் தருணத்தில் கூட என்னைவிட மேலானதாக சாதனை புரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்" என்ற வார்த்தையே அவரிடம் இருந்து வெளிவரும். இப்படியெல்லாம் கருணை உள்ளம் கொண்டவர்கள் எத்தனைபேருக்கு கிடைப்பார்கள். ஆகவே எம் தந்தை எமக்குக் கிடைத்த அரிய பொக்கிஷம். எங்கிருந்தாலும் என்றும் இன்பமுடன் இன்னல்கள் பல தீர்ந்து இன்முகத்துடன் இனிதே வாழ என் மனமார என் தந்தையை வாழ்த்துகின்றேன்.

"பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம் ஆனால்
இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்"

# ஏழை மாணவர்களுக்கு உதவும் ஈகையாளன்

**இல்ல மாணவி,**
**செல்வி. யோ. றஜனி.**

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றலவானிலும் நனிசிறந்தனவே" என்ற புரட்சிக் கவிஞர் மகாகவி வாக்கிற்கு இணங்க பிறந்த நாட்டிற்கு மட்டுமல்ல பல ஆதரவற்ற குழந்தைகளையும் அரவணைத்து இன்புற்றுள்ளார்

பூவுலகத்தில் மனிதப் பிறவியை எடுப்போர் மேற்காட்டி நாவலர் பெருமான் கூறும் முத்தியின் பத்தைப் பெற பல்வேறு வகையான மார்க்கங்களைத் தேடிக்கொள்கின்றார்கள். தங்களின் சிந்தனை களை இறைவனை வணங்கல், ஆன்மீகப்பணி, கல்விப் பணி, வைத்தியப்பணி ஆகியவற்றில் திசைக்கோட்படுத்தி அதிலே ஒரு மன மகிழ்ச்சியைப் பெற்று அதனை இறைவன் பணியாக நினைத்து பற்றுறுதியுடன் செய்த பெரியவர்களை நாம் அறிவோம்.

இந்த வகையில் தன் சிந்தனைகளை சமூகம் சார்ந்த சிந்தனைகளாக மாற்றி அதற்கு செயல் வடிவம் கொடுத்து அடக்கமான சமூக சேவைகள் மற்றும் ஈகையிலே சிவந்த கரங்களையும் உள்ளத்தால் உயர்ந்த மனிதநேயம் கொண்ட மனிதநேயராகவும் எங்கள் ஐயா இவ்வுலகில் மிளிர்கின்றார்.

உலகம் மாறி வருகின்றது. உலக ஒழுங்குகளும் மாறி வருகின்றன. இம் மாற்றங்களுடன் போட்டியிட்டு தக்கன பிழைத்து தம்மை தக்க வைப்பதற்கு ஒரே கருவி கல்வியே. கரையில்லா கல்வியானது இன்றைய அறிவுலகில் பல்வேறு பரிணாமங்களைத் தாண்டி வளர்ச்சி பெற்றுள்ளது. சுவர்கள் அற்ற பல்கலைக்கழகங்களைக் கூட நவீன தொழில்நுட்பம் தோற்றுவித்துள்ளது. ஆனாலும் இக் கல்வியின் சரஸ்வதி கடாட்சம் சகலருக்கும் கிட்டுவதில்லை. பொருளாதார வளம் குறைந்த மாணவர்களையும் தட்டிக்கொடுத்து தூக்கி எடுத்து உலக நீரோட்டத்திற்குள் சேர்த்துவிட வேண்டிய பெரும் சமூகப்பொறுப்பு உள்ளவராக மனிதநேயம் கொண்ட மாமனிதராக எங்கள் ஐயா விளங்குகின்றார் என்றால் அது மிகையாகாது.

"தனம் தரும் கல்வி தரும்" தனம் படைத்தோர் எல்லோரும் கல்விக்காக வாழ்ந்தவர்கள் அல்ல. கல்விக்காக உழைத்தவர்களுமல்ல. இன்னும் என்னென்ன சேவைகள் கல்விக்காக அதுவும் எம்போன்ற பல ஏழை மாணவர்களுக்காக உதவி செய்தார் என்பதை உலகமறியும். அவ்வாறான சிலர் காலத்திற்குக் காலம் தோன்றிய வண்ணம் தான் உள்ளனர்.

ஐயாவினது சேவைகள் சோதிப்பிளம்பாக ஒளி வீசுகின்றது. சமூக சேவைப் பணியின் ஒளிக் கதிர்கள் பெருமளவிற்கு கல்விப்புலம் நோக்கியதாகவே அமைந்து காணப்படுகின்றது. " கல்வி கொடுத்தோர் கண் கொடுத்தோர்" என்ற முதுமொழிக்கிணங்க பிரதிபலனாக எம் போன்ற ஏழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களையும் சிறந்த கல்வி ஞானம் பெற்றவர்களாக வளர்த்துக் கொண்டிருக்கின்றார். தன்னலம் கருதாத சேவையாளராக எங்கள் ஐயா காலவோட்டத்தில் அவர் உடல் தளர்வடைந்தாலும் அவர் உயர்ந்த உள்ளம் வளர்ந்து கொண்டே செல்கின்றது. இது தான் அவரின் கொடையின் சிறப்பாகவும் அமைந்துள்ளது. அவர் ஆற்றிவரும் கல்வித் தர்மம் என்றும் அவர் தலைகாக்கும். தர்மம் உள்ளவரை அவர் நிலைத்திருக்க வேண்டும் என வாழ்த்த வயதில்லை என்பதால் வணங்குகின்றோம்.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு"

# நான் கண்களால் பார்த்த தெய்வம் எங்கள் ஐயா

***செல்வன் பிரபாகரன் பிரதாப்,***
***இல்ல மாணவன்.***

உயர்திரு. தி. இராசநாயகம் ஐயா, நான் எனது கண்களால் பார்த்த ஒரே ஒரு தெய்வம் என்று தான் கூறுவேன். நான் அம்மா, அப்பாவின் அரவணைப்பில் இருந்ததைவிட ஐயாவின் அரவணைப்பில் இருந்த நாள்கள் தான் அதிகம்.

நான் இல்லத்திற்கு 03.01.2006 அன்று இணைந்தேன். அப்போது இல்லம் ஐயாவின் முழுப் பொறுப்பின் கீழ் தான் இருந்தது. ஆனால் அதற்கு முன்னர் எமது இல்லத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவர்கள் தாங்கள் வாழைத்தண்டு கறியும், அறுகம்புல் சம்பலும், வெறும் பூசனிக் காய் கறியும் சாப்பிட்டு படிப்பதற்குக் கூட நேரம் கிடைக்காமல் எந்த நேரத்திலும் வேலையாக இருந்த எமக்கு ஐயா எமது இல்லத்தை பொறுப்பெடுத்ததன் பிறகு எந்தக் குறையும் இல்லாமல் எமது கல்வியைத் தொடர்வதற்கு வசதியாக உள்ளது என்பது எனது காதுகளால் கேட்டறிந்த உண்மை. அன்றிலிருந்து இன்று வரை நான் எமது இல்லத்தில் தொடர்ச்சியான கல்வி கற்று வருகின்றேன். எங்களுக்கு படிப்பது மட்டுமல்லாமல் விளையாட்டு, கலாசாரம், தலைமைத்துவம், ஒழுக்கம் போன்ற அனைத்துச் செயற்பாடுகளிலும் இன்று வரை எந்தக் குறைவும் இல்லாமலே ஐயா எங்களை அனைவரிடமும் கையேந்தி கவனித்து வருகின்றார்.

எந்தநேரமும் எங்களின் நினைவாகவும் சிந்தனையாகவும் ஐயா உள்ளார். இப்போதும் ஐயாவுக்கு உடல்நலக் குறைகள் இருந்தாலும் அதனைப் பொருட்படுத்தாது எங்களின் நலனிலேயே கூடுதலான அக்கறை செலுத்திய வண்ணமே உள்ளார். நான் ஐயாவுடன் பலமுறை இரவு வேளை களில் கதைத்திருக்கின்றேன். அந்நேரம் நான் ஐயாவுக்கு உடலில் இவ்வளவு பிரச்சினைகள் உள்ளதா என்பது எனக்குத் தெரிய வந்தது. மாத்திரைகள் சாப்பிடுவதையும் தனக்குத் தானே ஒவ்வொரு இரவும் ஊசி போடுவதையும் நான் கண்டு கொண்டேன்.

அப்போதும் எங்களோடு கதைத்த வண்ணமே இருப்பார். நாங்கள் நன்றாகப் படித்து சமூகத்திற்கும் எங்கள் இல்லத்திற்கும் நல்லவற்றைச் செய்ய வேண்டும் என்று எந்நேரமும் கூறிக் கொண்டே இருப்பார்.

ஐயாவின் காலப் பகுதியில் தான் எங்களுக்கான சகல வசதிகளும் செய்து தந்தார். அதாவது படுக்கை அறை வசதி தொடக்கம் விளையாட்டு, கராத்தே, நடனம், சமய, கலாசார நிகழ்வுகள் அனைத்திலும் பங்கு பற்றி பரிசில்களை வென்றிருக்கின்றேன். அனைத்தும் ஐயாவினால் தான் என்றும் மட்டும் தான் நான் கூறுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா எனக்கு எண்ணற்ற தடவைகள் பேசி இருப்பார். ஆனால் நான் அவற்றை எண்ணி ஒரு போதுமே கோபப்பட்டதே இல்லை. ஏன் தெரியுமா எங்கள் ஐயா எங்கள் நன்மைக்காகவே எல்லாம் செய்பவர் என்பதால். ஐயா நாங்கள் ஏதாவது வேலை செய்தால் அதில் உள்ள குறைகளை மட்டுமே பேசுவார் என்று நான் வருந்தினேன். ஆனால் அதுவும் எங்களின் நன்மைக்காகவே என்று எங்களைப் பற்றி ஐயா வேறு யாருடனும் கதைக்கும் போது விட்டுக் கொடுக்காமல் கதைக்கும் போது உணர்ந்து கொண்டேன். ஐயா எங்கள் அளவுக்கு தனது சொந்தக் குடும்பத்தில் கூட அக்கறை செலுத்துவதில்லை.

நான் 2012ம் ஆண்டு கராத்தேயில் கறுப்புப் பட்டி பெற்றேன். பல தடவைகள் மாவட்ட, மாகாண, தேசிய ரீதியில் பதக்கங்களைப் பெற்றுள்ளேன். சமய, கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றி உள்ளேன். விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றி இருக்கின்றேன். தற்போது உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் கீழ் (ATI) உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (Higher National Diploma in accounting HNDA) 3ம் வருடம் படித்துக் கொண்டிருக்கின்றேன். அத்துடன் பட்டயக் கணக்காளர் ஆவதற்கான படிப்பும் படித்துக் கொண்டிருக்கின்றேன். இவை அனைத்திற்கும் காரணம் எங்கள் ஐயா தான்.

நான் இறுதியாக ஐயாவைச் சந்தித்தபோது CIMA எனப்படும் முகாமைக் கணக்காளர் கல்வியைக் கற்பதற்கு அனுமதி கேட்ட போது படிப்பதற்கு அனுமதி கொடுத்தார். ஒருபோதும் எங்கள் படிப்பு சம்பந்தமான விடயங்களில் ஐயா எந்தவிதத்திலும் தடையாகவே இருந்ததில்லை. ஊக்குவிப்ப வராகவே காணப்படுகின்றார்.

எனவே நான் ஐயாவின் நம்பிக்கைக்கு பங்கம் விளைவிக்காதவாறு நடந்து கொள்வேன்.

எங்கள் ஐயா நோய், நொடிகளின்றி பல்லாண்டு காலம் வாழ எல்லாம்வல்ல இறைவனை என் சார்பாகவும் எங்கள் இல்லக் குழந்தைகள் சார்பாகவும் மனதார வேண்டுகின்றேன்.

ஐயாவின் வரலாறு தாங்கிய இந்நூலில் எனது சிறிய பகிர்வை வழங்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கியமைக்கு எனது இதயபூர்வமான நன்றிகள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# கட்டுரைகள்



# கவிதைகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பா" வைத்து சொல்வோம் பணிந்து

*கலாபூசணம்,*
*சந்தக்கவிஞர்.*
*நவ.பாலகோபால்*

## வெண்பா

அன்னைதயைக் குணத்தோ டடியார் பணிநலமே
என்றுதொண் டாற்று மியல்பாளன் - அன்றிருந்து
சேவையே கதியென்று செயலாற்றும்பாங்கதனைப்
"பா" வைத்துச் சொல்வோம் பணிந்து

வெல்லத் தமிழினிக்கு மெம்மகத்தாய் மாந்தற்கு
வெல்லச் செயலாற்றும் வித்தகனே - அல்லுபகல்
ஓயாப் பணியாற்றும் உயர்ராச நாயகரே
தாயாவா ராதுலர்க்குத் தான்

## விருத்தம்

என்னக மெனது மக்கள்
என்பதே முதலாய்க் கொண்டு
உன்னரும் சேவை தன்னை
உரமுட னாற்றி மேலாம்
பொன்னகர மாக வெங்கள்
பூமியை மாற்ற வெண்ணி
எண்ணரும் பாடு பட்டாய்
ஏந்தலே வாழ்க! வாழ்க!

அரசாங்க அதிப ராகி
அந்தநாள், வியக்கும் வண்ணம்
உரமுடன் துணிச்சல் கொண்டு
உன்னதச் சேவை செய்த
கரமுங்கள் கரமே யென்று
கண்டவர் யாருஞ் சொல்லுந்
தரத்தினைப் பெற்றா யையா
தரணியே போற்ற வாழ்க!

முதியோர்கள் நலனை நோக்கி
முன்னின்று அவர்கள் வாழ
கதிகாட்டி மனித நேயக்
கரத்தினை நீட்டிக் காத்து
அதிவேக மாக வெல்லா
ஆக்கங்கள் பலவும் செய்து
மதியுடன் கட்டிக் காக்கும்
மாண்புடை யோனே வாழ்க!

தமிழ்வாழ்வெம் மிடங்க ளெல்லாம்
தழைத்த வுன்சேவை யென்றும்
அமிழாது நிலைத்து நிற்கும்
அரும்புகழ் தன்னைப் பெற்றாய்
அமிழ்தான வுள்ளங் கொண்ட
அரும்மருந் தான கோனே
கமழ்ந்திடும் தொண்டோ டென்றும்
காலகா லங்கள் வாழ்க!

நாளெலாம் மக்கள் துன்ப
நலிவெலாம நீக்கு மேக்கம்
ஆழ்மன மதனில் கொண்டு
அரும்பாடு படுதல் தன்னை
சூழ்ந்துள பெரியோர் மற்றும்
சுடர்மிகும் அறிஞர் போற்றி
"யாழ்" விரு தீந்தார் மேலும்
ஞாலமே போற்ற வாழ்க!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துக் கவிதை மலர்

கே.எஸ்.வசந்தகுமார் (இ.நி.சே)
பிரதேச செயலாளர்,
முசலி.

முன்னை செய்த நல்வினைப் பயனால்
உன்னை ஈன்றோர் உவகை அடைந்தார்
உன்னால் உன் மண் உயர்வு கண்டதால்
உன் பேர் சொல்லி பெருமை கொண்டனர்

உள்ளொன்று மறைக்கத் தெரியாதவர்
உண்மைக்கு மாறாக பேசாதவர்
கள்ளமில்லா சேவை தன்னால் - ஏழைகள்
உள்ளமெல்லாம் நிறைந்துள்ளீர்

திட்டமிடல் பணியில் அகரம் தொட்டீர்
பெற்றோரை அறியாப் பிள்ளைகள் மனதில்
அப்பாவும் நீயே அம்மாவும் நீயே
குறைகள் கூறும் கூட்டத்திற்கு நடுவே

நிறைகள் காட்டி நிழலாய் இருந்தீர்
தவறுகள் செய்யா மனிதரல்ல என்ற
தராதரம் அறிந்த நீதிபதி நீயே
உன்னைப் பிடிக்காதவர் யாரென்று தேடினேன்

உம்மைப் பிடிக்காத மனிதரென்று கண்டேன்
உள்ளத்தில் ஊனம் உள்ள சிலபேர்
எண்ணத்தில் மட்டும் எட்ட நின்றார்
பொன்னை உரசிப் பார்ப்பது போல்

உன்னை உரசிப் பார்த்தே - யாழ்
மாநகர விருது தந்தனர்
தராதரம் உயர்ந்தது விருது
உடல் தளர்ந்த செய்தி கேட்டு

கடல் அலையாய் நல் மனமெல்லாம்
இறைவனை இறுகப் பிணித்துக்கொண்டன
உடல் நலம் தேறி பணி செய்திடவே
கிளி மண்ணின் இராச நாயகம் நீ

நல் வழி காட்டும் தீப நாயகம் நீ
மதியுரை சொல்லும் மதிநாயகம் நீ - என்றும்
விழா, விழா நாயகன் நீயே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியின் பன்முக ஆளுமை



***திரு அமரசிங்கம் கேதீஸ்வரன்,***

**B.A(Hons) M.Phil (Economic) Diploma in Planniing)**

***உதவித்திட்டமிடல் பணிப்பாளர்,***

***மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.***

தனிமனிதன் ஒருவன் தான் வாழும் காலத்தில் ஆற்றிய பங்களிப்பை அவன் வாழுகின்ற போது மதிப்பீடு பகிர்ந்து கொள்வது என்பது மிக மிக அரிதாகவே இடம் பெறுகிறது. இருக்கும் போது அவரைத் தூற்றிக்கொண்டு இருப்பவர்கள் இறந்ததும் ஆகா, ஓகோ எனப் போற்றிக்கொண்டு இருப்பதுமான வேடத்தன்மையே. சமூக மதிப்பீடாக இப்போது செயல்படும் சூழலில் கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் அரச அதிபரும் பன்முக ஆளுமைப் புலமை கொண்டவருமான திரு.திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களின் சேவையை வாழும் காலத்தில் மதிப்பிட்டு வெளிவரும் இந்நூலுக்கு அந்த நாளில் நல்ல மனிதன் பற்றிய மதிப்பீட்டை ஓர் ஆய்வுக் கட்டுரையாக எழுதக் கிடைத்த வாய்ப்பு மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகிறது.

சமூகவியல் அறிவுப்பரப்பில் இருந்து ஒரு தனிமனிதனின் ஆளுமை பற்றி மதிப்பிடும் போது நேர்த்தியும் சிறப்பும் மிக்க செயல்பாடுகளைக் கொண்டு நெருக்கடி மிகுந்த சூழலை தனக்குச் சாதகமாக்கி இம் மாவட்டத்தின் முதல் மகனாக முத்திரை பதித்துக்கொண்ட ஒரு மனிதனாகவே திரு.திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களை நான் பார்க்கின்றேன். 1950 களிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்த பூர்வீக பண்பாட்டுடன் கூடியவர்களும் குடியேற்றக் கிராமங்களைச் சேர்ந்தவர்களும் தமது மேல் கல்வி தொடர்பில் யாழ்ப்பாணப் பகுதிக்குச் சென்று தங்கி படித்ததனால் சமூக வாய்ப்பை தமக்குரியதாக்கி வந்தனர். இவ்வகையில் பூநகரி பகுதியில் இருந்து யாழ்ப்பாண பாடசாலைகளில் கல்வி கற்று கலைத்துறை பட்டதாரியாக தம்மை வளப்படுத்திக் கொண்டவர்களில் முதல்தர வரிசையில் இருந்து பல்கலைக்கழகக் கல்வி பெற்ற ஒருவராகவே இவர் காணப்படுகின் றார். பல்கலைக்கழக தகைமையுடன் பொதுச் சுகாதார பரிசோதகராகத் தொடங்கிய இவரது பொது நிர்வாகப்பணி அதன் உச்சத்தைத் தொடும் வரை பயணித்து நிறைவடைந்திருக்கிறது. இவ் வகையில் இம்மனிதனின் பன்முக ஆளுமையை நான் பின்வரும் மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஆராய முற்படுகின்றேன்.

**1. சிறந்த தலைமைத்துவ பண்புகளுடன் சமூக நடைமுறைகள் மாறுபடாத நல்ல பண்பாளன்.**

**2. தற்துணிவும், அது சார்ந்த பொறுப்பை பொறுப்பேற்றுக்கொள்ளலும்.**

**3. சூழலை தன்வயமாக்கி தான் நினைப்பதை சாதித்துக்கொள்ளும் ஆற்றல்.**

## 1. சிறந்த தலைமைத்துவ பண்புகளுடன் சமூக நடைமுறைகள் மாறுபடாத நல்ல பண்பாளன்.

ஒரு நல்ல தலைவன் எப்போதும் தனது பின்பற்றுவோனின் நடத்தை மீது செல்வாக்கு செலுத்தி அவர்களின் இயல்பான ஒத்துழைப்பைப் பெற்றே கருமங்கள் ஆற்றுகின்றான். இவ்வகையில் 1994 ஆம் ஆண்டு நான் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த போது அப்போது வழுங்கப்பட்ட பட்டதாரி நியமனத்தைப் பெறாது இருந்த போது இதனை எனது அயலில் உள்ளவர்கள் மூலம் தானாக அறிந்து என்னை கொழும்புக்குச் சென்று இப்பணியைப் பெறதான் ஒழுங்கு செய்வதாகக் கூறி ஒரு சிபார்சுக்கடிதத்தை அப்போதைய கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் திரு. மாலியத்தவுக்கு வரைந்து எனது அயல் வீட்டு பிள்ளை மூலம் எனக்கு அனுப்பி வைத்ததுடன் இவரை கட்டாயமாக எமது திட்டமிடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சிலேயே நியமனம் வழங்குமாறும், கிளிநொச்சியில் இடமில்லையாயின் முல்லைத்தீவிற்கு அவரை நியமிக்குமாறும், தானே ஒரு முடிவை மேற்கொண்டு தனக்கு முகம் தெரியாத ஒருவருக்கு சிபார்சுக் கடிதத்தை அனுப்பி வைத்தார். அக்கடிதத்துடன் சென்ற நான் செயலாளரால் உடனடியாக முல்லைத்தீவிற்கு நியமிக்கப்பட்டேன். அன்றிலிருந்து நான் இவருக்கும் எனக்குமான இணைப்பு உருவாகத் தொடங்கியது. நான் முல்லைத் தீவிற்குச் சென்றதால் இவரைப் பார்க்கவும் இல்லை, அறியவுமில்லை. நான் முல்லைத்தீவிலிருந்து விரைவில் அவரை கிளிநொச்சிக்கு மாற்றி எடுப்பேன் என அதே அயலவரிடம் மீளவும் செய்தியை அனுப்பிவைத்தார். நான் வந்து சந்திக்கவில்லை என்றோ, சந்திக்குமாறோ அவர் கூறவும் இல்லை. இது அவரது சரியான தலைமைத்துவப் பண்பைச் சுட்டி நிற்கும் ஒரு அம்சமாகவே நான் பார்க்கின்றேன். செய்யும் உதவிக்கு எவ்வித பிரதிபலனின்றி செயல்படும் போக்கை அது உறுதி செய்துள்ளது. பின்னர் ஒரு நாள் எனது இடமற்றக் கடிதத்தை கொழும்பில் இருந்து ஒரு உண்மைப் பிரதியை அதே அயலவரிடம் கொடுத்து விரைவாக விடுவிப்புப் பெற்று வருமாறு எனக்கு கிடைக்கச் செய்தார். நான் அதனை அப்போதைய முல்லை அரச அதிபர் திரு.தர்மகுலசிங்கத்திடம் சமர்ப்பித்தபோது அவர் அதனை முகத்திற்கு நேரே எறிந்து நான் யார்? இராசநாயகம் யார்? என கத்திக்குழறி அடித்தார். ஆனால் பத்துத்தினங்களில் எனக்கு விடுப்புக் கடிதத்தை வழங்கி அனுப்பி வைத்தார். இதன் பின்பு தான் இவரை நேடியாகச் சந்தித்தேன் என்பது ஒரு நல்ல தலைவன் தான் விரும்பியதை தனது பின்பற்றுபவரின் தன்னியல்பான ஒத்துழைப்பைத் தூண்டிப் பெற்றுக் கொண்டதற்கு உதாரணமாக் கொள்ளலாம்.

இதேபோல நான் மாவட்டச் செயலகத்தில் பணியாற்றிய போது பட்டதாரிப் பயிலுனராக இருந்தேன். அப்போது மாவட்டக் கூட்டுறவுச் சபைக்கு ஒரு நியமன சபை நியமிக்கத் தீர்மானித்து அதில் தானும் கல்விப் பணிப்பாளர் பொன் சபாபதியுடன் என்னையும் ஒரு பணிப்பாளராக்கிக் கொண்டார். அதுவே எனது கூட்டுறவு வாழ்க்கையின் தொடக்கம் ஆகியது. தொடர்ந்து என்னை உப தலைவர் ஆக்கி பின்னர் தலைவராகவும் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை உப தலைவராகவும் பணியாற்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் வாய்ப்பை ஏற்படுத்தினார். காணியற்று இருந்த இந்தச் சபைக்கு நில அளவைத் திணைக்களம் பாவித்த காணியைப் பெற்றுத்தந்ததுடன் அந்தக் காணியில் புனர்வாழ்வு அமைச்சுக்கென வழங்கப்பட்ட 22 மில்லியன் ரூபாவைப் பெற்று அப்போது இருந்த தலைவரான என்னை யாழ்ப்பாணம் சென்று வீரசிங்கம் மண்டபத்தைப் பார்த்துவருமாறு அனுப்பி அந்த வரை படத்தையும், மதிப்பீட்டையும் வைத்து இப்போதுள்ள இக்கட்டம் நிர்மாணிக்கப்பட்டது. அது இன்றுவரை எமது மாவட்டத்தின் பிரதான மண்டபமாக செயல்படுகிறது. ஆரம்ப காலம் முதல் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் சேர்ந்து தலைவராகி பின்னர் கால்நடை, கடற்றொழில் என பல்வேறு சங்கங்களுக்கு தலைவராக செயற்பட்ட இவர் எமது மாவட்டத்தில் கூட்டுறவு வளர்வதற்கு உழைத்த ஒரு முன் உதாரணமான மனிதராக இருப்பதால் எமது சபை மண்டபத்திற்கு "இராச நாயகம் மண்டபம்" எனப் பெயர் இடவேண்டும் என்பதனை இவருக்கு இன்று வெளிப்படுத்து வதுடன் அதனை விரைவில் நிறைவேற்றுவேன் எனவும் உறுதி அளிக்கின்றேன். அக்காலத்தில் உணவுப் பொருட்களில் கையாளலுக்கென வழங்கப்பெற்ற இரண்டு மில்லியன் ரூபா நிதியை எமது சபையின் வளர்ச்சிக்காக உருவாக்கப்பெற்ற ஊழியர் காப்பு நிதி என்ற பெயரில் வைப்பிலிட்டு பாதுகாக்க எனக்கு ஆலோசனையும், நிதியும் வழங்கினார்.

இந்த நிதியினால் தான் மாவட்ட கூட்டுறவுச் சபை தனது சுழற்சி மூலதனத்தை பெற்று செயற்பட ஆரம்பித்தது.

## 2. தற்துணிவும், அது சார்ந்த பொறுப்பை பொறுப்பேற்றுக்கொள்ளலும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதி திட்டமிடல் பணிப்பாளராக பணியாற்றிக் கொண்டிருந்தபோது அவரது நேர்த்தியான செயற்பாடு காரணமாக அமைச்சு மட்டத்தில் அவருக்கு இருந்த நம்பகத் தன்மை அவரை மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. நாளாந்தம் இயல்பு நிலை மோசமடைந்து சென்ற சூழலில் பலரும் இம்மாவட்டத்தையும், மக்களையும் விட்டு விட்டு ஓடத் தொடங்கிய காலத்தில் தன்னால் இந்த நிர்வாகத்தை திறம்பட நடத்த முடியும் என்பதனை அவர் பதவியினூடாக நிறுவிக்காட்டியதால் மாற்றுக் கருத்துக்களுக்கு அப்பால் அவர் அரச அதிபராகப் பொறுப்பேற்றார். இலங்கை வரலாற்றில் திட்டமிடல் சேவையைச் சேர்ந்தவராக இருந்து அரச அதிபராகப் பணியாற்றிய புகழையும் தனதாக்கிக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் துரித தீர்மானமும் தந்திரோபாய அணுகுமுறையுமே தேவைப்பட்டபோது அவர் தனக்கே உரிய பாணியில் தீர்மானங்களை ஆற்றினார்.

பலரும் பேசியதுபோல (EB, FR) என்பவற்றக்கு அப்பால் TR தீர்மானமாக அது அமைந்தத. நெருக்கடி கால முகாமைத்துவத்தின் உச்சம் தொட்டவராக அவர் செயல்பட்டார். போர்க்காலம் மட்டுமன்றி, சுனாமி ஆழிப்பேரலைக் காலத்திலும் எமது மாவட்டத்தின் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட சடலங்களை வைத்தே சுனாமி பயன்களை எமது மாவட்டதிற்குப் பாய்ச்சினார். வளங்களை எப்படித்தேட வேண்டும் என்பதனையம் கற்றக்கொள்ள ஒரு முன் மாதிரி (Role Model) ஆக செயல்பட்டார். இவை எல்லாம் அவரது தற்துணிவையும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் ஆளமை யின் வழிவந்தாக இருந்தது.

### 3. சூழலை தன்வயமாக்கி தான் நினைப்பதை சாதித்துக்கொள்ளும் ஆற்றல்.

அப்போதெல்லாம் மாவட்டத்தின் தீர்மானத்தை ஆக்கும் பிரதான குழுக் கூட்டமாக அத்தியாவசிய சேவைக் குழுக் கூட்டமே காணப்பட்டது. அக்கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானத்தை வைத்தே நிர்வாகம் நகர்த்தப்படும்.

இவர் தன்னிடமிருந்து கண்காணிப்பு ஆற்றலை பயன்படுத்தி கலந்துரையாடலுக்கு முதல் நாள் அனைத்து வேலைகள் நடைபெறும் பகுதிகளுக்கும் சென்று நேரடியாக தரிசித்து நிலைமைகளை பார்வையிடுவார். மறுநாள் கலந்துரையாடல் தொடங்கும் போது களங்கள் பரிசீலிக்காத பல அதிகாரிகளையும் திணறடித்து கள நிலைமைகளை வெளிப்படுத்தும் திறன் இவரது அடிப்படைப் பலமாக அப்போது இருந்தது. அதே போல அப்போது வன்னியில் நிலவிய கடும் பசியையும், போசாக்குப் பிரச்சினையையும் வெற்றி கொள்வதற்காக கியூடெக் நிறுவனத்துடன் இணைந்து இவர் ஆரம்பித்த இலைக்கஞ்சித்திட்டம் இன்று உலக உணவுத்திட்டமாக பரிணமித்துள் ளது. திட்டமிடல் அறிவை முகாமைத்துவத்திற்கு பயன்படுத்தும் போது எந்தளவு நிறைவான சேவை மக்களுக்கு கிடைக்கும் என்பதனை நடைமுறையில் காட்டியவராக இவரைப் பார்க்க முடியும். இடப்பெயர்வின் பின் ஓய்வு பெற்றுச் சென்றிருந்த இவர் மீளவும் சூழலை தன் வயப்படுத்தி பிரதி பிரதம செயலாளர் என்ற பணியை பெற்று வடக்கு மாகாண நிர்வாகத்தில் பங்கு கொண்டார். ஆளுநருடன் இணைந்து பல பணிகளை ஆற்றினார். பல நியமனங்களை வழங்கி ஆட்களை சேர்த்துக் கொண்டார். தேங்கிக் கிடந்த ஓய்வூதியக் கோவைகள், முரண்பாட்டுக் கோவைகளின் சுமையைக் குறைத்தார்.

இவ்வகையில் எமது மாவட்டத்தின் தலைமைகள் என்ற பாத்திரத்தை இன்று வரை கையப் படுத்தியுள்ள மூத்த புலமையாளனாகவே திரு.இராசநாயகம் அவர்கள் இருந்து வருகிறார். அரசியல் வழியில் செல்லக் கிடைத்த பல சந்தர்ப்பங்களை உதறி தள்ளிவிட்டு நல்ல நிர்வாகியாக சிறந்த தலை மையாளனாக இன்று வரை செயல்படும் இவர் குருகுலப் பிதா, கதிரவேலு அப்பு வழியில் இன்று அந்த சேவை இல்லத்தை வழிப்படுத்தும் ஒரு நிர்வாகியாகி தனது ஓய்வுக் காலத்தை உற்சாகப்படுத்தியுள் ளார் என்றும் பிறருக்காக உழைத்த இந்த நல்ல மனிதன் நீண்ட ஆயுள்பெற்று சேவை செய்ய வாழ்த்தி விடைபெறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயாவுடன் ஒன்பது மாதங்கள்

*திரு. சற்குணபாலன்,*
*முன்னாள் முகாமைத்துவ பணிப்பாளர்,*
*மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்.*

பன்முக ஆளுமை கொண்ட திரு. தி. இராசநாயகம் ஐயா அவர்களின் தலைமையில், கிளிநொச்சி ஜெயந்தி நகரில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சைவச் சிறுவர் இல்லத்தில், முகாமைத்துவப் பணியாளராக நான் பணியாற்றிய மிகக்குறுகிய ஒன்பது மாதங்களும் என்வாழ்வில் மறக்க முடியாத பொற்காலமாகும்.

அவரின் தலைமைத்துவப் பண்புகளும், நிர்வாக ஒழுங்குமுறைகளும், கடமையுணர்வும், அவரின் கீழ் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கு மட்டுமன்றி, அவரின் சேவைகளைப் பெற்ற பொதுமக்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் கூட ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருந்தன. பலதரப்பட்ட துறைகளில் பல்வேறுபட்ட நிர்வாகக் கட்டமைப்புக்களின் கீழ் அவர் பணியாற்றி அனைத்திலும் முத்திரை பதிக்கக்கூடிய வகையில் தனது அறிவாற்றல், திறமை, அனுபவம் ஆகியவற்றை வெளிப்படுத்தியுள்ளார்.

தற்போதைய சமூக பொருளாதார நிலைகளில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டிய சில விடயப் பரப்புகளில் அவரின் நிர்வாகச் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை, இக்கட்டுரையின் மூலம் குறிப்பிட முயல்கின்றேன்.

### *நான் எடுத்துக்கொண்ட முக்கியமான விடயப்பரப்புக்கள் வருமாறு...*

01. விவசாயம், மற்றம் கால்நடை வளர்ப்பு.

02. கல்வித்துறை மேம்பாடு (சிறப்பாக ஆதரவற்ற குழந்தைகளுக்கான கல்வி அபிவிருத்தி)

03. அருகிவரும் சைவநெறி மரபுகளை வளர்த்தோங்கச் செய்தல்

04. அபிவிருத்தி மற்றும் நிர்வாகத்திட்டமிடுதலும் அதனைச் சீரான முறையில் ஒருங்கிணைத்தலும்.

### *01. விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு:-*

வன்னிப்பெருநிலப்பரப்பு, விவசாயம் மற்றும் கால்நடைவளர்ப்பு (குறிப்பாக பசுமாடு வளர்ப்பு) என்பவற்றின் அபிவிருத்தியிலேயே பெருமளவில் தங்கி முன்னேறவேண்டியுள்ளது என்பதனை தனது அறிவாற்றல் மற்றும் அனுபவங்களினால் நன்கு உணர்ந்து, அதனைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் அப்பிரதேசங்களில் தான் உயர்ந்த பதவிகள் வகித்த காலத்தில் மட்டுமல்லாது தற்போது ஓய்வுநிலையிலும் தான் பொறுப்பேற்று நடத்திவரும் அல்லது பங்குபெற்று வரும் அனைத்து நிறுவனங்களிலும் மிகுந்த அக்கறையெடுத்து இவற்றின் வளர்ச்சிக்கு உழைத்து வருகின்றார்.

விவசாயத்தில் இவரின் அதீத ஈடுபாட்டுக்கு உதாரணமாக அவர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான போதும் இடைப்பட்ட ஒரு குறுகிய காலத்திற்கு விவசாய பயிற்சிப் பாடசாலையில் சேர்ந்து கல்வி கற்பதைக் குறிப்பிடலாம்.

ஆனால் ஐயா அவர்கள் பொறுப்புக்கள் செவ்வனே நிறைவேற்றாத ஊழியர்களை உரிய முறையில் கண்டித்தும் நயமாக அறிவுரை கூறியும் அவர்களுக்குச் சரியான பாதையைக் காட்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே சிறப்பான முறையில் கடமையாற்றும் பணியாளர்களுக்கு வெகுமதி அளித்தும், சம்பள உயர்வினைக் கொடுத்தும் அவர்களை மேலும் ஊக்கப்படுத்துவார். ஓர் உண்மைச் சம்பவத்தை இங்கு உதாரணமாகக் காட்டுகின்றேன்.

மிக அண்மைக்காலமாக ஐயாவின் உடல்நிலை காரணமாக வைத்தியர்களின் ஆலோசனைப் படி யாழ்ப்பாணத்தில் வைத்தியசாலைக்கு அண்மையில் தனது வீட்டில் ஓய்வு எடுக்க வேண்டியிருந்தது. இருந்தும் அவர் இருப்புக்கொள்ளாமல் அடிக்கடி சிறுவர் இல்லத்திற்கும், பண்ணைகளிற்கும் வருகைதந்து மேற்பார்வை செய்வது வழக்கம். ஒருநாள் அதிகாலை திடீரென இல்லத்திற்கு வருகைதந்த ஐயா நேராக மாட்டுத்தொழுவத்திற்குச் சென்றார். அவர் இல்லத்தில் தொடர்ச்சியாக தங்கிநின்ற காலங்களில் இதனைத் தனது நாளாந்த கடைமையாகக் கொண்டிருந் தார். அன்றும் நேராக மாட்டுத் தொழுவத்திற்குச் சென்ற அவர் அங்கு தொழுவத்தில் இருந்த பசுக்களுக்கு உரிய தீவனமோ, தண்ணீரோ இல்லாது இருந்ததையும் உரிய முறையில் தொழுவம் சுத்தம் செய்யப்படாதிருந்ததையும் கண்ணுற்றார். கடும் கோபமுற்ற ஐயா அதற்குப் பொறுப்பானவரை அழைத்து விசாரித்தார். திருப்தியான பதில் கிடைக்காத காரணத்தினால் உடனடியாகவே அவரை விடுப்பில் செல்லுமாறு அனுப்பிவிட்டார்.

பசுக்கள் மீது காருண்யம் மிக்கவரான அவர் அவற்றைப் பிள்ளைகளைப் போல் நன்கு பராமரிக்க வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருப்பார். மேலும் இல்லக் குழந்தைகளுக்கு பசுவின் பால் ஒழுங்காகக் கிடைப்பதனை உறுதிசெய்யும்படி என்போன்ற நிர்வாக அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார். எனவே நான் கடமையில் இருந்த காலத்தில் தினமும் அதிகாலையில் தொழுவத்திற்குச் சென்று பார்வையிடுதலையும் எனது நடைப் பயிற்சியின் ஒரு பகுதியாகவும் கொண்டிருநதேன்.

பயிர்ச்செய்கையைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு குறிப்பிட்ட பிரிவினர்க்கும் வாழை மற்றும் மரக்கறித்தோட்டததினை பராமரிப்பிற்கென பங்குபோட்டுக் கொடுத்திருந்தார். அவரது வருகைகளின்போது ஒவ்வொரு பகுதி தோட்டங்களையும் சென்று பார்வையிட்டுமுறையாகப் பராமரிக்கப்படாத பகுதிகளுக்கு உரியவர்களை அழைத்து ஆலோசனை வழங்கியும், சிறப்பான முறையில் பராமரிப்பவர்களுக்கு வெகுமதி அல்லது சம்பள அதிகரிப்பு போன்றவற்றை சிபார்சு செய்தும் மோசமான முறையில் பராமரிப்பவர்களுக்கு சிலவேளை தண்டமும் அறவிட எமக்கு அறிவுறுத்துவார். இங்குதான் ஐயா அவர்களின் நிர்வாகத் திறமை பளிச்சென வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகின்றது. பிழை விடுபவர்களை வெறுமனே அழைத்து கடும் சொற்களால் பேசிவிட்டுப் போகாமல் அவர்களின் தவறை உணர்த்தி அதற்கும் திருந்தாவிடில் தண்டப்பணமும் அறவிட்டும், தண்டனை வழங்கியும் சிறப்பாக செயற்படுபவர்களுக்கு மற்றவர் மத்தியில் பாராட்டு வழங்குவதுடன் ஊக்குவிப்பு அல்லது சம்பள அதிகரிப்பினை வழங்கி பணியாளர்களை ஊக்குவிக்கும்முறை நிர்வாகத்தில் மிகச்சிறந்து விளங்கும் ஐயா போன்ற ஒரு சிலராலேயே செயற்படுத்தப்படுகின்றது.

## *02. கல்விச் செயற்பாடுகள்:-*

அரச நிர்வாகத்தில் உயர் பதவியில் இருக்கும்போதே ஆதரவற்ற குழந்தைகளின் நல்வாழ்விற்கு ஆதரவுக்கரம் நீட்டிய ஐயா, அரச பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்பும் தற்போதைய மகாதேவா சுவாமிகள் சைவச் சிறுவர் இல்லத்தில் தலைமைப் பதவியை ஏற்று தற்போது முந்நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு வாழ்விடம் கொடுத்து அவர்களின் கல்விச் செயற்பாடுகளிலும், கலை, நடன, நாட்டிய செயற்பாடுகளிற்கும் விசேட முக்கியத்துவம் கொடுத்து இல்லக் குழந்தைகள் யாவருக்கும் ஓர் அன்பான பாசமுள்ள தந்தையாக பரிணமித்துள்ளார். இல்லத்தில் ஐயா வந்தால் போதும் குழந்தைகளின் முகத்தில் குதூகலம், மகிழ்ச்சி என்பன பரவிப்பாயும் எல்லாக் குழந்தைகளும் ஐயாவின் காலில் விழுந்து அவரிடம் ஆசிகளைப்பெற முண்டியடிப்பார்கள். அவரும் தனித்தனியே ஒவ்வொரு குழந்தைகளையும் பெயர் சொல்லி அழைத்து வாஞ்சையுடன் அவர்களிடம் சுகநலன்கள் கல்விச் செயற்பாடுகள் பற்றி விசாரிப்பார். கல்விச் செயற்பாடுகளுக்கென இருபத்தைந்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இல்லத்திலேயே தங்கிநின்று கற்பித்தல், செய்முறைப் பயிற்சிகள் மற்றும் விளையாட்டுத்துறைப் பயிற்சிகள் போன்றவற்றிற்கென நியமிக்கப்பட்டு சிறப்பாக செயற்பட ஐயா அவர்கள் வழிசமைத்திருக்கிறார்கள். இதன் காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேக குழந்தைகள் பல்கலைக்கழக உயர்கல்வி மற்றம் தொழில்த்துறைப் பயிற்சி மற்றும் விளையாட்டுத்துறை சார்ந்த போட்டிகளில் மாகாண மட்டம் மற்றும் தேசிய மட்டப் போட்டிகளிலும் பங்கேற்று சாதனைகள் புரிந்துள்ளார்கள்.

இல்லக் குழந்தைகளின் நடனம் நாட்டியம் என்பவற்றிற்கு வன்னியிலேயே மட்டுமல்ல வட பகுதியிலேயே சிறப்பான தனியிடம் உண்டு. அநேக அரச திணைக்களங்கள் தமது நிகழ்வுகளுக்கு இல்லக் குழந்தைகளின் நடனம் நிகழ்ச்சிகளை அழைப்பதை வழமையாகக் கொண்டுள்ளார்கள். மேலும் கல்வியில் தொடர்ச்சியான முன்னேற்றம் காட்டிவரும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிற்கு மாதாந்தம் நடைபெறும் மாணவர் பிறந்த நாள் விழாவின்போது பரிசில்களும், வெகுமதிகளும் வழங்கப்பட்டு இருபாலாரையும் ஊக்கப்படுத்தும் நடைமுறையும் ஐயாவின் வழிகாட்டுதலிலேயே நடைபெற்று வருகின்றது.

## *03. சைவநெறி, சைவசமய மரபுகளைப் பேணல்:-*

இன்றைய சமுதாயம் பல வழிகளிலும் நெறிமறைகளைக் கைவிட்டு தறிகெட்டுப்போய் நிற்பதை அன்றாடம் செய்திப் பத்திரிகைகளிலிருந்து நாம் அறியக்கூடியதாக உள்ளது. ஐயா. அவர்கள் இதனைத் தீர்க்கதரிசனமாக உணர்ந்த காரணத்தினால் நீண்ட காலங்களிற்கு முன்பே எம்மவர்கள் மத்தியில் சைவநெறி சமய மரபுகள் என்பவற்றை ஆழமாக வேரூன்றச் செய்ய வேண்டும் என்பதில் முனைப்புக்காட்டினார். அதற்காக தான் சார்ந்த கோவில்கள் அறங்காவலர் சபைகளை நிறுவி அதன முக்கிய பொறுப்புக்களை ஏற்று ஆலயங்களை சைவநெறி முறைகளின் கீழ் வழிநடத்தி வந்தார்.

அதுமட்டுமல்லாது சிறுவர் இல்லத்திலும் சர்வசக்தி அம்மன் கோவிலை ஸ்தாபித்து மாணவர்களினதும், பணியாளர்களினதும் இறைவழிபாட்டிற்கு அர்ச்சகர் ஒருவரை ஒழுங்கு செய்தார். அவ்வாறு பூஜை வழிபாட்டில் கலந்து கொள்வதைக் கட்டாயமாக்கினார். சிறுவர் இல்ல மாணவர்கள் அனைவரும் சிவசின்னங்கள் அணிவதை ஒரு மரபாகவே கைக்கொண்டு வருகிறார்கள். அப்பிள்ளைகளின் நெற்றியில் எந்நேரமும் திருநீறு பளிச்சிட்டுக் கொண்டிருக்கும். இவை வேறு எந்தக் கல்விச் சாலையிலும் காணமுடிவதில்லை. குறைந்த அளவில் கல்வி பயிலும் வேற்று மதங்களைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் மத அனுட்டானங்களை மேற்கொள்ள வசதிகள் செய்யப்படுவதையும் உறுதிப்படுத்த ஐயா அவர்கள் விரும்பியிருந்தார்கள்.

## *04. நிர்வாகத் திட்மிடுதலும், அதனை ஒழுங்குமுறையின் கீழ் ஒருங்கிணைத்தலும்:-*

ஐயாவின் நிர்வாகத்தில் திட்டமிடுதலும் நிர்வாக ஒழுங்குமுறைகளும் (Administrative System) முக்கியத்துவமானவையாக எப்போதும் இருக்கும். நிர்வாகத்தை திட்டமிடுதலில் அவருக்கு நிகர் அவரேதான். திட்டமிடலில் ஐயாவின் செயற்பாட்டு நடைமுறைகளிற்கும் (Operational Procedures) அனுபவ அறிவிற்கும் ஈடுகொடுக்கக் கூடியதான அதிகாரிகள் எவரையும் எமது பிரதேசத்தில் தற்காலத்தில் தேட முடியாதுள்ளது என்பது நிதர்சனமான உண்மையாகும். அவரது உரையாடலில் அடிக்கடி வெளிவரும் வார்த்தை ஒழுங்குமுறைகள் அதாவது (Systems) அல்லது (Systamatic) என்பதாகும். குறிப்பிட்ட Systems ஐ சரியாகப் பின்பற்றாததன் காரணமாகவே பிரச்சினைகள் தோன்றுகின்றன என்பார். Systems என்பதில் உறுதியாக நின்று அதனை முழுமை யாக எங்களைப் பின்பற்றி நடக்கும் படி அறிவுறுத்துவார்.

திரு.இராசநாயகம் ஐயா போன்று மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை வகுத்து அதனை தந்திரோபாயமான வழிமுறைகளில் மெலதிகாரிகளின் அனுமதியைப் பெற்று சரியான ஒழுங்கு முறைகளின் கீழ் தனக்கு கீழ் பணிபுரியும் அனைவரையும் ஒருமுகப்படுத்தி திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்துவதில் வேறுஎவரையும் என்னால் சுட்டிக்காட்ட முடியாதுள்ளது.

அவர் தம் பணிவாழ்க! அவர் தம் புகழ் ஓங்குக!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பனை அபிவிருத்தியில் பயனுள்ள பங்களிப்பு

*பேராசிரியர் சு. மோகனதாஸ்,*
*முன்னாள் துணைவேந்தர்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

யாழ்ப்பாணம் மாநகர சபையால் யாழ் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட உயர் திரு. தி. திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களைப் பாராட்டி பூநகரி வாழ் மக்கள் எடுக்கும் விழாவில் வெளியிடப்படவிருக்கும் அவரின் சிறப்புக்களைக் கூறும் மலருக்கு இச் செய்தியை வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வாறான அரிய அவசியமான பெரும் பணியை முன்னெடுக்கும் விழாக்குழுவினருக்கு முதலில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது நீண்ட கால நண்பரான திரு.இ.இராசநாயகம் அவர்கள் ஒரு சிறந்த மக்கள் சேவகர். எந்நேரமும் மகிழ்ச்சியாக மக்கள் பணியினை முன்னெடுக்கும் ஒருவர். இன்முகப் பார்வையோடு காணப்படுகின்ற இராசநாயகம் அவர்கள் எளிதில் எவரும் அணுகக்கூடிய நல்லுள்ளம் கொண்டவர். பெருமைக்குரிய உயர் அரச பதவிகளை வகித்த அவர், மக்கள் மனதில் என்றும் நிலைத்து நிற்கும் புகழ்பூத்த அதிகாரியாகவும் விளங்கியவர்.

1980 களின் முற்பகுதியில் நான் பனை அபிவிருத்திச் சபையின் ஆலோசகராக இருந்தபோது பனை நாற்றுக்களை நடுகை செய்வதற்காக பூநகரி பிரதேசத்திற்கு சென்ற போது அவரை முதன் முதலாகச் சந்தித்தேன். அப்போது அவர் பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகப் பதவி வகித்தமையால் தனது ஆளணியினரைக் கொண்டு எமது பனை அபிவிருத்தி சார் வேலைத் திட்டங்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கிவந்தார்.

1995 ஆம் ஆண்டு குடாநாட்டு இடப்பெயர்வு காரணமாக யாழ்பாணப் பல்கலைக்கழகம் கிளிநொச்சியில் இயங்கிய பொழுது அதற்குரிய இட வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இராசநாயகம் பெரும் உதவியாக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவர் கிளிநொச்சி அரச அதிபராக இருந்த போது பனை அபிவிருத்தி சபைக்காக கிளிநொச்சி அறிவியல் நகரில் 5 ஏக்கர் நிலத்தை ஒதுக்கித்தந்தார். பனை ஆராய்ச்சிக்கும். பனை நாற்று உற்பத்திக்குமான நிலையமாக இது பயன்பட்டு வருகிறது.

பல்வேறு சமூக சமய அமைப்புக்களில் அங்கம் வகித்து வரும் அவர் மாகாதேவ ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லம், அகில இலங்கை காந்திசேவா சங்கம், உருத்திரபுரம் காந்தி நிலயம் (சிறுவர் இல்லம்) ஆகியவற்றின் தலைவராக அண்மைக்காலங்களில் செயற்படும் காலத்தில் நானும் காந்திசேவா சங்கத்தில் அங்கத்தவராக இணைந்து செயற்பட்ட காரணத்தால் மீண்டும் அவருடன் பழகும் வாய்ப்பபைப் பெற்றேன். கடந்த ஆண்டு நானும் சங்கத்தின் உப தலைவர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டதின் மூலம் சங்கத்தின் இயக்கத்திற்கு என்னால் ஆன சேவையை வழங்குகின்ற பாக்கியத்தைப் பெற்றேன்.

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் மூலம் காந்தியக் கொள்கைகளைப் பரப்பி சமூகத்தில் அமைதியும் சமாதானமும் உருவாவதற்கு இராசநாயகம் அவர்கள் கடந்த காலங்களில் பாடுபட்டு வந்தார். அவரின் காந்தியப் பணி மேலும் தொடர வேண்டும்.

தற்போது அவர் நோய்வாய்ப்பட்டிருந்தாலும் மக்களுக்கு தொண்டாற்றுவதையே நோக்க மாகக் கொண்டு தனது கடமையை செவ்வனே ஆற்றி வருகின்றார். மக்கள் பணியே மகேசன் பணி என்று வாழும் இராசநாயகம் அவர்கள் நீண்ட ஆயுளுடன் இன்னும் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயைப் பாதுகாத்த தனயன்



*நா.யோகேந்திரநாதன்*



முன்னாள் அரச அதிபரும், வடமாகாணப் பிரதிச் செயலாளரு மான திரு.தி.இராசநாயகம் அவர்கள் அரச சேவையில் பல்வேறு அதிகாரப் பதவிகள் வகித்த காலங்களில் அவர் தன் அதிகாரங்களை முழுமையாகப் பிரயோகித்தும், அதிகார எல்லையைக் கடந்து ஆற்றிய பல்வேறு மக்கள் நல நடவடிக்கைகள் தொடர்பாக இம்மலரில் பலரும் தமது மனமார்ந்த பாராட்டுகளையும் நன்றி களையும் வெளிப்படுத்தி யுள்ளனர். அதேவேளையில் அவர் தன் பதவிகளிற்கு வெளியே மேற் கொண்ட ஆன்மீகப் பணிகளும், பொதுச் சேவைகளும் பல்வேறு பரிமாணங்களில் எமது மக்களின் மனங்களையும், 9வாழ்வையும் பண்படுத்தும் வகையில் அமைந்து கொண்டமையையும் பலரும் ஆதாரங்களுடன் முன் வைத்துள்ளனர்.

இவரது ஆற்றலும், ஆளுமையும், அர்ப்பண உணர்வும், ஓய்வற்ற உழைப்பும் மனித குலத்தின் ஒரு முன்னுதாரண புருஷனாக இவரை விளங்க வைத்தன.

இவற்றையெல்லாம் நானும் திரும்பவும் முன்வைப்பதைவிட இவரின் சேவைகளுக்கெல்லாம் மகுடம் வைத்ததும் பரந்த உறுதியையும் துணிச்சலையும் இங்கு நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

கிளிநொச்சி மக்களின் வாழ்வுக்கும் வளத்துக்கும் மூலாதாரமாக விளங்குவது இரணை மடுக் குளம் எனவேதான் இரணை மடுக்குளத்தைக் கிளிநொச்சி மக்களின் தாய் என எமது மக்கள் போற்றுகின்றனர். இதன் வளர்ச்சியில் இவர் திட்டமிடல் பணிப்பாளராக பணியாற்றிய போது வழங் கிய பங்களிப்பும், அரச அதிபராக இருந்த போது அதைப்பராமரித்துப் பாதுகாப்பதில் காட்டிய அக்கறை யும், ஓய்வு பெற்ற பின்பும் கூட அதைப் பாதுகாப்பத்தில் காட்டிய உறுதியும் மதிப்பிடற்கரியன.

எனவே எமது மக்கள் திரு. இராசநாயகம் அவர்களை தாயைப் பாதுகாத்த தனயனாகப் பார்க்கின்றனர். துவைனம் என்ற ஆங்கிலேயர் யாழ்ப்பாண அரச அதிபராக இருந்த காலத்தில் பழைய கண்டி வீதிக்கு இடதுபுறமாக இருந்த இரு சிறு நீர் நிலைகளை இணைத்து பெரும் அணை கட்டப்பட்டு இரணைமடுக்குளம் அமைக்கப்பட்டது. அது முதலில் 18 அடியாக அமைக்கப்பட்டது. அதன் மூலம் முதலாம் வாய்காலிலிருந்து ஆறாம் வாய்ககால் வரையும் மத்திய தர வர்க்கத்தினருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குக் காணிகள் வழங்கப்பட்டு விவசாயத்துக்கு நீர் வழங்கப்பட்டது. அது மட்டுமன்றி குஞ்சுப் பரந்தன், பெரிய பரந்தன், முரசுமோட்டை பழங்கம், வட்டக்கச்சி உடையார் கமம் போன்ற கரைச்சியின் பாரம் பரிய நிலங்களும் இரணைமடுவின் நீர்ப்பாசனத்துக்கு உட்படுத்தப்பட்டன.

அதையடுத்து முதலில் கணேசபுர குடியேற்றத்திட்டம் அமைக்கப்பட்டது. 1950 ஆண்டு காலப் பகுதியிலிருந்து ஒவ்வொன்றாக உருத்திரபுரம், இராமநாதபுரம், வட்டக்கச்சி, முரசுமொட்டை, எட்டாம் வாய்க்கால் எனப் பல குடியேற்றத்திட்டங்கள் அமைக்கப்பட்டன. இக்குடியேற்றங்களின் விவசாயத் தேவைகளை முன்னிட்டு இடதுகரை வாய்ககால் 24 அடியாகவும் வலது கரை 16 அடியாகவும் அமையும் வண்ணம் அணை (ஸ்பில்) உயர்த்தப்பட்டது.

அதில் சில குறைபாடுகள் இருக்கச் செய்தன. அதாவது குளத்தில் நீர் குறைந்து 8 அடியாகும் போதே வலதுகரை வாய்க்காலில் நீர்பாய்வது நின்றுவிடும். வட்டக்கச்சி இராமநாதபுரம் மக்கள் அறுவடை நெருங்கும் காலங்களில் நீர்ப்பற்றாக்குறை காரணமாக நட்டமடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. அடுத்தது குளத்தின் உரிமையாளர்கள் மத்தியதரவர்க்கத்தினர் என்ற அடிப்படையில் அவர்களுக்கு நீர் வழங்கப்பட்டு மிகுதியே குடியேற்ற விவசாயிகளுக்குச் சிறுபோக காலத்தில் வழங்கப்படும். அதன் காரணமாகச் சிறுபோகத்தில் குடியேற்ற விவசாயிகளுக்கு அரை ஏக்கர் அல்லது கால் ஏக்கர் என்ற அளவிலேயே பகிரப்பட வேண்டும்.

இந்த நிலை காரணமாக விவசாயத்தை நம்பியே வாழும் குடியேற்ற வாசிகள் வறுமையில் வாடவேண்டிய நிலை ஏற்பட்டது.

எனவே குடியேற்ற விவசாயிகள் வலது கரை வாய்க்காலை ஆழப்படுத்த வேண்டுமெனவும், சிறுபோகத்தில் மத்தியதர விவசாயிகளுக்கும் குடியேற்ற விவசாயிகளும் சமனான அளவில் நீர் பங்கிடப்பட வேண்டும் எனவும் கோரிகைகளை முன்வைத்து அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் தலைமையில் பல போராட்டங்கள் நடத்தினர். இக்கோரிக்கைகளை முன்வைத்து ஈஸ்வரன் படமாளிகையில் மாநாடும், ஆர்ப்பாட்ட ஊர்வலமும் நடத்தப்பட்டது. பேரணியின் முடிவில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் மாநாட்டின் தீர்மானங்கள் பிரகடனம் செய்யப்பட்டன.

அந்நாட்களில் திரு. இராசநாயகம் அவர்கள் கினிநொசசி படித்த வாலிபர் சங்கம் என்ற ஒரு அமைப்பை நிறுவி அவரொத்த இளைஞர்களுடன் இணைந்து பல சமூகப்பணிகளை ஆற்றி வந்தனர். விவசாயிகளின் போராட்டத்தை முன்னெடுப்பதிலும் மாநாட்டை நடத்துவதிலும் திரு.தி. இராசநாயகம், கு.கணேசன் போன்றவர்கள் அளப்பரிய பங்கு வகித்தனர்.

அதனையடுத்து விவசாயிகள் அமைப்பின் ஒரு தூதுக்குழுவினர் அப்போதைய கம்பஹா நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.டி.பண்டாரநாயக்காவின் அனுசரணையுடன் அன்று நீர்ப்பாசன அமைச்சரான சி.பி.டி. சில்வாவைச் சந்தித்து தமது கோரிகைகளை முன்வைத்தனர். அவர் இரணை மடுக் குளக்கட்டை உயர்த்துவதன் மூலம் மத்திய தர விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வைகயில் நீரைச் சிறுபோக காலத்தில் இரு தரப்பினருக்கும் பகிர்ந்தளிக்க முடியுமென வாங்களித்தார்.

அதன்படி இரணைமடு 28 அடியாக உயர்த்தப்பட்டது. அதாவது திரு.தி.இராசாநயகம் அவர்கள் இரணைமடுவின் வளர்ச்சியில் பங்களிப்பை வழங்கினார் என்பது இங்கே கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

அவர் கிளிநொச்சியின் திட்டமிடல் பணிப்பாளராயிருந்தபோது இரணைமடுவில் இருந்து உச்ச பயனை எமது மக்கள் பெறுமளவுக்கு அதை அபிவிருத்தி செய்ய வேகமாகவும், விவேகமாகவும் செயற்பட்டார். நீர்ப்பாசனத்திணைக்களத்தினரின் ஒத்துழைப்புடன் அது தொடர்பான பாரிய திட்டத்தை வகுத்தார். அது மட்டுமன்றி அதை அமுலாக்கும் பொருட்டு மேலதிகாரிகளுடனும், அரசியல் வாதிகளுடன் மீண்டும் மீண்டும் முயற்சிகளை மேற்கொண்டார். அவரின் இந்த அயராத முயற்சிகள் காரணமாக இரணைமடுக்குளம் மேலும் 4 அடி உயர்த்தப்பட்டு 32 அடியாகிவிட்டது.

ஒரு முறை தொடர் மழை காரணமாக இரணை மடு அணையில் நீர்க்கசிவு ஏற்பட்டுவிட்டது. தாமதமாகும் ஒவ்வொரு விநாடியும் ஆபத்தானவை. அணை உடைந்தால் கிளிநொச்சி மீளமுடியாத பேரழிவை எதிர்கொள்ள வேண்டிவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிதியையோ, மேலிட உதவிகளையோ பெறக் கால அவகாசம் இல்லை. அப்போதைய நிறைவேற்றுப் பொறியியலாளர் குமாரசாமி அவர்களும் இராசநாயகமும் எமது மக்களை நம்பி பணியில் இறங்கினர். வட்டக்கச்சி, இராமநாதபுரம், முரசு மொட்டை, திருவையாறு பகுதி மக்களும் மக்களின் உழவுயந்திரங்களும் களத்தில் இறக்கப்பட்டன. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய சாக்குகளில் மண் நிரப்பப்பட்டு அணை பலப்படுத்தப்பட்டு திருத்தவேலைகள் மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு ஒரு பேரழிவு தடுக்கப்பட்டது.

இதுபோன்ற சம்பவங்கள் பலரால் மறக்கப்பட்டுவிட்ட போதிலும் ஒரு மனிதனின் அர்ப்பணிப்பான சேவையாக இது என்றும் வரலாற்றில் பதியப்படும்.

இப்படி ஒவ்வொரு கட்டத்திலும் இராசநாயகம் இரணைமடுவின் வளர்ச்சியிலும், பாதுகாப்பிலும் பல்வேறு விதமான பங்களிப்பை வழங்கியது. மட்டுமன்றி, அண்மையில் ஏற்படவிருந்த பேராபத்தைத் தடுத்து நிறுத்துவதில் இவர் வகித்த பங்களிப்பு மகத்தானது.

இரணை மடுவில் இருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் என்ற பேரில் கிளிநொச்சி மாவட்டத்தையும், யாழ்ப்பாணத்தையும் பாலைவனங்களாக மாற்றும் ஒரு பெரும் திட்டம் கடந்த அரசாங்க காலத்தில் முன்வைக்கப்பட்டது. தற்சமயம் விவசாயத் தேவைகளுக்கு நீர் பற்றாக்குறை நிலவுகின்ற காரணத்தால் சிறுபோகத்தில் ஒரு பகுதி நிலங்களே பயிர் செய்யப்படுகின்றன. இந்த நிலையில் ஐந்து இலட்சம் மக்களுக்கு இரணைமடு நீர் வழங்கப்பட்டால் கிளிநொச்சியின் விவசாய உற்பத்திக்கு என்ன நடக்கும் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியு).

ஆனால் இப்பாதிப்பைத் தடுக்க மொறவகந்தவிலிருந்து மகாவலி நீர் கொண்டுவரப்படுமெனக் கூறப்பட்டது.

மொறகத்தவிலிருந்து கனகராயன் குளத்திற்கு நீர் வருவதாயின் ஏறக்குறைய 300 குளங்களை அவற்றால் நீர்பாய்ச்சப்படும் விளைச்சல் நிலங்களையும் தாண்டியே வரவேண்டும் அப்படியான நிலையில் கனகராயன் குளத்தினூடாக இரணைமடுவிற்குத் தேவையான நீர் வந்து சேர்வது சாத்தியமில்லை. ஏற்கனவே வட மத்திய மாகாணம் கடந்த சில வருடங்களாக நீர்ப்பற்றாக் குறையால் நெல் விளைச்சலில் பெரும் வீழ்சியைக் கண்டு வரும் நிலையில் மேலதிக நீரை எப்படி எதிர்பாக்க முடியும்?



அப்படி ஒரு பகுதி நீர் வந்தாலும் அது வயல் நிலங்களின் கழிவு நீருடன் கலந்து வருவதால் இரசாயனப்பசளை கிருமி நாசினித் தாக்கம் உள்ளதாகவே இருக்கும். இத்திட்டத்தின் மூலம் இரணைமடுவுக்கு தண்ணீர் வருமோ இல்லையோ இரணைமடு மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுவது நிச்சயம். அதன் மூலம் தற்சமயம் மகாவலி சபையின் அதிகாரத்தில் உள்ள இரணைமடுவும் அதனால் நீர்பாய்ச்சப்படும் பகுதியும் நேரடியாக மத்திய அரசின் கட்டுப்பாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவரப்பட்டு விடும். அதிகாரப்பரவலாக்கல் என்ற கோரிக்கையை முறியடிக்கும் சூழலில் இதுவும் ஒரு பகுதி என்றே கருதவேண்டியுள்ளது.

இதை எம்மில் பலர் புரியாமல் இருப்பதும் புரிந்தும் புரியாதது போல் நடிப்பதும் படு மோசமான நிலைப்பாடு ஆகும்.

மேலும் மகாவலியில் இருந்து நீர் கொண்டுவரப்படுமானால் இரணைமடுவிற்கு நீர் வந்து சேர்வதற்கு முன்பு கொக்காவிலில் அமைக்கப்படவுள்ள இராணுவத்தினரின் குடியேற்றத் திட்டத்திற்கு நீர் வழங்கவே முன்னுரிமை வழங்கப்படுமென்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

இரணைமடுவின் குளக்கட்டை உயர்துவதன் மூலம் கூடிய நீரைத் தேக்கி பற்றாக்குறைப் பிரச்சினையை நிவர்த்தி செய்ய முடியும் எனக் கூறப்படுகிறது. அணையை உயர்த்தலாம் ஆனால் 32 அடிக்க மேல் நீரைத் தேக்கினால் மாங்குளம் நகரின் பெரும்பகுதியும் மாங்குளம் முல்லைத்தீவு வீதியும் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டு விடும்.இந்த உண்மை சில சக்திகளால் திட்டமிட்டு மறைக்கப்படுகிறது. யாழ்பாணத்திற்கு குடிநீர் வழங்க ஆரம்பித்தால் அதன் பின்பு பற்றாக்குறை ஏற்படும் பட்சத்தில் யாழ்பாணத்திற்குக் குடிநீரோ அல்லது கிளிநொச்சி விவசாயத்திற்கு நீரா என்ற கேள்வி எழும் போது குடிநீருக்கே தவிர்க்க முடியாதபடி முன்னுரிமை வழங்கப்படும். அந்த நிலையில் கிளிநொச்சி விவசாயம் பேரழிவை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும். அது மட்டுமன்றி இரணைமடுக் குளத்தின் நீர்மட்டத்தின் அடிப்படையிலே கிளிநொச்சியின் நிலக்கீழ் நீரோட்டம் அமைந்துள்ளது. இரணைமடுவின் நீர் உறுஞ்சி எடுக்கப்படும் போது கிளிநொச்சியின் கிணறுகள் கூட வற்றிவிடும். படிப்படியாக கிளிநொச்சி பாலைவனமாகும் சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

போர்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடையின் போது ஒரு பட்டினிச்சாவு கூட ஏற்படாது வடக்கின் உணவுத்தேவையை பூர்த்தி செய்தது கிளிநொச்சி. கிளிநொச்சி விவசாயம் படுக்குமானால் நாம் உணவுக்குக் கூட தென்னிலங்கையிடம் கையேந்தவேண்டி வரும் என்பதனை மறந்துவிடக்கூடாது.

இன்னொருபுறம் யாழ்பாணத்தின் நிலத்தடி நீர் வேகமாக வறண்டு வருகிறது. இதைத் தடுப்பதற்கான முன் முயற்சிகள் எடுக்கப்பட்டுவிட்டன. தொண்டைமானாறு நாவற்குழி அணை களை சீர் செய்து அவ்வேரியை நன்னீராக்கும் திட்டத்திற்கு மீண்டும் உயிர் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனையிறவு ஏரியை நன்னீராக்கும் ஆறுமுகம் திட்டம் பற்றியும் கோரிக்கைகள் எழுந்துள்ளன. இரணைமடுவில் இருந்து யாழ்பாணத்திற்கு தண்ணீர் வருமானால் அதைச் சாட்டாக வைத்து இத் திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டு விடும். இந்நிலையில் யாழ்ப்பாணக் குடாநாட்டு நீர் உவரடைய யாழ் விவசாயமும் படுத்து விடும் யாழ்பாணமும் பாலைவனமாவதைத் தடுக்க முடியாது.

இரணைமடுவிலிருந்து யாழ் குடாநாட்டிற்கு தண்ணீர் வழங்குவது பாரிய அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் கிளிநொச்சி யாழ்பாணம் ஆகிய இரு மாவட்டங்களையும் பாலைவனமாக்கி விவசாயப் பொருட்களுக்கு தென்னிலங்கையிடம் கையேந்தும் ஒரு நிலை உருவாக்கப்படும் உள் நோக்கம் நிறைவேற்றப்படும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

அதே வேளை கிளிநொச்சி மகாவலி அபிவருத்தி சபையின் கீழ் கொண்டுவரப்பட்டால் அங்கு மணலாற்றைப் போலவே தங்கு தடையற்ற சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படும். அத் திட்டத்தின் ஆபத்தை நன்கு புரிந்து கொண்ட இராசநாயகம் அவர்கள் இத்திட்டத்தை எதிர்த்து போராடிய விவசாயிகளின் பக்கம் உறுதியுடன் நின்றார். ஆணித்தரமான கருத்துக்களையும் புள்ளி விபரங்களையும் முன் வைத்து போலியான பிரசங்கங்களை மேற் கொண்டு மக்களை ஏமாற்ற முயன்ற சிலரின் நடவடிக்கைகளையும் அரசியல் நோக்கங்களையும் அம்பலப்படுத்தினார்.



இப்படியாக இத்திட்டத்திற்கு எதிர்ப்பு வலுக்கவே வடக்கு மாகாண சபையும் இத் திட்டம் பற்றி ஆராய ஒரு அறிஞர் குழுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமித்தது. இராசநாயகம் அவர்கள் திட்டவட்டமான வாதங்களையும் புள்ளி விபரங்களையும் முன் வைத்தார். அக் குழுவில் அங்கம் வகித்த பல உறுப்பினர்கள் அவரின் வாதங்களை ஏற்று தாமும் அதற்கு வலு சேர்த்தனர்.

இந்த நிலையில் வடக்குமாகாண சபை இரணைமடுவிலிருந்து யாழ்பாணத்திற்கு குடிநீர் கொண்டு வரும் திட்டத்தை மறுத்து கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை ஆரம்பித்தது. மறுபுறம் இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டு பலப்படுத்தப்பட்டு உயர்த்தும் நடவடிக்கையும் தொடங்கி விட்டது.

இத்தகைய இமயமான சாதனையை ஈட்டிய பெருமகனை இரணைமடுவைத்தாயெனப் போற்றும் மக்களும் தாயகத்தின் சுயாதீனத்தையும் சுய பொருளாதாரத்தையும் விரும்பும் மக்களும் என்றும் நன்றியுடன் தாயைப் பாதுகாத்த தனயனாக நினைவில் வைத்திருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கணம் கற்பித்தல்

## *நடைமுறைச் சாத்தியப்பாடுகள் பற்றிய ஒரு நோக்கு...*



*"செந்தமிழ்ச்சொல்லருவி"*
*ச. லலீசன்,*
*பிரதி முதல்வர்,*
*கோப்பாய் ஆசிரிய கலாசாலை.*

ஒரு பொருளின் சிறப்பியல்பை இலட்சணம் எனக் குறிப்பிடுகின்றோம். வடமொழிச் சொல்லாகிய இலட்சணம் என்ற சொல்லிலே இருந்துதான் இலக்கணம் என்ற சொல் பிறந்திருக்கின்றது. ஆயினும் வடமொழியாளர்கள் இலக்கணத்தைக் குறிப்பிடுவதற்கு வேறு சொற்களையே பயன்படுத்துகின்றனர். வியாகரணம், சப்தசாஸ்திரம் முதலிய சொற்களே இலக்கணத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

இலக்கணம் என்பது தூய தமிழ்ச்சொல் என வாதிடுகிறார் தேவநேயப்பாவாணர். இலக்கு அணம் என அதைப் பிரித்து - இலக்கு என்னும் தமிழ்ச்சொல் அணம் என்ற விகுதி பெற்று வருவதாகக் காட்டுகின்றார். இலக்கணம், முறைமை, தன்மை, இயல், ஒத்து முதலிய சொற்கள் ஒரு பொருட் சொற்களாகவே அமைந்துள்ளன.

### இலக்கணம் என்றால் என்ன?

**"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு" குறள் 392**

என்ற குறட்பாவிற்கு ஆராய்ச்சிக் குறிப்புரை எழுதிய வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார், எண் என்பது தர்க்க நூலையும், எழுத்து என்பது இலக்கண நூலையும் குறிப்பதாகச் சொல்கிறார். தர்க்கவியலைக் கணிதத்தில் அடக்கி, எண் என்பது கணிதம் என பரிமேலழகரால் உரைக்கப்பட்டது என மேலும் குறிப்பிடுகின்றார். இந்த வகையில் எண் - கணிதத்துக்கும், எழுத்து - இலக்கணத்திற்கும் ஆகு பெயர்களாக அமைந்துள்ளன. எண்ணெழுத்து இகழேல், எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்ற ஔவையார் அமுதமொழிகளும் இதனுடன் பொருத்திப் பார்க்கத் தக்கன.

**இலக்கணத்தின் இன்றியமையாமையைப் பின்வரும் வெண்பா சுட்டுகின்றது**

**எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்**
**மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும் - மொழித்திறத்தின்**
**முட்டறுத்த நல்லோன் முதனூல் பொருளுணர்ந்து**
**கட்டறுத்து வீடு பெறும்.**

எனவே இலக்கியத்தின் ஆழ்ந்த நுட்பங்களை எல்லாம் உணர்ந்து தெளிவதற்கு இலக்கண அறிவு இன்றியமையாததாகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகநாவலர். "இலக்கண நூலாவது உயர்ந்தோர் வழக்கத்தையும் செய்யுள் வழக்கத் தையும் அறிந்து விதிப்படி எழுதுதற்கும் பேசுதற்கும் கருவியாகிய நூலாம்" என்கிறார். இந் நிலையில் தமிழ் இலக்கண முறைமை அறிந்து வாக்கிய வழுவின்றி எழுதுபவர்கள் மற்றும் பேசுபவர்கள் எல்லோரும் இலக்கணம் அறிந்துதான் இவற்றை மேற்கொள்கின்றனரா? என்ற வினாவைச் சிலர் எழுப்புகின்றனர். ஆயினும் எழுத்துக்கும் பேச்சுக்கும் வரம்பாக அமைவது இலக்கணம் ஆகும். இது மொழியின் பேச்சு வழக்கின் ஊடாகத் தானாகவே பயிலப்படுகின்றது. இலக்கணம் என்ற பெயரால் அறியப்படாது இயல்பாகவே மொழிப் பயனர்களால் பயிலப்படுகின்றது.

எனவே சொற்களைத் தக்க இடங்களில் அமைத்தலும் சொற்களோடு ஏற்ற உருபுகளை சேர்த்தலுமே இலக்கணம் என்ற சொல்லால் பெறப்படுவதாகக் கொள்ளலாம்.

## இலக்கணக் கல்வியின் அவசியம்




இலக்கண அறிவு இன்றி எந்த ஒரு நூலையும் படித்துப் பயன்பெற இயலாது. தாய்மொழியறிவு இயற் கையாக கிடைப்பதால் இலக்கணத்தின் பயனை எம்மால் அனுபவிக்க முடியாமல் போகலாம். ஆனால் பிறமொழி ஒன்றைப் பயிலும்போது இலக்கணம் எவ் வளவு அவசியம் என்பதை அனுபவித்தவர் உணர்வர். உதாரணமாக ஆடு குட்டி என்பதற்கும் ஆட்டுக்குட்டி என்பதற்கும் வேறுபாடுகள் உள்ளன. ஆடு குட்டி என் பது ஆடும் குட்டியும் என விரியும். ஆட்டுக்குட்டி என்பது ஆட்டினது குட்டி எனப் பொருள்படும்.

எனவே இலக்கணம் என்பது மொழிக்கு இலட்ச ணத்தை அழகைத் தருவது எனத் துணியலாம்.

"இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்" என்பது பொதுவான கருத்து. இலக்கியங்கள் மிகுதியாக இருந்தால்தான் இலக்கணங்கள் தோன்ற முடியும்.

இலக்கண வரம்பற்ற எந்த மொழியும் காலப் போக்கில் ஒழிந்துவிடும் அல்லது உருவம் மாறிவிடும். இருப்பினும் அளவுகடந்த இலக்கணத் தலையீடும் ஒரு மொழியின் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்தலாம். சமஸ்கிருத மொழியை இதற்கு எடுத்துக்காட் டாகக் குறிப்பிடலாம். "பாணினி வகுத்த இலக்கண வரம்பு காரணமாக சமஸ்கிருதம் கட்டுப்பாடின்றி வளரவியலாது இருந்தது என டாக்டர் பசாம் தனது வியத்தகு இந்தியா என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## முதல் இலக்கண நூல்

தமிழின் முதல் இலக்கண நூலாக அமைந்திருப்பது அகத்தியம் ஆகும். ஆயினும் இந்நூல் காலவெள்ளத்தில் அழிந்து விட்டமை தமிழன்னை செய்த தவக்குறைவாகும். அகத்தியரைச் சிறந்த தமிழாசிரியராகப் பலரும் பாராட்டியுள்ளனர். "என்றுமுள தென்றமிழ் இயம்பி இசைகொண்டவன்" எனவும் "தமிழெனும் அளப்பரும் சலதி தந்தவன்" என்றும் கம்பர் அகத்தியரைக் குறிப்பிடுகின்றார்.

இன்று கிடைக்கும் நூல்களுள் தொன்மை வாய்ந்த இலக்கண நூலாக விளங்குவது தொல்காப்பியம் ஆகும். இது சங்ககாலத்தில் எழுந்த நூலாகக் கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் இலக்கணத்தின் கூறுகள்

இயற்றமிழ் இலக்கணம் ஐந்து கூறுகளை உடையது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பனவே அவையாகும். மேற்காட்டிய ஐந்து இலக்கணங்களையும் கூறும் நூல்களாக தொல்காப்பியம், அவிநயம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம் என்பன விளங்குகின்றன.

உலக மொழிகளில் எழுத்தும் சொல்லும்தான் இலக்கணமாக அமைந்திருக்கின்றன. ஆனால் தொல்காப்பியம் பொருள் இலக்கணம் என சிந்தித்தமை தமிழரது சிந்தனை விரிவின் பெருமையைச் சுட்டிநிற்கின்றது. தொல்காப்பியம் எழுத்து சொல் பொருள் என மூன்று கூறுகளாக நூலை வகுத்திருந்தாலும் பொருளில் யாப்பிலக்கணமும் அணியிலக்கணமும் உள்ளன. எனவேதான் தொல்காப்பியம் ஐவகை இலக்கணங்களையும் குறிப்பிடுவதாகக் கொள்வர்.

## இலக்கண நூல்கள்




மேற்குறிப்பிட்ட இலக்கண நூல்களுள் தொல்காப்பியம் தொல்காப்பியரால் இயற்றப்பட்டதாகும். அவிநயம் என்ற நூல் தற்போது கிடைத்திலது. வீரசோழியம் பௌத்த சமயத்தைச் சார்ந்த புத்தமித்திரரால் இயற்றப்பட்டது. இலக்கண விளக்கம் திருவாரூர் வைத்தியநாத தேசிகர் என்பவரால் இயற்றப்பட்டது. தொன்னூல் விளக்கம் வீரமாமுனிவராலும் முத்துவீரியம் முத்துவீர உபாத்தியாயர் என்பவராலும் இயற்றப்பட்டன.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களையும் 27 இயல்களையும் 1610 நூற்பாக்களையும் கொண்ட நூல் ஆகும். யாப்பும் அணியும் இதன் பொருளதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன. நேமிநாதம் குணவீரபண்டிதரால் இயற்றப்பட்ட நூல் ஆகும். இது சோழர் காலத்தில் எழுந்தது. எழுத்து, சொல் என இரண்டிற்கும் மாத்திரம் இலக்கணம் கூறுகின்றது. சின்னூல் எனவும் இதனை அழைப்பர். நன்னூல், பவணந்தி முனிவரால் சோழர் காலத்தில் இயற்றப்பட்டது. எழுத்து, சொல் என்பவற்றின் இலக்கணங்களை 462 நூற்பாக்களில் வெளிப்படுத்தும் நூல் ஆகும்.

பாடல்களின் வகைகள் மிகுதியாயின. இதனால் யாப்பின் உட்பிரிவாகப் பாட்டியல் நூல்கள் தோற்றம் பெற்றன. சிற்றிலக்கிய வகைகள் பற்றிப் பாட்டியல் நூல்கள் கூறின. ஐந்திலக்கண மரபை மேலும் நீட்டலாம் எனக் கருத்துரைத்த வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் புலமை இலக்கணத்தையும் சேர்த்து அறுவகை இலக்கணத்தைக் குறித்தார்.

குறித்த சில முக்கிய இலக்கண நூல்களே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. விரிவஞ்சித் தமிழில் உள்ள இலக்கண நூல்கள் கட்டுரையாளரால் பட்டியற்படுத்தப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கணக் கல்வியின் பயன்கள்.

- மருத்துவ மாணவன் ஒருவனுக்கு உடற்கூறுகள் பற்றிய அறிவு எவ்வளவிற்குத் தேவையோ அதற்கு ஒப்பாக மொழியின் கூறுகளை அறிந்து கொள்வதற்கு இலக்கணக் கல்வி உதவுகின்றது. இதனால் மொழியின் அமைப்பை அறிந்து திருத்தமாகப் பேசவும் எழுதவும் உதவுகின்றது.
- இலக்கணக் கல்வியின் நோக்கம் குறித்து இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் எழுத்தறியத் தீரும் இழிதகைமை என வெண்பா ஒன்று குறிப்பிடப்பட்டது. அதாவது சமயத்துவ ரீதியாகப் பார்த்தால் இலக்கணக் கல்வி பிறவியின் நோக்கமாகிய பாசக் கட்டுக்களை அறுத்து வீடு பேறு எய்த வைக்கின்றது.
- மொழி வளர்ச்சி எனக் கூறும் போது புதிய சொற்பெருக்கம், ஒலியமைப்பு, சொல்லமைப்பு, வாக்கிய அமைப்பு முதலிய நிலைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும் என பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் குறிப்பிடுகின்றார். இந்த வகையில் நவீன மொழித்தேவைகளை ஈடு செய்யக் கூடிய வகையில் எழுத்துச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு, பழைய இலக்கண விதி களை மாற்றி அமைப்பதற்கு, புதிய சொற்களை உருவாக்குவதற்கு (உதாரணம் : இணை யம், மின்னஞ்சல்) இலக்கண அறிவு அவசியமானது.

இதனையே நன்னூலார் பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என்ற நூற்பாவின் ஊடாகக் குறிப்பிட்டார்.

## இலக்கணம் கற்பிப்பதற்காகத் தற்போது வழக்கில் உள்ள முறைகள்

- மனன முறை
- உரைவிளக்க முறை
- விதிவருவித்தல் முறை
- விதி விளக்கல் முறை
- பிரயோக முறையும் இலக்கியங்களின் ஊடாகக் கற்றலும்

### *மனன முறையும் உரைவிளக்க முறையும்:-*

இவை இலக்கணக் கல்விக்காகப் பயன்படுத்தப்பட்ட பண்டைய பயிற்று முறைகள் ஆகும். மனனமுறை என்பது பொருள் விளக்கம் பற்றிய சிந்தனை இல்லாமல் இலக்கணச் சூத்திரங்கள், வாய்ப்பாடுகள், எடுத்துக்காட்டுகள் என்பவற்றை மனனம் செய்தல் ஆகும். பண்டைய குரு சீடப் பாரம்பரியத்தில் ஏன் எதற்கு என்ற விளக்கம் இன்றி எல்லாவற்றையும் மனனம் செய்யும் கல்வி முறையே காணப்பட்டது.

உரை விளக்கம் என்பது இலக்கணச் சூத்திரங்களிற்கு உரையாசிரியரின் கருத்து விளக்கத் தையும் உதாரணங்களையும் அப்படியே கற்றல் ஆகும். குரு குலப் பாரம்பரியத்தின் அடிப்படையில் குருவின் திறனுக்கேற்ப உரை விளக்கம் வழங்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதி விளக்கல் முறையும் விதிவருவித்தல் முறையும்:-

விதி விளக்கல் முறையில் இலக்கணச் சூத்திரங்களுக்கான விளக்கத்தை ஆசிரியர் கூறினாலும் ஆசிரியர் தான் குறிப்பிடும் உதாரணங்களுக்கு ஒத்த உதாரணங்களைக் குறிப்பிடுமாறு மாணவர்களை வழிப்படுத்துவார். அத்துடன் இலக்கணச் சூத்திரத்திற்குரிய விளக்கக் குறிப்பைச் சொந்த மொழிநடையில் எழுத வழிப்படுத்துவார். இன்று பாடசாலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் (பல்கலைக்கழகம், கலாசாலை) பெரும்பாலும் இம்முறையிலேயே இலக்கணம் கற்பிக்கப்படுகின்றது.

விதி வருவித்தல் முறையானது விதி விளக்கல் முறையின் சோர்வுத் தன்மையைப் போக்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இங்கு முதலில் தான் எடுத்துக் கொண்ட சூத்திரத்திற்குப் பொருத்தமான உதாரணங்கள் உள்ளிட்ட பல உதாரணங்களை ஆசிரியர் முன் வைப்பார். குறிப்பிடப்பட்டுள்ள உதாரணங்களுக்குள் ஒரு பொதுமையாக்கத்தைக் காண்பார். அந்தப் பொதுமைகளின் அடிப்படையில் இலக்கணச் சூத்திரத்திற்கு (அல்லது விதிக்கு) வாக்கிய வடிவத்தை வழங்குவார். இவற்றில் இருந்து மாணவர்கள் தமது புரிதலின் அடிப்படையில் சொந்த மொழி நடையில் விளக்கத்தை எழுதுவர். திறன் வாய்ந்த ஆசிரியர் ஒருவராலேயே விதி வருவித்தல் முறையில் கற்பிக்க முடியும். ஆனால் விதி வருவித்தல் முறையே இலக்கணம் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் அதிக பயன்தரக்கூடிய முறையாகும்.

விதிவருவித்தல் - விதிவிளக்கல் இரண்டையும் இணைத்துப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களும் உள்ளன. இது கற்பிக்கும் ஆசிரியரின் திறமை சார்ந்த விடயம் ஆகும்.

## பிரயோக முறையும் இலக்கியங்களின் ஊடாகக் கற்பித்தலும்:-

இலக்கிய வடிவங்கள் மற்றும் பேச்சு வழக்கு என்பவற்றைத் தொடர்ந்து பிரயோகிப்பதன் ஊடாக இலக்கணக் கூறுகளைக் கற்கலாம். இது பிரயோக முறை ஆகும். நடைமுறை வாழ்வில் பேச்சு வழக்கு மற்றும் எழுத்து வழக்கில் ஈடுபடும் போது முறையில் வகையில் இக்கற்றல் நிகழ்ந்துவிடுகின்றது. இங்கு எழுதி அல்லது பேசிப் பிரயோகித்தல் முக்கியமானது.

இதே வேளை இம்முறையுடன் நெருங்கிய தொடர்புடைய இன்னோர் வழி இலக்கியங்கள் ஊடாக இலக்கணம் கற்றல் ஆகும். பழைய இலக்கியங்கள் மற்றும் நவீன இலக்கியங்களில் உள்ள பொருள், அணிகள், சுவைகள் முதலியவற்றைப் பயில்வதன் வாயிலாக இலக்கண அறிவு வழங்கப்படுகின்றது. தற்போது பெரும்பாலும் இம்முறையின் ஊடாகவே இலக்கண அறிவை மாணவர்கள் பெற்றுக்கொள்கின்றனர்.

## இலக்கணக் கல்வி பற்றிய தற்போதைய மனப்பாங்கு

தமிழ்மொழிப் பரீட்சையில் தமிழ் இலக்கணத்திற்குப் போதிய இடமளிக்கப்படுவதில்லை என்றும் இலக்கண வினாக்களுக்குக் கவனம் செலுத்தாமலே தமிழ் மொழியில் மாணவர் தமது இலக்காகிய திறமைச் சித்தியை அடையலாம் என்பது ஆசிரியரும் மாணவரும் அறிந்து கொண்ட பரம இரகசியம் என பண்டிதர் க. நாகலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

இலக்கணக் கல்வி என்பது இன்றும் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் எழுந்த தொல்காப்பிய நூற்பாக்களைப் பயிலல் அல்லது எண்ணூறு வருடங்களுக்கு முன் எழுந்த நன்னூலைப் பயிலல் என்ற அடிப்படையிலேயே காணப்படுகின்றது. மொழியியல் சார்ந்த கூறுகளுக்கு முதன்மை வழங்கி இலக்கணம் பயிற்றுவிக்கும் முறை எல்லா இடங்களிலும் போதியளவு விருத்தி பெற்றிருக்கின்றது எனக் கூறமுடியாத நிலைமையே காணப்படுகின்றது.

ஆங்கிலேய மொழியைப் பொறுத்தவரையில் அவர்கள் பண்டைய இலக்கணத்தை அவ்வாறே கற்பதை வழக்கமாகக் கொண்டிருக்கவில்லை. நடைமுறை இலக்கணம் (Practical Grammar) என்ற பெயரிலேயே இலக்கணத்தைக் கற்கின்றனர். அத்தகைய நிலையை ஏற்கும் துணிவு தமிழ் இலக்கணக் கல்வித்துறையிலும் ஏற்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கணக் கல்வி -
## கற்றல் கற்பித்தலில் எதிர்கொள்ளப்படுகின்ற சவால்கள்.

- இலக்கணத்தின் முக்கியத்துவத்தைப் பயில்வோர் உணராத நிலையிலேயே கற்பித்தல் இடம்பெறுகின்றது. இன்று வாசிப்பிற்குரிய பெரும் தாக்கத்தைப் பத்திரிகைகள் மற்றும் இணையத் தளங்களே ஏற்படுத்துகின்றன. அவற்றின் மொழிநடை அறிவிப்பு நடை (Reporting style) என்ற வகைப்பாட்டிற்குரியதாக விளங்குகின்றது. அத்துடன் இலக்கண வழுக்களுக்குப் பஞ்சமின்றிப் பத்திரிகைத் தமிழ் அமைந்திருக்கின்றது.
- எடுத்துக்காட்டாக அண்மையில் யாழ்ப்பாணப் பிரபல பத்திரிகை ஒன்று பின்வரும் விளம்பரத்தைப் பிரசுரித்தது.
- "ஆங்கில ஆசிரியர் ஒருவருக்கு ஆங்கிலம் கற்பிப்பதற்கு அறை வாடகைக்குத் தேவை" என அந்த விளம்பரம் அமைந்திருந்து. இங்கு ஆசிரியர் படிக்கப்போகின்றாரா? படிப்பிக்கப் போகின்றாரா என்ற கருத்து மயக்கம் காணப்படுகின்றது.
- தேர்ச்சி மையக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பற்றிப்பேசினாலும் பரீட்சையை மையப்படுத்திய கற்றல் கற்பித்தல் முறைமையே செயலுருப்பெற்றுள்ளது. பாடசாலைப் பரீட்சைகளில் இலக்கியப் பகுதிகளுக்கு எனத் தனியான வினாத்தாள் அமைந்திருக்கின்ற போதிலும் (க.பொத. சா.தரப் பரீட்சையில் தமிழ் பத்திரம் - III) இலக்கணத்திற்கெனத் தனியான வினாத்தாள் அமைந்திருக்கவில்லை.
- விதிவருவித்தல் முறை பயனுடைய கற்பித்தல் முறையாக அமைந்திருந்தாலும் இதனைத் திறமையாகப் பயன்படுத்திக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை காணப்படு கின்றது. அத்துடன் பாடசாலைக்கான கலைத்திட்டத்தில் இவ்வாறு கற்பிப்பதற்கான கால அளவும் போதாமல் இருக்கின்றது.
- பாடசாலை மட்ட மற்றும் ஆசிரியர்களுக்கான தமிழ் இலக்கணக் கல்விப் பாட உள்ளடக்கத் தில் மொழியியல் சார்ந்த கூறுகள் போதியளவு உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இன்று ஆசிரியர்களாக உள்ள பெரும்பாலானவர்கள் இலக்கணக் கல்விக்கு முக்கியத்து வம் வழங்கப்படாத தமிழ்ப் பாடத்திட்டத்தின் ஊடாகப் பயின்று வந்தவர்களாகக் காணப்படு கின்றனர்.
- பாரம்பரியமாக கற்பிக்கப்பட்ட சில இலக்கணக் கூறுகளை நவீன இலக்கணகாரர் மறுதலிக்கின்ற போது ஏற்படுகின்ற முரண்நிலை.
- எடுத்துக்காட்டாக ஆகு பெயர் என்ற விடயம் நவீன இலக்கண உலகில் பொருத்தமற்றது என்பது குறித்த வாதப் பிரதிவாதங்கள்.
- வேற்றுமைகளின் எண்ணிக்கையை எட்டு என்பதா? ஒன்பது என்பதா? என்பது குறித்த வாதப் பிரதிவாதங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

### *நிறைவாக...*

இரண்டாயிரம் ஆண்டுகால இலக்கணப் பாரம்பரியம் தமிழுக்கு உரித்தானது. அதன் பயன்படு தன்மை காலத்திற்கேற்ப மாற்றங்களைக் கண்டிருந்தாலும் இன்றைய பாடநூல்களில் அவை சரிவர உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. இன்றைய பாடநூல்களில் உள்ள இலக்கணப் பகுதிகள் மரபார்ந்த இலக்கண முறைமையின் பாதிப்பில் இருந்து விடுபட முடியாதவையாகவும் நவீன இலக்கணக் கல்வி பற்றிய செய்திகளை முழுமையாக உள்வாங்க முடியாதவையாகவும் இருப்பதைக்காண முடிகின்றது.

இலக்கிய வழக்கில் காலந்தோறும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. தொல்காப்பியம் எழுந்து பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் காலத்தின் தேவை உணர்ந்து நன்னூல் எழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்கைப் பெற்றது. சங்ககாலத் தமிழுக்கும் சோழர் காலத் தமிழுக்கும் வேற்றுமை இருந்தமையே இதற்கான பிரதான காரணம் ஆகும். எடுத்துக்காட்டாக அவர் என்ற சொல் தொல்காப்பியர் காலத்திலும் நன்னூலார் காலத்திலும் பலரைக் குறிப்பதற்கே (பலர்பாலில்) பயன்பட்டது. ஆனால் இக்காலத்தில் அவர் என்ற சொல் ஒருவரைக் குறிப்பதற்கே பயன்படுகின்றது. இவ்வாறு காலத்திற்கேற்ப மாற்றங்கள் இயல்பாகவே நிகழ்ந்தவண்ணம் உள்ளன. ஆயினும் நன்னூலுக்குப் பின்னர் முழுமை பெற்ற நடைமுறை இலக்கண நூலுக்கான தேவை உணரப்பட்டிருந்தாலும் அத்தகைய முழுமை பெற்ற இலக்கண நூல் தமிழுலகில் செல்வாக்குப் பெறவில்லை. அந்த வெற்றிடத்தை நிரப்பும் தகைமையும் காலத்தின் கைகளிலேயே உள்ளது.

## உதவியன:


- கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழ் கற்பித்தல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2006
- சுப்பிரமணியன். ச.வே., தமிழ் இலக்கிய வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- சுப்புரெட்டியார். ந., தமிழ் பயிற்றும் முறை, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம். 2002
- தமிழ்மொழி கற்பித்தல் முறைகள், கல்விப் பீடம், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், நுகேகொட. 2009
- பார்த்தீபன்.ந., மொழி, தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா, 2017
- பொற்கோ, இக்காலத் தமிழ் இலக்கணம், பூம்பொழில் வெளியீடு, சென்னை, 2006
- வீரகத்தி. க., பிற்கால இலக்கண மாற்றங்கள், குமரன் புத்தக இல்லம், 2011




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் பழந்தமிழர் கலைப் பாரம்பரியம் இந்து வெண்கலப் படிமங்கள் பற்றிய ஒரு கலைவரலாற்று நோக்கு

*பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா.*
*வரலாற்றுத்துறை*




## *பிரச்சினைக்கான அறிமுகம்:*

ஈழம் தனித்துவமான பண்பாட்டுத் தோற்றப்பாட்டிற்குரிய பகைப்புலமாக நெடுங்காலமாகவே விளங்கி வந்திருக்கின்றது. பண்பாட்டு வருகைகளுக்கு மத்தியிலும் ஈழத்துக்குரிய பண்பாட்டு மரபு ஒன்று வளர்ச்சி பெற்று வந்துள்ளமையை சான்றுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இருந்தும் ஈழப் பண்பாடு என்பது தீவகப் பண்புக்குரியதாக, சமுத்திரவியல் வழிவந்த செல்வாக்கினைப் பிரதிபலிப்ப தாக அமைந்ததாகக் கொள்ளலாம். ஈழத்து மக்களது வாழ்வு பல நிலைகளிலும், பல முனைகளிலும் மிகவும் அண்மித்த நிலையில் சமுத்திரவியல் வளங்களுடனும், ஜீவனோபாயத்துடனும் தவிர்க்க முடியாதபடி இணைக்கப்பட்டிருந்தது. இச்சூழலே இங்கு தனித்துவமான கலைமரபுகள் வளர்ச்சி பெறுவதற்கும் காரணமாக அமைந்தது.

ஈழத்தில் கலைமரபுகளின் தோற்றமும் வளர்ச்சியுமானது காலஓட்டத்திலே இந்தியத் துணை கண்டத்தில், சிறப்பாக மிகவும் அண்மித்த தரைப் பரப்பான தென்னிந்தியத் தீபகற்பத்தில் ஏற்பட்டுக் கொண்ட மாற்றங்களுடன் பக்கம் பக்கமாக இணைத்துக் கொண்டுமிருந்தது. இதனால் இங்கு தனித்துவமான வகையில் ஏற்கனவே வடிவமைக்கப்பட்டுக் கொண்டிருந்த கலை மரபுகள் மேலும் வெளியே இருந்து உள்வாங்கப்பட்ட விதேச கலைமரபுகளின் மாற்றங்களின் தாக்கங்களினால் கலப்புற வேண்டிய நிலையை எய்தியது. இப்பண்பாட்டுக் கலப்பானது (Cultural Fusion) ஒரு வரையறுக்கப்பட்ட (தீவுப்) பரப்பிற்குள்ளோ அல்லது குறித்த இன - மதவடிப்படையிலோ, தனித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியான முறையில் ஏற்பட்டிருக்கவில்லை. அந்த வகையில் குறிப்பிட்ட பண்பாட்டு வடிவமானது (இன்னொரு நிலையில்) அதே மையத்தில் பிறிதொரு பண்பாட்டு மரபினால் கலப்புறச் செய்யப்பட்டு, முன்னையது கைவிடப்பட்டு அல்லது அதனுடைய பிரதான பண்பாட்டு விழுமியங்களை உள்வாங்கப்பட்ட நிலையில் பிந்திய பண்பாட்டு வடிவங்கள் செல்வாக்குச் செலுத்திய தன்மையையே காண முடிகிறது. ஈழத்தின் பல மையங்களில் வெளிப்பட்டிருக்கும் பண்பாட்டு எச்சங்களை ஆதாரம் காட்டி இக்கருதுகோளினை நன்கு நிறுவ முடியும். பெரு நிலப்பரப் பொன்றினைக் கொண்டிராத தீவக நிலைக்குரிய செயற்பாடுகளே இதற்குரிய அடிப்படைக் காரணமாகின்றன. இவையே இத்தீவில் ஓர் இனத்துக்குரிய அல்லது மதத்தினருக்குரிய பண்பாட்டு வடிவங்கள் ஒரே மையத்தில் தொடர்ச்சியாகக் கிடைக்கப்பெறாமைக்குரிய காரணமும் ஆகின்றன. இங்கு தமிழ்-சிங்களப் பண்பாட்டுக் கலைக்கூறுகளை வேறுபடுத்திப் பார்க்க முடியாதவாறு மத்தியகாலம் வரைக்குமாவது இந்து பௌத்தக் கலைமரபுகள் இரண்டும் ஒன்றில் ஒன்று கலந்தும் அல்லது ஒன்றுவிட்டு மற்றொன்றுமாக வளர்ச்சி பெற்றுச் சென்றுள்ள தன்மையைக் காண முடிகிறது. இத்தீவின் எவ்விடத்தினைப் பண்பாட்டு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டாலும் இப் பொதுத் தன்மையைப் பேதமின்றிக் கண்டு கொள்ள முடிகிறது. இது தாயகக் கோட்பாட்டு நோக்கில் ஓர் இனத்தின் பண்பாட்டு வெளிப்பாடுகளை ஆராயப்புகும் கலை ஆர்வலர்க்கும் ஆய்வாளர்க்கும் பிரதானமான சவாலாகவும் அமைகின்றது. இதுவே ஈழத்துப் பண்பாட்டுப் பரப்பில் தமிழரின் தொடர்ச்சியான கலை மரபினை இனங்காணும் நோக்கில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கும் பிரதானமான தடைக் கல்லாகின்றது. இவ்வாய்வுக் கட்டுரையில் ஈழத்தில் வெண்கலப் படிமங்கள் ஊடாக அறியப்படும் "தமிழர் கலைமரபு" பற்றிய பிரச்சினை எடுத்து நோக்கப்படுகின்றது.

## *ஈழத்துக் கலைமரபு பற்றிய சர்ச்சைகள்:-*

ஈழத்து வரலாற்று எழுத்தியலில் புதிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுக் கொள்கின்ற இக்காலகட்டத்தில், அதன் கலை வரலாறு தொடர்பாகவும் புதிய நோக்குகளும், புதிய அணுகு முறைகளும் உருவாகிக்கொண்டு வருவதனை அவதானிக்க முடிகிறது. இத்தீவில் ஆதிகாலச் சமூகம் உருவாக்கியிருந்த கலைமரபுகள் பற்றி ஆராய்ந்த கலை வரலாற்று ஆசிரியர்கள் இரண்டு நிலைகளில் நின்று தமது முடிவுகளை முன்வைத்துள்ளனர். முதலாவது பிரிவினர் ஈழத்துக் கலைமரபின் தோற்றமுட்பட, கலையம்சங்கள் பலவும் வட இந்தியாவுடன் இத்தீவு கொண்டிருந்த உறவுகளின் அடிப்படையில் இங்கு கொண்டு வரப்பட்டு, வளர்த்தெடுக்கப்பட்டன எனவும் இரண்டாவது பிரிவினர் மிக அண்மித்ததாக அமைந்த தென்னிந்தியாவுடன் ஈழம் கொண்டிருந்த பன்முனைப்பட்ட உறவு நிலைகளினாலேயே இத்தீவின் கலை மரபுகள் உருவாக்கப்பட்டன எனவும் வாதிடுகின்றனர். வடஇந்தியாவுடனான தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டே ஈழத்துக் கலையூற்றுக்கள் மடைதிறந்தன என வாதிடுவோர்களுள் செ. பரணவிதான மிக முக்கியமானவராக உள்ளார். இவர் ஈழத்துக் கலைவளர்ச்சியை வடஇந்திய ஆரிய வர்த்தகத்துடன் தொடர்புபடுத்தி ஈழத்துக் கலையூற்றுக்கள் ஆரியமயமாக்கலுடனேயே வளர்த்தெடுக்கப்பட்டன என வாதிடுகின்றார். C.E. கொடகும்புர போன்ற வரலாற்று ஆசிரியர்கள் ஈழத்துக் கலையூற்றுக்களானவை தென்னிந் தியாவூடாகவே வந்தடையப்பட்ட காரணத்தினால் தென்னிந்தியச் செல்வாக்கிற்குட்பட்டவையான கலை மரபுகளே இங்கு வளர்ச்சி பெற்றன எனக் குறிப்பிடுகின்றனர். குறிப்பாக ஆந்திரக் கலை மரபுகளின் ஊடாகவே ஈழத்துக் கலையூற்றுக்கள் மெருகூட்டப்பட்டு புத்தூக்கம் பெற்றன என்பது இவர்களது வாதமாகும்.

ஆனால் மிகவும் அண்மைக் காலத்தில் ஈழத்துக்கேயுரிய தனித்துவமான கலை மரபுகளின் அடியாகத் தோற்றம்பெற்று பெருவளர்ச்சி கண்ட கலைப் பாரம்பரியத்தினை அடையாளம் கண்டு கொண்ட வகையில் சேனக பண்டாரநாயக்கா போன்ற கலைத்துறை ஆர்வம்மிக்க ஆய்வாளர்கள் சமூகமானிடவியல் நோக்கில் ஈழத்துக்கலை வளர்ச்சி பற்றி ஆராய்ந்து வருவது குறிப்பிடத்தக்க தாகும். சேனக பண்டாரநாயக்கா ஈழத்துக் கலைவளர்ச்சியை இத்தீவுக்கேயுரித்தான தனித்துவமான ஓரம்சமாக எடுத்துக்காட்டி அயல்நாடான இந்தியா எவ்விதத்திலும் இங்கு கலைமரபு உருவாவதற்கு அடியிட்டுக் கொடுக்கவில்லை என வாதிடுகின்றார். இம்மூன்று பிரவினருமே "சிங்களக் கலைமரபு" என்ற ஒன்றினை தனித்துவமாக இனங்காண வேண்டி தத்தமது வாதங்களைக் கொண்டு சென்றிருப்பதனைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் பௌத்தமதச் செல்வாக்கிற்குட்பட்ட கலை வடிவங்கள் யாவும் "சிங்களக் கலைமரபு" எனப் பெயரிடப்பட்டு, ஈழத்தில் பௌத்த சிங்களக் கலைமரபு மட்டுமே தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்திருந்தது என எடுத்துக்காட்ட முற்பட்டுள்ளனர். மிகவும் அருமையாகவே பௌத்த மதத் தொடர்பற்ற கலை வடிவங்களைப் பௌராணிக நிலைக்குரியதாகத் திரித்துக் காட்டவும் முயன்றுள்ளனர். இந்துமதச் செல்வாக்கின் நிலைகளைக் கலைமரபுகள் வெளிப்படுத்தி நிற்கின்ற தன்மைகள் பெருமளவுக்கு மறைக்கப்பட்டோ அல்லது அதிமுக்கியத்துவம் கொடுக்காது பின்தள்ளி வைக்கப்படுவதன் மூலமோ "ஈழத்துத் தமிழர் கலைப் பாரம்பரியம்" அல்லது "திராவிடர் கலை மரபு" என்பது இத்தீவின் பண்பாட்டு வரலாற்றில் தனித்துவத்தினை ஏற்படுத்த முடியாது எனக் கருதப்பட்டபோதும் இவ்வாறான பண்பாட்டு ஆய்வுச்சிக்கல்கள் மத்தியிலும் ஈழத் தமிழர் வளர்த்தெடுத்த கலை மரபுகளுள் ஒரு பகுதியான வெண்கலப்படிமக் கலைமரபு பற்றிக் கிடைக்கப்பெற்ற சான்றாதாரங்களுடன் இங்கே ஆராய வேண்டிய அவசியம் இப்பொழுது உணரப்பட்டுள்ளது.

## *வெண்கலப் படிமங்கள் கிடைத்த மையங்கள்:*

இலங்கையில் கடந்த நூற்றாண்டின் இறுதியில் தொடக்கி வைக்கப்பட்ட மேலாய்வுகளின தும், அகழ்வாய்வுகளினதும் விளைவாகவும், தற்செயலாக வெளிவந்த கலைக்கருவூலங்கள் காரணமாகவும், தனிப்பட்டோர்களது அரும்பொருட் சேகரிப்பு முயற்சி காரணமாகவும் ஓரளதவிற்கா வது ஈழத்தில் தமிழர் பங்களிப்பினை வெளிப்படுத்தக் கூடியளவிற்கு வெண்கலப் படிமங்கள் கிடைக்கப் பெற்றும், கிடைத்த வண்ணமும் உள்ளன. இத்தகைய வெண்கலப் படிமங்கள் பெருமளவிற்கு இந்து விக்கிரஹவியற் கோட்பாடு நெறிமுறையின் கண்நின்று உருவாக்கப்பட்டவை யாகவே காணப்படு வது குறிப்பிடத்தக்கது. எண்ணிக்கையின் அடிப்படையில் அதிகமாகக் கிடைத்த வண்ணம் இருப்பவை பார்வதியின் வெண்கலச் சிற்பங்கள் ஆகும். இதுவரையில் 20இற்கு மேற்பட்டவை இத்தொகுதியிற் கிடைத்துள்ளன. இதற்கடுத்த நிலையில் குறிப்பிடத்தக்க அளவில் கிடைத்திருக்கும் வெண்கலச் சிற்பங்கள் சிவனது நடராச வடிவங்களாகும். கிடைத்துள்ள 8 வெண்கலங்களுள் 5 மட்டும் திருவாசியுடன் காணப்படுகின்றன. நடராச படிமங்களைவிட சிவனது படிமங்களும், சோமாஸ்கந்த மூர்த்திக்குரிய படிமங்களும் இத்தீவில் கிடைத்திருப்பது தமிழர் வளர்த்தெடுத்த படிமக் கலைமரபுக்கு மேலும் சான்று சேர்ப்பதாகவுள்ளன.

இவை அனைத்துக்கும் மேலாக சைவ நாயன்மார் களது வெண்கலப் படிமங்கள் 7 உம் 3 விநாயகர் படிமங்களும், காரைக்காலம்மையாரது படிமம் ஒன்று மாக கிடைத்துள்ள மாதிரிகள் ஈழத்துக்கேயுரித்தான வெண்கலப் படிமக் கலையின் தனித்துவமான கூறு களை அடையாளம் காண்பதற்கு வழிவகுப்பதாக வுள்ளன. மிக அண்மையில் கிடைத்துள்ள வெண் கலப் படிமமான சிவனது இன்னொரு வடிவம் அர்த்த நாரீசுவரர் சிலையானது ஈழத்தமிழர் கைவண்ணத் திலிருந்து உருவானது என்பதனைத் தென்னிலங்கை ஆய்வாளர்களே ஏற்றுக்கொண்டு முள்ளனர். இவை அனைத்துக்கும் மேலாக நிற்கின்ற தோற்றத்துடன் கிடைத்துள்ள ஸ்ரீ விஷ்ணுவின் வெண்கலப் படிமங் கள் ஈழத்துக்கேயுரிய அலங்காரக் கூறுகளினால் ஆனவை என்பதனையும் இவ்வறிஞர் உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இவ்வாறு 65 க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் கிடைத்துள்ள இந்து வெண்கலப் படிமங்களுள் செம்பாகத்திற்கும் மேற்பட்டவை ஈழத்துத் தமிழ் மரபின் தோற்ற முறையைச் சுட்டி நிற்கின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே குறிப்பிடப்பட்ட வெண்கலப் படிமங்கள் யாவும் கிடைத்துள்ள மையங்களாகப் பின்வருவன காணப்படுகின்றன. "ஜனநாதமங்களம்" என்ற தமிழ்ப் பெயரால் புராதன காலத்தில் அழைக்கப்பட்ட பொலநறுவையில் இருந்தே மிகக் கூடுதலான வெண்கலப்படிமங்கள் அகழ்வாய்வுகளின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டன. இப்பண்பாட்டு மையத்திலிருந்து ஐந்து சிவன் கோவிலும், ஏழு விஷ்ணு கோவில்களும், ஒரு காளிகோவிலும் அகழ்வாய்வின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்த நிலையில் காலத்தால் முற்பட்ட வெண்கலப்படிமங்களைக் கொண்டிருந்த மையமாக அநுராதபுரம் விளங்குகின்றது. இங்கிருந்தும் இந்துக்கோவில்கள் பலவற்றின் அழிபாடுகள் தொல்லியல் அகழ்வின் பொழுது வெளிக்கொணரப்பட்டன. தற்பொழுது பதவியா என்றழைக்கப்படும் ஸ்ரீபதிக் கிராமத்திலிருந்து பல பார்வதி வெண்கலச் சிற்பங்கள் வெளிக்கொணரப்பட்டன. ஸ்ரீ பார்வதிபுரம் எனவும் பதவியா அழைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. இங்கிருந்தே நந்திச் சின்னம் (சேதுவடிவம்) பொறித்த செம்பினாலான முத்திரைச் சாசனம் கண்டுபிடிக்கப்பட்டது. இது தமிழர் பாரம்பரிய வரலாற்றுக்கு ஒரு திறவுகோல் எனலாம். திருகோணமலையில் இருந்து தற்செயலாகக் கிடைக்கப்பெற்ற தங்கம் அதிகம் கலந்த வெண்கல விக்கிரஹங்கள் ஈழத்தமிழர் படிமக் கலைக்கோர் உரைகல் எனலாம். திருக்கேதீஸ்வரத்திலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட வெண் கலப் படிமங்கள் வார்ப்புக்கலையின் பிராந்திய வேறுபாடுகளை அல்லது பிராந்தியத்திற்குரிய தனித்துவமான பண்புகளை விளக்கி நிற்கின்றன. தற்பொழுது கலாசார முக்கோணத்திட்டத்தின் கீழ் யூனெஸ்கோவின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் பண்பாட்டு ஆய்வுகளின்போது குறிப்பிடத் தக்களவிலான இந்து வெண்கலச் சிற்பங்கள் கிடைத்து வருகின்றன. முழுக்க முழுக்க இந்துப் பண்பாட்டுச் சூழலின் அடியாகவே அவை கிடைத்து வருகின்றன. கண்டி, அநுராதபுரம், பொலநறுவை ஆகிய மூன்று மையங்களையம் இணைக்கும் ஒரு முக்கோணப் பரப்பிற்குள்ளேயே இவ்வாய்வுத்திட்டம் மேற்கொள்ளபட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

## பார்வதி வெண்கலப் படிமங்கள் காட்டும் ஈழத்துக் கலைமரபு




ஈழத்துத் தமிழர் கலைமரபொன்றினை மிகவும் இலகுவாக அடையாளம் காணத்தக்க வகையில் எமக்குக் கிடைத்துள்ள மிகச்சிறந்த சான்றாதாரங்களாக பார்வதி வெண்கலப்படிமங்கள் விளங்குகின்றன. கொழும்பில் உள்ள தேசிய அரும்பொருட் காட்சிச்சாலையிலும் அநுராத புரத்திலுள்ள தேசிய நூதனசாலையிலும் பொலநறுவையில் உள்ள கலாசார முக்கோணத்திட்ட அலுவலகத்திலும் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் இப்பார்வதி வெண்கலப் படிமங்கள் இதுவரையில் நுண்கலை நின்ற ஆய்வுநெறிக்குட்படுத்தப்படாத நிலையில் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 க்கும் மேற்பட்ட பார்வதி வெண்கலப்படிமங்களில் இரண்டு படிமங்கள் மாத்திரம் இருக்கின்ற நிலையில் உருவாக்கப்பட்டுள்ளனவாகும். மிகுதியானவை நிற்கின்ற நிலையில் சமபங்க, திரிபங்க நிலைகளுக்குட்படுத்தப்பட்ட முறையில் உருவாக்கப்பட்டுள்ளன. நிற்கின்ற பார்வதி வெண்கலப் படிமங்கள் யாவும் முழுமையாக மலர்ந்த தாமரைப்பீடத்தின் மீது உருவாக்கப்பட்டுள் ளன. தென்னிந்திய கலை வரலாற்றாசிரியர்கள் உட்பட இதுவரைக்கும் ஈழத்திற் கிடைத்த நடராச வெண்கலப் படிமங்களைப் பற்றியே பெருமளவுக்குத் தமது குறிப்புகளையும், வர்ணனைகளையும் கொடுத்தனரேயொழிய பார்வதி வெண்கலப்படிமங்களைப் பற்றிய விரிவான ஆய்வில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. குறிப்பிட்ட பிராந்தியத்தின் பண்பாட்டு வெளிப்பாட்டினைப் "பெண்மை" எவ்வாறு வெளிக்கொணரத்தக்க ஊடகமாக விளங்குகின்றதோ அதனையொப்ப இத்தாய்த் தெய்வ உருவங்களும் குறிப்பிட்ட இனத்தினதும், மதத்தினதும் இயல்பான கலைமரபுகளை வெளிக்கொண ரும் ஊடகமாக விளங்குகின்றன எனலாம். அந்தவகையில் ஈழத்தின் புராதன காலத் திராவிடப் பண்பாட்டு வளர்ச்சியில் பார்வதி வெண்கலப்படிமங்கள் பிரதான பங்கினைப் பெற்றிருந்தன என்றால் அக்கூற்று மிகையாகாது.

ஈழத்தில் உருவாக்கி, செம்மைப்படுத்தப்பட்ட நிலையில் எமக்குக் கிடைக்கப்பெற்ற ஒரு படிமமாகப் பார்வதிசிலை இல.1 (CMR No. 13, 104, 286) காணப்படுகின்றது. இப்படிமத்தின் கலையம்சங்கள் முழுவதுமே ஈழத்து சிற்பியின் கைவண்ணத்தினூடாக வடிவமைக்கப்பட்டது என்பதில் கலை ஆய்வாளர் எவருக்குமே சந்தேகம் இருக்க முடியாது. தாமரை ஆசனத்தின் மீது நிற்கும் நிலையில் அமைக்கப்பட்ட இப்படிமமானது 51.2 சென்ரிமீற்றர் உயரத்தினைக் கொண்டதாக, தலையில் கரண்ட மகுடத்தினையும், கழுத்தில் கடி சூத்திரம் உட்பட ஆபரண அடுக்குகளைத் தாங்கியும் வடிவமைக்கப்பட்டுள்ளது. வலதுகரமானது நீலத்தாமரை மொட்டொன்றினைத் தாங்கி நிற்க, இடது கரமானது கடஹஸ்த்தநிலையில் கீழே தொங்கவிடப்பட்ட நிலையில் காட்டப்பட்டுள்ளது. மேகலையுடன் கூடிய இடையலங்கார ஆபரணங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஆடையமைப பானது கீழே கணுக்கால் வரைக்கும் காட்டப்பட்டுள்ளது. இப்படிமத்தின் சிற்ப அமைதியை நன்கு அவதானிக்க இந்திய சிற்பக்கலை வல்லுனரான கங்கூலி என்பவர் தென்னிந்திய படிமக்கலை மரபிலிருந்து இது முற்றிலும் வேறான படிமக்கலை மரபொன்றினூடாக வடிவம் பெற்றிருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இப்படிமத்தின் "திரிபங்க" நிலையானது (அசைவுநிலை) வலதுபக்கமாக வலது பாதமும் வலது இடையும் முறையே மடிக்கப்பட்டும், வளைக்கப்பட்டும் எடுத்துக் காட்டப்பட்டிருப்பது அதனைத் தென்னிந்திய சிற்ப மரபுக்குரிய லட்சணங்களிலிருந்து வேறுபடுத்தி தனித்துவப்படுத்தியுள்ளது. தென்னிந்தியத் திரிபங்க நிலையானது படிமத்தின் இடது பக்கமாகவே அமைந்திருப்பது பொது வழக்காகும். இப்படிமத்தின் இன்னொரு தனித்துவமான அம்சமாக விளங்குவது வலது கரத்தில் காணப்படுகின்ற தாமரை மொட்டின் நிலையானது வலது மார்பக மணிக்கு மேலே உயர்ந்திருப்பது என்பதாகும். சிற்ப லட்சணங்களின்படி பார்வதியின் உருவ அமைதியில் வலது கரத்தினால் தாங்கப்பட்டுள்ள தாமரை மொட்டானது மார்பகத்திற்கு மட்டமாக அல்லது கீழேயே அமைதல் வேண்டும் என்பதாகும்.

பொதுவாகக் குறிப்பிடுவதாயின் இவ்வெண்கலப் படிமத்தின் வெளிப்பாடானது ஈழத்திற்கேயுரிய சிற்பியின் கைத்தேர்ச்சியூடாக வடிவமைக்கப்பட்டது என்பதே உண்மை. இப்பார்வதி சிலையின் தலையிற் காணப்படும் முடியின் அமைப்பானது பிற்காலத்தில் தமிழர் நாட்டுக்கூத்து மரபில் பின்பற்றப் பட்ட வடமோடிக்குரிய "கரண்ட" வடிவத்தில் இடம் பெற்றிருப்பது அப்படிமத்தின் வடிவமைப்புக்குரிய பாணியை தெளிவுபடுத்துவதாக உள்ளது. கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இப்படிமத்தின் காலத்தினை கி.பி. 10, 13 ஆம் நூற்றாண்டுகட்கிடைப்பட்டது என வரையறை செய்கின்றனர்.

ஈழத்துக் கலைஞனின் கைவண்ணத்தில் தோற்றப்பொலிவுடன் உருவான மற்றொரு பார்வதி வெண்கலப்படிமமானது இலக்கம் 8 க்குரிய படிமம் (CMR No.13. 296.285) ஆகும். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கலைமரபில் உருவாக்கப்பட்டு, இருக்கின்ற நிலையில் (Sitting Posture) வெளிப்படுத்தப்பட்ட இப்பார்வதி வெண்கலப்படிமமானது 41 சென்ரி மீற்றர் உயரத்தினை யுடையதாக, (தாமரை யாசனத்தினை இழந்த நிலையில்) பொலநறுவையில் இருந்து மீட்டெடுக்கப் பட்டது. இப்படிமத்திலும் பார்வதிசிலை இலக்கம் 1 இனது குணவியல்புகளைப் போன்றே பல தனித்துவமான கலையம்சங்களைக் காண முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாசன நிலையில் அமைக்கப்பட்ட இப் படிமத்தின் இடதுபாதமானது கீழ் நோக்கியவாறு தொங்கவிடப்பட்டும், வலது பாதமானது மடிக்கப்பட்ட நிலையிலும் வலது கரம் தாமரைமொட்டு ஒன்றினைத் தாங்கிய நிலையிலும் இடதுகரம் வரதஹஸ்த நிலையிலும் சித்தரிக்கப்பட்டுள்ளது. தாமரை மொட்டானது வலதுபக்க மார்பக மணிக்கு மேல் உயர்த்தப்பட்டுக் காட்டப்பட்டுள்ளது. இந் நிலையானது மரபு ரீதியான சிற்ப லட்சணங்களை மீறிய தன்மையைக் காட்டி நின்றாலும் கூட, சுதேசக்கலை மரபு ஒன்றின் பிரசவிப்பாகவே வெளிப்படுத்தப்பட்ட தன்மையினை உறுதிப்படுத்தி நிற்கின்றது எனக் குறிப்பிடலாம். இதனை அவதானித்த இந்தியச் சிற்பவியல் ஆய்வாளர் கங்கூலி என்பவர் இச்சிற்பப் படிமத்தினைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

ஓரளவுக்கொத்த இன்னொரு பார்வதி சிலையுடன் இச்சிலையை ஒப்பிட்டு நோக்குவோமே யானால், அவற்றின் உருவ அமைதிக்கும், மெருகூட்டலுக்கும், ஆடையாபரணங்களது வரைவுகளுக்குமிடையே காணப்படும் பாரிய வேறுபாடு என்பன எல்லாவற்றையும் கொண்ட இலங்கையின் உதாரணங்களானவை தென்னிந்திய விதிமுறைகளுக்கு அவ்வுலோகச் சிற்பியானவன் வழிப்படுத்தப்பட்டவன் அல்லன் என்பதைத் தெளிவாக்குகின்றன."

கங்கூலியினது இக்கருதுகோளானது திட்டவட்டமாக ஈழத்துக்கேயுரிய படிமக்கலைப் பாரம்பரியத்தினை (Bronze Casting School of Art of Ceylon) நிறுவுவதாகவே அமைகின்றது. ஈழத்துக்கலைமரபின் பிரதான அம்சங்களைக் கொண்டிருக்கும் இப்படிமத்தின் சிரசிலே கூம்பு வடிவமாக (Conical) அமைந்த முடி ஒன்றும், காதுகளில் அமைந்துள்ள ஆபரணங்கள் இரண்டும், கழுத்திலே அமையப்பெற்ற மாலைகள் மூன்றுமாக இணைந்து, இப்பார்வதிசிலையின் தனித்துவமான பிறப்பினை சுதேசக்கலை மரபுக்குரியதாக்கியுள்ளது. கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இச்சிலையை கி.பி. 10 ஆம் 13 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்டது என வரையறுத்துள்ளார். இவ்வகையில் ஈழத்தமிழர் படிமக்கலை வரலாற்றிற்குச் சான்றாகும் பார்வதிசிலை இல.08 உம் முக்கியமான வரலாற்று மூலாதாரமாகின்றது.

திருகோணமலையில் வடக்குக் கடற்கரை வீதியில் தற்செயலாகக் கிடைத்த பெரும் கலைக்கருவூலங்களுள் இரண்டு பார்வதி வெண்கலப்படிமங்களும் உள்ளடங்கியிருந்தன. ஈழத்துத் தமிழர் படிமக்கலை வரலாற்றிற்குத் திருகோணமலையிற் கிடைத்த இவ்வெண்கலப் படிமங்கள் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குகின்றன. பார்வதிசிலைகள் இலக்கம் 11, 12 (Find No. 1950. Trin.) என அடையாளமிடப்பட்ட இப்படிமங்களுள் முதலாவது இருக்கின்ற நிலையிலும், இரண்டாவது நிற்கின்ற நிலையிலும் முறையே 47.6 சென்ரி மீற்றர், 50 சென்ரி மீற்றர் உயரங்களையுடையதாய் அமைக்கப்பட்டதனைக் காணலாம்.

ஈழத்திற்கேயுரிய காலத்தால் முந்திய தனித்துவமான தமிழர் படிமக்கலை மரபு ஒன்று திருகோணமலை மாவட்டத்தில் தோற்றம்பெற்று வளர்ச்சியடைந்திருந்தமைக்கு இவை சிறப்பான சான்றுகளாகும். வரதமுத்திரையுடன் கூடிய இருக்கின்ற நிலையில் உள்ள பார்வதியின் வலது கரத்திலே நீலோற்பவ மலர்மொட்டு காணப்படுகின்றது. சுகாசன நிலையில் அமைந்த இச்சிலையின் வலது பாதத்தின் பெருவிரல் சாய்வாக கீழே தொங்கிக் கொண்டிருக்கும் இடது பாதத்தின் முழங் காலினை மெல்லத் தொட்டபடி காணப்படுவது அதன் பழமைத் தன்மையை எடுத்துக் காட்டுகின்ற இயல்பெனலாம்.

நிற்கின்ற நிலையில் அமைந்த பார்வதியின் சிறப்பியல்புகள் பல இந்திய, ஐரோப்பிய சிற்பக் கலை ஆய்வாளர்களை ஒருங்கே ஈர்த்துள்ளது. இச்சிலையின் விசேட அம்சம் என்னவெனில் திரு வாசி அல்லது பிரபா மண்டலத்தினுள் தாமரையாசனத்தின் மீது உருவாக்கப்பட்ட ஒரேயொரு வடிவம் இதுவாகும். துரதிஷ்டவசமாக அத்திருவாசியின் மேற்பாகம் எமக்குக் கிடைக்காமற் போயிற்று "மீனாட்சி" என்று வர்ணிக்குமளவிற்கு எடுத்த எடுப்பில் ஒரு மீனைப்போன்ற தோற்றத்தில், உண்மை யான திறபங்க நிலையில், பெண்மையின் இலட்சியப் பிம்பம் பிரதிபலிக்கும்படி வடிவமைக்கப்பட்ட இப்படிமம் H.Zimmer என்ற மேலைத்தேயக் கலைப்புலவரை ஒருங்கே ஈர்த்துள்ளது. ஈழத்து சமுத்திரவியல் வழிவந்த குணவியல்புகள் இலகுவிலே இலங்கும்படி வடிவமைக்கப்பட்ட ஒரு படிம மாகவே இதனைக் கொள்ள வேண்டும். ஈழத்துத் தமிழர் படிமக்கலை வரலாற்றில் இப்பார்வதி படிம மானது தனித்துவமான உள்ளூர் கலைமரபின் வளர்ச்சிக்கு ஓர் உதாரணமாகத் திகழ்கின்றது. கிருஷ்ணஐயர் என்பவரது கருத்துப்படி இப்படிமமானது கி.பி. 11 ஆம் நூற்றாண்டுக்குரியது என்பதாகும். ஆனால் இப்படிமத்தினை கி.பி. 10 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனக்கொள்ள இடமுண்டு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *சிவநடராச வெண்கலப்படிமங்கள் காட்டும் ஈழத் தமிழர் கலைமரபு:*

சிவனது ஒரு வடிவமான நடராச வடிவங்களுடைய வெண்கலப்படிமங்கள் முழுவதுமே பொலனறுவை என்ற மையத்திலிருந்தும், அபயகிரியிலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்டமை இங்கு மனங்கொள்ளத்தக்கது. இதுவரையில் எல்லாமாக 8 நடராச வெண்கலப் படிமங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பொலனறுவையின் சைவக் கோயில்களில் இடம் பெற்றிருந்த இப்படிமங்கள் பின்னர் பொலனறுவை வீழ்ச்சியடைந்த காலத்தில் கோயில்களில் புதைக்கப்பட்டும் வேறிடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டும் நீண்ட காலமாக மறைந்திருந்தன. 19ஆம் நூற்றாண்டின் முடிவிலும் இந்நூற்றாண்டின் நடுப்பகுதியிலும் பொலனறுவையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் விளைவாகவே இந்த சிற்பப்படிமங்கள் வெளிக்கொணரப்பட்டன. இவ்வாறு வெளிக்கொணரப்பட்ட கலைக் கருவூலங்களானவை ஈழத்து சுதேச வெண்கலப் பாரம்பரியத்தின் தனித்துவமான இயல்புகளை தெளிவாகப் பிரதிபலிப்பவையாக விளங்குகின்றன. பேராசிரியர் இந்திரபாலா என்ற கலையாய்வாளர் பொலனறுவையிற் கிடைத்த நடராசர் படிமங்களைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

தமிழ் நாட்டிற்போல, இலங்கையிலும் நமக்குக் கிடைத்துள்ள சைவ உலோகச் சிற்பங்களுள் மிகச் சிறந்தவையாய் இருப்பவை நடராசர் சிலைகளே. இங்கு கிடைத்த இரண்டு நடராசர் சிலைகளைப் போன்று சிறந்தவையாய் தமிழ் நாட்டிலும் கூட அதிக சிலைகள் கிடைக்கவில்லை எனக் கலா விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். தஞ்சாவூரிலே கிடைத்துத் தற்பொழுது சென்னை அரும் பொருளகத்தில் (Museum) வைக்கப்பட்டுள்ள நடராசர் சிலையும் பொலனறுவையிலே கிடைத்துக் கொழும்பு அரும் பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள முதலாவது (No.1) நடராசர் சிலையும் நடராசர் சிலைகளுள் வைத்தெண்ணத்தக்கவை".



பொதுவாக நடராஜர் சிலை இல.1 (CMR No. 13.89.283), நடராஜர் சிலை இல.5 நடராஜர் சிலை இல.6 என்பன அவ்வவற்றின் தனித்துவமான கலை வெளிப்பாட்டினைப் பிரதிபலிக்கும் வகையில் ஈழத்து தமிழர்களது வெண்கலப் படிமக்கலையின் வளர்ச்சி நிலையை உறுதி செய்வனவாக அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீள்சதுர முகவெட்டுத் தோற்றப்பொலிவுடன் விளங்கும் நடராஜர் சிலை இல.1 உம், விரித்த பின்னற்சடையுடன் திருவாசியின்றி ரிஷப குண்டலத்துடன் விளங்கும் நடராஜர் சிலை இல.2 உம் ஈழத்துக்கேயுரிய உருவாக்கத்தினைப் பிரதிபலித்து நிற்கின்றன. சி.சிவராமமூர்த்தி என்ற கலாவிமர்சகரது கருத்துப்படி தமிழ்நாட்டில் எங்குமே கிடைத்திருக்காத வகையில் தேவாரங் களில் பாடப்பட்ட வருணனைகளுக்கமைய ஈழத்தில் நடராஜர் சிலை இல.2 கிடைத்துள்ளது என்பதாகும். நாகபாம்பினை ஆபரணங்களாக அணியப்பெற்ற தோற்றப்பாடுடைய இப்படிமத்தினைப் பற்றி சிவராமமூர்த்தி தனது தென்னிந்திய வெண்கல உருவங்கள் என்ற நூலில் விபரித்துள்ளார். இச்சிற்பத்தின் சடையானது தென்னிந்திய சிற்பங்களில் பொதுவாகக் காணப்படுவது போலல்லாது திரிந்து முறுகி, பின்னி அமைந்துள்ளது. தேவாரங்களின் “புரிபுன்சடையீர்” போன்று வர்ணிக்கப் பட்டதற்கேற்ப நடராஜர் சிலை இல.2 அமைந்துள்ளமையை சிவராமமூர்த்தி அவதானித்துள்ளார்.

1960 இல் பொலனறுவையிலுள்ள ஐந்தாம் சிவதேவாலயத்திற்குப் பின்புறமாகவுள்ள ஓர் இடத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட திருவாசியுடனான நடராஜரே இது வரைக்கும் பெற்றுக் கொள்ளப்பட்டவற்றுள் இருந்து உயரத்தாற் கூடியதாகவும், அதிவிசேடமான சிற்பக்கலைப் பரிமாணங்களையுடையதாகவும் காணப்படுகின்றது. சிலை இல.6 என அடையாளமிடப்பட்ட இப்படிமம் 146.8 சென்ரி மீற்றர் உயரமுடையதாகவுள்ளது. தமிழ் நாட்டிலோ அல்லது ஈழத்தின் பிற இடங்களிலோ இதனைப் போன்ற நடராஜர் படிமம் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

விரிந்த ஜடையின்றி ஜடாமகுடத்துடன் காணப்படும் இப்படிமம் அபய முத்திரையிற் காட்சி கொடுக்கும் முன் வலக்கரத்தில் ஐந்து தலை நாகபாம்பொன்றினைத் தாங்கியுள்ளது. அது மட்டுமன்றி திருவாசியைக் கொண்டுள்ள பீடத்தின் முன்புறத்தில் வாத்தியக்காரர்களைக் கொண்ட நால்வருடைய உருவங்கள் மிக லாவகமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தாளம், சங்கு, குழல், மத்தளம், ஆகிய வாத்தியக் கருவிகளை அவர்கள் மீட்டிக் கொண்டிருக்கிறார்கள். உலோகத்தாலான நடராஜர் சிற்பங்களில் இத்தகைய வாத்தியக் கலைஞர்களுடைய உருவங்கள் இடம் பெறுவது வழக்கமில்லை என முதன்முதலாக கொடகும்புர என்பவர் எடுத்துக் காட்டியுள்ளார். தென்னிந்திய உலோகச் சிலைகளை ஆராய்ந்த சிவராமமூர்த்தி கூட இப்படிமத்தின் தனித்துவமான சிற்பப் பெறுமானங்களை விரிவாக விளக்கியுள்ளார். இப்படிமத்தினை உருவாக்கிக் கொடுத்த ஈழத்துச் சிற்பி தேவாரங்களில் விபரிக்கப்பட்டுள்ள வர்ணனைகளுக்கமைய அதனை உருவாக்கியிருப்பதும், குறிப்பாக திருஞான சம்பந்தருடைய தேவாரப் பதிகத்தினை நினைவூட்டுமுகமாக ஐந்துதலை நாகபாம்பினை வலது கரத்தில் வடித்திருப்பதும் ஈழத்துத் தனித்துவமான படிமக்கலை வளர்ச்சியையே எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் இப்படிமக்கலை மரபின் தோற்றம், வளர்ச்சி தொடர்பாகக் குறிப்பிடும் பொழுது இவற்றை அமைத்தவர்கள் பௌத்த சிற்பங்களை அமைப்பதில் தேர்ச்சி பெற்றிருந்த சிங்களச் சிற்பிகளே என்று சி.எச்.கொடகும்புர கூறுவது ஏற்கக்கூடியதாய் இல்லை என்று விபரித்துள்ளார். அந்த வகையில் இலங்கையில் வளர்ந்த இந்து வெண்கலச் சிற்ப மரபை (ஈழத்) தமிழர் தம் சிற்பமரபின் (ஓர்) அம்சமாகவே கருதவேண்டும் என்றும் தனது முடிவினைக் குறித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரைக்கான முன்வைப்புக்கள்

ஈழத்து இந்து வெண்கலப் படிமக்கலை வரலாற்றிற்கு இன்னும் பல்வேறு வகையான படிமங்கள் சான்று சேர்க்க உதவுகின்றன. அவற்றுள் திருகோணமலையிலிருந்தும். திருக்கேதீஸ்வரத்திலிருந்தும் (மாந்தையிலிருந்தும்) கிடைக்கப்பெற்ற சோமஸ்கந்த மூர்த்தங்கள் மிகப் பிரதானமானவையாகும். திருக்கேதீஸ்வரத்தில கிடைத்தவை கி.பி. 8 ஆம் நூற்றாண்டுக்குரிய கலை மரபுகளைக் கொண்டுள்ளன. இவற்றினையும்விட சைவநாயன்மார் வெண்கலப் படிமங்களுள் சுந்தரருடைய படிமங்கள் ஈழத்தமிழர் வெண்கலப்படிமக்கலையில் அழகியல் ரீதியாக அவர்கள் ஈட்டிக்கொண்டிருந்த சாதனையின் வெளிப்பாடாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஈழத்துச் சுந்தரருடைய வெண்கலப் படிமங்களையொத்த வேறு எவையும் தமிழகத்திலும் இதுவரையில் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாக உள்ளது. மேலும் இங்கு கிடைக் கப் பெற்ற அர்த்த நாரீசுவரர் வெண்கலப்படிமம், காரைக்காலம்மையாருடைய பேயுருக் கொண்ட தோற்றத்தினையுடைய வெண்கலப்படிமம் என்பன ஈழத்துப் படிமக்கலை வரலாற்றிற்கு மேலும் மெருகூட்டுபவையாக உள்ளன. மாங்கனிக்குப் பதிலாக கையிலே மோதகத்துடன் தனது இருக்கையில் காட்சியளிக்கும் விநாயகருடைய வெண்கலப்படிமம் ஈழத்தின் அழகியற் கோட்பாட்டினை வெளியுலகிற்குப் பறைசாற்றுகின்றது எனலாம்.

இறுதியாக ஈழத்தில் இதுவரையில் கண்டுபிடிக்கப்பெற்று வெளிக்கொணரப்பட்ட இந்து வெண்கலப் படிமக்கலை மரபுகள் தொடர்பாக பின்வரும் கருதுகோள்களினை நாம் மனதிற் கொள்ளலாம். அவை ஒரு வேளையில் ஈழத்தமிழர் வளர்த்தெடுத்த பண்பாட்டு மரபினை உறுதி செய்வதற்கு உதவக்கூடும். அவையாவன:

அ) ஈழத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்து வெண்கலங்களில் பெரும்பாலானவை உள்ளூர் வேறுபாடுகளைக் கொண்டவை (பிராந்திய தனித்துவம் வாய்ந்தவை)

ஆ) கண்டுபிடிக்கப்பட்ட பல வெண்கலப்படிமங்கள் முடித்துக் கொடுக்கப்படாதவை (Unfinished).

இ) ஈழத்துக்கேயுரிய பிராந்திய வரிவடிவங்களுடனான வெண்கலப்படிமங்கள்.

ஈ) பௌத்த சிற்பக்கலைச் சாயல்களுடனான இந்து வெண்கலப்படிமங்கள்.

உ) மரபுரீதியான சிற்ப லக்ஷணங்கள் மீறப்பட்ட நிலையில் படைக்கப்பட்ட வெண்கலப் படிமங்கள்.

ஊ) வணிக கணங்களுடைய பெயர்கள் பொறிக்கப்பட்ட வெண்கலப்படிமங்கள்.

மேற்கூறப்பட்ட ஆறு குணாதிசயங்களையும் நிறுவக்கூடிய வெண்கலப்படிமங்கள் ஈழத்திலிருந்து இதுவரையில் பெற்றுக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் திட்டவட்டமாக ஈழத்தமிழர் வளர்த்தெடுத்த கலைப்பாரம்பரியத்தின் ஓரங்கமாகவே இவ் வெண்கலப் படிமக்கலையும் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பதனை உறுதிப்படுத்தலாம்.

## இவ்வாய்விற்குப்பயன்படுத்தப்பட்ட நூல்கள்:


1. S.Krishnarajah, 1983, Saiva Bronzes in Sri Lanka (10th 12th C. A.D.), unpublished M.A. Thesis, Uni. of Mysore, India, 1983.

2. A.K.Coomaraswamy, 1914, Bronzes from Ceylon Chievly in the Colombo museum, Colmbo.

3. Leelananda Prematillake, 1986, Sri lankan Bronzes ( Buddhist and Hindu) Published by the Colombo National Museum.

4. கா.இந்திரபாலா. 2008, "இலங்கையிற் கிடைத்த சிவனின் உலோகச்சிலைகள்", இலங்கையில் இந்து வெண்கலப்படிமக்கலை மரபுகள் (உருவாக்கமும் உருவாக்கியவர்களும்) Ed . by செல்லையா கிருஸ்ணராசா, பிறைநிலா வெளியீடு, குமரன் புத்தக இல்லம், பக். 14 -26.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தொல்லியல் ஆய்வின் தொடக்கப்புள்ளியாக இருந்த முக்கிய தொல்லியல் மையம் பூநகரிப் பிராந்தியமாகும். 1989 இல் இளம் ஆசிரியராக பூநகரியில் தொடங்கிய தொல்லியல் பணி இன்றுவரை தொடர்வதற்கும், அவற்றின் பெறுபேறுகள் நூாகளாகவும், ஆய்க்கட்டுரைகளாகவும் வெளி வருதற்கும் பின்புலமாக இருந்து செயற்பட்ட முக்கிய பிரமுகர்களில் ஒருவர் திரு.இராஜநாயகம் ஐயா அவர்களாவர். பூநகரிப் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவராக, உதவி அரசாங்க அதிபராக அவர் பதவி வகித்த காலத்தில் தனக்குரிய அதிகார எல்லைக்குள் நின்று எமது வரலாற்றையும், பண்பாட்டையும் வெளிக்கொணர்வதற்கு என்னென்ன வழிகளில் தன்னால் உதவி செய்யமுடியுமோ அதைச் சரிவரச் செய்து தந்து பிறருக்கும் உதாரண புருஷராக இருந்த பெருமகனாக அவரைப் பார்க்கிறேன். இந்நிலையில் அவரது கடந்தகாலச் சேவைகளை, சமூகப் பணிகளை கௌரவிக்கும் நோக்கில் வெளிவரும் மலரில் அவர் பிறந்து வளர்ந்த பூநகரிப் பிராந்தியத்தில் அமைந்த நாகபடுவான் கிராமத்தில் 2017 இல் இருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் அகழ்வாய்வின் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்டுபிடிப்புக்கள் சிலவற்றை கட்டுரையாகப் பதிவு செய்வதில் பெரும் மனமகிழ்வடைகிறேன்.

# பூநகரி நாகபடுவான் தொல்லியல் அகழ்வாய்வுகளும் பாளி இலக்கியங்கள் கூறும் நாக இனக் குழுவும்

**பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்,**
**தொல்லியல் இணைப்பாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



நீண்டகாலமாக தொல்லியல், வரலாற்று ஆய்வாளர்களால் அதிகம் கவனத்தில் கொள்ளப்படாத வன்னிப் பிராந்தியத்திற்கு தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு என்பதை உறுதிப்படுத்துவதில் அண்மைக்காலமாக மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக் குளம் என அழைக்கப்படும் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல் லியல் அகழ்வாய்வுகளுக்கு முக்கிய இடமுண்டு. இங்கு தொடர்ந்தும் அகழ்வுப் பணிகள் மேற் கொள்ளப்பட்டுவரும் நிலையில் பூநகரிப் பிரதேச சபையின் நிர்வாகத்திற்கு உட்பட்ட முழங்காவில் குமுழமுனை வட்டாரங்களை அண்டிய நாகபடுவானில் தெரியவந்த தொல்லியற் சின்னங்கள் வடஇலங்கை வரலாறுபற்றிய ஆய்வில் ஒரு புதிய காலகட்டத்தின் தொடக்கமாக அமைந்துள்ளது. எதிர்பாராமல் இங்கு தொல்லியற் சின்னங்கள் கிடைத்தமை பற்றிய செய்திகளை அப்பிரதேச கிராம அலுவலகர், சமுர்த்தி உத்தியோகத்தர், ஊடகவியலாளர் மற்றும் வரலாற்று ஆர்வலர்கள் எமது தொல்லியல் இறுதிவருட மாணவன் திரு.பானுசங்கருக்கு தெரியப்படுத்தியதன் அடிப்படையில் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பூநகரிப் பிரதேச செயலாளரின் அனுமதியுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியற் பிரிவு ஆசிரியர்கள் மாணவர்கள் இணைந்து 2017 தை மாதத்தில் இருந்து அங்கு பரீட்ச்சகரமான ஆய்வு ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர். இவ்விடம் கட்டுக்கரைக்குளத்திற்கு வடமேற்கே 50 கி.மீற்றர் தொலைவில் நாகபடுவானில் கானா மோட்டைக்குளம் என அழைக்கப்படும் காட்டுப்பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாழடைந்த குளத்தின் அணைக் கட்டுக்கு அருகில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் இருந்த பாரிய மரமொன்று வேருடன் விழுந்த போது அவற்றின் அடிப்பகுதியில் புதையுண்டிருந்த வரலாற்றுத் தொன்மை மிக்க பல சின்னாங்கள் வெளிக்கிளம்பியிருந்தன. இச்சின்னாங்களை அச்சத்துடனும், ஆச்சரியமாகவும் பார்த்த மக்களில் ஒரு பிரிவினர் அவற்றின் வரலாற்றுப் பெறுமதியை உணராமல் அச் சின்னாங்களில் பலவற்றை ஆலயங்களுக்கும், தமது வீடுகளுக்கும் எடுத்துச் சென்றுள்ளனர். எஞ்சியிருந்தவற்றை அச்சம் காரணமாக மக்கள் சிதைவடையச் செய்து ஒதுக்குப்புறங்களில் வீசியுள்ளனர்.



ஆயினும் எமது ஆய்வின் போது இவ்வகையான தொல்லியற் சின்னாங்கள் அவ்விடத்தில் பரந்த அளவில் மண்ணினுள் புதையுண்டிருப்பதை உணரமுடிந்தது. அவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில் அங்கு தெரிவு செய்யப்பட்ட ஒரு இடத்தில் 4 ஒ 3 மீற்றர் நீள அகலத்தில் மாதிரிக்குழி அமைத்து அகழ்வு செய்தோம். இந்த அகழ்வின் போது அடையாளம் காணப்பட்ட மூன்று கலாசார மண் அடுக்குகளில் பல்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த மட்பாண்டங்களைக் கண்டுபிடிக்க முடிந்தது. அவை வடிவ அமைப்பிலும், தொழில் நுட்பத்திறனிலும் கட்டுக்கரைக் குளப்பிரதேச அகழ்வாய்வில் கிடைத்த மட்பாண்டங்களைப் பெருமளவு ஒத்ததாக உள்ளன. மூன்றாவது கலாசார மண் அடுக்கில் ஒரு சில மட்பாண்டங்களுடன் பெருமளவு சுடுமண் உருவங்களும், கழிவிரும்புகளும் (Iron Slakes) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



இக்கலாச்சார மண்படையில் கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண் உருவங்களும், மட்பாண்டங்களும் இங்கு வாழ்ந்த பண்டைய கால மக்களின் சமய நம்பிக்கைகளைப் பிரதிபலிப்பதாக உள்ளன. அச்சுடு மண் உருவங்களில் பீடத்தின் மேல் அமர்ந்திருக்கும் இரு தெய்வங்க ளின் சிலைகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இத்தெய்வச் சிலைகளை ஊர்வலமாகத் தூக்கிச் செல்லும் வகையில் அதன் சதுரமான பீடத்தின் நான்கு பக்கங்களிலும் முக்கோண வடிவிலமைந்த சதுரமான துவாராங் கள் காணப்படு கின்றன. பீடத்தில் அமர்ந்த நிலையில் உள்ள தெய்வச் சிலைகளின் இரு கால்களும் காற்சலங்கைகளுடன் தொங்கவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. சிலையின் வலது கரம் பிற்கால தெய்வச் சிலைகளில் இருப்பது போன்ற அபயகஷ்தமாகவும், இடது கரம் வரதகஷ்தமாகவும் தோற்றமளிக்கின்றன. அவற்றின் வலது கஷ்தத்தின் உள்ளங்கையில் திரண்ட மும்மணிகள் காணப்படுகின்றன. இவற்றின் தோற்ற அமைப்பு பிற்காலச் சிலைகள், செப்புத் திருமேனிகளின் கலை வடிவங்களை நினைவுபடுத்துவதாக உள்ளன. இருப்பினும் இச் சிலைக ளின் லைப்பாகங்கள் பெருமளவுக்கு சிதைவடைந்த நிலையிலேயே காணப்பட்டன. அவற்றிடையே கிடைத்த நட்சத்திர வடிவிலான தோடணிந்த காதுகள், தாடைப்பகுதிகள் பண்டைய கால மக்களின் கலை மரபையும், உயர்ந்த தொழில் நுட்பத்திறனையும் புலப்படுத்துவதாக உள்ளன. இச்சிற்பங்களுடன் சேர்ந்ததாக மேலும் சில கைகள் உடைந்த நிலையில் கிடைத்துள்ளன. அக்கைகளில் சிலவற்றின் உள்ளங்கைகளில் திரண்ட மும்மணிகள் காணப்படுகின்றன. இவற்றை நோக்கும் போது பல கரங்கள் கொண்ட தெய்வச் சிலைகளாக இவை இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.





இச்சிலைகளுடன் இவ்வகழ்வாய்வில் கிடைத்த பிற தொல்லியற் சின்னாங்கள் இவ்விடம் பண்டையகால மக்களின் வழிபாட்டிற்குரிய மையமாக இருந்திருக்கலாம் எனக் கருத இடமளிக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு அகழ்வாய்வின் போது கிடைத்த பல அளவுகளிள் வடிவங்களில் அமைந்த நாக உருவங்கள், ஆமையின் வடிவம், அகல் விளக்குகள், ஆலய மணிகள், எருதின் உருவம், யானை, குதிரை என்பவற்றின் உடற்பாகங்கள், இலிங்க வடிவங்கள், பல அளவுகளில் பயன்படுத்தப்பட்ட சட்டிகள், தட்டுகள், அவற்றின் விழிம்புகளில் படுத்துறங்கும் நாக பாம்பின் உருவம் என்பவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இச்சான்றாதாரங்களுடன் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட இரு சுடு மண் அச்சுக்கள் இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அவற்றின் ஒருபக்கத்தில் புள்ளிகளான இலட்சனை அல்லது பண்டைய கால எழுத்துக் காணப்படுகின்றது. இது அறிஞர்களின் முறையான பொருள் விளக்கத்தைப் பெறும்பட்சத்தில் இங்கிருந்த குடியிருப்புக்கள் மற்றும் சமயச் சின்னங்களின் காலத்தை நிச்சயப்படுத்தக் கூடியதாக இருக்கும் என நம்பலாம்.



தமிழகத்தில் சுடுமண்ணாலான தெய்வ உருவங்கள், அரசனின் சிலைகள், சமயச் சின்னங்கள் என்பன நீர்நிலைகளை மையப் படுத்தி இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய குடியிருப்புப் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் தெய்வ உருவங்கள் கிராமிய தெய்வங்கள் அல்லது நாட்டுப்புற தெய்வங்கள் என அழைக்கப்படு கின்றன. இம்மரபு பிற்காலத்திலும் தொடர்ந்த தற்கு சங்க இலக்கியத்திலும், பழந்தமிழ் இலக்கியங்களிலும் பல ஆதாரங்கள் காணப்படு கின்றன. நாகபடுவானில் இவ்வகைச் சிலைகள், சிற்பங்கள் சின்னங்கள் கண்டு பிடிக்கப்பட்ட இடத்திற்கு மிக அருகே தெற்கிலும், மேற்கிலும் உள்ள காட்டுப் பகுதியில் பாழடைந்த இரு குளங்களின் அணைக்கட்டுக்கள் காணப்படுகின்றன. இதனால் இங்கு கிடைத்த சமயச் சின்னங்கள் கட்டுக்கரைக் குளத்தைப் போல் பண்டைய காலத்தில் குளத்தை மையப்படுத்தி தோன்றிய குடியிருப்புக்களுக்குரிய பெறுமதிமிக்க சான்றுகளாகக் கொள்ளத்தக்கன.

நாகபடுவானில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வாய்வில் வரலாற்றுப் பெறுமதி மிக்க பல சின்னங்கள் கிடைத்துவரும் நிலையில் அகழ்வாய்வுக்கு உட்படுத்தி வரும் ஒரு அகழ்வுக் குழியின் ஒரு பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட சமய வழிபாட்டு மையத்தின் வடிவம் இதுவரை இந்தியாவிலோ அல்லது இலங்கையிலோ கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அவ்வாய்வுக் குழியின் மையத்தின் நடுப்பகுதியில் சிறிய வாய்ப்பதியை உடைய பெரிய மண்பானையும், அதன் மேற்பகுதியில் கவிழந்த நிலையில் ஒட்டி வைக்கப்பட்ட சிறிய கலசங்களும் உள்ளன. இப் பானையைச் சுற்றி சுடுமண்ணாலான சதுர வடிவான மூன்று பீடங்களும், அப்பீடங்களில் அமர்ந்திருந்த தெய்வ அல்லது மனித உருவத்தின் கால்கள் இப்பானையைத் தொட்ட நிலையிலும் காணப்பட்டன. தற்போது இவ்வுருவங்களின் தலைப் பகுதிக்குரிய முடிகள், காதுப் பகுதிகள் மட்டும் கிடைத்திருப்பதால் இவ்வுருவங்கள் மனிதனா அல்லது தெய்வமா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. இந்த மூன்று பீடங்ககளை அடுத்து நான்காவதாக நடுவில் உள்ள பானையை ஒட்டி மண் சட்டியின் விளிம்பில் படமெடுத்த நிலையில் ஐந்து தலை நாகம் காணப்படுகிறது. இவ்வாதாரங்கள் எமக்குப் புதிதாகக் தோன்றியதால் இத்துறையில் புலமையுடைய இலங்கை மற்றும் இந்திய அறிஞர்களுக்கு இவற்றின் புகைப்படங்களை அனுப்பி அவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டிருந்தோம். அவர்கள் இவற்றை அதிமுக்கியத்துவம் வாய்ந்த கண்டுபிடிப்பு எனக் குறிப்பிட்டிருந்தாலும் அதற்கு கொடுக்கப்பட்ட விளக்கங்களில் வேறுபட்டு இருந்ததினால் ஒரு பொருத்தமான முடிவுக்கு வரமுடியவில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆயினும் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பாக தென்னாசியாவின் தலை சிறந்த தொல்லியல் அறிஞர்களில் ஒருவரான வை.சுப்பராயலு அவர்கள் இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட பானைக்குள் இருக்கும் மண்ணை கவனமாக அகற்றிப் பார்த்தால் இதன் முக்கியத்துவம் தெரியவரும் எனக் கூறினார். அதன் அடிப்படையில் பானைக்குள் இருந்த மண்ணை அகற்றிப் பார்த்த போது அதற்குள் சுடுமண்ணாலான நாக உருவத்தைக் காண முடிந்தது. அத்துடன் பானையின் அடிப்பாகம் வட்டமாக துவாரமிடப்பட்டு அதன் அடிப்பகுதி நிலத்துடன் பொருந்துமாறு புதைக்கப்பட்டது என்பதும் தெரிய வந்தது. இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் பல்வேறு வடிவங்களில் நாக உருவங்கள் கிடைத்த போதும் பானைக்குள் இருந்த நாக உருவம் மண்ணில் நாட்டப்பட்டு அதை மூடி பானை வைக்கப்பட்டிருக்கலாம் என்பதைப் பாம்பின் வடிவம் உறுதி செய்கிறது.

இப்பாம்பை மூடி அமைக்கப்பட்ட பானையின் வடிவமைப்பிற்கு எனது தொல்லியல் ஆசான் கலாநிதி பொன்னம்பலம் இரகுபதி கூறும் விளக்கம் பொருத்தமாகவும், சுவாரிசமாகவும் காணப்படுகிறது. அவர் பானையின் விளிம்பைச் சுற்றி கவிழ்ந்த வடிவில் உள்ள சிறிய கலசங்களை பாம்பு புற்றில் வரும் சிறிய துவாரங்களாகவும், பானையின் சிறிய வாய்ப்பகுதி பாம்புப் புற்றிலிருந்து பாம்பு வெளியேறும் வழியெனவும் குறிப்பிட்டு பிற்காலத்தில் பாம்புப் புற்றை நாக தெய்வத்தின் ஆலயமாக கொண்டு படையல் செய்து வழிபடும் மரபு தோன்றுவதற்கு முன்னோடியாக இருந்த பூர்வீக வழிபாட்டு மரபையே நாகபடுவானில் கண்டுபிடிக்கப்பட்ட வழிபாட்டு மையம் உறுதிப்படுத்துவதாகவும் கூறுகிறார். பாம்புப் புற்றை நாக வழிபாட்டுக்குரிய ஆலயமாக வழிபடும் மரபு பண்டு தொட்டு இருந்து வருகிறது. வட இலங்கையில் இன்றும் ஊற்றுப் புலம், இரணைமடு, கொடிகாமத்தில் எருவன், மானிப்பாய், நாவாலி போன்ற இடங்களில் பாம்புப் புற்றுக்கு படையல் செய்து வழிபடும் மரபு காணப்படுகிறது. சில இடங்களில் பாம்பு புற்று கருவறையில் வைக்கப்பட்டு அதன் மேல் ஆலயம் கற்களால் கட்டப்பட்டுள்ளன. பொதுவாகத் தென்னாசியாவில் நாகத்தை குலமரபு தெய்வமாகக் கொண்டு வழிபடும் மக்கள் தமது பெயர்களின் முன்னொட்டுச் சொல்லாக "நாக" என்ற பெயர் கொண்டும் அழைக்கும் மரபு இன்றும் காணப்படுகின்றது.





இலங்கை வரலாறு கூறும் பாளி இலக்கியங்கள் வட இந்தியாவில் இருந்து விஜயன் தலைமையில் மக்கள் குடியேற முன்னர் ஈழத்தில் வாழ்ந்த மக்களை நாக இனத்தவர் எனக் கூறுகின்றன. பேராசிரியர் சத்த மங்கல கருணாரத்தின நாகர் இலங்கையில் வாழ்ந்த இனக்குழு என்பதற்கு 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டுக்களை ஆதாரமாகக் காட்டுகிறார். பேராசிரியர் பரணவிதானா, சிரான் தெரணியகலா போன்ற அறிஞர்கள் இலங்கை நாகரீகக்கத்திற்கு வித்திட்ட பெருங் கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்தியவர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்த நாக இன மக்கள் எனக் கூறுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். பேராசிரியர் சுப்பராயலு நாகபடுவானில் கண்டுபிடிக்கப்பட்ட நாக வழிபாட்டு மையம் பெருங் கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக இருக்கலாம் எனக் கூறுகிறார். இந்த நாக இன மக்களே இலங்கையில் தமிழ் மொழி பேசும் மக்களாக மாறினர் எனப் பேராசிரியர் இந்திரபாலா கூறுகிறார்.

இங்கே நாகபடுவான் என்ற பெயரே நாகத்தைக் குலமரபாக்க கொண்ட மக்கள் வாழ்ததன் அடையாளம் என கலாநிதி இரகுபதி ஆதாரம் காட்டுகிறார். படுவம், படுவான் என்பது பழமையான தமிழ்ச்சொல். இது சங்க இலக்கியத்தில் ஆழமான குளம், பெரிய குளம் என்ற பொருளில் பயன்படுத்தப் பட்டுள்ளன. ஆகவே நாக குளம் என்ற என்ற பொருளில் அமைந்த இடமே பண்டைய தமிழ்ச் சொல்லில் நாகபடுவான் என மருவியுள்ளதெனக் கூறலாம். இதற்கு இவ்வழிபாட்டு மையத்தை ஒட்டியதாக உள்ள அழிவடைந்துள்ள கானா மோட்டைக் குளம் சிறந்த சான்றாக உள்ளது. இதனால் நாகபடுவானில் கண்டுபிடிக்கப்பட்ட வழிபாட்டு மையம் தமிழரின் தொன்மையான நாட்டுபுறத் தெய்வ வழிபாட்டை மட்டுமன்றி தமிழரின் தொன்மையான வரலாற்றையும் பறைசாற்றும் நம்பகரமான சான்றாகக் கொள்ளத் தக்கது.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் எனும் முதுமொழிக்கிணங்க கோயில்களுடன் இணைந்த வாழ்வில்முறையே தொடர்ந்து எம்மவர்களால் பேணப்பட்டு வருகின்றது. இவ்வாறு பேணப்பட்டு எழுச்சி பெற்ற அலயங்கள் பல அந்நியராட்சியில் இடிக்கப்பட்டமையானது துரதிஷ்டமே. எனினும் மக்களின் மனந்தளரா நம்பிக்கையாலும் விடா முயற்சியாலும் இவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்கள் புத்துயிர் பெற வழி கோலுவதுடன் தமிழும் சைவமும் அழியாதிருக்க உதவியது.

வாழ்வியலுக்கும் ஆன்மீக மேம்பாட்டுக்கும் நெறிகாட்டும் சைவநெறியும் தமிழ் மொழியும் தமிழ்ப்பண்பாடும் தரணியில் தரித்திருக்கும் காலம் வரை உடன்நிலை பெற்று விளங்கும் ஆற்றல் பெற்ற சைவசமயம் என்றும் நிலைபெற்றிருக்கும்.

**தி.இராசநாயகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனின் வாழ்வும், வளமும் பரந்துபட்ட மக்களின் நலன்களுக்கான அர்ப்பண உணர்வால் புடம் போடப்படும் போது அவை மகத்தான சக்தியாகத் திரண்டெழுகிறது. அது மலையைப் பிளக்கவும், கடலைக் குடிக்கவும் வானை எட்டித் தொடவும் வலிமையை வழங்குகின்றது.

நாற்பத்தைந்து வருடங்களாகத் திரு.தி.இராசநாயகத்துடன் பழகிய நான் இந்த மலரைத் தொகுக்கும் போது தான் அவரின் அந்த வலிமையைத் தரிசித்தேன். என்னால் பார்க்கப்படாத, உணரப்படாத பல பக்கங்கள் அவருள் இருப்பதைப் புரிந்து கொண்டேன்.

அரச பணி, கடமை, சமூகசேவை, ஆன்மீகம் என அனைத்தையும் பிறர் நலன் பேணும் ஆயுதங்களாக மாற்றிக் கையெடுத்த அவரின் பெருமையை என்னால் உணரமுடிந்தது.

இத்தகைய ஆற்றலும் அர்ப்பணிப்பும் கொண்ட ஒருவரின் வாழ்த்து மலரை தயாரிப்பதில் மனம் நிறைவடைகிறேன்.

நன்றி
***

நா.யோகேந்திரநாதன்

(மலராசிரியர்)

வெளியீடு:
மலர் வெளியீட்டுக்குழு,
விருது நாயகன் வாழ்த்து விழா அமைப்பு,
ஜெயந்தி நகர் கிளிநொச்சி.

JAFFNA PRINTERS 021 221 4949

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org